வருடாந்த அறிக்கை
2020



இலங்கையின் டிஜிட்டல் மயமாக்கல் மற்றும்
டிஜிட்டல் பிளவை ஒழித்தல்

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு



இலங்கை
தொலைத்தொடர்புகள்
ஒழுங்குபடுத்தும்
ஆணைக்குழு

வருடாந்த அறிக்கை 2020

அதிமேதகு ஜனாதிபதியின் செய்த



இவ்வருடம் கணிசமான முன்னேற்றத்தினை கண்டுள்ள இலங்கையின் தொலைத்தொடர்புகள் துறையானது ஒழுங்குபடுத்துனரால் உருவாக்கப்பட்டு வலுப்படுத்தப்பட்ட ஒட்டுமொத்த தேசிய டிஜிடல் மயப்படுத்தல் இலக்குகளை அடைந்துகொள்ளும் பொருட்டு மேலும் துரித வளர்ச்சியினை எட்டுவதற்குத் தயாராக உள்ளது. விசேடமாக நாட்டில் இணைப்பினை விரிவுபடுத்துவதில் துறையின் அபிவிருத்திக்காக "Vistas of Prosperity and Spleandour" எனும் அரசின் கொள்கைப் பத்திரத்திற்கு சமாந்தரமான இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவானது காலத்திற்கு உகந்த ஒழுங்குபடுத்தல் படிமுறைகளை மேற்கொண்டுள்ளதுடன் தேவையான தந்திரோபாய நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளது என்பதை தெரிவித்துக்கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

நீள் மீட்சியுடைய எதிர்கால டிஜிடல் பொருளாதாரத்தின் மூலம் உருவாக்கப்பட்ட டிஜிடல் ரீதியாக உள்வாங்கப்பட்ட இலக்கினை விளங்கிக்கொள்வதற்காக, உலகலாவிய இணைப்பு மற்றும் மலிவாக கிடைக்கக்கூடிய ஆழலை அணுகல் ஆகியன மிக முக்கியமாகும். எனது வழிகாட்டலின் கீழ் TRCSL இனால் முன்னெடுக்கப்பட்ட "Connect Sri Lanka" திட்டமானது, கிராமப்புரங்களுக்கான இணைப்பினை ஏற்படுத்துவதில் ஒரு குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கும். ITU Connect 2030 நிகழ்ச்சி நிரலுடன் அண்மித்ததாக நாடு தழுவிய ஆழலை இணைப்பின் அதிகரிப்பிற்கான தொலைத்தொடர்புகள் அபிவிருத்தி நிதிய (TDC) முதலீடுகளின் மூலம் இது அடையப்பெற்று வருகின்றது.

ஒரு நாடாக சர்வதேச போட்டித்தன்மையினை தக்கவைத்துக்கொள்வதற்காக நாட்டின் பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையும் தொழில்நுட்பத்துடன் ஒன்றிணைக்கப்பட வேண்டிய அதேவேளை தொழில்நுட்பத்திற்கான மாணவர்களின் அணுகலை உறுதிப்படுத்தி, கல்வித் துறைக்கான விசேட கவனத்தை செலுத்துவதும் முக்கியமாகும்.

கொவிட் 19 தொற்றானது வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் தாக்கத்தை செலுத்தி தகவல் தொழில்நுட்பத்தினை இணைத்துக்கொள்வதற்கான தேவையில் பாரிய அதிகரிப்பினை ஏற்படுத்தியுள்ளது. தேசிய டிஜிடல் பரிமாற்று இலக்கின் உணர்தலுக்கான முக்கிய காரணியாக அமைந்துள்ள தொடர்பாடல் துறையின் ஒத்திசைவு செயற்படுத்துனராகவும் வளர்ச்சிக்கான வினையூட்டியாகவும் ஒழுங்குபடுத்துனரை மாற்றி ஒழுங்குபடுத்துனரின் மரபுரீதியான பாத்திரத்தை பரிணாமம் அடையச்செய்துள்ளது.

ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று தொலைத்தொடர்பு சேவைகளின் பரவல் இடைவெளியினை குறைக்கும் முகமாக எமது அரசு "Connect Sri Lanka – கிராமத்திற்கான தொலைத்தொடர்பு" தேசிய திட்டம் செயற்படுத்தப்பட்டதுடன், இதன் பிரதான நோக்கம் 100 வீதம் நாடு தழுவிய 4G / Fiber அதிவேக இணையத்தள சேவை இணைப்பினை பெற்றுக்கொள்வதாகும். அதேபோன்று எதிர்காலத்தில் 5G தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட நேர்த்தியான இலங்கை (Smart Sri Lanka) எண்ணக்கருவின் பிரதான விடயங்களை செயற்படுத்துவதற்காக கைத்தொழில் தன்னியக்கமயப்படுத்தல், நேர்த்தியான நகரங்களை செயற்படுத்தல், e-சுகாதார பாதுகாப்பு, e-அரசு, e-வணிகம் மற்றும் விவசாய தொழில்நுட்ப தீர்வுகளை பயன்படுத்துவதற்காக IoT தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்த முடிகின்ற வகையில் 5G தொழில்நுட்பத்தின் வெளியீடு தொடர்பில் கவனம் செலுத்தல் மிகவும் முக்கியமானதாகும். அதேபோன்று இவ்வருடம் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அனைத்து கையடக்கத் தொலைபேசி செயற்படுத்தல் நிறுவனங்களுடன் இணைந்து எதிர்கால 5G வணிகமயமாக்கல் தொடர்பில் கவனம் செலுத்தி ஆரம்ப 5G பரீட்சித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை நான் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

அரச பாடசாலைகளில் பயன்படுத்தப்படுகின்ற உலகலாவிய ரீதியில் எவ்வித அறவீடுகளும் இன்றி பெற்றுக்கொள்ளக்கூடிய e- தக்சலாவ இலத்திரனியல் கற்றல் சாதனமானது ஒழுங்குபடுத்தல் நிறுவனத்தின் மூலம் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியதாகும். அதேவேளை இலங்கை கல்வி மற்றும் ஆராய்ச்சி வலையமைப்பு (LEARN) ஊடாக அரச பல்கலைக்கழகங்களால் பயன்படுத்தப்படும் இலத்திரனியல் கற்றல் சாதனத்தினுள் இலவசமாக நுழைதல் தொலைத்தொடர்புகள் சேவை வழங்குனர்களின் உதவி மற்றும் பங்களிப்புடன் ஒரு தேசிய இலக்கு எனும் ரீதியில் காத்திய நிலையை அடைந்துள்ளது. இவ்வாறு இலவசக் கல்விக் கொள்கையினை இணையத்தள் டிஜிடல் இலத்திரனியல் கற்றல் வசதிகள் வரை விரிவடையச் முதல் செய்த நாடுகளின் வரிசையில் நாமும் இணைந்துள்ளோம்.

ஒழுங்குபடுத்தல் சூழலின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக தொலைத்தொடர்புகள்

சட்டத்தினை திருத்தியமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும், சர்வதேச தொலைத்தொடர்புகள் சங்கத்தின் அறிவுறுத்தல்களுடன் எண்ணிக்கை ரீதியான நிறமாலையினை முகாமை செய்வதற்கான பரந்த ஒரு திட்டம் மற்றும் புதிய அனுமதிப்பத்திர சட்டகம் ஒன்றினை தயாரித்தல், நடமாடும் தொலைத்தொடர்பு உபகரணங்களின் எதிர்கால உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவித்தல் மற்றும் தொலைத்தொடர்புகள் உபகரணங்களின் இறக்குமதியினை முறைப்படுத்துவதன் பொருட்டு சிறந்த டிஜிடல் சூழலினை உறுதி செய்வதற்காக வானொலி மற்றும் தொலைத்தொடர்புகள் உபகரண ஒழுங்குகளை அறிமுகப்படுத்தல் மற்றும் சேவை தரத்தினை பரீட்சிப்பதற்கான சட்ட ஒழுங்குகளை வெளியிடல் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பிரதான கொள்கை ரீதியான நிகழ்ச்சித் திட்டங்களின் விசேட சந்தர்ப்பங்களாகும். கடலின் கீழான பரந்த கேபிள் வலையமைப்பொன்றினை ஆரம்பித்தல் மற்றும் உலகலாவிய இணைப்பினை வழங்கும் நாட்டின் கடலின் கீழான கேபிள் சூழல் தொகுதியின் பாதுகாப்பினை உறுதி செய்யும் சட்ட வரைவொன்றினை தயாரித்தல் இவ்வருடம் செயற்படுத்தப்பட்ட ஏனைய கொள்கை ரீதியான நிகழ்ச்சித்திட்ட கூறுகளில் அடங்குகின்றன.

பாவனையாளர் அடையாள அட்டைகளை (SIM) பதிவு செய்தல் மற்றும் சர்வதேச நடமாடும் உபகரண அடையாள (IMEI) உறுதிப்படுத்தல் செயன்முறையினை முறைப்படுத்துவதற்காக ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பொதுமக்களுக்கான பாதுகாப்பான ஒரு சூழலை உறுதி செய்வதாக இருக்கும்.

திறன்களைக் கொண்ட உள்நாட்டு இளைஞர் யுவதிகளுக்கு தொலைத் தொடர்பு தொழிலில் ஈடுபடுவதற்காக தொலைத் தொடர்புக் கோபுரங்கள் சம்பந்தப்பட்ட தொழில் நிகழ்ச்சியொன்றையும் மற்றும் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்ப தொண்டர் நிகழ்ச்சியொன்றையும் ஆரம்பிப்பதன் மூலம் தொலைத் தொடர்புத் துறையின் வளர்ச்சிக்குத் தேவையான இயலளவு அபிவிருத்தி வலுப்பெறும்.

இலங்கை குடிமக்களுக்கான சேவைகளை டிஜிடல் மயப்படுத்தும் அரசின் இலக்கின் அடிப்படையில் இலங்கையில் டிஜிடல் மயப்படுத்தல் பரிமாற்றல் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக நான் விசேட கவனம் செலுத்துகின்றேன். இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவானது அனைத்து சேவைகளையும் நிகழ்நிலை அடிப்படையில் வழங்கிய முதல் அரச நிறுவனம் என்ற வகையில் அனைத்து நிறுவன ரீதியான செயற்பாடுகளையும் வெற்றிகரமாக பரிமாற்றல் செய்துள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

மீளாய்வாண்டினுள் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவானது தந்திரோபாய அடிப்படைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளில் குறிப்பாக தேசிய டிஜிடல் பரிமாற்றுத் திட்டத்தினை வெற்றியடையச் செய்வதில் மாத்திரமன்றி தொலைத் தொடர்பு சேவை விரிவாக்கல் இடைவெளியினை குறைப்பதிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கியுள்ளது. இம் முன்னெடுப்பின் மூலம் நாடு தழுவி வாழுகின்ற மக்களுக்கு தொலைத் தொடர்பு துறையின் ஊடாக தமது தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியுமாகியுள்ளது.

எதிர்வரும் வருடங்களில் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவானது சக்திவாய்ந்த ஒரு ஒழுங்குபடுத்தல் பிரவேசத்துடன் நேர் மறையான நடவடிக்கைகள் மற்றும் தொலைத் தொடர்புத் துறையின் வளர்ச்சி தொடர்பாக செலுத்தும் அவதானத்தினை தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் என நான் நம்புவதுடன், டிஜிடல் தொழில்நுட்பம் உள்ளடங்கிய இலங்கையை நோக்கி வழிநடாத்தும் சந்தர்ப்பத்தில் தோன்றக்கூடிய எதிர்கால சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்கக்கூடிய ஆற்றல் கிட்ட வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

கோட்டாபய ராஜபக்ச
இலங்கை சனனாயக சோசலிச குடியரசின் ஜானாதிபதி

இலங்கையின் டிஜிட்டல் மயமாக்கலை பலப்படுத்தல் மற்றும் டிஜிட்டல் தலைமுறை இடைவெளியை களைதல்

இணையம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பெற்றுக் கொள்வதில் காணப்படுகின்ற சமத்துவமின்மையானது டிஜிட்டல் தலைமுறை இடைவெளி என கருதப்படுகிறது. இது தொற்று நோய்ப் பரவலுடன் பூகோளரீதியாக வேகமாக வளர்ந்துவரும் பிரதான பிரச்சினையாக புதிய பரிமானத்தை அடைந்திருப்பதுடன், பூகோள ரீதியாக வேகமாக வளர்ந்துவரும் முக்கிய பிரச்சினையுமாகும். எனவே தகவல் தொழில்நுட்பத்தை பெற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் இல்லாத பல்வேறுபட்ட சமூக பொருளாதார படித்தரங்கள் / புவியல் பகுதிகளில் உள்ளவர்களுக்கு மத்தியில் டிஜிட்டல் இடைவெளியைக் குறைப்பது அவசியமாகும். டிஜிட்டல் தலைமுறை இடைவெளியைக் களைவதென்பது தைரியமான மற்றும் இலட்சியத்துடனான டிஜிட்டல் மாற்றத்துக்கான பாதை வரைபடத்தை நடைமுறைப்படுத்துவதை இயலுமாக்குவதுடன் ஸ்மார்ட் சமூகம் ஒன்றினை டிஜிட்டல் மயமான இலங்கையை புரிந்து கொள்வதற்கும் மிகப் பிரதானமானதாகும்.

இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவானது, தொலைதொடர்புகள் தொழிற்துறையுடன் இணைந்து தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை ஏற்றுக் கொள்வதை ஊக்கப்படுத்தவும், வாழ்வின் அனைத்து துறைகளிலும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை சாத்தியமாக்குவதினூடாக இலங்கையை மாற்றுவதற்காகவும் செயற்பட்டு வருகிறது. எதிர்கால டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் சமூகங்களின் டிஜிட்டல் மாற்றத்தை ஆதரிக்கும் நோக்கத்துடன் ITU இன் "இணைப்பு 2030 நிகழ்ச்சி நிரலில்" அடையாளம் காணப்பட்ட முக்கிய கொள்கைகள் மற்றும் குறிக்கோள்களுக்கு பங்களிப்பு செய்வதற்கான ஒரு அரிய வாய்ப்பை பிரதிநிதித்துவப்படுத்துவதாக 2020 வருடம் இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கு அமைந்தது. இது தொடர்பாக எடுக்கப்பட்ட முன்முயற்சிகளில் நாடு முழுவதும் புரோட்பேன்ட் வசதியைப் பெற்றுக்கொள்வதினை உறுதி செய்வதற்கான விரைவான விரிவாக்கத் திட்டங்கள் மற்றும் கிராமப்புறங்களுக்கும் பரப்பெல்லையை விஸ்தரித்தல் மற்றும் இலங்கையில் கல்வித் துறை போன்ற முக்கியமான பிரிவுகளுக்கு குறைந்த செலவில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை அணுகுவதை உறுதி செய்தல் ஆகியவை அடங்கும்.

கொவிட்-19 தொற்றுநோயானது, தகவல் தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வதின்பால் அணுகுவதற்கு தூண்டியதால் இலங்கையின் தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டாளர் என்ற வகையில் இலங்கையின் டிஜிட்டல் மயமாக்கல் தந்திரோபாயத்தை செயற்படுத்துவதிலும் அதனை வலுவூட்டுவதிலும் மற்றும் நாட்டின் சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நிலைபேறான தன்மையை உறுதிசெய்யும் அதேவேளை, டிஜிட்டல் பிளவை இணைப்பதற்கான புதிய நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளோம்.

இந்த அறிக்கையை ஆன்லைனில் பார்க்க QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது வருகை https://trc.gov.lk/2014-05-13-13-14-26/annual-reports.html

உள்ளடக்கம்

01 தலைவரின் செய்தி	02 நாம் யார்	06 ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
10 ஆணைக்குழு இன் முத்த நிர்வாகக் குழு	17 பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் மீளாய்வு	32 ஆணைக்குழு இன் மூலோபாய முன்முயற்சிகள் ஒரு தொற்றுநோயால் தூண்டப்பட்ட சூழலுக்கு ஏற்ப
34 ஆணைக்குழு இன் செயலாற்றலும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளலும்	40 டெல்கோ செக்டார் டெமோகிராபிக்ஸ்	44 அனுமதிப்பத்திர முகாமைத்துவம பிரிவு
47 வலையமைப்புகள் பிரிவு	52 ஸ்பெக்ரம் முகாமைத்துவம பிரிவு	59 போட்டி பிரிவு
64 கமட சன்னிவேதனய “Connect Sri Lanka”	104 கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள் பிரிவு	109 இணக்கம் மற்றும் விசாரணை பிரிவு
113 சட்டப் பிரிவு	114 சிறப்பு செயற்திட்டங்கள பிரிவு	141 நிர்வாகம், மனிதவளம், கூட்டிணைந்த விவகாரங்கள் மற்றும் திட்டமிடல் பிரிவு
148 தகவல் தொடர்பு தொழில்நுட்ப பிரிவு	151 நிதி பிரிவு	156 உள்ளக கணக்காய்வு பிரிவு மற்றும் தணிக்கை குழு புதுப்பிப்புகள
162 ஒழுங்குமுறைக் குழுவின் புதுப்பிப்புகள்	163 நிதி அறிக்கை	189 கணக்காய்வாளர் நாயகத்தின அறிக்கை

சுருக்கக் குறியீட்டுப் பட்டியல்

ACCIMT	நவீன தொழில்நுட்பங்களுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனம்
APNIC	ஆசிய பசுபிக் வலைப்பின்னல் தகவல் மையம
APT	ஆசிய பசுபிக் டெலிகொம் ஒற்றுமை
ARPU	ஒரு பயனருக்கு சராசரி வருவாய
ASMS	அன்டெனா கட்டமைப்பு முகாமைத்துவ அமைப்பு
ASF	ஆண்டெனா அமைப்பு பண்ணை
BOI	முதலீட்டு சபை
CERT	கணனி அவசர தயார்நிலை அணி
CID	குற்றவியல் புலனாய்வுத் துறை
CSR	கூட்டாண்மை சமூகப் பொறுப்பு
CTO	பொதுநலவாய தொலைத்தொடர்பு நிறுவனம
CWG	ஆலோசனை குழுக்கள
DOA	விவசாயத் திணைக்களம
DTH	நேரடியாக வீட்டை நோக்கி
FAO	உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு
GCI	உலகளாவிய இணைய பாதுகாப்பு குறியீடு
GND	கிராம நிலதாரி பிரிவுகள
GMDSS	உலகளாவிய கடல்சார் பாதுகாப்பு அமைப்பு
HFDF	அதிக அதிர்வெண் திசை கண்டுபிடிப்பு
ICT	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம
ICTA	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம
ILAC	சர்வதேச ஆய்வக அங்கீகார ஒத்துழைப்பு
IMT	தொலை தொடர்பு நிறுவனம
IMEI	சர்வதேச செல்பேசி அடையாள எண
ISP	இணையச் சேவை வழங்குதல
IT	தகவல் தொழில்நுட்பம
ITOL	சர்வதேச தொலைத் தொடர்பு இயக்குனர் தீர்வை
ITU	சர்வதேச தொலைத் தொடர்பு சங்கம
JICA	ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம
KYC	உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள்
LT	தாமரைக் கோபுரம
MFR	மாஸ்டர் அதிர்வெண் பதிவு
MOA	கமத்தொழில் அமைச்சு
NIA	தேசிய தகவல் நிறுவனம
NAITA	தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை
NFAT	தேசிய அதிர்வெண் ஒதுக்கீடு அட்டவணை
NVQ	தேசிய தொழிற் பயிற்சி தகைமைகள
OLAC	வெளிச்செல்லும் உள்ளூர் அணுகல் கட்டணங்கள
OTP	ஒரு முறை கடவுச்சொல்
OTT	உயர் மட்டம
PABX	தனியார் தானியங்கி கிளை பரிமாற்றம்
PCU	திட்ட ஆலோசனை பிரிவு
PPP	தனியார் பொதுக் பங்குடமை
PSTN	பொதுமக்கள் மாற்று தொலைபேசி வலையமைப்பு
QOS	சேவை அளவு
RMC	பிராந்திய கண்காணிப்பு மையம
RMS	தொலை கண்காணிப்பு நிலையங்கள
RTE	வானொலி முனைய உபகரணங்கள
RTTE	வானொலி மற்றும் தொலைத்தொடர்பு முனைய உபகரணங்கள்
SATRC	பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கம
SAFIR	உட்கட்டமைப்பு கட்டுப்பாட்டுக்கான தெற்காசிய கூட்டமைப்பு

SDG	நிலையான அபிவிருத்தி இலக்கு
SED	சிறிய நிறுவனங்களின் வளர்ச்சி
SIM	சந்தாதாரர் அடையாள தொகுதி
SLBC	இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
SLIDA	அபிவிருத்தி இலங்கை நிர்வாக நிறுவனம்
SLLRDC	இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி
SME	சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள
SMS	குறுஞ்செய்தி சேவை
TL	தொலைத்தொடர்பு வரி
TDC	தொலைத்தொடர்பு அபிவிருத்தி கட்டணங்கள
TRCSL	இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு
TSO	தொலைத் தொடர்பு அமைப்பை இயக்குபவர்கள
TVEC	மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு
UDA	நகர அபிவிருத்தி அதிகாரசபை
URL	இணையத்தள முகவரி
VAS	மதிப்பு கூட்டப்பட்ட சேவை
VTC	தொழில் பயிற்சி நிறுவனங்கள
WTISD	உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினம

அட்டவணைகளின் பட்டியல்

அட்டவணை 01: தொலைத்தொடர்பு துறையின் புள்ளிவிபர கண்ணோட்டம் 40

அட்டவணை 02: நெட்வேர்க்குகள் பிரிவால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பான புள்ளிவிபரங்கள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன 50

அட்டவணை 03: அரசாங்க நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட குறுகிய குறியீடுகள் 50

அட்டவணை 04: தனியார் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட குறுகிய குறியீடுகள் 51

அட்டவணை 05: வழங்கப்பட்ட உபகரணங்கள் அனுமதி மற்றும் அங்கீகார வகைகளின் எண்ணிக்கை 51

அட்டவணை 06: ஸ்பெக்ட்ரம் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 55

அட்டவணை 07: பெறப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள 55

அட்டவணை 08: வழங்கப்பட்ட அனுமதி கடிதங்களின் எண்ணிக்கை 55

அட்டவணை 09: கையடக்க மற்றும் நிலையான அணுகல் சந்தாதாரர் தளங்களின் எண்ணிக்கை 59

அட்டவணை 10: கையடக்க மற்றும் நிலையான அணுகல் செயற்படுத்துனரின் யுசீரு 60

அட்டவணை 11: செல்லூலர் கோபுர வரி 61

அட்டவணை 12: யைடக்க குறுஞ் செய்தி சேவைகள் வரி சேகரிப்பு 61

அட்டவணை 13: இலங்கை ஐவுரு கட்டண போக்கு தரவரிசை 63

அட்டவணை 14: சர்வதேச நிறுவனங்களுக்கான ஆண்டு சந்தாக்கள் 108

அட்டவணை 15: ஒப்பந்தத்தின் சுருக்கம் 115

அட்டவணை 16: கொழும்பு தாமரை கோபுர செயற்திட்டத்தின் முன்னேற்றம 115

அட்டவணை 17: தாமரைக் கோபுர வேலைகளின் பொழிப்பு 116

அட்டவணை 18: கொழும்பு தலைமை அலுவலக விரிவாக்க கட்டிட திட்டத்தின் முன்னேற்றம் 137

அட்டவணை 19: கொழும்பு தலைமை அலுவலக விரிவாக்க கட்டிடத்தின் பொழிப்பு 137

அட்டவணை 20: கதிரான புனரமைப்பு மற்றும் புதுப்பித்தல் செயற்திட்டத்தின் முன்னேற்றம் 139

அட்டவணை 21: 2020 சமூகமளித்த வெளிநாட்டு நிகழ்ச்சிகள் 143

அட்டவணை 22: 2020 சமூகமளித்த உள்நாட்டு நிகழ்ச்சிகள் 144

அட்டவணை 23: ஆணைக்குழுவின் வருமானம் 153

அட்டவணை 24: திரண்ட நிதிக்கு பணம் அனுப்புதல் 155

அட்டவணை 25: உள்ளக கணக்காய்வுப் பிரிவு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் 157

விளக்கப்படங்களின் பட்டியல்

விளக்கப்படம் 01: முறைமை உரிமங்களின் எண்ணிக்கை 41

விளக்கப்படம் 02: நிலையான புரோட்பேண்ட், நரோபேண்ட் மற்றும் கையடக்க புரோட்பேண்ட் சந்தாக்கள் 41

விளக்கப்படம் 03: தொலைநோக்கு 41

விளக்கப்படம் 04: நிலையான மற்றும் கையடக்க சந்தாதாரர்களின் வளர்ச்சி 42

விளக்கப்படம் 05: தொலைத்தொடர்பு துறையில் முதலீடுகள் 42

விளக்கப்படம் 06: கையடக்க மற்றும் நிலையான அணுகல் செற்படுத்துனரினால் ஒரு பயனருக்கான சராசரி வருமானம் 42

விளக்கப்படம் 07: தொலைத்தொடர்பு வரியின் வளர்ச்சி 43

விளக்கப்படம் 08: செஸ் 43

விளக்கப்படம் 09: திரண்ட நிதிக்கு பணம் அனுப்புதல 43

விளக்கப்படம் 10: தொலைத்தொடர்பு வரி 60

விளக்கப்படம் 11: செஸ் 60

விளக்கப்படம் 12: திட்டமிடப்பட்ட மற்றும் உண்மையான முன்னேற்றம் மற்றும் இலக்கு பூர்த்தித் திகதியின்றி தொடர்கிறது 115

விளக்கப்படம் 13: தொலைத்தொடர்பு வரி 153

விளக்கப்படம் 14: சர்வதேச தொலைத்தொடர்பு செயற்படுத்துனர் வரி 154

விளக்கப்படம் 15: மொத்த சேகரிப்பு 155

வருடத்தின் முக்கிய விடயங்கள் 2020



”கிராமத்திற்கு தொடர்பாடல்” இலங்கை தேசிய செயற்திட்டத்தின் ஆரம்பம்



புதிய அனுமதி கட்டமைப்பு வழிகாட்டல் ஆரம்ப நிகழ்வு



5G Trials, Number Portability, IPV6 Implementation போன்ற புத்தாக்கங்களின் அறிமுகம்



இலத்திரனியல் மயமாக்கப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் மீள் அறிமுகம்



வானொலி மற்றும் தொலைதொடர்பு உபகரணங்களிற்கான சட்டங்கள் பற்றிய அறிமுகம் (RTTE)



பேச்சு மற்றும தரவு அகலப்பட்டை சேவைகள் என்பனவற்றின் தரத்தை மேற்பார்வை செய்வற்கான சட்டங்களையும் வரையறைகளையும் வெளியிடுதல்



கடலுக்கடியில் நீர்மூழ்கி கேபள்கள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டத்தின் அறிமுகம்



SIM பதிவு மற்றும் IMEI அடையாள செயன்முறைகளை ஒழுங்கமைத்தல்



தொடர்பாடல் கோபுர தொழிநுட்பவியலாளர் நிகழ்ச்சித்திட்டத்தின் அறிமுகம்



உள்நாட்டு தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப தன்னார்வலர் நிகழ்ச்சித்திட்டத்தின் அறிமுகம்



பாடசாலைகள் மற்றும் உள்நாட்டு பல்கலைக்கழகங்கள் உத்தியோகபூர்வ இலத்திரனியல் கற்றல் தளங்களுக்கு இலவசமாக உட்பிரவேசிக்க ஆவண செய்தல்



TRCSL இலத்திரனியல் தொடர்பாடல் காப்புப் பிரதியை ஆரம்பித்தல்

தலைவரின் செய்தி



2020 ஆம் ஆண்டிற்கான இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (TRCSL) ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நேர்த்தியான ஒரு இலங்கையை உருவாக்குதல் எனும் அரசாங்கத்தின் தொலை நோக்கினை இலக்காகக் கொண்டு, "தரமான ஒரு உலகத்திற்காக அனைவரையும் ஒன்றிணைத்தல்" எனும் சர்வதேச தொலைத்தொடர்புகள் தொழிற்சங்கங்களின் நிகழ்ச்சிநிரல்களுடன் இணைந்து செல்லும் வகையிலான நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு திட்டத்தினை தொலைத்தொடர்புகளை ஒழுங்குபடுத்துனர் என்ற அடிப்படையில் TRCSL தயாரித்துள்ளது. வளர்ச்சி, உள்ளடக்கம், நிலைத்திருக்கும் தன்மை, புத்தாக்கம் மற்றும் கூட்டணி ஆகிய ஐந்து தந்திரோபாய உத்திகளுடன் இந்த சர்வதேச இலக்கினை அடைந்துகொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வருடம் தனது செயற்றிட்டங்கள் மற்றும் தொழிற்பாடுகளின் பல்வேறு துறைகளில் ஆணைக்குழு வெற்றியடைந்துள்ளது. தொலைத் தொடர்புத் துறையின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு TRCSL எவ்வித வேறுபாடுமின்றி இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களுக்கும் 100% 4G/Fiber broadband இணைப்பினை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையிலான "Connect Sri Lanka" என மொழிபெயர்க்கப்படக்கூடிய "Gamata Sannivedanaya" எனும் எதிர்பார்ப்பு மிக்க ஒரு தேசிய திட்டத்தினை முன்னெடுத்துள்ளது. அரசாங்கத்தின் டிஜிடல் மயப்படுத்தும் நோக்கத்தின் முக்கிய பண்புகளை வளப்படுத்துவதில் பிரதான இடம் வகிக்கக்கூடிய 5G தொழில்நுட்பத்தினை தொழிற்படச் செய்வதற்கான அடுத்த கட்ட நகர்வினை TRCSL ஆரம்பித்துள்ளது. இது நேர்த்தியான ஒரு இலங்கையினூடாக அறிவை மையப்படுத்திய பொருளாதாரத்தினை உருவாக்குவதனை உள்ளடக்கி நிற்கின்றது. கைத்தொழில் செயற்பாட்டிற்கான IT தொழில்நுட்பம், நேர்த்தியான நகர வளப்படுத்தல், மற்றும் எதிர்காலத்தில் சுகாதார மற்றும் விவசாயத் தொழில்நுட்பத் துறைகளில் e-தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்தல் ஆகியவற்றில் 5G தொழில்நுட்பம் மிக முக்கிய பங்கு வகிக்கும். 2020 பெப்ரவரி முதல் கைப்பேசி பாவனையாளர்கள் ஊடாக 5G தொழில்நுட்பத்தின் பரீட்சாத்த நடவடிக்கைகளை TRCSL ஆரம்பித்துள்ளது. மேலும், வர்த்தக ரீதியிலான 5G சேவையினை இலங்கையில் அறிமுகப்படுத்தும் நகர்விற்கான ஒரு தேசிய 5G பயன்பாட்டுக் கொள்கை மற்றும் உத்தியினை தயாரிப்பதற்கான முன்னெடுப்புகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்பொழுது பயன்பாட்டிலுள்ள கைப்பேசி இலக்கத்தினை அவ்வாறே வைத்துக்கொள்வதன் மூலம் சேவை வழங்குனரை மாற்றக்கூடிய வசதியினை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு தேவையான நெகிழ்ச்சியினை வழங்கக்கூடியதான கைப்பேசி மற்றும் நிலையான இலக்க நெகிழ்ச்சி சேவையினை முன்னெடுப்பதற்காக சகல தொழிற்பாட்டாளர்களுடனும் இணக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான தொழில்நுட்ப வாதப்பிரதிவாதங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

IMEI இலக்க முகாமைத்துவத் திட்டமானது குறைந்த தரத்திலான உற்பத்திகள் (போலியான அல்லது சட்டரீதியற்ற வகையில் கொண்டு வரப்பட்ட கையடக்க தொலைபேசி உதிரிப்பாகங்கள் ஆகியன) சந்தைக்கு அறிமுகப்படுத்தப்படுவதனை தடுக்கும் நோக்கில் TRCSL இன் மூலம் முன்னெடுக்கப்படடுள்ள ஒரு முக்கிய நகர்வாகும்.

TRCSL தனது நீண்டகாலத் திட்டத்தில் டிஜிடல் பாகுபாட்டிற்கான பாலத்தை அமைப்பதற்கான விசேட திட்டங்களையும் தயாரித்துள்ளது. குறிப்பாக COVID தொற்றுக் காலத்திலும் அதன் பின்னரும் தொலைத்தொடர்புத் துறையின் உதவியுடன் இலங்கை கல்வி மற்றும் ஆராய்ச்சி வலையமைப்பின் (LEARN) ஊடாக சகல அரச பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்குமான நிகழ்நிலை e–கற்றலுக்கான அடிப்படை வசதிகள் (e–தக்சலாவ, பல்கலைக்கழகங்களின் LMS ஆகியன) முதல் தடவையாக முற்றிலும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

ஒரு ஒழுங்குபடுத்துனர் தோற்றத்திலிருந்து, தற்போதைய கட்டமைப்பானது தொலைத்தொடர்புத் துறையானது ஒரு தனி உரிமை கொண்ட சூழலுக்குள் தள்ளப்படல் கூடாது எனும் ஆரோக்கியமான சூழலை வழங்குகிறது. துறையின் பார்வையினை அடிப்படையாக வைத்து நோக்கும் பொழுது, தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துனர்களின் தற்போதைய அமைப்பானது வாடிக்கையாளர்களுக்கான ஆரோக்கியமான போட்டித் தன்மை மிகுந்த ஒரு சூழலையும் அதிகூடிய பெறுமதியினை பெற்றுத் தருவதற்கு ஏதுவான சிறந்த சந்தை பலத்தினையும் வழங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்த வருட ஆரம்பம் முதல் வர்த்தக நடவடிக்கைகள் தாமரைக் கோபுரத்திலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் இதுவும் TRCSL இனது நீண்டகாலத் திட்டத்தின் நிலையான இயக்கத்தின் ஒரு முக்கிய பங்காக விளங்கும். தாமரைக் கோபுரமானது "தொழில்நுட்பத்தின் கேந்திரமாகவும்" ஏனைய துறைகளுக்கான ஒரு மையமாகவும் விளங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

TRCSL சகல துறைகளிலும் வெற்றியடைய வேண்டும் எனவும் எமது நாட்டின் அபிவிருத்தி மற்றும் வலுப்படுத்தலினை மையமாகக் கொண்ட தனது நோக்கம் நிறைவேற வேண்டும் எனவும் பிரார்த்திக்கின்றேன்.

ஜயந்த டீ சில்வா
தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர்
தலைவர், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

நாம் யார்

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

தோற்றம்

தொலைத்தொடர்பு துறை முதலில் பொது முயற்சியொன்றாக இருந்ததுடன் 1980 இல் தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் என இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டதன் பின்னர் இத்துறை இலகுபடுத்தல் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் தொலைத்தொடர்பு திணைக்களம் தொலைத் தொடர்பு கூட்டுத்தாபனமொன்றாக மாற்றப்பட்டதுடன் 1991 இன் போது ஒழுங்குபடுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் 1991 ஆம் ஆண்டின் போது பாராளுமன்ற சட்டத்தின் மூலம் இலங்கை தொலைத்தொடர்பு அதிகாரசபை (SLTA) ஸ்தாபிக்கப்பட்டதுடன் பின்னர் அது தற்போதைய நிலைமைக்கு ஆணைக்குழுவொன்றாக மாற்றப்பட்டது.

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (TRCSL), 1991 இன் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு சட்டம், என்ற பெயருடைய பிரதான சட்டத்தை திருத்தம் செய்வதற்காக பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத் தொடர்புகள் (திருத்த) சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரச நியதிச்சட்ட அமைப்பொன்றாகும். இந்த அறிக்கையில் சட்டம் என்பது 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் (திருத்த) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 1991 இன் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டம் என அறிமுகப்படுத்தப்படுவதுடன் ஆணைக்குழு என்பது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

1996 இன் 27 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 1991 இன் 25 ஆம் இலக்க சட்டத்திற்கு இணங்க இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (TRCSL) இந்நாட்டின் அனைத்து தொலைத்தொடர்பு விடயங்களையும் செயற்படுத்தும் அரச அதிகாரசபையொன்றாகும். சட்டரீதியான அதிகாரத்துடன் சட்டரீதியான அதிகாரசபையாக இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (TRCSL) இந்நாட்டின் அனைத்து தொலைத்தொடர்பு விடயங்கள் தொடர்பாக பொறுப்புக்கூறும் அரசின் அதிகாரம் பெற்ற நிறுவனமொன்றாகும். இதன் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு பாவனையாளர்களினதும் தொலைத்தொடர்பு செயற்பாட்டு கம்பனிகளினதும் நன்மைகளுக்காக இந்நாட்டின் தொலைத்தொடர்பு சேவைகளை மேம்படுத்துவதற்கு சட்டத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழு

ஆணைக்குழு ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருப்பதுடன் தொழில்நுட்ப அமைச்சின் முன்னாள் செயலாளர் உத்தியோகபூர்வமாக ஆணைக்குழுவின் தலைவராவார்.

அவ்வாறே பணிப்பாளர் நாயகம் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக இருப்பதுடன் ஆணைக்குழுவின் அங்கத்தவர் ஒருவராகவும் உள்ளார். நியமிக்கப்பட்ட ஏனைய மூன்று உறுப்பினர்களும் முறையே சட்டம், முகாமைத்துவம் மற்றும் நிதி போன்ற துறைகளின் நிபுணத்துவத்தைக் கொண்ட அங்கத்தவர்களாவர்.



தொலைநோக்கு

"விஞ்ஞானம் மற்றும் ஒழுங்குமுறை சிறப்பு மூலம் உலகின் தொடர்பு துறையில் ஒரு முன்னணி தகவல் ஒழுங்குபடுத்தும் நிறுவனமொன்றாக ஏற்றுக்கொள்ளலுக்கு உட்படல் வேண்டும்"



செயற்பணி

"ஒரு திறமையான மற்றும் நெறிமுறை பணியிடத்தின் மூலம் போட்டியிடும் சந்தையில் நியாயம் மற்றும் நீதியை மேம்படுத்துவதன் மூலம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தரம் மற்றும் செலவிடக்கூடிய விலையிலான சேவையொன்றை தீவு முழுவதற்கும் உரிய நேரத்தில் வழங்குவதை உறுதிப்படுத்துதல்"

செயற்பணி கூற்றின் விளக்கம்

இலங்கையின் நீண்டகால தொடர்புத் தேவைகளின் நிறைவேற்றத்தை உறுதிப்படுத்தும் வகையில் நியாயமான, போட்டித்தன்மையான மற்றும் முதலீடுகளை ஊக்குவிக்கும் ஒழுங்குபடுத்தல் சூழலொன்றை ஏற்படுத்துதல் போன்றவற்றை நோக்கிய அனைத்து பங்குதாரர்களுடனும் சுயாதீனமான, திறந்த மற்றும் வெளிப்பாடையான முறையில் செயற்படுவதன் மூலம் அனைத்து பயனர்களுக்கும் நியாயமான, ஏற்கக் கூடிய விலையில் மேம்படுத்தப்பட்ட மற்றும் தரமான உயர் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகளை வழங்கக் கூடிய வகையை உறுதிப்படுத்துதல்.

நோக்கங்கள்

தொலைத்தொடர்பு சட்டத்தின்படி TRCSL அடைய வேண்டிய பொதுவான நோக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- ❖ விண்ணப்ப செயன்முறையும் அனுமதிப்பத்திரம் வழங்குதலும்

    - சட்டத்தின் 17 வது பிரிவின் கீழ் இலங்கையில் தொலைத்தொடர்பு முறைகளை இயக்குவதற்கான அனுமதிப்பத்திரம்.

      சட்டத்தின் 17 ஆம் பிரிவின் படி இலங்கையில் எந்தவொரு நபரும் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் அமைச்சரால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தின் கீழ் தவிர இலங்கையில் ஒரு தொலைத்தொடர்பு அமைப்பை இயக்க முடியாது. எவ்வாறெனினும் சட்டத்தின் 20 ஆம் பிரிவில் அனுமதிப்பத்திரம் போன்றவற்றை விடுவிப்பது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

    - சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் வானொலி அதிர்வெண் மற்றும் வானொலி அதிர்வெண் பயன்பாடு ஆகியவற்றிற்கான அனுமதிப்பத்திரம்.

      தொலைத்தொடர்பு சட்டத்தின் பிரிவு 22(1)ன் படி இலங்கையின் எந்தவொரு நபரினால் எந்தவொரு செயற்பாடொன்றிற்காகவும் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று தவிர வானொலி அதிர்வெண் அல்லது எந்தவொரு வானொலி அதிர்வெண் உமிழ்வு இயந்திரம் இலங்கையிலோ அல்லது இலங்கை தேசிய பிராந்திய நீர் பரப்பில் இலங்கையில் பதிவுசெய்துள்ள கப்பலில் அல்லது விமானத்தின் பயன்படுத்தக்கூடாது.

    - சட்டம் 21 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அனுமதிப்பத்திரங்கள்

      சட்டத்தின் 21(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர மொன்றின் கீழ் தவிர நபரொருவரினால் ஏதேனும் தொலைத்தொடர்பு உபகரணமொன்று விற்பனைக்காக உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், விற்பனை செய்வது தொடர்பாக சமர்ப்பித்தல், அது தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் கையளித்தல், வாடகைக்கு வழங்குதல், குத்தகைக்கு வழங்குதல் செயற்படுத்திக் காட்டுதல், பராமரித்தல் அல்லது திருத்தங்களோ செய்ய முடியாது.

- ❖ கட்டண அறவீட்டு ஒழுங்குபடுத்தல்

    - சட்டத்தின் பிரிவு 5(கே) இன் நியதிகளின் பிரகாரம் ஆணைக்குழுவிற்குள்ள அதிகாரங்களின் பிரகாரம் அமைச்சரிடம் கேட்டு அரசின் கொள்கை மற்றும் செயற்பாட்டாளர்களால் வழங்கப்படும் தொலைத்தொடர்பு சேவைகள் தொடர்பாக செயற்பாட்டாளர்களின் தேவைகள் கருத்திற்கொள்ளப்பட்டு இறுப்பனவு அல்லது அத்தகைய கட்டணங்களை தீர்மானிப்பதற்காக முறைகளை நிச்சயித்தல்.

    - சட்டத்தின் 5(1) இன் பிரகாரம் இணையத்தள கட்டணங்களை அங்கீரித்தல்/ நிர்ணயித்தல்.

- ❖ தொலைத்தொடர்புகள் சட்டம் (அதன் கீழான சட்ட விதிகள் உட்பட) மற்றும் அனுமதிப்பத்திரமுடைய செயற்பட்டாளர்களின் இணக்கப்பாடு மற்றும் உறுதிப்படுத்துதல் கண்காணிப்பு மற்றும் சட்டத்துடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல்

- ❖ இலங்கையின் வானொலி அதிர்வெண் வலைக்கற்றை முறையாக பயன்படுத்துவதை கண்காணித்தல் மற்றும் அதிர்வெண் வலைக்கற்றை முறையாக முகாமை செய்தலை உறுதிப்படுத்தல்.

- நுகர்வோர் முறைப்பாடுகளுக்கு பதில் அளித்தல் மற்றும் விசாரணைகளை மேற்கொள்ளுதல்/ ஆய்வுகளை நடாத்துதல்.

  சட்டத்தின் 9(1) பிரிவின் பிரகாரம் செயற்பாட்டாளர் ஒருவரால் வழங்கப்படும் தொலைத்தொடர்புச் சேவைகள் தொடர்பாக தொலைத்தொடர்புகள் சேவை பயனர் அல்லது பொதுமக்களுக்கு இடையே எவரேனும் ஒருவரால் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடொன்றை செய்தால் தேவையானவை கருதி புலனாய்வொன்று ஆணைக்குவிற்கு நடாத்த முடியுமாக இருப்பதுடன் காரணத்திற்குரிய சந்தர்ப்பத்திற்குரிய விடயங்களின் பிரகாரம் அதற்குரிய பொறுப்பேற்றலை மேற்கொள்ள வேண்டும். சட்டத்தின் 9(2) பிரிவின் பிரகாரம் புலனாய்வொன்று மேற்கொள்ளப்படும் போது சட்டத்தின் 9(1) இன் பிரகாரம் ஆணைக்குழுவினால் அம்முறைப்பாட்டிற்கு காரணங்கள் தொடர்பில் அல்லது காரணத்தை சரிப்படுத்துவதற்காக தேவையெனத் தோன்றும் வகையில் அவ்வாறான நடைமுறைகளை எடுக்குமாறு அத்தொலைபேசி இயக்குனர்களுக்கு கட்டளையிட முடியுமாக இருப்பதுடன் தேவைப்பாடு உருவாகும் வகையில் நிதிசார் நட்டத்தை செலுத்துமாறும் தீர்மானிக்கலாம்.

- தொலைதொடர்பு சேவைகளின் தரம் மற்றும் வகை தொடர்பாக பொது மக்களுக்கு தகவல்களை வழங்குதலும் பொதுமக்கள் செயற்பாடு அல்லது பகிரங்க பரீட்சைகள் நடாத்தப்படும் போது அவர்களின் பங்குபற்றலை ஊக்குவித்தல

- தொலைத்தொடர்பு துறை தொடர்பான சர்வதேச மாநாட்டில்/சர்வதேச மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் செயற்பாடுகளில் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தல்

- ஆணைக்குழுவினால் கட்டளைகள், ஆலோசனை வழிகாட்டுதல்கள் வழங்குதல

  இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு கட்டளைகள், ஆலோசனைகள் மற்றும் தீர்மானங்களை வழங்குதல் தொடர்பாக வெளிப்படையான கொள்கையொன்று பின்பற்றப்பட்டுள்ளது.பகிரங்க பரீட்சைகள் மற்றும் ஏனைய மாநாடுகளில் சமூகமளிக்கும் போது அவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் தொலைத்தொடர்பு துறையின் செயற்பாட்டாளர்களுக்கு அதனுடன் தொடர்பான ஏனைய அக்கறை செலுத்தும் தரப்பினருக்கும் கூடிய சந்தர்ப்பமொன்று வழங்கப்படுகின்றது.

- தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் வகை ஒப்புதலுக்கான தொழில்நுட்ப தரங்களை குறிப்பிடல்.

உள்ளக பிரிவுகளின் ஒத்துழைப்பு

TRCSL செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு பல பிரிவுகள் மூலம் மேற்கொள்ளப்பட்டன. 2020 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவிற்குரிய பிரிவுகளில் பிரதான செயற்பாடுகள் மற்றும் அந்தந்த பிரிவுகளின் செயலாற்றல் அடுத்த அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக சில நடவடிக்கைகள் ஒரு குறிப்பிட்ட பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள போதிலும், அத்தகைய நடவடிக்கைகளானது குறிப்பிட்ட பிரிவினரிடமும் மற்ற பிரிவுகளின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டதென விசேடமாக குறிப்பிடப்பட வேண்டியுள்ளது.

ஆணைக்குழு எதிர்கால வழிகாட்டல்

- அனுமதிப்பத்திர வழிகாட்டல் பிரிவு 17 இன் திருத்தம், புதிய அனுமதிப்பத்திரக் கட்டமைப்பு, 17 ஆம் பிரிவு அனுமதிப்பத்திர விண்ணப்பத்தில் திருத்தம், செயற்படுத்துனர்களுக்கான வலையமைப்பு அனுமதிகளை வழங்குதல் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டமைப்புக் கட்டணத்தைப் புதுப்பித்தல் ஆகியன அனுமதிப்பத்திர முகாமைத்துவத்தின் கீழ் நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

- கோபுர மீளமைத்தல் செயன்முறையைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது, சர்வதேச சிறந்த நடைமுறைகளை கருத்தில் கொண்டு IPv6 பாதை வரைபடத்தைத் தயாரித்தல், தற்போதுள்ள இலக்கமிடும் திட்டத்தை மீளாய்வு செய்தல் மற்றும் கட்டணமில்லா இலக்க வீச்சை அறிமுகம் செய்தல், எண் பெயர்வுத்திறனை மேம்படுத்துதல், கேபள் தொலைகாட்சி சேவையின் செயற்பாடுகளை கண்காணித்தல், விற்பனையாளர் அனுமதிப்பத்திர நடைமுறை மற்றும் உபகரணங்கள் அனுமதி செயன்முறை, வலையமைப்பு விவகாரங்களின் கீழ் அண்டெனா முகாமைத்துவக் கட்டமைப்பை மேம்படுத்துதல்.

- புதுப்பிப்பு IMEI உறுதிப்படுத்தல் முறைமையைப் புதுப்பித்தல், ஒருங்கிணைந்த ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு முறைமையை நிறுவுதல், ஸ்பெக்ட்ரம் பாதை வரைபடத்தை உருவாக்குதல் மற்றும் 5G அபிவிருத்தி, இலத்திரனியல் வீடியோ ஒளிபரப்பைத் தொடங்குதல், ரேடியோ ஸ்பெக்ட்ரம் அனுமதிப்பத்திர விதிகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் ஸ்பெக்ட்ரம் கட்டணத் திருத்தம், அரசு நிறுவனங்களுடன் ஒப்புதல் முறையை ஒழுங்குபடுத்துதல், செயல்படுத்துதல் RTTE விதிகள் மற்றும் ஸ்பெக்ட்ரம் நிர்வாகத்தின் கீழ் எதிர்பார்க்கப்படும் தேசிய அலைவரிசை ஒதுக்கீடு அட்டவணை முன்முயற்சிகளைத் தயாரித்தல்.

- ஆணைக்குழு இடைத்தொடர்பு ஒப்புதலை நடைமுறைப்படுத்துதல் மற்றும் தேவைகள் ஏற்படும் போது தொடர்புகளின் வணிக விகிதங்களை நிர்ணயிப்பதற்கான செயன்முறையை நடாத்துதல், ஒன்றோடொன்று தொடர்புயை வேறுபாடுகள், போட்டி சிக்கல்களைக் கையாளுதல், வரி மற்றும் வரிகளை வசூலித்தல், வெளிநாட்டு நிபுணர்கள்/ தொழிலாளர்களுக்கான விசா பரிந்துரை, தொழில்துறை புள்ளிவிபரங்களைச் சேகரித்தல் மற்றும் உள்ளூர் மற்றும் சர்வதேச அதிகாரிகளுக்குப் புள்ளிவிபரத் தகவல்களைச் சமர்ப்பித்தல், தொழில் செயற்திறனை ஆய்வு செய்தல், உள்ளூர் வளங்களை கூடுதலாக பயன்படுத்துவதற்கான செயற்படுத்துனர்களை ஊக்குவித்தல், கட்டண முன்மொழிவுகளை செயற்படுத்தல் / கட்டணம் தொடர்பான தொழில் சிக்கல்களைக் கையாளுதல், கட்டணங்கள் தொடர்பான ICT குறிகாட்டிகள் மற்றும் அளவுகோல் ஆய்வுகளைக் கணித்தல், தொலைத்தொடர்புத் துறைக்கான நிர்ணயம், ‘‘கமட சன்னிவேதனா’’ கிராமப்புறங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டம், தொலைத்தொடர்பு மற்றும் ICT மின்-கழிவு முகாமைத்துவம் திட்டம் என்பனவற்றிற்ககான வழிகாட்டல்கள் போட்டி பகுதிகளின் கீழ் தரப்பட்டன.

- செயற்படுத்துனர்கள் சேவையின் தர அளவுருக்களைக் கடைப்பிடிப்பதை உறுதி செய்வதற்கு இணங்க, அனுமதிப்பத்திரங்களின் நிபந்தனைகளைக் கடைப்பிடிப்பதைக் கண்காணித்தல் மற்றும் தேவையான ஒழுங்குமுறை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல், அங்கீகரிக்கப்படாத கட்டணங்கள் மற்றும் அங்கீகரிக்கப்படாத உபகரணங்கள் என்பனவற்றைக் கண்காணித்து தேவையான ஒழுங்குமுறை நடவடிக்கைகளை எடுத்தல். சிம் பதிவை கண்காணித்துத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், IMEI செயல்படுத்தப்பட்ட சாதனங்களை நாட்டிற்கு இறக்குமதி செய்வதை ஒழுங்குபடுத்துதல், நுகர்வோர் புகார் நடவடிக்கைகளை நடத்துதல் மற்றும் கையாளுதல்.

- உள்ளூர் பல்கலைக்கழகங்களின் ஆதரவுடன் தொலைத்தொடர்பு ஆராய்ச்சி ஆய்வுகளை நடாத்தவும், உள்ளூர் ICT தன்னார்வ மற்றும் கோபுர தொழில்நுட்ப நிகழ்ச்சிகளை நடத்தவும், WTISD விழிப்புணர்வு முயற்சிகளை மேற்கொள்ளவும், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகளின் உதவியுடன் கூட்டு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யவும், சர்வதேச மாநாடுகளை நடத்தவும், தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆய்வுகள் மற்றும் கேள்வித்தாள்களை முடிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது., சர்வதேச மேம்பட்ட பயிற்சியை ஒருங்கிணைத்தல். மேலும், தொழில்துறையின் விரைவான வளர்ச்சியை பூர்த்தி செய்யத் திருத்தங்கள் / புதிய சட்டத்தை உருவாக்குதல்.

- மனித வளத்தின் SOR மற்றும் மேம்பாடு, உட்கட்டமைப்பு மேம்பாடு, கூட்டுத் விவகாரங்களை நிறைவு செய்தல் மற்றும் நிர்வாக விவகாரங்களில் திட்டமிடல் நடவடிக்கைகள். தகவல் தொழில்நுட்பத்தின் கீழ் ஊழியர்களுக்கான ICT திறன் உருவாக்கம், ICT அமைப்பு செயற்படுத்தல் மற்றும் செயன்முறை தன்னியக்கத் திட்டம். மேலும், புதிய PABX அமைப்பு, நிறுவன வலையமைப்பு / சேவையகங்களின் கட்டமைப்பு மற்றும் மொபைல் சாதன வகை ஒப்புதல் மற்றும் IMEI பதிவு முறையை மேம்படுத்துதல். சிறப்புத் திட்டங்களில், கொழும்பு தாமரை கோபுரம், முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வுகூடத்தை அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், நிதி முகாமைத்துவ நடவடிக்கைகள், மற்றும் உள்ளக கணக்காய்வு ஆகியவற்றிலும் நிறுவனத்தின் பணி மேம்பாட்டிற்காகத் திட்டமிடப்பட்டுள்ளன.

ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்



திரு. ஜயந்த டீ சில்வா
தலைவர்

திரு. அனில் மீகஹகே
ஆணைக்குழு உறுப்பினர்

திரு. ஓஷத சேனாநாயக்க
பணிப்பாளர் நாயகம்

திரு. றுவன்த குரே
ஆணைக்குழு உறுப்பினர்

திரு. சமின்த குமாரசிறி
ஆணைக்குழு உறுப்பினர்

திரு. ஜயன்த டி சில்வா
தலைவர்

தொழில்நுட்ப துறையில் 40 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம், தேசிய கொள்கை உருவாக்கம் மற்றும் அறிவுச் சேவைகளுக்கான உத்திகள் உலகலாவிய ரீதியில் பாரிய திட்டங்களில் மிகுந்த அனுபவத்தைக் கொண்டவர்.

தற்போது இலங்கை அரசாங்கத்தின் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளராக பணியாற்றுகிறார்.

அவர் இலங்கையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தின் (ஐசிடிஏ) தலைவராகவும், சபைத் பணிப்பாளராகவும் பணியாற்றினார். இலங்கை மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களின் சங்கத்தின் (SLASSCOM) ஒரு ஸ்தாபக அங்கத்தவர் மற்றும் முன்னால் தலைவர். மென்பொருள் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் முன்னால் தலைவர், இலங்கை பிரிட்டிஷ் கம்ப்யூட்டர் சொசைட்டியின் (டீஊளூ) தலைவர், மற்றும் கொழும்பு கணினி பாடசாலை பல்கலைக்கழகத்தின் (UCSC) குழு உறுப்பினர், இலங்கையின் தகவல் தொழில்நுட்பத் துறையின் தேசிய ரீதியான கொள்கைகளை வகுப்பதில் இலங்கை அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கும் குழுவில் பணியாற்றினார்.

IFS ஸ்ரீலங்கா லிமிடட் நிறுவனத்தின் இணை நிறுவனர் மற்றும் நிர்வாக பணிப்பாளர். ஐ.எப்.எஸ் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் தலைவராகவும் தலைமை நிறைவேற்று அதிகாரியாகவும் பணியாற்றினார். ஐகுளு இன் மிகவும் மதிப்புமிக்க வீரர் பட்டத்தை இரண்டு தடவை வென்றுள்ளார்.

வொஷிங்டன் டிசி, சர்வதேச புள்ளிவிபர நிகழ்ச்சித்திட்ட மத்திய நிலையத்தின் பட்டப்பின் டிப்ளோமா பட்டதாரியாவார். தகவல் தொழில்நுட்ப பட்டய நிறுவனமான பிசிஎஸ் இன் அங்கத்தவர் (FBCS), மேலும் பட்டய தொழில்நுட்ப நிபுணராவார (CITP). 2011 ஆம் ஆண்டுக்கான தேசிய ரீதியான சிறந்த மென்பொருளுக்கான விருது வழங்கும் நிகழ்வில் இலங்கையில் மென்பொருள் துறைக்கு செய்த சேவைகளுக்காக வழங்கப்படுகின்ற தகவல் தொழில்நுட்ப வாழ்நாள் சாதனையாளர்கள் விருது/ மிக சிறந்த பங்களிப்பாளர் விருது ஆகியவற்றை பெற்றுள்ளார்.

திரு. ஓஷத சேனாநாயக்க
பணிப்பாளர் நாயகம்

திரு. ஓஷத சேனாநாயக்க இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாகவும், இணைய பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் மயமாக்கலுக்கான இலங்கையின் உச்ச அமைப்பான ICTA & SL CERT இன் குழு உறுப்பினராகவும் உள்ளார். ஓஷாட இதற்கு முன்னர் தொழில்நுட்பம், சேவை முகாமைத்துவம் போன்ற வேறுபட்ட துறைகளை உள்ளடக்கிய பல தொடக்க முயற்சிகளுக்கு தலைமை தாங்கினார், மற்றும் ஏர்பிஎன்பி சங்கிலி போன்ற ஸ்மார்ட் மின்கல தொழில்நுட்பம் பற்றிய ஆராய்ச்சி போன்ற பல்வேறு வணிக நலன்களில் கவனம் செலுத்துவதிலும் தலைமை வகித்தார்.

ஓஷத சேனாநாயக்க இதற்கு முன் தலைமை வகித்த Pyxle என்ற இலங்கையில் டிஜிட்டல் உத்திகளை முன்னெடுத்துச் செல்வதில் இலங்கையின் பெரும்பான்மையான நீலச் சில்லுகளில் ஈடுபட்டுள்ள இலங்கையின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகளின் முதன்மை நிறுவனமான ீலுஓடந தலைமைப் பொறுப்பிலிருந்த பெற்ற உயர் அனுபவம் கொண்டவர். உலகளாவிய த்னியார் முதலீட்டு நிறுவனமான டேவி ஸ்டாக் குழுமத்துடன் நிறுவனத்தை இணைப்பதில் ஓஷத முக்கிய பங்கு வகித்தார். அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் தகவல் தொழில்நுட்பத் துறையில் முன்னணியில் உள்ள போர்ச்சூன் 100 வாடிக்கையாளர்களைப் பெறுவதிலும் வேலை செய்வதிலும் ஓஷதவுக்கு விரிவான அறிவு உள்ளது, இது தொழில்நுட்ப நிபுணத்துவத்தின் கலவையையும், தொடக்கத்திலிருந்து முதிர்ந்த வணிகங்கள் வரை வளர்ந்து வரும் நிறுவனங்களில் தொழில் நுண்ணறிவையும் கொண்டுவருகிறது.

தந்திரோபாயமயமாக்கல் மற்றும் கூட்டிணைவுகளை கட்டியெழுப்புவது அவரது முக்கிய திறமையாக கொண்டிருக்கும் பல்வேறுபட்ட தொழில்நுட்ப அடிப்படையிலான தொடக்கங்களுக்கு ஆலோசகராகவும் வழிகாட்டியாகவும் உள்ளார். மேலும் இலங்கையில் வங்கி, நிதித்துறை மற்றும் நீல சில்லுகளில் முக்கியமாக பல வெற்றிகரமான டிஜிட்டல் மாற்ற உத்திகளை செயல்படுத்துவதில் முன்னணியில் உள்ளார். ஓஷத இலங்கையில் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கு முன்னர் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் இருந்தார்.

அவரின் கல்வித்துறை அடைவுகளாக அவுஸ்திரேலியாவின் AIB இல் பெற்றுக்கொண்ட எம்பிஏ மற்றும் நியூகேஸில் உள்ள நியுகாஸ்டல் Northumbria பல்கலைக்கழகத்தின் இளமாணி பட்டத்தைக் குறிப்பிடலாம்.

நிறுவனங்களை டிஜிட்டல் மயமாக்குதல் எனும் கருப்பொருளில் பம்பாய் பங்குச் சந்தை வருடாந்த கூட்டத்தில் முக்கிய நடுவராக ஓஷாத இந்திய பணிப்பாளர்கள் நிறுவனத்தினால் அழைக்கப்பட்டிருந்தார். ”எங்கள் டிஜிட்டல் வாழ்க்கை” பற்றி விளக்கும் தகவல் தொழில்நுட்ப தேசிய மாநாட்டில் பிரதான நடுவராகவும் பிரதான பேச்சாளராகவும் இருந்தார்.

ஓஷத வியாபார நிர்வாக பட்டப்பின் படிப்பு பட்டதாரி MBA மாணவர்களுக்கான பெட்போர்ட்ஷைர் பல்கலைக்கழகத்தின் ஒக்ஸ்போர்ட் ஸ்கூல் ஆப் பிசினஸில் பாடசாலையின் வருகை விரிவுரையாளராகவும், தந்திரோபாய முகாமைத்துவம், டிஜிட்டல் சந்தைப்படுத்தல் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிர்வாகம் ஆகிய துறைகளின் தனது அறிவைப் பகிர்ந்து கொள்கிறார்.

அவரது தொழில் வாழ்க்கைக்கு அப்பால், ஓஷத சமூக சேவையாளராகவும், கிராமப்புற பிள்ளைகளுக்கு நீண்டகால கல்வி உதவிகளை வழங்கும் செனரா சிசு சவியா அறக்கட்டளையின் நிறுவன உறுப்பினர் ஆவார். சமீபத்திய திட்டமாக கிராமப்புற பாடசாலைகளைச் சேர்ந்த 150 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு 2020 ஆம் ஆண்டு பாடசாலைக்கு மீள திரும்புவதற்கு தயார்படுத்தும் வகையில் பாடசாலை பொதிகள் வழங்கப்பட்டன.

திரு. சமிந்த குமாரசிறி
ஆணைக்குழு உறுப்பினர்

சமிந்த ஒரு சிரேஷ்ட பட்டயக் கணக்காளர், நிறுவன பயிற்சியாளர், தலைமைத்துவப் பயிற்சியாளர், முகாமைத்துவ ஆலோசகர் மற்றும் நிதி ஆலோசகர் சிறந்த சிந்தனையார் வணிக தொழிற்துறையில் இரண்டு தசாப்தத்துக்கு நிறுவன மற்றும் பெருநிறுவனத் துறையில் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலான அனுபவம் கொண்டவர். உள்ளூர் நீலச் சில்லுகள் மற்றும் பல்தேசிய நிறுவனங்களில் சிரேஷ்ட தலைமைப் பதவிகளை வகித்துள்ளார்.

சமிந்த பல விருதுகள் மற்றும் பதக்கங்களுடன் தொழில்முறை மற்றும் கல்வித் தகைமைகளின் வரிசையைக் கொண்டிருக்கிறார். அவர் இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனம், இங்கிலாந்து பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கம் மற்றும் இலங்கையின் கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர் நிறுவனத்தின் உறுப்பினராவார். அவர் இலங்கையின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினராகவும் உள்ளார். அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கணக்கியல் பாடத்தில் முதல் வகுப்பு (சிறப்பு) பட்டம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் நிதியியல் துறையில் வியாபர பட்டப்பின் படிப்பு பட்டத்தை (MBA) பூர்த்தி செய்துள்ளார்

அவர் தற்போது கணக்காளர்களின் தேசிய அமைப்பாக காணப்படும், இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் நிர்வாகக் குழு உறுப்பினராக பணியாற்றுகிறார். மேலும் ஒரு சில நிறுவனங்கள் மற்றும் தேசிய அமைப்புகளின் ஆலோசகராகவும் / பணிப்பாளராகவும் பணியாற்றுகிறார். அவர் முழு தெற்காசியாவின் ஒரே பிரதிநிதியாக, சர்வதேச கணக்காளர் கூட்டமைப்பின் கணக்கியல் கல்விக்கான சர்வதேச நடுவர் குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. அனில் மீகஹகே
ஆணைக்குழுவின் உறுப்பினர்

திரு. அனில் மீகஹகே இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராக இருப்பதுடன், அவர் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அனில் ஈஏபி ஹோல்டிங்ஸின் சிரேஷ்ட துணைத் தலைவர் / தலைமை நிர்வாக அதிகாரியாகவும், ஈபிசி டிவி ரேடியோ / ஈஏபி / பிலிம்ஸ் ஆகியவற்றின் பணிப்பாளராகவும் பதவி வகித்தார். அவர் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் சம்சுங் மொபைலுக்கான நாட்டு தலைவராக இருந்தார்

முன்னதாக, அவர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மிகப் பெரிய விற்பனைக் குழுவொன்றுக்கு தலைமை வகித்ததுடன், பொது முகாமையாளராக கிளை வலைப்பின்னல், விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மேலும் 5000 விற்பனைக் குழுக்கள் மற்றும் 1200 ஊழியர்களின் மேற்பார்வையாளராக இருந்தார்.

அனில், யுனிலீவர் இலங்கையில் 20 ஆண்டுகளுக்கும் மேலான நிறுவன அனுபவத்தைக் கொண்டவர். 1988 இல் யூனிலீவர் நிறுவனத்தில் சேர்ந்த இவர் விற்பனை நிர்வாகி, விற்பனை நிர்வாக முகாமையாளர், பகுதி விற்பனை முகாமையாளர், மற்றும் வர்த்தக பிரிவு முகாமையாளர் பதவிகளை வகித்ததுடன், வீடு, தனிப்பட்ட பராமரிப்பு வ் வணிக செயற்படுத்தல் முகாமையாளராக நவீன வர்த்தத்தின்பால் நகர்ந்தார். வியட்நாம் யுனிலிவரில் பணிபுரிந்த பிறகு வீடு மற்றும் தனிநபர் பராமரிப்பு பிரிவுகளுக்கான சேனல் மேம்பாடு மற்றும் வர்த்தக சந்தைப்படுத்தல் முகாமையாளராக பணியாற்றினார். மேலும் யூனிலீவரில் மருந்தகம் மற்றும் ஒப்பனை சேனலின் தலைவராகவும் இருந்தார்.

தொழில் ரீதியாக வியாபார கற்கையில் முதுமாணிப் பட்டம் (MBA) மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலாநிதி கற்கை மாணவராவார். ஐக்கிய இராஜ்ஜியத்தின் சந்தைப்படுத்தல் பட்டய நிறுவத்தின் தொழில் ரீதியான பட்டப்பின் படிப்பு சந்தைப்படுத்தல் டிப்ளோமா சான்றிதழைப் பெற்றுள்ளதுடன், சிஐஎம் மற்றும் ஐசிஎஸ்ஏ மாணவர்களுக்கு கற்பித்தலில் 12 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் உள்ளது. தற்போது கொழும்பு பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டத்துக்காக கற்று வருகிறார்.

திரு. ருவன்த குரே
ஆணைக்குழு உறுப்பினர்

திரு. ருவன்த குரே தொழில்ரீதியாக ஒரு வழக்கறிஞர். லேசிஸ்டர் பல்கலைக்கழகத்தின் சட்டமானி பட்டதாரியாகவும் (LL.B.(Hons)) வழக்கறிஞராகவும் (Lincoln's Inn) உள்ளார்

வணிகச் சட்டம், ஒப்பந்தச் சட்டம், புலமைச் சொத்துக்கள் சட்டம் ஆகிய பல்வேறுபட்ட அம்சங்களில் அவர் பரந்த அனுபவத்தைக் கொண்டுள்ளார் மற்றும் ஒரு சட்ட நிபுணராக ஒரு புகழ்பெற்ற தொழில் அனுபவத்துடன் மூத்த சட்ட ஆலோசகராக சுறுசுறுப்பாக பணியாற்றி வருகிறார். டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் நீதிமன்ற ஆட்டோமேஷன் குறித்து அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட சட்ட சீர்திருத்த குழுவின் சட்ட ஆலோசகராகவும், அழைப்பாளராகவும் அவர் பணியாற்றுகிறார்.

சட்டத்துறையில் தன்னை சிறப்பித்துக் கொண்ட திரு. குரே திசெம்பர் 2019 இல் ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அவர் இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் கணக்காய்வுக்குழு உறுப்பினராகவும் உள்ளார். அவர் ஆணைக்குழுவில் பல சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் விடயங்களில் பங்களிப்பு செய்துள்ளார்.

ஆணைக்குழு இன் மூத்த நிர்வாகக் குழு



திரு ஹெலசிறி ரணதுங்க
பணிப்பாளர் - வலையமைப்புகள்

திரு ஹெலசிறி ரணதுங்க 1998 இல் இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் இணைந்தார். அவர் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் மின்னணுவியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியலில் விஞ்ஞான (சிறப்பு) பட்டதாரியாவார். மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்பத்தில் எம்பிஏ பட்டம் பெற்றுள்ளார். அவர் இலங்கை பொறியியல் நிறுவனத்தின் (IESL) பட்டய பொறியியலாளர் ஆவார். 1986 இல் பட்டம் பெற்ற பிறகு, அவர் சுயாதீன தொலைக்காட்சி சேவையில் இணைந்து பல முக்கிய பொறியியல் பதவிகளை வகித்துள்ளார். ஐரீஎன் இல் தனது 12 ஆண்டு பதவிக்காலத்தில் பல ஒலிபரப்பு விரிவாக்கங்களுக்கும் ஒலிபரப்பு நிறுவனத்தில் ஸ்டுடியோ மற்றும் கட்டுப்பாட்டு அறை மேம்படுத்தல் திட்டங்களுக்கும் தலைமை வகித்தார்.

இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் அவரது 22 ஆண்டுகளுக்கும் மேலான பதவிக்காலத்தில் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பல உயர் பதவிகளை வகித்தார். கருத்திட்ட முகாமையாளராக இருந்தபோது வானொலி அதிர்வெண் முகாமைத்துவம் மற்றும் ஆணைக்குழுவின் கண்காணிப்பு முறைமையை செயல்படுத்துவதில் முன்னின்று உழைத்தார். அவர் பல ஆண்டுகளாக ஆணைக்குழுவின் ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவப் பிரிவுக்கு தலைமை தாங்கினார். தற்போதைய வலையமைப்பு பணிப்பாளர் பதவியை ஏற்க முன்னர் அவர் சில வருடங்கள் அனுமதிப்பத்திர முகாமைத்துவ பணிப்பாளராக கடமையாற்றினார்.

அவரது பதவிக்காலத்தில் பல சர்வதேச பயிற்சி நிகழ்ச்சிகள், பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை துறையில் விரிவான அறிவைப் பெற்றார். சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட பல உலக வானொலி தொடர்பு மாநாடுகள் மற்றும் பிற உலக தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை கூட்டங்களில் அவர் நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தினார்.



திரு. எச்.பி. கருணாரத்ன
பணிப்பாளர் - ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவம்

திரு. எச்.பி. கருணாரத்ன இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தின் இணைவதற்கு முன்னர் 1992 ஆம் ஆண்டு பொறியிலாளராக சேர்ந்தார். தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தலில் இணைவதற்கு முன்பு, அவர் 7 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை தொலைத்தொடர்புகள் திணைக்களத்தில் பணியாற்றினார்.

இவர் ஐக்கிய இராஜ்ஜியத்தின் இலத்திரனியல் மற்றும் வானொலி பொறியியலாளர்கள் நிறுவனத்தில் பட்டதாரி உறுப்புரிமையைப் பெற்றதுடன், 1995 ஆம் ஆண்டு ஐக்கிய இராச்சியத்தின் பொறியியல் பேரவையில் பட்டயப் பொறியாளராக பதிவுசெய்தார். மேற்கிந்திய தீவுகள் பல்கலைக்கழகத்தில் தொலைத்தொடர்பு கொள்கைமற்றும் ஒழுங்குமுறையில் முதுகலைப் பட்டம் பெற்றார்.

திரு. கருணாரத்ன தனது தொலைத்தொடர்புத் துறையில் 30 ஆண்டுகளுக்கும் மேலான தொழில் வாழ்க்கையில் பொறியியல், முகாமைத்துவம், சர்வதேசஉறவுகள், தொலைத்தொடர்புஒழுங்குபடுத்தல்கள், உரிமம் மற்றும் வானொலிஸ்பெக்ரம் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் பலதரப்பட்ட அனுபவங்களைப் பெற்றுள்ளார்.

அவர் இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் பணிப்பாளர் / அனுமதிப்பத்திர நிர்வாகம், பணிப்பாளர் / ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவம், பணிப்பாளர் / வலைப்பின்னல்கள் உட்பட பல உயர் பதவிகளை வகித்துள்ளார். தற்போது, இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் பணிப்பாளர் / ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவப் பதவியை வகிக்கிறார்.

இலங்கை தொலைததொடர்புகள் ஒழுங்குபடுத்துவம் ஆணைக்குழுவின் ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவப் பிரிவானது இலங்கையில் உள்ள அனைத்து வானொலி தகவல் தொடர்பு சேவைகளையும் நிர்வகிக்கும் முதன்மை ஆணையை கொண்டுள்ளது. இவை சிவில் மற்றும் இராணுவ அதிர்வெண் பயன்பாட்டின் தரவுத்தளத்தை திட்டமிடுதல், ஒதுக்குதல், கண்காணித்தல், வைத்திருத்தல் ஆகியவை இதில் அடங்கும். ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவப் பிரிவின் தலைவராக இருக்கும் அதேவேளை திரு. கருணாரத்ன, வானொலி ஸ்பெக்ட்ரமின் திறமை, புதுமையான பயன்பாட்டை உறுதிசெய்யும் வகையில் ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு செய்வதில் நியாயமான, சமமானமற்றும் வெளிப்படையான நடைமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு பொறுப்பானவர்.

அவர் ஐக்கிய இராச்சியத்தின் இன்ஸ்டிடியூட் ஆப் இன்ஜினியரிங் டெக்னாலஜி (ஐஇடி) உறுப்பினராக இருப்பதுடன், ஐஇடி இன் சர்வதேச தொழில்முறை பதிவு ஆலோசகராகவும் பணியாற்றுகிறார்.



திரு. எம் கே ஜெயசேகர
பணிப்பாளர் - கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள் (ஓய்வு)

திரு. ஜெயசேகர 1994 ஆம் ஆண்டு இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் இணைந்தார். அதற்கு முன்னர் இலங்கை விஞ்ஞான மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி நிறுவனத்தில் (சிஐஎஸ்ஐஆர்) தற்போது ஐடிஐ- என அழைக்கப்படுகிறது, ஏழு ஆண்டுகள் பணியாற்றினார். அவர் 26 வருடங்களுக்கும் மேலாக ஆணைக்குழுவுடன் இருப்பதுடன் இக்காலப்பகுதியில் இரண்டு வருடங்கள் மாத்திரம் 2001-2003 வரை இலண்டனில் உள்ள பொது நலவாய செயலகத்தின் அழைப்பின் பேரில் பஹாமாஸின் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் ஆலோசகராக பணியாற்றியுள்ளார். அவர் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் இலத்திரனியலில் மற்றும் தொலைதொடர்பு பொறியலில் பட்டதாரியாவார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் கணினி விஞ்ஞானத்தில் முதுகலைப் பட்டத்தையும், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில். விஞ்ஞான முகாமைத்தவத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா சான்றிதழைப் பெற்றுள்ளார். அவர் ஒருபட்டய பொறியாளர் மற்றும் ஐநுளுடு மற்றும் IET (UK) உறுப்பினர். அவர் சர்வதேச தொலைதொடர்புகள் யூனியனின் "புரோட்பேண்ட் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான உத்திகள்: இலங்கை குறித்த ஒரு வழக்கு ஆய்வு" அறிக்கையின் ஆசிரியராக இருந்தார்.



திரு. எம் கே. ஜயந்த
பணிப்பாளர் - நிதி

திரு. ஜயந்த 2013 இல் தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் இணைந்தார். அவர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிகவியல் இளமானி பட்டத்தைப் பெற்றுள்ளார், மேலும், அவர் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் துணை உறுப்பினரகவும் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய பொது நிதி கணக்காளரின் இணை உறுப்பினராகவும் உள்ளார். இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளரின் சக உறுப்பினர்,மற்றும் இங்கிலாந்தின் செலவு மற்றும் நிர்வாக கணக்காளர்களின் இணை உறுப்பினராவார்.

இலங்கை தொலை தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் இணைய முன்னர். இலங்கையில் புகழ்பெற்ற உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் சேவை தனியார் நிறுவனங்களில் குழு நிதிகட்டுப்பாட்டாளர், முகாமையாளர் நிதி மற்றும் நிர்வாகம் மற்றும் தலைமை நிதி உத்தியோகத்தர் போன்ற உயர் பதவிகளை வகித்து 17 வருடங்களுக்கும் மேற்பட்ட நிதி மற்றும் நிர்வாக அனுபவத்தைக் கொண்டவர்.



திருமதி தரலிகா லிவேரா
பதில் பணிப்பாளர் - இணக்கம் மற்றும் விசாரணை

திருமதி தரலிகா லிவேரா இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் இணைவதற்க முன்னர் 1994 இல் தொலைத் தொடர்புகள் பணிப்பாளர் நாயக அலுவலகத்தில் ஒரு பொறியியலாளராக இருந்தார். தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தலில் 26 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பலதரப்பட்ட அனுபவங்களைக் கொண்டிருந்தார் மற்றும் தற்போது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் பணிப்பாளர் - முறையீடுகள் மற்றும் விசாரணை (சட்டம்) ஆக உள்ளார்.

அவர் இலங்கையின் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பிஎஸ்சி பொறியியல் (எலக்ட்ரிக்கல் ரூஎலக்ட்ரானிக்ஸ்) மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் ஷெ.்.பீல்ட் ஹலாம் பல்கலைக்கழகத்தில் எலக்ட்ரானிக்ஸ் ரூடெலிகம் யூனிகேஷன்ஸ் முதுகலைப் பட்டம் பெற்றார்.

திருமதிலிவேரா,ஐக்கிய இராச்சியத்தின் மின்னணு மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் பட்டயப் பொறியாளர் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் பொறியியல் பேரவை உறுப்பினர்.

அவர் தெற்காசியாவுக்கான ஆசிய பசுபிக் தொலைத்தொடர்பு கொள்கை மற்றும் ஒழுங்குமுறை மன்றத்தின் துணைத் தலைவராக உள்ளார் மற்றும் சர்வதேச தொலைத்தொடர்பு யூனியன் ஆய்வுக் குழு -1 இல் புரோட்பேன்ட் ஆய்வுகளுக்கான துணை அறிக்கையாளராக பணியாற்றினார்.

அவரது தொழில் வாழ்க்கையின் போது, தொலைதொடர்புக் கொள்கை மற்றும் ஒழுங்குமுறை குறித்த விரிவான தேசிய மற்றும் சர்வதேச அனுபவத்தை அவர் பெற்றுள்ளார், இது மூலோபாய முடிவுகளை செயல்படுத்தும் ஒழுங்குமுறைக்கு பயனுள்ளதாக இருந்தது.



திரு இ.என்.பி.கே. ரத்னபால
பதில் பணிப்பாளர் – அனுமதிப்பத்திர முகாமைத்துவம்

இலங்கையில் தொலைத்தொடர்புத் துறை ஒழுங்குபடுத்தல் தொழில்முறை பொறியியலாளராக 26 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றியுள்ள திரு. நிஹால் ரத்னபால வானொலி அலைவரிசை ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவத் துறையில் விரிவான அனுபவத்தை பெற்றுள்ளார். மேலும் ஒலி மற்றும் தொலைக்காட்சி ஒளிபரப்புத்துறை உட்பட வானொலி தொடர்புத் துறையில் பாரிய அபிவிருத்திகளை மேற்கொள்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றார்.

அவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் விஞ்ஞான பட்டம் (சிறப்பு) பட்டதாரியாவார். மேலும் இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு சிறப்பு கற்கையில் மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பு பொறியியல் (MEng) பட்டம் பெற்றுள்ளார். அவர் பொறியியல் கவுன்சிலின் (இங்கிலாந்து) பதிவுசெய்யப்பட்ட ஒரு பட்டய பொறியியலாளர் ஆவார். மற்றும் பொறியியலம் தொழில்நுட்ப- ஐஇடி (இங்கிலாந்து) நிறுவனத்தின் உறுப்பினர். அவர் இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் (ஐஇஎஸ்எல்) உறுப்பினராகவும் உள்ளார்.

இவர் தற்போது வகிக்கும் பதில் பணிப்பாளர் பதவியானது நாட்டின் முழு தொலைத்தொடர்புத்துறையை வழிநடாத்தும் தொலைத் தொடர்பு முறைமை அனுமதிப்பத்திர முகாமைத்தும் வரை வியாபித்துள்ளது. அவர் 1994 ஆம் ஆண்டு முதல் பல சர்வதேச நிறுவனங்களிடமிருந்து விரிவான தொழிற்துறை அறிவையும் அனுபவத்தையும் பெற்றுள்ளார் மற்றும் சுவிட்சிலாந்தின் ஜெனிவா நகரில் தொலைதொடர்பு யூனியனால் (ITU) நடாத்தப்பட்ட உலக வானொலி தொடர்பு மாநாட்டின் (WRC) இலங்கை பிரதிநிதியின் உறுப்பினராக இருந்தார். மேலும் வேறு பிராந்திய ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்.



திருமதி கே.எஸ்.எம். விஷாகா
பதில் பணிப்பாளர் - கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள்

திருமதி கே.எஸ்.எம். விஷாகா தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் (அப்போது தொலைத்தொடர்பு பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம்) 1994 இல் இணைந்தார். அவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் மின்னியல் மற்றும் இலத்திரனியலில் சிறப்பு விஞ்ஞான இளமானிப்பட்டத்தை (பொறியியல்) பெற்றுள்ளார். மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் தொலைத்தொடர்பு கற்கையில் பொறியியல் முதுமானிப் பட்டத்தைப் பெற்றுள்ளார். ஐக்கிய இராச்சியத்தின் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் (ஐஙுளார்வு) பட்டய பொறியாளராகவும் ஐக்கிய இராச்சியத்தின் பொறியியல் கவுன்சிலின் பட்டய உறுப்பினராவார்.

அவர் தற்போது பணிப்பாளர் (பதில்.) - TRC இன் கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள். டிஆர்சியின் தொலைத்தொடர்பு மற்றும் விதிமுறைகள் துறையில் 26 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தை அவர் எண்ணுகிறார். டிஆர்சியின் ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவ மற்றும் வலையமைப்பு பிரிவுகளில் உதவிப் பணிப்பாளர் மற்றும் உதவி பணிப்பாளர் பதவிகளில் பல ஆண்டுகள் பணியாற்றியுள்ளார் மற்றும் இந்த காலகட்டத்தில் டிஆர்சியின் பல முக்கிய திட்டங்களுக்கு தனது அறிவையும் அனுபவத்தையும் விரிவுபடுத்தியுள்ளார். சர்வதேச தொலைத்தொடர்பு சங்கத்தின் (ஐடியு) உலக வானொலி மாநாடுகள் (டபிள்யூஆர்சி) மற்றும் ஐடியு மற்றும் ஆசிய பசுபிக் தொலைதொடர்பு (ஏபிடி) போன்ற பல சர்வதேச கூட்டங்களில் அவர் நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தினார்.



பொறியியலாளர் ஜே.ஏ.எஸ். குணானந்தன
பதில் பணிப்பாளர் - சிறப்பு திட்டங்கள்

பொறியியல் ஜே.ஏ.எஸ். குணநந்தனா 1994 இல் மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் பட்டத்தைப் பெற்றார். மேலும் தனியார் துறையில் சிறிது காலம் இருந்த அவர் பின்னர் 1998 இல் உதவிப் பணிப்பாளராக / இயங்குதளம் ஆக இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் இணைந்து கொண்டார். அத்தோடு அவர் தனது பட்டப்பின் படிப்பு கல்வியைத் தொடர்ந்தார் மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் தகவல் முகாமைத்துவத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா சான்றிதழைப் பெற்றதுடன், இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் விஞ்ஞான முதுமானிப் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

பொறியியல் குணானந்தன ஒரு பட்டய பொறியாளராகவும், இலங்கையின் பொறியியல் நிறுவனத்தின் குழு உறுப்பினராகவும், இலங்கை பொறியியல் பேரவையின் குழு உறுப்பினராகவும், ஐக்கிய இராச்சியத்தின் மின் மற்றும் மின்னியல் பொறியியல் நிறுவனத்தின் உறுப்பினராகவும் உள்ளார்.

கடந்த 26 ஆண்டுகளில் அவர் தனது சேவைகளை இலங்கை தாய் நாட்டுக்காக அர்ப்பணித்தார். அவர் ஒரு பொறியியலாளராக கொழும்பு பெரும்பாக மருத்துவமனைகளை இலத்திரனியல் மருத்துவ உபகரணத்தினால் வலுவூட்டப்படும் ஜெனரல் சேல்ஸ் கம்பனியில் பணியாற்றினார். இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் இணை நிறுவனமான தொலைதொடர்புகள் சேவை லிமிடட்டின் கடன் வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட நாடு முழுவதுக்குமான தொலைத்தொடர்பு மேம்பாட்டு திட்டத்தின் திட்ட பொறியாளராக கடமையாற்றினார். அவர் உதவி பணிப்பாளராக/ இயங்குதிறன், இலங்கையில் தொலைத்தொடர்பு துறையின் மேம்பாட்டுக்காக தனித்துவமான பணியை ஆற்றினார். தொலைதொடர்புகள் துறையின் அபிவிருத்திக்கான ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டல்களை உருவாக்குதல், சுற்றுச்சூழல், ஒழுங்குமுறை மற்றும் சமூக விதிமுறைகள், சட்ட விதிகளைப் பாதுகாத்தல் மற்றும் வானியல் திணைக்களம், சுகாதார அமைச்சு, களனி பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பீடம் ஆகியவற்றின் உதவியுடன் நாடுபூராவுமுள்ள பொதுமக்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு தொலைதொடர்புகள் வலைப்பின்னல் அபிவிருத்தி அம்சங்கள் தொடர்பாக தெளிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துதல் ஆகிய பணிகள் அவரால் மேற்கொள்ளப்பட்டன. பொறியியலாளர் குணானந்தனவினால் எளிய மொழிநடையில் தொலைதொடர்பு தொடர்பான சில புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் எழுதப்பட்டன.

ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவ பிரதி பணிப்பாளராக இருந்த போது இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுக்கு வானொலி ஸ்பெக்ட்ரம் கண்காணிப்பு அமைப்பொன்றை உருவாக்குவதில் பெரும்பங்காற்றினார். வானொலி அதிர்வெண் குறுக்கீடுகளை தீர்த்தல், அங்கீகரிக்கப்படாத வானொலி அதிர்வெண் பயன்பாடுகளைக் குறைத்தல், தொலைத்தொடர்புத் துறை மற்றும் பாதுகாப்புச் சேவைகளுக்கான அலைவரிசைகளை ஒதுக்குதல் போன்ற செயற்பாடுகளிலும் அவர் பங்களிப்பு செய்தார்.

பொறியியலாளர் குணானந்தன 2017 ஆம் ஆண்டில் சிறப்புத் திட்டங்களுக்கான பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன், செயற்பாட்டில் இருந்த உட்கட்டமைப்பு அபிவிருத்திச் திட்டங்களான கொழும்பு தாமரை கோபுரம், கதிரானா கண்காணிப்பு வளாகம், இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் தலைமையகம், அம்பாந்தோட்டை தகவல் தொழில்நுட்ப பூங்கா ஆகியன கருத்திட்ட முகாமைத்துவம், ஒப்பந்த நிர்வாகம், ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவம், தொலைத்தொடர்பு வலைப்பின்னல் அபிவிருத்தி ஆகியவற்றில் அவருக்கிருந்த பரந்த அனுபவத்துதைக் காட்டுகின்றது.

பொறியியலாளர் குணானந்தன 2011 முதல் இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் வானொலி அதிர்வெண் ஒதுக்கீட்டு குழுவில் உறுப்பினராக உள்ளார்.

பொறியியலாளர் குணானந்தன சமூக சேவைகள் மற்றும் தன்னார்வத் தொண்டுகளில் மிகவும் சுறுசுறுப்பாக ஈடுபாடுள்ளவர். சமூகத்திற்கான அவரது சிறந்த பங்களிப்புகளை அங்கீகரித்து நீதி அமைச்சு அவரை முழு நாட்டுக்குமான சமாதான நீதவானாக நியமித்துள்ளது.



திரு இந்திரஜித் ஹந்தபானகொட
பதில் பணிப்பாளர் - போட்டி

திரு இந்திரஜித் ஹந்தபானகொட 1994 இல் இலங்கையில் ப்ளூ-சிப் நிறுவனமொன்றில் நிறைவேற்று அதிகாரியாக தனது பணியைத் தொடங்கினார். 1998 இல் இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் இடைநிலை முகாமைத்துவத்தில் இணைந்தார். இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பொருளாதார விவகாரம் மற்றும் போட்டிப்பிரிவில் 23 வருட சேவைக்காலத்தில் இடைத்தொடர்பாடல், கட்டணம், அனுமதிப்பத்திரம், கண்காணிப்பு ஆகிய ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளில் முக்கிய பங்காற்றினார். 2002 ஆம் ஆண்டில், இலங்கையின் சர்வதேச தொலைத்தொடர்பு பிரிவை தாராளமயமாக்குவதற்கான உத்திகளை வகுக்கும் ஆலோசனை செயல்முறையை ஒருங்கிணைத்தார். திரு. இந்திரஜித் 2000, 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் ஸ்ரீலங்கா டெலிகொம் இன் கட்டணத்தை மறுசீரமைக்கும் செயல்முறையைக் கையாண்டார். 2003 தொழில்துறைகளை ஒன்றோடொன்று இணைக்கும் விதிகளை அறிமுகப்படுத்துவதிலும் மற்றும் 1999 மற்றும் 2010 இல் ஒன்றிணைந்த தீர்மானங்களை வெளியிடுவதிலும் அவர் முக்கிய பங்கு வகித்தார். இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட மூன்று பொதுமக்கள் நடாவி TRCSL ஆல் நடத்தப்பட்டது, இதுபோன்ற இரண்டு விசாரணைகளில், அவர் பொது விசாரணைக் குழுவில் உறுப்பினராக பணியாற்றினார். தற்போது, அவர் நுகர்வோர் புகார்களைத் தீர்ப்பதற்கான உள்ளக குழுவுக்கு (ICRCC) தலைமை தாங்குகிறார்.

திரு இந்திரஜித் 2008 ஆம் ஆண்டில் ஐபி அடிப்படையிலான சேவைகளுக்கான கட்டணப்பட்டியலிடல் மற்றும் கட்டணங்களுக்கான தெற்காசிய தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டாளர்கள் குழுவின் பணிக்குழுவின் தலைவராக பங்காற்றினார். 2010/2011 காலப்பகுதியில் வலையமைப்பு மற்றும் சேவைகள் தொடர்பான தென்னாசிய தொலைதொடர்பு ஒழுங்குபடுத்துனர்கள் பேரவை (SATRC) பணிக்குழுவுக்கு தலைமை வகித்தார். இலங்கை தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் திரு. இந்திரஜித் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் இலங்கையில் நடைபெற்ற SATRC கூட்டங்களில் தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு சார்பாக கலந்துகொண்டதுடன், தொழில் தொடர்பான பல்வேறு விஷயங்களில் ITU ஆய்வு குழு கூட்டங்களில் தீவிரமாக பங்கேற்றார். அவரது தொழில் வாழ்க்கையின் போது, இங்கிலாந்தின் கோவென்ட்ரியில்

கேபிள் மற்றும் வயர்லெஸ் கல்லூரியால் நடத்தப்பட்ட தொலைத்தொடர்பு முகாமைத்துவ சான்றிதழ் படிப்பு உட்பட உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்களிலிருந்து விரிவான தொழில் தொடர்பான அறிவு மற்றும் பயிற்சியைப் பெற்றார்.

இலங்கையின் பட்டய நிபுணத்துவ மேலாளர்கள் (CPM) மற்றும் இலங்கை பொருளாதார சங்கத்தின் (SLEA) ஆயுள் உறுப்பினர். திரு. இந்திரஜித் வணிக நிர்வாகம் (MBA) மற்றும் பொது நிர்வாகம் (MPA) ஆகிய இரண்டு முதுகலை பட்டங்களை முறையே கொழும்பு பல்கலைக்கழகம் (இலங்கை) மற்றும் / பிளிண்டர்ஸ் பல்கலைக்கழகம் (தெற்கு ஆஸ்திரேலியா) ஆகியவற்றில் பெற்றுள்ளார் மற்றும் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் இளமானி பட்டம் பெற்றார். இவர் இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கத்தில் பொருளியல் துறையில் சிறப்பு இளமானிப் பட்டத்தைப் பெற்றுள்ளார்.



திருமதி. ருவணி குணரத்ன
ஆணைக்குழுவின் பதில் செயலாளர்

திருமதி. ருவணி குணரத்ன தொழில் ரீதியாக ஒரு வழக்கறிஞராக இருப்பதுடன், கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டமானி பட்டதாரியாவார்.


இவர் 2011 ஆம் ஆண்டு முதல் ஆணைக்குழுவின் பதில் செயலாளராக கடமையாற்றி வருகிறார்.

ஆணைக்குழுவின பலதரப்பட்ட சட்ட விடயங்களைக் கையாளும் ஆணைக்குழுவின் சட்டப்பிரிவில் கடமையாற்றுவதுடன், நிறுவன ரீதியான சட்டப் பிரச்சினைகளை முறைப்படுத்துவதற்குத் மிக அவசியமான சட்ட வியாக்கியனங்களை வழங்கியும் வருகிறார்.

அவருக்கு சட்ட விவகாரத் துறையில் 26 வருடங்களுக்கும் அதிகமான தொழில் அனுபவம் உள்ளது. அவற்றில் 22 வருடங்கள் இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் சட்டப்பிரிவில் கடமையாற்றிய அனுபவம் உள்ளது. அவர் ஆணைக்குழுவின் வாடிக்கையாளர் முறைப்பாடுகள் ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும் உள்ளார்.

செயல் அலுவலர்கள்

ஆணைக்குழு அலுவலகம் திருமதி. ருவனி குணரத்ன ஆணைக்குழுவின் பதில் செயலாளர் **அனுமதிப்பத்திர முகாமைத்துவம்** திரு. ஈ.என்.பி.கே. ரத்னபால பதில் பணிப்பாளர **இணக்கம் மற்றும் விசாரணை** திருமதி. தரலிகா லிவேரா பதில் பணிப்பாளர் திருமதி. மேனகா பத்திரன பிரதிப் பணிப்பாளர் திரு. டீ.என். விஜேசிங்க உதவிப் பணிப்பாளர்	**ஸ்பெக்ரம் முகாமைத்துவம்** திரு. எச்.பீ. கருணாரத்ன பணிப்பாளர் திரு. எம்.சீ.எம். பாரூக் பிரதிப் பணிப்பாளர் திரு. எல். கணேசமூர்த்தி பிரதிப் பணிப்பாளர் திரு. எம்.பி. முனசிங்க பிரதிப் பணிப்பாளர் திரு. சான்த குணானந்தன பிரதிப் பணிப்பாளர் திரு. எஸ்.ஈ. வாகிஸ்ட பிரதிப் பணிப்பாளர் திரு. டப்.ஏ.டி.டீ. மதுஷங்க உதவிப் பணிப்பாளர் திருமதி. ஜீ.எச்.பி. இமாலி பிரசாந்திகா உதவிப் பணிப்பாளர்	**வலையமைப்புகள்** திரு. ஆர்.ஜி.எச். கே. ரணதுங்க பணிப்பாளர் செல்வி. கே.எஸ்.எம். விஷாகா பிரதிப் பணிப்பாளர் திருமதி. எஸ்.ஏ.ஆர். கமலநயனா பிரதிப் பணிப்பாளர் திரு. ஐ.எம். ஜௌஸி உதவிப் பணிப்பாளர் திரு. எஸ்.டப்.எம்.ஆர்.எல்.பீ. சேனாதீர உதவிப் பணிப்பாளர்
கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள் திரு. எம்.கே. ஜயசேகர பணிப்பாளர் (2020.11.12 வரை) செல்வி. கே.எஸ்.எம். விஷாகா பதில் பணிப்பாளர் திரு. ஜே.கே.பீ. ரத்னாயக்க பதில் பணிப்பாளர்	**போட்டி** திரு. எச்.டப்.கே. இந்திரஜித் பதில் பணிப்பாளர் திருமதி. சிறியாணி மாவல்லகே பிரதிப் பணிப்பாளர் திரு. நிஷாந்த பலிஹவடன பிரதிப் பணிப்பாளர்	**சட்டப்** திருமதி. ஜீ.மொரகொட பிரதிப் பணிப்பாளர் திருமதி.ருவணி குணரத்ன பிரதிப் பணிப்பாளர் செல்வி. எஸ். ரொட்ரிகோ பதில் பிரதிப் பணிப்பாளர் திரு. ஐ.என். மதிவ் உதவிப் பணிப்பாளர்
விசேட செயற்திட்டங்கள் திரு. சாந்த குணானந்தன பதில் பணிப்பாளர் திரு. என்.டி. கீகனகே உதவிப் பணிப்பாளர்	**உள்ளக கணக்காய்வு** திரு. சமன் கித்சிறி உள்ளக கணக்காய்வாளர்	**தகவல் தொழில்நுட்பப்** திரு. எம்.சீ.எம். பாரூக் தலைவர், தகவல் தொழில்நுட்பம்
நிதி திரு. எம்.கே. ஜயன்த பணிப்பாளர் செல்வி. எல்.டி. ஜயவிக்ரம உதவிப் பணிப்பாளர் திருமதி. அசன்க லியனகே உதவிப் பணிப்பாளர்	**நிர்வாகம், மனிதவளம், கூட்டிணைந்த விவகாரங்கள் மற்றும் திட்டமிடல்** திரு. வீ. அருண என் பிரேமரத்ன பிரதிப் பணிப்பாளர் திரு. ஜே.கே.பீ. ரத்னாயக்க பதில் பிரதிப் பணிப்பாளர் திரு. வை.எஸ்.பி. குணரத்ன உதவிப் பணிப்பாளர்	



குறிப்பு: கேடர்இ நிளக்கப்படம் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டத்தை மறுஆய்வு செய்ய ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது

பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் மீளாய்வு



தொழில்நுட்பத்தின் விரைவான ஒருங்கிணைப்பு மற்றும் அனைத்து டிஜிட்டல் மயமாக்கல் முன்னுதாரணங்களிலும் தகவல் தொழில்நுட்பத்தின் வகிபாகம் விரிவடைந்து வருவதால், இலங்கையில் தொலைத் தொடர்புத்துறை ஒரு முக்கிய மையமாகவும், இணைப்புக் உட்கட்டமைப்பை வழங்குவதில் மிகவும் மதிப்புமிக்க துறையாகவும் உருவாகியுள்ளது. இது வெற்றிகரமானதும் நிலையானதுமான டிஜிட்டல் மயமாக்கலுக்கான பிரதானமான தேவையாகும்.

எங்கள் துறையின் முன்னேற்றத்திற்கு பங்களிக்கும் பல்லாயிரக்கணக்கான காரணிகள் உள்ளன. அனைத்து பங்குதாரர்களின் ஆதரவையும், உலகளாவிய சிறந்த ஒழுங்குமுறை நடைமுறைகளைத் அங்கீகரிப்பதன் மூலமும் ஒரு வளர்ச்சி வினையூக்கியாகவும், செயல்பாட்டாளராகவும் இருப்பதன் மூலம் இத்துறையின் வளர்ச்சியை வழிநடத்துவது தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துனரின் பொறுப்பாகும். கோவிட் 19 நோய்த்தொற்றின் எதிர்பாராத பாதக விளைவுகளானது, கட்டாய டிஜிட்டல் மயமாக்கல் சூழலொன்றை ஏற்படுத்தியமையால், இன்றைய குடிமக்களின் அத்தியாவசிய டிஜிட்டல் சூழலை உறுதி செய்யும் பொறுப்பு தொலைத் தொடர்புத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வேலை, கல்வி, வீட்டு வாழ்க்கை முறை மற்றும் ஓய்வு என ஒரு பரந்துபட்ட வாழ்க்கை முறையைக் கொண்ட சேவைகளின் நுகர்வு முறைகளின் மாற்றத்தை எதிர்கொள்வதற்கு ஒரு முன்னுதாரண மாற்றம் தேவைப்படுகிறது. அதனடிப்படையில், புதிய சாதாரண சூழலின் தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக தேவையான விரைவான மாற்றத்தை அறிமுகப்படுத்தப்படுத்துவதை உறுதி செய்வதற்கான செயற்பாடுகள் மற்றும் சாதகமான நடவடிக்கைகளை எடுப்பதினூடாக இத்துறையை வலுப்படுத்தி செயற்படுத்துவதில் கட்டுப்பாட்டாளருக்கு முக்கிய பங்கு உண்டு.

ஸ்மார்ட் இலங்கைக்கான அரசாங்கத்தின் தொலைநோக்கானது, டிஜிட்டல் மயமாக்கப் பொருளாதாரப் பார்வை மற்றும் ஸ்மார்ட் சமுதாயமொன்றை உருவாக்குதல் மூலம் இயக்கப்படுகிறது. ஒழுங்குபடுத்தாளராக, எமது முக்கியத்துவமானதாக அமைவது அனைத்து டிஜிட்டல் மயமாக்க செயற்பாடுகளினதும் பிரதானமான பொறிமுறையான நாடுபூராகவும் ப்ரோட்பேண்ட் இணைப்புகள் மற்றும் தொலைத்தொடர்பாடல்கள் நிறுவுவதும் அதனை உறுதி செய்வதுமாகும். மேலும் எதிர்கால டிஜிட்டல் சமூகத்துக்கான எமது ஒழுங்குவிதிகள், கொள்கைகள் மற்றும் திட்டங்கள், சர்வதேச தொலைத்தொடர்பாடல் சங்கத்தின் (ITU) உலகளாவிய நிகழ்ச்சி நிரலான "Connect 2030" திட்டத்துடன் சார்ந்ததாகவும்,இணைந்ததாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், தொலைதொடர்பாடல் துறைக்கான ஐக்கிய நாடுகளின் நிலைபேரான இலக்குகளை அடைந்துகொள்வதை உறுதிசெய்யும் வளர்ச்சி, உள்வாங்கல், நீடித்து நிலைத்தல், கண்டுபிடிப்பு, மற்றும் கூட்டுச்சேர்தல் ஆகிய ஐந்து கொள்கைகளின் மீது கவனம் செலுத்துவதாகவும் அமைந்துள்ளது.

இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவானது (TRCSL) 2020 ஆம் ஆண்டில் அதன் ஒழுங்குபடுத்தல் செயல்பாடுகளில், அனுமதிபத்திரம் வழங்குதல், முகாமைத்துவம், வலையமைப்புச் செயல்பாடுகள், ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவம், போட்டி, இணக்கம், சட்டம், கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள் ஆகிய துறைகளை மையமாகக் கொண்ட குறிப்பிடத்தக்க ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக பல பிரிவுகள் / அலகுகள் நிறுவப்பட்டுள்ளன. பெரும்பாலான செயற்பாடுகள், பிரிவுகள் / அலகுகளுக்குள் காணப்படும் உச்ச ஒத்துழைப்பு மற்றும் ஒத்திசைவின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது. ஆணைக்குழுவானது சட்டம், ஒழுங்குபடுத்தல், தொழில்நுட்பம் மற்றும் நிர்வாக அம்சங்கள் தொடர்பான விஷயங்களை அணுகுவதற்காக ஆண்டில் எட்டு சபைக் கூட்டங்களை நடத்தியுள்ளது. ஆணைக்குழுவாது பல்லாயிரக்கணக்கான மூலோபாய மற்றும் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதுடன், வருடத்தின் முன்னேற்றம் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் மாற்றியமைத்தல் தொடர்பான வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகள்: தற்போதுள்ள மரபு அனுமதிபத்திர வழிகாட்டல் நடைமுறைகளில் இனங்காணப்பட்டுள்ள பிரச்சினைகள் மற்றும் திறனின்மையின் விளைவாக, தற்போதுள்ள அனுமதிபத்திரம் முகாமைத்துவ நடைமுறைகளை மீளாய்வு செய்து திருத்தங்களை மேற்கொள்வதற்கான முறையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி, இது தொடர்பாக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அனுமதிபத்திரம் வழங்கும் அம்சங்களான வழங்கல், புதுப்பித்தல், மாற்றியமைத்தல், திரும்பப் பெறுதல் மற்றும் உரிமையை மாற்றுதல் ஆகியனவை உள்ளடக்கிய, புதிய அனுமதிபத்திர வழிகாட்டல் மற்றும் ஒழுங்கு விதிகள் அனுமதிபத்திர

முகாமைத்துவ பிரிவினால் தயாரிக்கப்பட்டு வருகிறது. நியமிக்கப்பட்ட குழு மதிப்பாய்வு செய்து தேவையான பரிந்துரைகளை வழங்குவதோடு முறைப்படுத்தலைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய அனுமதிபத்திரக் கட்டமைப்பிற்கான பாதை வரைபடத்தைத் தயாரித்தல்: தற்போதைய அனுமதிபத்திரக் கட்டமைப்பானது மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இல்லாமல் நடைமுறையில் உள்ளது. எனவே, தற்போதுள்ள அனுமதிபத்திர கட்டமைப்பானது இத்துறையில் தற்கால மற்றும் எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்படல் வேண்டும் மற்றும் தொழில்நுட்பத்தின் ஒருங்கிணைப்பின் நன்மைகளைப் பயன்படுத்தவும் வேண்டும். ஒரு திருத்தியமைக்கப்பட்ட அனுமதிபத்திர கட்டமைப்பு தயாரிக்கப்பட்டு, தற்போதுள்ள அனைத்து அனுமதிபத்திரங்களும் புதிய கட்டமைப்பிற்குள் மாற்றப்படும், இது சாத்தியமான ஒருங்கிணைந்த அனுமதிபத்திர மாதிரிக்கு இடம்பெயரும் வாய்ப்பைப் பெறுகிறது. இது தொடர்பாக பொதுமக்கள் கருத்தாடல் ஒன்று தொடங்கப்படும்.

பிரிவு 17 அனுமதிப்பத்திரத்தின் ஒரு அத்தியாவசிய உருப்படியாக வலையமைப்பு அனுமதியை அறிமுகப்படுத்தல்: வலையமைப்பு அனுமதியானது பிரிவு 17 அனுமதிப்பத்திரத்தின் இன்றியமையாத அம்சமாகும். இதுபோன்ற அனுமதிகள் கடந்த காலங்களில் வழங்கப்படவில்லை. எனவே, அனுமதிபத்திரப் பிரிவின் மூலம் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டு தேவையான அனுமதிகளை வழங்குவதற்காக செயற்படுத்துனர்களிடமிருந்து தகவல்கள் கோரப்பட்டுள்ளன. மேலும் குறித்த செயற்பாடுகளுக்கு சமாந்திரமாக செயற்படுத்துனர் வலையமைப்புகள் மற்றும் தொழில்நுட்ப தகவல்களுக்குத் தேவையான சோதனைகள் திட்டமிடப்பட்டு வருகின்றன.

உரிமங்களை வழங்குதல் மற்றும் புதுப்பித்தல்: ஒரு கேபிள் விநியோக வலையமைப்பு அனுமதிபத்திரம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் இரண்டு இணைய சேவை வழங்குநர் (ஐஎஸ்பி) அனுமதிபத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. வீட்டிற்கான நேரடி (DTH) செயற்படுத்துனர் ஒருவரின் அனுமதிப்பத்திரத்தை மீளப்பெறல் நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன், உரிமையாளர் பரிமாற்ற கோரிக்கையொன்று மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

உட்கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்தல்: ஆண்டெனா கட்டமைப்பு பண்ணை கருத்திட்டத்தின் கீழ் 4ஜீ வலையமைப்புகளை நிறுவுவதில் தற்போது காணப்படும் நடைமுறை சிக்கல்களைக் கருத்திற் கொண்டு இருக்கின்ற ஆண்டெனா கட்டமைப்புகள் குறித்த வழிகாட்டுதலில் குறிப்பிடப்பட்டுள்ள சில ஒழுங்குவிதியுடன் தொடர்பான தேவைப்பாடுகளைத் தளர்த்துவதற்கான திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. மேலும், தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் பராமரிக்கப்படும் ஆண்டெனா கட்டமைப்பு தரவுத்தளத்துடன் ஒன் எயார் தள விவரங்களை பகிர்ந்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன, அங்கு அங்கீகரிக்கப்படாத தளங்களின் கடந்தகால முரண்பாடுகள் தெளிவாக உள்ளன. ''கமட சன்னிவேதனய'' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் உட்பட செயற்படுத்துனர்கள் முன்வைத்த அண்டெனா கட்டமைப்புகளை அமைப்பதற்கான கோரிக்கைகளும் செயல்படுத்தப்பட்டுள்ளன. நகர்ப்புறங்களில் கைப்பேசி கவரேஜ் விரிவாக்கத்திற்கான அடிப்படை நிலையங்களை நிறுவ, பாதை அபிவிருத்தி அதிகாரசபையின் இணக்கப்பாட்டுடன் பல்நோக்கு விளக்கு கம்பங்களை நிறுவும் கருத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

எண் பெயர்வுத்திறனை நடைமுறைப்படுத்துதல்: கைப்பேசி மற்றும் நிலையான செயற்படுத்தினர்களின் முதன்மை ஒப்புதலுடன் சேவை வழங்குநர்களைத் தேர்ந்தெடுப்பதில் நுகர்வோரருக்கு பரந்துபட்ட ஈடுபாடு மற்றும் அதிகாரமளிப்பதை உறுதி செய்வதற்காக எண் பெயர்வுத்திறனை செயல்படுத்துவதில் ஒரு ஒழுங்குபடுத்தல் செயல்முறை தொடங்கப்பட்டுள்ளது. இது கைப்பேசி ∴ நிலையான தொலைபேசி பயனர்கள், கைப்பேசி அல்லது நிலையான தொலைதொடர்பு செயற்படுத்தினர்களை மாற்றும்போது நுகர்வோர் தமது கைப்பேசி இலக்கங்களை தக்க வைத்துகொள்ள முடிகிறது. மேலும் நுகர்வோருக்கு தொடர்ச்சியான சிறந்த சேவையை வழங்குவதற்கு செயற்படுத்துனர்கள் கட்டாயப்படுத்தப்படுவதுடன், இத்துறையில் ஆரோக்கியமான போட்டியை மேம்படுத்தவும் செய்கிறது. தொழில். எண் பெயர்வுத்திறனை செயல்படுத்துவதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக பொதுமக்கள் ஆலோசனை செயல்முறையும் தொடங்கப்பட்டுள்ளது.

தேசிய இலக்கமிடல் திட்டம் மற்றும் சுருக்கக் குறியீடுகளின் ஒதுக்கீடு: தொலைபேசி எண் தொகுதிகள் ஒரு பற்றாக்குறை வளமாகும், மேலும் இலங்கையின் தேசிய எண் திட்டத்தின் அடிப்படையில் இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு அவற்றை நிர்வகிக்கிறது. சுருக்க குறியீடுகள் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. இவ்வாண்டு, அவசர கோவிட் தடுப்பு செயற்பாடுகள் உள்ளடங்களாக, 11 அரசு நிறுவனங்கள் மற்றும் 07 தனியார் நிறுவனங்களுக்கு சுருக்க குறியீடுகள் ஒதுக்கப்பட்டன. கோவிட் நோய்த் தொற்றின்போது அவசரமான சுகாதார சேவைகளை இலகுபடுத்துவதற்காக விரைவான அனுமதி செயல்முறை உட்பட ஆண்டு முழுவதும் தேவைப்படும் மூன்று இலக்க சுறுக்க குறியீடு தொகுதியையும், அவசர அழைப்பு எண்களையும் ஆணைக்குழு அங்கீகரித்தது.

VOIP தடைநீக்குதல் கோரிக்கைகளை செயற்படுத்துதல்: செயற்பாட்டாளர்கள் விடுத்த VOIP தடைநீக்கல் கோரிக்கைகளை செயல்படுத்த ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. இச்செயற்பாட்டினுல் எந்தவொரு சிக்கலுக்கும் தீர்வு காண்பதற்கான பொருத்தமான கண்காணிப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வகை அனுமதி மற்றும் உபகரணங்களை வழங்குதல்: கம்பி முனைய உபகரணங்களுக்கு ஒன்பது வகை அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன, மேலும் செயற்படுத்துனர்கள், விற்பனையாளர்கள் மற்றும் தனிநபர்களினால் விடுக்கப்பட்ட உபகரண சுங்கத்தீர்வை கோரிக்கையின் பேரில் 2400 இறக்குமதி அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

விற்பனையாளர் அனுமதிபத்திரத்தை செயற்படுத்துதல் மற்றும் உபகரணங்களை வழங்குதல்: இவ்வருடம் விற்பனையாளர் அனுமதிபத்திரம் செயல்முறையை ஒழுங்குபடுத்தும் நோக்குடன் சிம் இயக்கப்பட்ட சாதனங்களுக்கான நிபந்தனைகள் திருத்தப்பட்டன. மேலும் அனுமதிபத்திரம் இல்லாத காலங்களில் விற்பனையாளர்கள் செயல்பாட்ட காலம் தொடர்பாக சட்ட ரீதியான தடைகளுக்கு ஆணைக்குழு முகங்கொடுக்க நேரிடுவதால் தாமதமாக பணம் செலுத்தும் புதுப்பிப்புகளை மேற்கொள்ளக்கூடாது என்ற முடிவு எடுக்கப்பட்டது. மேலும் விற்பனையாளர்கள் சட்டரீதியான உரிமத்தை வைத்திருக்கவில்லையாயின் இதுபோன்ற புதுப்பிப்புகள் நீட்டிக்கப்பட்ட காலங்களில் நடவடிக்கைகளை சட்டப்பூர்வமாக்குவதற்கான சட்டரீதியான தடைகள் இருந்தன. தற்போதைய சந்தை தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக விற்பனையாளர் அனுமதிபத்திரக் கட்டண கட்டமைப்பில் திருத்தம் தொடங்கப்பட்டது. செயற்படுத்துனர்கள் விற்பனையாளர்கள் மற்றும் தனிநபர்களின் உபகரணங்களை இறக்குமதி செய்யும் கோரிக்கைகள் சுங்க அனுமதிக்காக முன்நிலைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் பங்குதாரர்களுக்கு தொடர்ச்சியான சேவையை உறுதி செய்யும் முகமாக கோவிட் 19 தொற்றுச் சூழலிலும் பெரும்பாலான விற்பனையாளர் சேவைகள் தொடர்ந்தும் டிஜிட்டல் மயமாக்கல் நிகழ்நிலை செயல்முறைகளினூடாக மேற்கொள்ளப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

சட்டவிரோத விற்பனையாளர்களை விசாரணை செய்தல்: இந்த நடவடிக்கை தொடர்பான பொது விழிப்புணர்வு பிரச்சாரங்கள் தீவிரமாக தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. விழிப்புணர்வு பிரச்சாரமானது, சட்டவிரோத விற்பனையாளர்களுடன் சேவைகளில் ஈடுபடுவதினால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து பொதுமக்களை விளிப்பூட்டுவதற்காக சமூக ஊடகங்களில் செய்திகளை அனுப்புவது, மற்றும் அச்சு ஊடகங்களின் மூலம் அத்தகைய வியாபாரங்களை முறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து விற்பனையாளர்களுக்கு முறையான அறிவிப்புகள் வழங்குவது ஆகியன உள்ளடங்கியிருந்தது. மேலும் நுகர்வோரின் பாதுகாப்பிற்காக சட்டவிரோத நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதை உறுதி செய்யும் முகமாக சட்ட அமுலாக்கல் நிறுவனங்களுடன் இணைந்து உண்மையான கணக்காய்வு மற்றும் சோதனைகளைத் எதிர்காலத்தில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

தொலைகாட்சி அலைவரிசையை டிஜிட்டல் மயமாக்குவதற்கான முயற்சிகள்: இவ்வாண்டில் இலங்கைக்கு மிகவும் சிறந்த தொழில்நுட்பங்கள் கொண்ட டிஜிட்டல் தொலைகாட்சி ஒளிபரப்பு மற்றும் டிஜிட்டல் ஓடியோ ஒலிபரப்பைத் தொடங்குவது தொடர்பிலும் மற்றும் இலவச ஒலி.ஒளி அம்சங்கள் போன்ற மாற்று அணுகுமுறைகளை ஆராய்வது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. ஜப்பானிய தூதரக ஊழியர்கள், ஜெய்கா (JICA) பிரதிநிதிகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு ஆகியவற்றுடன் பல சுற்று கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன, அப்போது காலாவதியான Standard Definition பரிமாற்றத்துக்கு பதிலாக High-Definition பரிமாற்றம் தொடர வேண்டும் என்ற ஆணைக்குழுவின் நிலைப்பாடு தொழில்நுட்ப அடிப்படையில் தெளிவுபடுத்தப்பட்டது. தற்போதைய பார்வையாளர்களாக குறைந்த வருமானம் கொண்ட மக்கள் தொகையினராக இருப்பதை கவனத்தில்கொண்டு செட் டொப் பெட்டிகள் கணிசமாக மிகவும் மலிவு விலையில் இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு இருந்தமையால் செட் டாப் பெட்டிகளின் விலை குறித்து மேலும் விவாதிக்கப்பட்டது.

டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்துக்கான உள்ளீடு வெகுஜன ஊடக அமைச்சுக்கு வழங்கப்பட்டது. மேலும் பிற பங்குதாரர்களுக்கு, தற்போதுள்ள கேபிள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வலையமைப்புகளைக் கருத்திற்கொண்டு முன்மொழியப்பட்ட DBNO (டிஜிட்டல் ஒளிபரப்பு வலையமைப்பு செயற்படுத்துனர்) மூலம் உள்நாட்டு அலைவரிசைகளுக்குத் தேவையான இணைப்புகளை வழங்குவது போன்ற மாற்று வழிகள் வழங்கப்பட்டன. அதனடிப்படையில், தொழில்நுட்ப திறன்கள் மற்றும் நாடுகளினால் பரந்தளவில் பயன்படுத்தபடுகின்றன என்பதினடிப்படையில் டிஜிட்டல் ஒளிபரப்பினை மேற்கொள்ளல், மற்றும் டி.வி.பி.டி 2 தொழில்நுட்பம் தொடர்பாக கருத்தில் கொள்ளல் வேண்டும் என்ற முந்தைய தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட குழு அறிக்கை பரிந்துரைத்த விடயம் தேவையற்றது என்ற தெரிவை பங்குதாரர்களுக்கு வழங்கியது. செய்யத.ஆர்.சி.எஸ்.எல் நியமித்த குழு அறிக்கை பரிந்துரைத்தது தொழில்நுட்ப செயல்திறன் மற்றும் பல நாடுகளின் பரந்த தத்தெடுப்பு ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. எவ்வாறாயினும், ஜப்பானிய கடன் ஒப்பந்தம் ஏற்கனவே நடைமுறையில் உள்ளதால், எந்த விருப்பத்தை முன்னெடுத்துச் செல்வது என்பது குறித்த அனைத்து மாறிகளையும் காரணியாக்கி ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்ற விடயத்தில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

தொடர்புடைய நிறுவனங்களுடன் மேலும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. மேலும் 2021 ஆம் ஆண்டில் கடன் ஒப்பந்தம் காலாவதியாகிவிடுவதால் வெகுஜன ஊடக அமைச்சை நிறைவேற்று நிறுவனமாக மறுசீரமைப்பற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படவுள்ளது. மேலும் தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் JICA சான்றிதழ் செயல்முறைமையில், தேவையான தகவல்களை சமர்ப்பித்த பிறகும் கணிசமான காலம் எடுப்பதனால் தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் ஸ்பெக்ட்ரம் ஒழுங்குமுறை அம்சங்களில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

RTTE சட்டவிதிகள் மற்றும் அமுலாக்கத்தின் அறிமுகம்: முறையான RTTE சட்டவிதிகள் முதன் முறையாக தரமான ஒழுங்கு முறைசார்ந்த சிறந்த நடைமுறைகளின் படி அறிமுகப்படுத்தப்பட்டு முறைப்படுத்தப்பட்டன. தற்போதுள்ள விதிமுறையானது ஏற்கனவே நடைமுறையில் இருந்த முறைசாரா உள்ளக செயல்முறையொன்றாக இருந்தது. ஆணைக்குழுவானது, வானொலி மற்றும் தொலைத்தொடர்பு முனைய உபகரணங்கள் (ஆர்டிடிஇ) வகை அனுமதி விதிகள் 2020 இனை 1991 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட பிரிவு 68

மற்றும் அதனுடன் இணைத்து வாசிக்கப்படும் இலங்கை தொலைத்தொடர்பு சட்டத்தின் எண்: 25 இன் 5(ஓ), 5(கு), 5(வி) மற்றும் 5 (டபிள்யூ) பிரிவுகளின் கீழ் கொண்டு வந்தது.

ஆர்டிடிஇ வகை அனுமதி விதிகளானது, 16.12.2020 தொடக்கம் நடைமுறைக்கு வந்த 2196/51 இலக்க 09.10.2020 திகதியிடப்பட்ட அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டன.

இப்போது வெளியிடப்பட்ட புதிய வகை அனுமதி நடைமுறைகள் டிசம்பர் 16, 2020 முதல் நடைமுறைக்கு வந்த நிலையில், புதிய வகை அனுமதி நடைமுறைகள் இலங்கையில் இறக்குமதி செய்வதற்கு, சந்தைப்படுத்துவதற்கு, உற்பத்தி செய்வதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அனைத்து வகையான ஆர்டிடிஇ இற்கும் பொருந்தும். பழைய திட்டத்தின் கீழ் 2020 திசெம்பர் 16 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்ட அனைத்து வகையான அனுமதி சான்றிதழ்கள் 2021 ஜுன் 17 ஆம் திகதியுடன் தானாகவே காலாவதியாகிவிடும். இது தொலைதொடர்புகள் சாதனங்களை இறக்குமதி செய்தல் செயற்பாட்டை மீள்கட்டமைக்க முடியுமாக இருப்பதுடன், இலங்கையில் காலாவதியான, தரம்குறைந்த சாதனங்களுக்கு இடமில்லை என்பதை உறுதிசெய்வதாகவும் அமையும்.

அதிர்வெண்கள் மற்றும் சீர்திருத்தங்களை ஒதுக்குதல்: தேசிய அதிர்வெண் ஒதுக்கீட்டு அட்டவணை பொதுமக்களின் தகவலுக்காக தயாரிக்கப்பட்டு இணையதளத்தில் வெளியிடப்பட்டது. பிரதான அதிர்வெண் பதிவேடானது, முறைமை முகாமைத்துவ தரவுத்தள சுத்திகரிப்பு மூலம் இற்றைப்படுத்தப்பட்டது.

மொபைல் / நிலையான சேவைகளுக்கான 2600 மெகா ஹெர்ட்ஸ் பேண்ட் ஒதுக்கீடானது, தற்போதுள்ள சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் settlement motions 1 இன் கீழ் தொடங்கப்பட்டது. நாடுதழுவிய தகவல் தொடர்பு வலையமைப்பிற்காக முப்படையினர், இலங்கை பொலிஸாருக்கு அதிர்வெண்களை ஒதுக்குவது, தற்போதுள்ள திட்டமிடப்படாத பணிகளை நெறிப்படுத்தி பூரணப்படுத்துவதாக அமைந்தது. கோவிட் 19 பரவல் காரணமாக தொலைக்கல்வியின் அவசியத்தின் அடிப்படையில் கல்வி நோக்கங்களுக்காக திட்டமிடப்பட்ட தொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசைகளைத் தொடங்க கல்வி அமைச்சுக்கு அதிர்வெண்கள் ஒதுக்கப்பட்டன. தேசிய கல்வி அலைவரிசைக்கு அதிர்வெண்களை ஒதுக்குவது பிரதானமானதாகும். மேலும் ஊடகங்கள் மூலமாக நாடு முழுவதும் கல்வி நடவடிக்கைகளை அடைய இயலுமாக்குவதாகவும் பாடசாலைகளில் தரமான கல்வி முயற்சிகளுக்கு மாற்றீடாகவும் அமையும்.

தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, கடல்சார் உபகரணங்கள், ட்ரோன்கள் மற்றும் ஜி.பி.எஸ் சாதனங்களை இறக்குமதி செய்வதை ஒழுங்குபடுத்துவதற்கும், ஒளிபரப்பு சேவைகளில் அதிர்வெண் முன்பதிவை ரத்து செய்வது தொடர்பாக விதிகளை அமுல்படுத்துவதற்கும் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியது.

அடுத்த 5 ஆண்டுக்கான ஸ்பெக்ட்ரம் பாதை வரைபடத்தை தயாரித்தல்.ஃ 5G இற்கு ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு செய்தல்: தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவானது சகல கைப்பேசி செயற்பாட்டாளர்கள் மூலமாக ஆரம்பகட்ட 5G சோதனைகளைத் தொடங்கியதுடன், வணிகத்திற்கு முந்தைய 5G சேவைகளை இயக்குவதற்காக 3.5GHz ஸ்பெக்ட்ரம் ஒதுக்கப்பட்டது. மேலும், இலங்கையில் வணிகரீதியான 5G சேவைகளை செயல்படுத்துவதை நோக்கி நகரும் தேசிய 5G ஸ்பெக்ட்ரம் கொள்கை மற்றும் மூலோபாயத்தை தயாரிப்பதில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த முயற்சிகள் இலங்கைக்கு புதிய 5G தொடர்பான தயாரிப்புகள் மற்றும் சேவைகளை தொடங்குவதற்கும், உலகளாவிய 5G சந்தையை அணுகுவதற்கும், 5G யின் நன்மைகளை மேம்படுத்துவதற்கு தொழில்களுக்கு வசதி செய்வதற்கும் அடித்தளத்தை அமைக்கும்.

கடலுக்கடி நீர்மூழ்கிக் கப்பல் கேபிள் நிலையான திட்டமொன்றை ஆரம்பித்தல்: வெளிவிவகார அமைச்சு மற்றும் UNODC உடன் இணைந்து தேசத்திற்கு தடைகளற்ற தரவு மற்றும் தகவல் தொடர்புகளை வழங்குவதை உறுதிப்படுத்துவதற்கு மிகவும் அவசியமான நீர்மூழ்கிக் கப்பல் கேபிள் நிலையான திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்பகட்ட வதிவிட பயிற்சிப்பட்டறைகள் UNODC மற்றும் MFA இன் உதவியுடன் நடாத்தப்பட்டதுடன், கடலுக்கு அடியில் உள்ள கேபிள் உள்கட்டமைப்பை நிர்வகிப்பதற்கு ஒழுங்குபடுத்தல் முறைமையை தொடங்குவதற்கான பிரதானமான தேவைப்பாடுகள் பற்றியும், துறைமுக நுழைவுத் தேவைப்பாடுகள் போன்ற சேவைசார் அம்சங்களுக்கான கட்டமைப்பை உருவாக்குவது பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

தொழில்துறையில் சந்தாதாரர்களின் வளர்ச்சி: இலங்கை, 28.7 மில்லியன் கைபேசி சந்தாதார்கள், 2.6 மில்லியன் நிலையான தொலைபேசி சந்தாதாரர்கள் மற்றும் 17.5 ப்ரோட்பேண்ட் சந்தாதார்களைக் கொண்ட வேகமாக வளர்ச்சியடைகின்ற தொலைதொடர்புத் துறையைக் கொண்டுள்ளது. 2020 ஆம் ஆண்டின் இறுதியில், கைப்பேசிகளின் அடர்த்தி (ஊடுருவல்) மற்றும் நிலையான தொலைபேசிகளின் அடர்த்தியானது முறையே 131.1% மற்றும் 11.9% ஆக இருந்தது. தொலைதொடர்பு பிராட்பேண்ட் தொழிற்துறையானது, மக்கள்தொகை அடிப்படையிலான கவரேஜ் (coverage) அளவைத் தாண்டி, நாடு முழுவதும் புவியியல் கவரேஜை (coverage) மேம்படுத்துவத்துவதை நோக்கி நகரவேண்டிய தேவைப்பாடு உள்ளது. இது இலங்கையின் டிஜிட்டல் பரிணாம பாதை வரைபடத்தை வெற்றிகரமாக மாற்றுவதற்கும், தொழில்நுட்ப பரவலுடன் பொருளாதாரத்தை மேம்படுத்துவதும் இன்றியமையாததாகும்.

வரி சேகரிப்பு மற்றும் செஸ் கட்டணங்கள்: தொலைத்தொடர்பு வரி மற்றும் செஸ் கட்டணங்களின் கீழ் ஆண்டுக்கு சேகரிக்கப்பட்ட தொகை ரூ. 18.6 பில்லியன் ஆகும். (தொலைத்தொடர்பு வரி - ரூ. 9.7 பில்லியன், செஸ் வரி- ரூ. 4.1 பில்லியன், தொலைதொடர்பு கோபுர வரி- ரூ. 1.1 பில்லியன், எஸ்.எம்.எஸ் வரி - ரூ. 0.4 பில்லியன் மற்றும் டி.டி.சி - ரூ. 3.3 பில்லியன் (செப்டம்பர் 2020 வரை). 2020 ஆம் ஆண்டின் எஸ்எம்எஸ் வரி

சேகரிப்பு 0.08% ஆக காட்டியதுடன், 2020 ஆம் ஆண்டின் கைப்பேசி தொலைதொடர்பு கோபுர வரி கேசரிப்பு கடந்த ஆண்டை விட 3% அதிகரிப்பைக் காட்டியது.

கட்டணங்களை நடைமுறைப்படுத்தல்: கட்டாய டிஜிட்டல் மயமாக்கலுடன் பொருந்தக்கூடிய தேவையான தொலைபேசி பொதிகள், மற்றும் கோவிட் நடவடிக்கைகளுக்கு பிந்திய புதிய விதிமுறைக்கான தேவை ஆகியவற்றை உறுதி செய்வதற்காக குறிப்பிடத்தக்க கட்டண தீர்மாணங்கள் தொடங்கப்பட்டன. சகல தொலைதொடர்பு செயற்படுத்தினர்களின் ஒத்துழைப்புடன் அரசாங்க பாடசாலைகளுக்கான உத்தியோகபூர்வ இலத்திரனியல் கற்றல் தளமான ஈ-தக்சலாவ தளத்தை டேட்டா கட்டணமின்றி பாடசாலை மாணவர்கள் பயன்படுத்துவதற்காக அனுமதிக்கப்பட்டது. இது மாணவர்கள் மட்டுமல்ல, ஆசிரியர்களும் எவ்வித கட்டணங்களுமின்றி தளத்தைப் பயன்படுத்தவும், பெற்றோர்கள் இதனை இலவசமாக பெற்றுக்கொண்டு நிகழ்நிலை கல்வியில் குழந்தைகளுக்கு வழிகாட்டவும் முடிகிறது.

அரச பல்கலைக்கழகங்களின் LEARN தளமும் அனுமதிப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழக மாணவர்கள் கட்டணங்கள் எதுவுமின்றி அத்தளத்தை பயன்படுத்த முடியும். கொவிட் முன்முயற்சியாக ஆரம்பிக்கப்பட்டு இத்தளம் தற்போதும் சேவை வழங்குநர்களின் உதவியுடன் தொடர்கிறது. மேலும், அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ தேடல் செயலி / வலைவாசல் ஆன ‘‘பாதுகாப்பாக இருங்கள்’’ தரவு இலவசமாக பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டது. நாடு முழுவதும் ஸ்மார்ட்போன் வசதிகள் இல்லாத குடிமக்கள் 1919 க்கு அனுப்பப்படும் குறுஞ்செய்திகளுக்கான கட்டணங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டது. மேலும், வருடத்தில் நுகர்வோருக்குத் தேவையான புதிய பயன்பாட்டு முறைகளுடன், ஆணைக்குழுவானது வீட்டிலிருந்து பணியாற்றல், வீட்டிலிருந்து கற்றல் ஆகிய திட்டங்களை ஊக்குவிப்பதற்காக விசேட குறைந்த கட்டண திட்டங்களை அறிமுகம் செய்தது. மேலும் சமூக ஊடகம் மற்றும் கட்டண தொலைகாட்சி தளங்களின் பயன்பாட்டுக்காக வரம்பற்ற பயன்பாட்டுத் பொதிகளை கிடைக்கச்செய்தது. இது தொற்றுநோய் பரவலினால் கடுமையாக பாதிக்கப்பட்ட நிலைமையில் புதிய பயன்பாட்டு முறைகளுக்கு இத்துறை சரியான நேரத்தில் பதிலளிப்பதை உறுதி செய்தது.

இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மேலுமொரு விஷேட கட்டண முகாமை முயற்சியாக, கொவிட் காரணமாக நாடு பூட்டப்பட்டுள்ள காலத்தில் விலைப்பட்டியல் இன்றிய சேவையை வழங்கியமை காணப்பட்டது. அதனடிப்படையில் அனைத்து குடிமக்களுக்கும் சகல செயற்பாட்டாளர்களின் உதவியுடன், கட்டண நிலையைப் பொருட்படுத்தாமல் தொலைதொடர்பு சேவைகளைத் தொடர வேண்டும் என்ற அரசாங்கத்தின் கோரிக்கையை ஆணைக்குழு உறுதி செய்தது. அனைவருக்கும் அடிப்படை இணைப்பை உறுதி செய்வதன் மூலம் தொற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில் இன்றியமையாததாக காணப்படும் சகல குடிமக்களுக்கும் தொடர்ச்சியான இணைப்பை உறுதி செய்வதானது குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இடைதொடர்பாடலை கையாளுதல்: தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தற்போது காணப்படும் இடைத் தொடர்பாடல் கட்டணங்களை மீளாய்வு செய்வதற்கான ஒரு செயல்முறையை ஆரம்பித்ததுடன், அனுமதிபத்திரம் பெற்ற செயற்பாட்டாளர்களுக்கு தங்கள் கருத்துக்களை எழுத்துமூலம் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்குமாறும் கோரியது. பங்குதாரர்கள் மற்றும் ஆணைக்குழுவுடனான சந்திப்பின்போது தற்போதுள்ள இடைத்தொடர்பாடல் கட்டணங்களை அவ்வாறே தொடருவது என்ற இணக்கப்பாடு எட்டப்பட்டது. எவ்வாறாயினும், தற்போது செயற்பாட்டில் உள்ள முன்மொழியப்பட்ட எண் பெயர்வுத்திறன் முயற்சியுடன் குறித்த இடைத்தொடர்பாடல் கட்டணங்கள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

தொலைத் தொடர்புத் துறையில் வெளிநாட்டு நிபுணர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கான விசா பரிந்துரை: தொலைத் தொடர்புத் துறையில் வெளிநாட்டு நிபுணர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கான விசா பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டு, 94 குடியுரிமை / நுழைவு விசாக்களை வெளிநாட்டவர்களுக்கு இவ்வாண்டில் பரிந்துரை செய்யப்பட்டன. தொலைத் தொடர்புத் துறையில் உள்ள நிறுவனங்கள் பிற நாடுகளிலிருந்து குறைந்த செலவினங்களின் அடிப்படையில் பணிக்கமர்த்தல் முடிவுகளை எடுக்காமல் உள்ளூர் மனிதவளத்தையும் நிபுணத்துவத்தையும் பயன்படுத்த அதிகபட்ச நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் மற்றும் விசாக்களை வழங்குவதை ஒழுங்குபடுத்துவதற்கான கடுமையான நடைமுறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு இவ்வாண்டு எடுத்தது. இதன் மூலம், அத்தகைய நிறுவனங்களுக்குள் உள்ளூர் நிபுணத்துவத்தைப் பயன்படுத்துவதில் அதிகரிப்பும் குறிப்பாக முடிவெடுக்கும் பாத்திரங்களில் உள்ளூர் பொருளாதாரத்திற்கு இது பயனளிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தொழிற்துறை தகவல் மற்றும் புள்ளிவிபர நாளதுவரையாக்கல்: ஆண்டுக்கான தொழிற்துறைத் தரவுகள், தகவல் சேகரிப்பு மற்றும் இற்றைப்படுத்தல்கள் பூர்த்தி செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டன. நடமாடும் மற்றும் நிலையான கட்டண திட்டங்களின் மாதந்த பாவனையை சர்வதேச தொலைத்தொடர்பு யூனியன் தரநிலைகளின்படி ஐந்து வகையான விலை கூடைகளுக்கு ஏற்ப பிரித்து பகுப்பாய்வு செய்வதன் மூலம் கட்டணத்துடன் தொடர்புடைய புள்ளிவிவர குறிகாட்டிகளின் கணக்கீடு தயாரிக்கப்பட்டது. சர்வதேச தொலைத்தொடர்பு சங்கத்தின் (ஐ.சி.டி) விலைபோக்கு பகுப்பாய்வின் அடிப்படையில் குரல் மற்றும் டேட்டா கட்டணங்கள் விடயத்தில் இலங்கை பாராட்டத்தக்க நிலையில் உள்ளது. அன்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையின் அடிப்படையில், உறுப்பு நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை மலிவான குரல் + டேட்டா குறைந்த பயன்பாட்டில் 14 வது இடத்திலும், குரல் + டேட்டா உயர் பயன்பாட்டில் 33 வது இடத்திலும், டேட்டா மட்டும் மொபைல் ப்ரோட்பேண்டில் 29 வது இடத்திலும், கைப்பேசி கூடையில் 09 வது இடத்திலும், நிலையான

ப்ரோட்பேண்டில் 26 வது இடத்திலும் உள்ளது. மலிவான கைப்பேசி குரல் சேவைகளை வழங்கும் 10 நாடுகளில் தரவரிசையில் இலங்கை இடம்பிடித்துள்ளது. ஆண்டுக்குள் வழங்கப்படும் புதிய பொதிகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்கால அறிக்கைகளில் டேட்டா கட்டணங்கள் மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சேவை தர அளவுருக்களைப் பின்பற்றுதல்: இணக்கப்பாட்டு செயற்பாட்டின் கீழ் அனுமதிபத்திரம் பெற்ற தொலைதொடர்பு செயற்படுத்துனர்களினால் வழங்கப்படும் குரல் மற்றும் டேட்டா / ப்ரோட்பேண்ட் சேவைகளின் சேவைத்தரத்தை (QoS) கண்காணிக்க சட்டம் / ஒழுங்குவிதிகளை வழங்க திட்டமிடப்பட்டது. "குரல் மற்றும் டேட்டா / பிராட்பேண்ட் சேவைகளுக்காக தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு விதித்துள்ள சேவை-தர அளவுருக்களை செயற்படுத்துனர்கள் பின்பற்றுவதை உறுதி செய்தல்" என்ற பணியில் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது. QoS அளவுருக்களை பின்பற்றும் கைப்பேசி செயற்படுத்துனர்களின் எண்ணிக்கை பதினான்கு ஆகும், நிலையான செயற்படுத்துனர்களின் எண்ணிக்கை பதினாறு ஆகும். ஸ்பேம் செய்திகளின் சிக்கல்கள் நுகர்வோரைப் பாதிக்கும் நிலையில், செயற்படுத்துனர்களாலும், மூன்றாம் தரப்பு நிறுவனங்களினாலும் அனுப்பப்படும் கோரப்படாத விளம்பரச் செய்திகளை, உலகளாவிய சிறந்த நடைமுறைகளின்படி செய்திகளில் கட்டாய விருப்பத்தேர்வு மற்றும் விலகல் விருப்பங்களைச் சேர்ப்பதன் மூலம் நெறிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. சர்வதேச மற்றும் உள்ளூர் மோசடி அழைப்புகளைத் தடுக்கவும், செயல்முறையை சீராக்கவும், மோசடி அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகளை கண்காணிக்கவும், ஒழுங்குவிதிகளை மீறும் எண்களைத் தடுக்கவும் செயற்படுத்துனர்கள் அறிவுறுத்தப்பட்டனர். மேலும், 4G டிரைவ் டெஸ்ட் அளவீடுகள் மற்றும் செயற்படுத்துனர்களால் வழங்கப்படும் 4G கவரேஜ்களுக்கான கட்டாய அளவீடுகள் ஆகியன மேற்கொள்ளப்பட்டதுடன், QoS பகுப்பாய்வின் கீழ் டாஷ்போர்ட் உருவாக்கப்பட்டு செயற்படுத்தினர்களின் அனைத்து QoS அளவுரு அளவீடுகளும் தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

திட்டமிடப்படாத பணிகள் மற்றும் அருகிலுள்ள நாடுகளுடன் ஸ்பெக்ட்ரம் ஒத்திசைக்காததன் காரணமாக ஏற்பட்ட ஸ்பெக்ட்ரம் குறுக்கீடுகளின் விளைவாக ஏற்பட்ட உயர் அழைப்பு வீழ்ச்சி போன்ற சில தரம் குறைந்த சேவை குறிகாட்டிகளுக்கான மூல காரணங்களை தீர்ப்பதற்காக மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சூழ்நிலையில் இடையில் உள்ள வேறுபாடுகளை போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. நுகர்வோருக்கு ஏற்படும் அசௌகரியங்களைக் குறைப்பதை உறுதி செய்யவும், ஸ்பெக்ட்ரம் திட்டமிடல் வடிகட்டுதல்கள் செயற்படுத்துனர்களினால் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்வதற்காக ஸ்பெக்ரம் திட்டமிடல் மேற்கொளப்பட்டது.

கட்டண கண்காணிப்பு மற்றும் விசாரணை: அனுமதிபத்திரம் பெற்ற செயற்படுத்தினர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட கட்டணப் பொதிகள் மீளாய்வு செய்யப்பட்டதுடன், சந்தையில் காணப்படும் அங்கீகரிக்கப்படாத கட்டணப் பொதிகள் கண்காணிக்கப்பட்டன. தவிர, சந்தையில் அங்கீகரிக்கப்படாத கட்டணங்கள் நீக்கப்படுவதை உறுதி செய்வதற்கு தேவையான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன, மேலும் கடப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக செயற்படுத்தினர் உறுதிமொழி ஒன்றினை அறிமுகம் செய்வதற்கான ஒரு செயல்முறை அறிமுகப்படுத்தப்பட்டது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட உறுதிமொழி செயல்முறையின் மூலம், இந்த ஆண்டின் தொடக்கத்தில் சந்தையில் தெளிவாகத் தெரிந்த பெரும் எண்ணிக்கையிலான அங்கீகரிக்கப்படாத கட்டணங்கள் ஆண்டு இறுதிக்குள் கிட்டத்தட்ட பூஜ்ஜியத்துக்கு வந்தது.

செயற்படுத்தினர் அனுமதிப்பத்திர நிபந்தனைகளைப் பின்பற்றுதல்: சட்டத்தின் 17 வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிபத்திரங்களின் நிபந்தனைகளை பின்பற்றுவதை கண்காணிப்பதற்குத் தேவையான ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன மற்றும் மொத்தம் நாற்பத்தெட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. சட்டத்தின் பிரிவு 21 ன் கீழ் வழங்கப்பட்ட அனுமதிபத்திரங்களின் நிபந்தனைகளின்படி, அவற்றைக் கடைபிடிப்பதை கண்காணிக்க ஆய்வுகள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன மற்றும் நிபந்தனைகளை பின்பற்றாதது குறித்து தேவையான ஒழுங்குமுறை நடவடிக்கைகளை எடுக்கப்பட்டன.

சட்டவிரோத நடவடிக்கைகளை கண்காணித்தல் மற்றும் விசாரணை செய்தல்: விற்பனையாளர்களால் அங்கீகரிக்கப்படாத தொலைதொடர்பு சாதனங்களை விற்பனை செய்தல், விற்பனையாளர்களால் அங்கீகரிக்கப்படாத தொலைதொடர்பு உபகரணங்களை விற்பனை செய்தல், மற்றும் பொது மக்களுக்கு சட்டவிரோத தொலைதொடர்பு சேவைகளை வழங்குதல் (செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இன்றி சேவைவழங்குநர்களினால் வழங்கப்படுபவை, சட்டவிரோத கேபள் டிவி மற்றும் செட்டிலைட் டிவி செயல்பாடுகள்) போன்ற நடவடிக்கைகளுக்கு எதிராக பொருத்தமான ஒழுங்குபடுத்தல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. சட்டவிரோத மற்றும் அங்கீகரிக்கப்படாத தொலைதொடர்பு சாதனங்களை கொள்வனவு செய்வது குறித்த ஒருங்கிணைந்த விழிப்புணர்வு நிகழ்வு இந்த ஆண்டில் நடாத்தப்பட்டதோடு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சாதனங்கள் மட்டுமே விற்கப்படுவதை உறுதி செய்வதற்கும், மொபைல் நெட்வர்க்குகளினால் அங்கீகரிக்கப்படாத அனைத்து மொபைல் சாதனங்களையும் தடைசெய்வதற்கும் அனைத்து விற்பனையாளர்களையும் இணங்கிச் செயற்படுவதற்காக ஒக்டோபர் 1ம் திகதிவரை ஆரம்ப காலக்கெடு வழங்கப்பட்டது. இதை செயல்படுத்துவது தொடர்பாக, ஒரு உள்நாட்டு தொழில்நுட்ப நிறுவனத்தின் தன்னார்வ ஒத்துழைப்புடன் உள்நாட்டு IMEI முகாமை தீர்வு முறைமை உருவாக்கப்பட்டது, இதன் ஊடாக, பதிவுசெய்யப்பட்ட சகல சாதனங்களையும் சட்டவிரோதமானதா அல்லது அனுமதிக்கப்பட்டதா என்பதை டெல்கோ செயற்படுத்துனர்கள் வழங்கிய தேவையான தரவுகளுடன் புதுப்பிக்கப்பட்ட செயல்முறையில் தற்போது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் கண்காணிக்க முடியும். தற்பொழுது நெட்வர்க்குகளில் சட்டவிரோத சாதனங்களைத் தடைசெய்வதற்குரிய விதிமுறைகளையும் நிபந்தனைளையும் முறைப்படுத்துவதற்கான சட்டத் தேவைப்பாடுகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன, அத்தோடு பதிவு செய்யப்பட்ட விற்பனையாளர்களிடமிருந்து சாதனங்களை கொள்வனவு செய்வதற்கான அவசியம் மற்றும் ஏற்கனவே தம்வசமுள்ள சாதனங்களுக்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளதா

இல்லையா என்பதை உறுதிசெய்து கொள்வதன் ஊடாக பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரிங்களை தவிர்ப்பதற்காக பொதுமக்களுக்கு போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த செயல்முறை காரணமாக சந்தையில் மலிந்து கிடக்கும் தரம் குறைந்த, போலி மற்றும் நகல் சாதனங்களின் சிக்கல்கள் இல்லாதொழிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் சுகாதார வழிகாட்டுதல்களுடன் பொருந்தாத சாதனங்கள் போன்றவற்றின் கதிர் வெளியீடு நுகர்வோரின் நீண்டகால ஆரோக்கியத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது.

விழிப்புணர்வு செயற்திட்டங்கள்: அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களால் விற்பனை செய்யப்படும் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சாதனங்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வதற்கான தேவை மற்றும் அவசியம் குறித்து இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் சமூக வளைதளங்கள் மூலம் பொது விழிப்புணர்வு செயற்திட்டங்கள் நடாத்தப்பட்டன. மேலும், சைபர் மிரட்டல் மற்றும் துன்புறுத்தல் பற்றிய புகார்கள் அதிகரித்துள்ள நிலையைக் கருத்திற்கொண்டு பாடசாலை மாணவர்களுக்கு தொலைதொடர்பு மற்றும் சமூக ஊடகங்களின் நெறிமுறை மற்றும் முறையான பயன்பாடு குறித்து விழிப்புணர்வு திட்டங்கள் நடாத்தப்பட்டன. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பெற்றோர்கள் மற்றும் மாணவர்களை முக்கிய இலக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட பாட உள்ளடக்கத்துடன் வானொலி, தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் நடாத்துவத்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஒரு முக்கிய சிறப்பம்சமாக இணைய அச்சுறுத்தல் மற்றும் துன்புறுத்தல்களைத் தவிர்ப்பது சம்பந்தமாக 2020 ஆம் ஆண்டு மகளிர் தின விழிப்புணர்வு பிரச்சாரம் சமூக ஊடக வலையமைப்புக்களிலும் தொலைக்காட்சிகளிலும் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்டதோடு இந்த செயற்திட்டத்திற்கு பல ஊடக அலைவரிசைகள் முக்கியத்துவம் அளித்து ஒளிபரப்பியது.

பொதுமக்களுக்கு ஆர்வமுள்ள முக்கிய தலைப்புகளில் தொடர்ச்சியான அமர்வுகளை நடத்தும் பரந்த நேயர்கனைக் கொண்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ''வினிவித'' நிகழ்ச்சியின் மூலம் தொடர்ச்சியான ஊடக நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டதோடு அந்நிகழ்ச்சியில் ஆணையாளர் நாயகம் உட்பட ஆணைக்குழுவின் உயர் அதிகாரிகள் பலரும் பங்கேற்றனர்.

வாடிக்கையார்களின் முறைப்பாடுகளை நிர்வகித்தல்: விலைப்பட்டியல் தொடர்பான முறைப்பாடுகள், தொல்லை மற்றும் துன்புறுத்தல் அழைப்புகள், சேவையின் தரம், கேபிள் டிவி, இணையம் மற்றும் டேட்டா, சமூக வலைதளங்கள், சைபர் துன்புறுத்தல், மற்றும் பிற தொலைத்தொடர்பு சேவைகள் தொடர்பான சிக்கல்கள் என்பவற்றைத் தீர்ப்பதற்காக தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்கள் மற்றும் ஏனைய உரிய தரப்பினருடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மற்றும் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. 1313 வாடிக்கையாளர் முறைப்பாடுகள் பெறப்பட்டு கையாளப்பட்டன.

மேலும், தொலைந்துபோன கையடக்க தொலைபேசிகள் தொடர்பாக இயங்கலை மூலம் பெறப்பட்ட முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்பட்டதோடு சுமார் 23,905 முறைப்பாடுகள் கையாளப்பட்டன. இலங்கை காவல்துறையினரின் ஒத்துழைப்புடன் ஒரு நெறிப்படுத்தப்பட்ட இயங்கலை முறைப்பாட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டதோடு அதனூடாக வாடிக்கையாளர்கள் தற்பொழுது தமது தொலைந்த கையடக்க தொலைபேசிகள் சம்பந்தமாக மனித தலையீடு இன்றி இயங்கலை மூலம் முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம். செயல்திறன் குறைந்த முந்தைய 'ஒரு முறை சரிபார்த்தல்' முறைமைக்கு மாறாக தற்பொழுது IMEI இனை தொடர்ச்சியான பரஸ்பர சோதனை முறையினூடாக தொலைந்து போன தொலைபேசிகளின் IMEI தரவைச் சரிபார்ப்பதற்கான செயல்முறைகள் செயற்படுத்துனர்களால் மேலும் நெறிப்படுத்தப்பட்டுள்ளமையினால் தற்பொழுது, திருடப்பட்ட தொலைபேசியொன்றை நீண்ட கால செயலற்ற நிலைக்குப் பின்னரும் கண்டுபிடிக்கக் கூடிய வாய்ப்பையும் இது தருகின்கிறது.

விசாரணைகள் மற்றும் ஒருங்கிணைப்பு நிறுவனங்கள்: செயற்படுத்துனர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அழைப்பு பதிவுகள் மற்றும் உரிமை சம்பந்தமாக விபரங்களை, குற்றவியல் மற்றும் சிவில் விசாரணைகளுக்காக பகுப்பாய்வு செய்வதற்கு தேவைப்படுமிடத்து சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குகின்றது. ஒரு சட்ட அமுலாக்கப் பிரிவை நிர்வகிப்பதற்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிற்கு நிர்வாக நுணுக்கங்கள் இல்லை என்பதால் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் ஏற்கனவே அமைக்கப்பட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவு இலங்கை காவல்துறைக்கு மாற்றப்பட்டது. எவ்வாறாயினும், பொதுமக்களால் முன்வைக்கப்படும் அனைத்து சட்ட அமுலாக்க உதவிகளும் இப்போது இலங்கை காவல்துறை சைபர் கிரைம்ஸ் பிரிவுக்கு ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட செயல்முறையில் முன்வைக்கப்படுகின்றன.

சிம்களை பதிவுசெய்தல் / IMEI சரிபார்த்தல் / பெறுமதி சேர் சேவைகள் / டிஜிட்டல் கொடுப்பனவுகள்: பதிவுசெய்தல் செயல்முறையை முறைப்படுத்துவதற்கு தொலைத் தொடர்பு செயற்படுத்துனர்களின் ஒத்துழைப்புடன் சிம் பதிவு நடைமுறைகளை நெறிப்படுத்தும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது. தொழில்துறையில் சிம் பதிவு தொடர்பாக தேவையான கணக்காய்வு நடவடிக்கைகள் நடாத்தப்பட்டன. இருப்பினும், செல்லுபடியாகும் வாடிக்கையாளர் சுய விபரங்களைப் பராமரிப்பதில் செயற்படுத்துனர்கள் அதிகளவு உடன்பாடற்ற தன்மைகளைக் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது, மேலும் தேவையான மீள் பதிவு / சரிபார்த்தல் நடவடிக்கை செயற்படுத்துனர்களால் நடாத்தப்படுவதை உறுதிசெய்வதற்கான செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தானியங்கி IMEI சரிபார்த்தல் தீர்வுமுறைமையை உள்ளடக்கியுள்ள சிம் / சாதனம் / விற்பனையாளர் பதிவு செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கு மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்த செயற்பாடுகள் முழுமையாக செயல்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்கு, தேவையான சட்ட முறைப்படுத்தல் நடவடிக்கைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

பெறுமதி சேர் சேவைகளை (VAS) வழங்குவது மற்றும் அது தொடர்பான முறைப்படுகள் மீது நடவடிக்கை எடுப்பதன் அடிப்படையில் செயற்படுத்துனர் கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டிய சிறந்த நடைமுறைகளை ஆரம்பிப்பதன் மூலம் தொலைதொடர்பு செயற்படுத்துனர்களால் வழங்கப்படும் பெறுமதி சேர் சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு செயல்முறை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் ஒருங்கிணைத்து ஆரம்பித்து வைக்கப்பட்டது. பெறுமதி சேர் சேவைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கொடுப்பனவு பட்டியல் போன்றவற்றில் கணிசமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. மேலும் OTP சரிபார்ப்பு போன்ற நடவடிக்கைகளை சேவைகளில் இணைக்க பரிந்துரைக்கப்படுகின்றன. இதுபோன்ற பெறுமதி சேர் சேவைகளின் ஏதேனும் ஒழுங்கின்மையை பரீட்சிப்பதற்கு ஆணைக்குழுவினால் உள்ளக கணக்காய்வு விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது

டிஜிட்டல் வொலட் சேவைகளான EZ-Cash/M-cash போன்ற சேவைகள் தீங்கு விளைவிக்கும் நோக்கங்களுக்காக தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன என்ற கருத்தின் அடிப்படையில், செயற்படுத்துனர்களால் வழங்கப்படும் டிஜிட்டல் வொலட் சேவைகளை மேலும் நெறிப்படுத்துவதற்கான நடவடிக்ககள் சட்ட அமுலாக்க நிறுவனம் மற்றும் மத்திய வங்கியுடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் இயந்திரக் கற்றலின் அடிப்படையில் சந்தேகத்திற்கிடமான பரிவர்த்தனைகளைக் கண்காணிக்கவும் பகுப்பாய்வு செய்யவும் செயற்படுத்துனர்களினால் தேவையான பகுப்பாய்வு தீர்வுகளைச் செயல்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மத்திய வங்கியின் கீழ் வருகின்ற போதிலும், அதற்காக மத்திய வங்கி மற்றும் அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை போன்ற சகல முக்கிய பங்குதாரர்களுடனும் இணைந்து ஒரு அமைப்பை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கான தளங்கள் மத்திய வங்கியால் நிர்வகிக்கப்படுவதால், கட்டுப்பாட்டு முறைமைகளிலிருந்து தோற்றுவிக்கப்படும் இதுபோன்ற தகவல்கள் இப்போது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் நிர்வகிக்கப்படும் வசதியின் அடிப்படையில் நிதி விசாரணை பிரிவுக்கு அனுப்பப்படுகின்றன.

தொலைத்தொடர்பு துறையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி: இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு இலங்கையில் உள்ள அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தொலைதொடர்பு தொடர்பான ஆராய்ச்சி ஆய்வுகளை நடாத்தியது. நவீன தொழில்நுட்பத்திற்கான ஆதர் சி கிளார்க் நிலையத்தின் தொலைதொடர்பு பிரிவின், "சிறிய வெள்ளம் தொடர்பான முன்கூட்டிய அறிகுறிகளுக்காக நகர்ப்புறங்களில் தொட்டி மற்றும் கால்வாய் நீர் மட்டத்தை நிகழ்நேரத்தில் கண்காணித்தல்" மற்றும் ருஹுன பல்கலைக்கழகத்தின் மின் மற்றும் தகவல் பொறியியல் துறையின; "Fast Uplink Grant - இயந்திர வகை தகவல்தொடர்புக்கான செயற்கை நுண்ணறிவு முறைமையின் தழுவல்" என்பன முக்கிய திட்டங்களாக இருந்தன. இது குறித்த ஆய்வுக் கட்டுரை ஒரு முன்னணி சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டில் (IEEE Globe Com 2020) வெளியிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட ஆராய்ச்சி திட்டங்களின் ஆரம்ப விளக்கக்காட்சிகள் மற்றும் இரண்டு முன்னேற்ற விளக்கக்காட்சிகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

தொலைத்தொடர்பு ஆய்வுகள் மற்றும் கருத்தறியும் வினாக்கொத்து செயற்பாடுகளை மேற்கொள்ளல்: தொலைத் தொடர்பு செயற்படுத்துனர்கள் / ஏனைய அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து தொடர்புடைய தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதோடு சேகரிக்கப்பட்ட தகவல்களைத் திரட்டி தொகுத்ததன் பின்னர் கணக்கெடுப்புகள் மற்றும் கருத்தறியும் வினாப்பட்டடியல் நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டது. [ITU தொலைத்தொடர்பு /ICT ஒழுங்குமுறை ஆய்வு 2020, ITU உலக தொலைத்தொடர்பு / ICT குறிகாட்டிகள் நீண்ட வினாப்பட்டியல் 2020, ITU குளோபல் சைபர் செக்யூரிட்டி இன்டெக்ஸ் வினாப் பட்டியல் 2020, ACCIMT (நவீன தொழில்நுட்பங்களுக்கான ஆதர் சி கிளார்க் நிலையம்) நிலையான அபிவிருத்திக்கான விண்வெளி தொழில்நுட்பம் பற்றிய ஆய்வு: அரச நிறுவனங்களிடையே தற்போதைய மற்றும் சாத்தியமான பயன்பாடு பற்றிய ஆய்வு, SATRC WG கொள்கை, ஒழுங்குமுறை மற்றும் சேவைகள் தொடர்பான APT வினாப் பட்டியல்கள், ஆசிய மற்றும் பசிபிக் நாடுகளில் ஸ்பெக்ட்ரம் முகாமை தொடர்பான திறன் அபிவிருத்தி குறித்த ITU கணக்கெடுப்பு]

சர்வதேச தொலைத்தொடர்பு அமைப்புகளுடன் ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கை: தொலைத்தொடர்பு தொடர்பான சர்வதேச நிறுவனங்களுடன் (ITU, APT, CTO, SATRC, SAFIR) ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. பொதுச் சபையின் 15 வது அமர்வு மற்றும் முகாமைத்துவ சபையின் 44 வது அமர்வு மற்றும் ஆசிய பசிபிக் தொலைத்தொடர்பு (APT) பொதுச் செயலாளர் மற்றும் பிரதி செயலாளர் நாயகத்தின் தெரிவிற்கான வாக்களிப்பு என்பவற்றிற்காக இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான பிரதிநிதிகள் மற்றும் சான்றுகளை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தயார்படுத்தியது. கோவிட்-19 தொற்று சூழ்நிலையில், சர்வதேச தொலைத்தொடர்பு அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு உடல் பயிற்சி திட்டம் மற்றும் பதினெட்டு நேரலை பயிற்சி திட்டங்கள் / பட்டறைகள் மற்றும் மெய்நிகர் கூட்டங்களில் நிறுவனத்தின் ஊழியர்கள் கலந்து கொண்டனர். இது திறன்களையும் சிறந்த நடைமுறைகளையும் வளர்க்க நிறுவனத்திற்கு பயனளித்தது. மேலும், பயிற்சித் திட்டங்களிலிருந்து பெறப்பட்ட அறிவை ஏனைய சகல ஊழியர்களுக்கும் வழங்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, பங்கேற்பாளர்களினால் கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டிய பயிற்சியின் பின்னரான

பயிற்சி விளக்கக்காட்சிகளை காண்பிக்கும் நடவடிக்கை ஊடாக அறிவினை பகிர்ந்துகொள்வதற்கான உள்ளக அமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

மேலும் தெற்காசிய தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தல் கவுன்சில் அமர்வு-2020 இன் ஒரு பகுதியாக தெற்காசியாவில் 5G பயன்படுத்தப்படுவது சம்பந்தமான காலத்திற்குப் பொருத்தமான ஒழுங்குபடுத்தும்-தொழில்துறை உரையாடலில் குழு உறுப்பினராக பணிப்பாளர் நாயகம் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தினார். 5G அமுல்படுத்தலில் சவாலான ஒழுங்குமுறை சிக்கல்கள் மற்றும் ஸ்பெக்ட்ரம் ரோட்மேப் மூலோபாயத்தின் முக்கியமாக கடைபிடிக்கவேண்டிய அம்சங்களை அடிப்படையாகக் கொண்ட இவ்வமர்வினை APT யின் பிரதி செயலாளர் நாயகம் திரு. மசனோரி கோண்டோ வழிநடத்தினார்.

மேலும், பாகிஸ்தான் தொலைத்தொடர்பு ஆணைக்குழு (PTA) மற்றும் இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (TRAI) ஆகியவற்றுடன் இணைவாக்கம் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டதோடு, தேசிய IMEI முகாமைத்துவ தீர்வுமுறை போன்ற மூலோபாய திட்டங்களின் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கு மற்றும் இலங்கையின் இலக்க பெயர்வுத்திறனை ஆரம்பிப்பதற்கு இருதரப்பு கூட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டன.

ஸ்பெக்ட்ரம் மேனேஜ்மென்ட் ரோட்மெப், IPV6 நடைமுறைப்படுத்துதல் மற்றும் முன்மொழியப்பட்ட புதிய அனுமதிப்பத்திர கட்டமைப்பை அமைத்தல் தொடர்பாக ITU/APT நிபுணர் உதவித் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் அமைப்பு தினம் (WTISD): இந்த ஆண்டின் WTISD கருப்பொருளான "கனெக்ட் 2030: நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்கள்" குறித்து ஆணைக்குழுவின் வலைத்தளம் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் பொது விழிப்புணர்வை ஏற்படுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அத்தோடு, அதிமேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதமர், ஐ.டி.யு பொதுச்செயலாளர், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோரின் WTISD சிறப்பு செய்திகளும் எமது வலைத்தளம் மற்றும் டிஜிட்டல் அலைரிசை ஊடாக வெளியிடப்பட்டன.

ஒழுங்குபடுத்தல் விடயங்களில் சட்ட நடைமுறைகள்: நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகள் தொழில்துறையின் முன்னேற்றத்தை பாதிப்பதோடு மற்றும் நுகர்வோர் மீது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் அவற்றை தீர்ப்பதற்கான ஆணைக்குழுவின் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் மற்றும் முன்னெடுப்புகளுக்கு தேவையான சட்ட ஆலோசனைகள் / நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த வழக்குகள் காரணமாக, செயற்படுத்துனர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர் மத்தியில் நிலவிய முரண்பாடுகள், ஸ்பெக்ட்ரமின் பயன்பாடு மற்றும் செயற்படுத்துனர்களுக்கிடையேயான ஒத்துழைப்பு ஆகியவை தடைப்பட்டமையினால், நாட்டின் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை நோக்கி நகர்வதற்கு தேவையான கவரேஜ் மற்றும் பிரோட்பேண்டின் விரைவான காலாவதியை உறுதி செய்வதற்கு ஒரு தீர்வு அவசியப்பட்டது. ஆகவே டயலொக் மற்றும் இலங்கை டெலிகொம் லிமிட்டட் மற்றும் ஏனைய மொபைல் செயற்படுத்துனர்கள் தொடர்பான வழக்குகள், தடைகள் அனைத்தும் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைந்து ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட உரையாடல் மற்றும் தீர்வுக்கான வசதிகளுக்குப் பிறகு தீர்வுக் கோரிக்கைகளுடன் தீர்வு காணப்பட்டன. இந்த தீர்வானது செயற்படுத்துனர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த எனினும் வழக்கு காரணமாக பயன்படுத்த முடியாதிருந்த ஸ்பெக்ட்ரமைப் பயன்படுத்துவதற்கு வழிவகுத்தது. அத்தோடு செயற்படுத்துனர்களுக்கு ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு செய்வதன் மூலம் எதிர்பார்க்கப்படும் கவரேஜ் விரிவாக்கத்துடன் தேவையான சேவையின் தரத்தை நுகர்வோருக்கு வழங்க முடியும் என்பதை உறுதிப்படுத்துவதோடு, போதியளவு ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு வழங்கள் இப்போது நிறைவடைந்துள்ளது.

தாமரை கோபுர செயற்திட்ட விடயத்தில், நில உரிமை தொடர்பான விடயங்களைத் தீர்ப்பதற்கு மற்றும் கொழும்பு தாமரை கோபுரத்தின் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நிறுவன உருவாக்கம் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்துடனான விடயங்கள் சம்பந்தமாகவும் சட்டப்பூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எதிர்கால வணிக நடவடிக்கைகளைத் தொடங்கும்போது சட்டப்பூர்வ உடன்பாடுகள் கட்டாயமாக தேவைப்படும் என்பதால் சட்டபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வரை எந்தவொரு நிலமும் திட்டத்திற்கு முறைப்படி ஒதுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது, நிலத்தின் எஞ்சியுள்ள சிக்கல்களை நிறைவுசெய்வதற்கான இறுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு முறைப்படுத்தலுக்கு அமைச்சரவை பத்திரமொன்று முன்வைப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், ஒப்பந்தங்கள், அதிர்வெண் ஒதுக்கீடுகள், அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தல், புதிய முதலீட்டிற்கான மறுபரிசீலனை செயல்முறை, விற்பனையாளர் அனுமதிப்பத்திரம் தொடர்பான சிக்கல்கள், கருத்தறியும் வினாப்பட்டியல்கள், சட்டம் மற்றும் ஒழுங்குபடுத்தல் விவகாரங்களில் குறிப்பிடப்படும் ஒழுங்குமுறை கட்டமைப்பு விடயங்கள் என்பன சம்பந்தமாக தேவையான ஆலோசனைகள் மற்றும் தீர்வுகள் வழங்கப்பட்டன.

குற்றவியல் விசாரணை, குற்றவியல் நடவடிக்கைகள், இணையதளத் தடுப்பு / தடைநீக்கம் மற்றும் சமூக ஊடக செயற்பாடுகள் ஆகியவற்றின் நோக்கத்திற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் காவல் நிலையங்கள் பெற்ற நீதிமன்ற உத்தரவுகளின் செயல்முறையை நெறிப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த பிரச்சினைகள் தொடர்பாக அனுமதி பெற்ற செயற்படுத்துனர்கள், காவல் நிலையங்கள் மற்றும் நீதிமன்றங்களின் ஆலோசனையுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மீளாய்வாண்டில் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு மீது ஒரு நீதிமன்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. தொலைத்தொடர்பு தீர்வு மற்றும் ஊழியர் நீதிமன்ற நடவடிக்கைகளை நீக்குதல் தொடர்பான எட்டு வழக்குகள் முடிவுக்கு வந்தன. இந்த ஆண்டு இருபது நீதிமன்ற வழக்குகள் கையாளப்பட்டுள்ளன. மேலும், 1991 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தற்போதைய சட்டத்தினூடாக பல வருடங்களாக பாரிய தொழில்நுட்ப மற்றும் ஒழுங்குபடுத்தல் முன்னேற்றங்களை மேற்கொண்டுள்ளதோடு குறித்த சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு பல படிமுறைகளைச் செயல்படுத்தியுள்ளது. மேலும் 1996 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவை உள்ளடக்குவதற்கு மாத்திரமே தற்போதைய சட்டம் திருத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஆகவே, மேற்கொண்டு தொடர்வதற்குத் தேவையான ஆரம்ப அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இலங்கையை இணைக்கும் திட்டம் - "கமட்ட சன்னிவேதனய": "தொழில்நுட்ப அடிப்படையிலான சமூகம் மற்றும் டிஜிட்டல் முறையை உள்ளடக்கிய இலங்கை" என்ற அரசாங்கத்தின் எண்ணக்கருவுக்கு அமைவாக, இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL) "கமட்ட சன்னிவேதனய" (இலங்கையை இணைத்தல்) நாடு முழுவதும் 100% 4G / பைபர் பிரோட்பேண்ட் கவரேஜை பூர்த்தி செய்யும் நோக்கில் இத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

சுபீட்சத்தின் நோக்கு எனும் அரசாங்கத்தின் எண்ணக்கருவின் மூலம் டிஜிட்டல் உருமாற்றம் மற்றும் டிஜிட்டல் முறையில் இயங்கும் அரசாங்கம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் ஆகியவற்றை நோக்கி நாட்டை இயக்கும் தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வதில் மிகுந்த கவனம் செலுத்தியுள்ளதோடு நாட்டின் டிஜிட்டல் மயமாக்கலுக்கான அடிப்படை உட்கட்டமைப்பானது இணைப்பின் கட்டாய தேவையாகவுள்ளது. தற்போதைய கோவிட் தொற்றுநோய் நிலைமையினால் இன்றியமையாதது என நிரூபிக்கப்பட்டுள்ள இ-அரச சேவைகள் மற்றும் நேரலை கல்வி போன்ற சேவைகளை நாட்டுமக்கள் உலகளாவிய ரீதியில் பெற்றுக்கொள்வதனை உறுதி செய்வதற்காக நாடு முழுவதற்கும் பிரோட்பேண்ட் இணைய தழுவளவு வழங்குவது முக்கிய வெற்றிக் காரணியாகும்.

இவ்வருடம் TRCSL இனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட, இறுதியில் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கத்தினால் ஒரு தேசிய வேலைத் திட்டமாக இனங்காணப்பட்ட கிராமத்திற்கான தொடர்பாடல் எனும் வேலைத்திட்டமானது தற்பொழுது ஆலலை இணைப்புகளின் பற்றாக்குறை சம்பந்தமான பிரச்சினை தொடர்பாக கவனம் செலுத்தி வருவதுடன், நாட்டின் 25 மாவட்டங்களிலும் உள்ள 14,000 இற்கும் மேற்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளிலும் காணப்படும் உண்மையான தழுவளவு நிலை தொடர்பான ஒரு வருட ஆய்வினை மேற்கொண்டு ஆரம்ப கட்ட செயற்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ளது. இச் செயற்பாட்டின் பிரதான அம்சமாகக் கருதப்படுவது TRCSL பின்தங்கிய பிரதேசங்களுக்கு தழுவளவினைப் பெற்றுக் கொடுக்கும் விதத்தில் தொலைத் தொடர்புகள் அபிவிருத்தி நிதியத்தினூடாக நிறுவனங்களுக்கு நிதி உதவியினை வழங்குவதன் மூலம் இதன் விரிவாக்கத்திற்கான பொருளாதார முதலீட்டினை மேற்கொள்ளவுள்ளதுடன், இது ஒரு நிறுவனத்தின் பொருளாதார நிலைமையில் எதுவித நன்மையையும் பெற்றுக்கொடுக்காத பொழுதும் ஒரு நாட்டின் பொருளாதாரத் துறையில் முக்கிய பங்களிப்பினை வகிக்கின்றது. தற்பொழுது TRCSL ஆனது தொலைத் தொடர்பு சேவை வழங்குனர்களுடன் இணைந்து இரத்தினபுரி மாவட்டத்தில் முதலாவது திட்டத்தினை ஆரம்பித்துள்ளதுடன், 2021 மே மாதம் அளவில் இரத்தினபுரி மாவட்டத்தின் 602 தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகள், 23 பொலிஸ் நிலையங்கள், 38 வைத்தியசாலைகள், 1400 இற்கும் மேற்பட்ட ஏனைய அரச அலுவலகங்கள் உட்பட பரந்த அளவிலான ஆலலை இணைப்பினைப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்ப்பதுடன், 36 புதிய தொலைத் தொடர்புக் கோபுரங்கள் மற்றும் பைபர் இணைப்பு ஆகிய கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்த உள்ளது. இதே செயற்பாடு நாட்டின் ஏனைய மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட உள்ளதுடன் 2023 ஆம் ஆண்டு இறுதியில் TDC நிதியத்தின் மீள் முதலீட்டினை அடிப்படையாக வைத்து இதன் இறுதி இலக்காகிய நாடு பூராகவும் 100 வீத ஆலலை தழுவளவினைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபடவுள்ளது. எவ்வாறாயினும் வெறும் 18 – 24 மாத காலத்தினுள் நாடு முழுவதும் ஆலலை தழுவளவினைப் பெற்றுக் கொடுப்பதாயின், தற்பொழுது காணப்படும் TDC நிதியினை அதிகரித்துக்கொள்வதற்கான புதிய வழிமுறைகளையும் கண்டறிய வேண்டி ஏற்படும்.

அதிவேக, கொள்வனவு சக்திக்கு உட்பட்ட, நீண்ட கால பயனள்ள 4G பைபர் ஆலலை வலையமைப்பின் விளைவாக இலங்கைக்கான டிஜிட்டல் பரிமாற்று திட்டவரைபின் ஒரு பகுதியாக எதிர்காலத்தின் e-சுகாதார சேவைகளுக்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தல், தொழிற்சாலைகளுக்கான IoT தன்னியக்க சக்தி, விவசாயத் தொழில்நுட்பம் ஆகிய புதிய தொழில்நுட்பங்களின் பாவனையை அதிகரித்தல், e–சுகாதார சேவைகள் மற்றும் மாணவர்களுக்கான நிகழ்நிலை கல்வி ஆகியவற்றை பெறுவதற்கான வரையறையற்ற அடைவுநிலையை வழங்குவதுடன், புவியியல் வேறுபாடுகள் இன்றி டிஜிட்டல் பாகுபாட்டினைக் குறைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு இது வழிவகுக்கும்.

"கிராமத்திற்கான தொடர்பாடல்" வேகமான தழுவளவு மேம்படுத்தல் திட்டம் - 2020: பொதுமக்களின் வேண்டுகோலினையும் ஆணைக்குழுவின் மதிப்பீட்டினையும் அடிப்படையாக வைத்து, மொனராகலை மாவட்டத்தின் மீயகல, லங்காகம, பதுரலியவில் அமைந்துள்ள கெலின் கந்த, நவகத்தேகமவில் அமைந்துள்ள மொரகஹவெவ மற்றும் லுனுகம்வெஹெர ஆகிய பகுதிகளுக்கு 4G தழுவளவு வசதிகள் வழங்கப்பட்டன. முன்னுரிமை அடிப்படையில் சேவை வழங்கப்படாத பின்தங்கிய பிரதேசங்களின் தழுவளவினை மேம்படுத்தும் முகமாக பெலிஅத்த, வலஸ்முல்ல, தெய்யந்தர, தெனியாய, பம்பரவான, பொரவகம, வல்லம்பகல மற்றும் எல்பிடிய ஆகிய பிரதேசங்களுக்கான தொழில்நுட்ப கள பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன.

"பாதுகாப்பான தொடர்பாடல்" திட்டம்: கண்டி, மொனராகல, பதுளை, புத்தளம், கொழும்பு, கம்பஹா, அநுராதபுரம், கேகாலை, நுவரெலியா மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் தொலைத்தொடர்பு/தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கழிவுகளை முறையாக அகற்றல் மற்றும் மீள் பாவனை தொடர்பான விழிப்புனர்வு நிகழ்வுகள் நடாத்தப்பட்டன. நாடளாவிய ரீதியிலான ஆலலை தழுவளவினை இலக்காகக் கொண்ட "கிராமத்திற்கான தொடர்பாடல்" திட்டத்தின் முன்னேற்றத்திற்கு சமாந்தரமாக சூழல் பாதுகாப்பினை உறுதி செய்து தொலைத்தொடர்பு/இலத்திரனியல் உபகரணங்களின் நீண்ட காலப் பாவனை மற்றும் அகற்றலை உறுதி செய்யும் வகையில் திட்டத்தினை அடுத்த வருடம் விரிவு படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

ICT உள்நாட்டு தொண்டர் நிகழ்ச்சித் திட்டம்: தேசிய பயிலுனர் மற்றும் தொழிற் பயிற்சி அதிகார சபை அல்லது தொழிற் பயிற்சி அதிகார சபையின் பரிந்துரையின் கீழ் NVQ தரம் 4 அல்லது தகவல் தேசிய சான்றிதழ் தொடர்பாடல் தொழில்நுட்ப தொழில்நுட்பவியலாளர் பாடநெறியில் உயர் நிலையைப் பெற்ற மாணவர்கள் TRCSL ICT தொண்டர் நிகழ்ச்சித் திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டனர். இந் நிகழ்ச்சித் திட்டமானது கல்வி அமைச்சின் அனுசரனையுடன் அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டப் பாடசாலைகளில் செயற்படுத்தப்பட்டது.

தொலைத் தொடர்புக் கோபுர தொழில்நுட்பவியலாளர் வேலைத் திட்டம்: தொலைத் தொடர்புக் கோபுர தொழில்நுட்பவியலாளர் வேலைத் திட்டமானது மூன்றாம் நிலை தொழிற்பயிற்சி ஆணைக்குழு TVEC), இலங்கை தொழிற்பயிற்சி ஆணைக்குழு மற்றும் தொலைத் தொடர்பு சேவை வழங்குனர்களுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டது. தேசிய பண்புத் தரம் (NCS) மற்றும் பாடவிதானம் ஆகியவற்றை அமைப்பதுடன் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இத் திட்டம் எமது நாட்டில் தொலைத் தொடர்புக் கோபுர தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் துணை தொழிலாளர்களாக அதிக எண்ணிக்கையான வெளிநாட்டு பணியாளர்கள் பணிபுரிவதை அவதானித்த பின்னரே ஆரம்பிக்கப்பட்டது. பல வருடங்களுக்கு முன்னர் தொலைத் தொடர்புக் கோபுர தொழில்நுட்பவியலாளர் மற்றும் துணை சேவைகளானது ஒரு முன்னேறி வரும் தொழிலாகக் காணப்பட்ட போதும், அதிகளவிலான வெளிநாட்டு மனித வள மற்றும் நிறுவனங்களின் தலையீட்டினால் உள்நாட்டு தொழிலாளர்களுக்கு இத் துறையில் ஈடுபடும் சந்தர்ப்பம் மறுக்கப்பட்டதன் காரணமாக இத் தொழிலில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மேற்குறித்த முன்னெடுப்பின் காரணமாக இத் தொழிலை மீளக் கட்டியெழுப்பி தகுதி உடைய உள்நாட்டவர்களுக்கான தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதனை உறுதி செய்வதற்கும் எதிர்காலத்தில் வெளிநாட்டு செலாவனியை நாட்டிற்கு ஈட்டித் தரும் வகையில் சர்வதேச ரீதியாக தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய அனுபவம் வாய்ந்த தொழிலாளர் படையொன்றினை உருவாக்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பு தாமரை கோபுரத் திட்டம்: தாமரை கோபுரத் திட்டத்தின் இவ்வருடத்திற்கான இலக்காக காணப்பட்டது திட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதனை உறுதி செய்யும் வகையில் அடிப்படை குறை நிவாரணங்களை சீர் செய்யப்படுவதும் துரிதப்படுத்தப்படுவதுமாகும். PCU, திட்டத்திற்கான திட்ட முகாமையாளர் மற்றும் ஒப்பந்தக்காரர் ஆகியோரினால் வழங்கப்பட்ட கால வரையறைகள் தொடர்ந்தும் தாமதம் அடைந்ததனால் நிர்மாணத்திற்கு முன்னரான தேவைகள் பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக வர்த்தக ரீதியிலான செயற்பாடுகள் நேரடியாகப் பாதிக்கப்பட்டு TRCSL இற்கான வருமானம் ஈட்டும் நிலை உருவாகியிருந்தது. உத்தியோகபூர்வ கையளித்தல் முடிவடைந்ததன் பின்னர் விரைவாக தொழிற்பாடுகள் ஆரம்பமாவதை உறுதி செய்வதற்கும் கையேற்றல் செயன்முறையினை இலகுபடுத்துவதற்கும் சமாந்தரமாக வர்த்தக ரீதியிலான திட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதனை உறுதி செய்யும் வகையிலான ஒரு அர்ப்பணிப்புடனான வர்த்தக தொழிற்பாட்டுக் குழு நியமிக்கப்பட்டது. மேலும், தீர்த்து வைப்பதற்கான தேவையுள்ள குறைபாடுகளை கண்டறிவதற்கான முன்னெடுப்பினை மேற்கொள்வதற்கும், தேவையான அனைத்து அடிப்படை கட்டமைப்புகளும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளமையினை உறுதி செய்வதற்கான பூரணமான ஒரு பயிற்சி செயன்முறையினை மேற்கொள்வதற்கான முன்னெடுப்புகள் போன்றவற்றிற்கான நேரடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

வர்த்தக தொழிற்பாட்டுக்காக அமைக்கப்படவுள்ள முன்மொழியப்பட்ட தாமரை கோபுர நிறுவனத்தின் கீழான வர்த்தக தொழிற்பாடுகளின் நன்கு திட்டமிடப்பட்ட நிறைவேற்றலினை உறுதி செய்வதற்காக முழு விபரங்களுடனான வர்த்தகமயமாக்கல் மூலோபாயம் மற்றும் திட்டம் ஆகியன உள்ளடங்கிய நிதித் திட்டமிடல் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை உறுதி செய்வதற்காக பல்வேறுபட்ட துறைசார் பின்னனிகளையும் திறன்களையும் கொண்ட வர்த்தக நிறைவேற்றல் குழுவுடன் இணைந்து செயற்படுவதற்கான வல்லுனர்களைக் கொண்ட ஒரு தொண்டர் குழுவினை அமைப்பதில் TRCSL இவ்வருடம் வெற்றி கண்டுள்ளது. மேலும், அமைக்கப்பட்ட நிறைவேற்றல் குழுவின் ஊடாக ஆளணி எண்ணிக்கைத் திட்டம் அடங்கிய புதிய கம்பனிக்கான கட்டமைப்புத் திட்டம் தொடர்பான அனைத்து தேவையான ஆரம்பகட்ட செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தாமரை கோபுரத்தின் வர்த்தக நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக சட்டத்தரனியின் கம்பனியொன்றின் நிறுவுதல் தொடர்பான அறிவுறுத்தலின் அடிப்படையில் சட்டம் தொடர்பான விடயங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன், வுசுஊளுடு மற்றும் முன்மொழியப்பட்ட வர்த்தக தொழிற்பாட்டு முகாமைத்துவ நிறுவனம் ஆகியவற்றுக்கிடையில் கூட்டுறவு மற்றும் முகாமைத்துவ தொடர்பான பத்திரங்கள் கைச்சாத்திடப்படுவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், தாமரை கோபுரம் அமைந்துள்ள பிரதான காணி மற்றும் அதனை அண்டிய காணிகள் இதுவரையில் வுசுஊளுடு இற்கு சட்டரீதியாக உரிமை மாற்றம் செய்யப்படவோ அல்லது கையளிக்கப்படவோ இல்லை என்ற காணி தொடர்பாக நிலவும் பிரச்சினைகள் குறித்து நடவடிக்கை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், ஒப்பந்தத் தேவைகளுக்கான வர்த்தகமயமாக்களுக்கான முன்னெடுப்புகளுக்கான

அடிப்படை தேவையான காணிகளின் முடிவாக்கத்தில் ஏனைய அரச நிறுவனங்களுடனான விரிவான தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டன.

TRCSL புதிய தலைமையகக் கட்டடத் திட்டம்: தலைமையகத் திட்டக் கட்டடத்தின் நிர்மாண வேலைகளை நிறைவு செய்வதற்கான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், வேலைகளின் மீளாய்வுக்காக ஒரு பொறியியலாளர் நியமிக்கப்பட்டுள்ளார். தேவையான தோற்றம் மற்றும் கலையுணர்வுகள் பேணப்படும் வகையிலும், சிரேஷ்ட பணிக்குழு உறுப்பினர்களின் பங்களிப்புடன் தீர்மாணங்கள் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்யும் வகையிலும் பொருத்தமான நிலக்கல் தெரிவு, குளியலறை பொருத்திகள், மின் தூக்கி வடிவமைப்பு, வர்ணம் மற்றும் மின்சாரப் பொருத்திகைகள் தொடர்பிலான உள்ளக வடிவமைப்பினை மேற்பார்வை செய்வதற்காக சிரேஷ்ட பணிக்குழு உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது. வலையமைப்புத் திட்டம் மற்றும் PABX முறைமை உள்ளிட்ட கட்டடத்திற்கான IT தீர்வுகளுக்கான மீளாய்வு நடவடிக்கைகள், TRCSL இன் IT பிரிவுடன் இணைந்து நிறைவேற்றப்பட்டன. காப்புறுதிகள் மற்றும் உத்தரவாதங்களின் முறையான பராமரிப்பு தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டன. மேலதிக மலசலகூட தொகுதி மற்றும் கட்டடத்தின் கூடாரத்திற்கான மீள் வடிவமைப்பு. மாதாந்தக் கண்காணிப்புக் கூட்டங்களின் போது வேலைகளின் முன்னேற்றம், வடிவமைப்புக் குறைபாடுகள், கொடுப்பனவுகள் ஆகியன மீளாய்வு செய்யப்பட்டதுடன், நிறைவு செய்வதற்குத் தேவையான பரிந்துரைகளும் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

கதிரான புனர்வாழ்வு, புனர் நிர்மாண மற்றும் புனர் வடிவமைப்பு திட்டம்: ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதிருந்த பொறியியலாளரினால் பாதீடு செய்யப்பட்ட வேறுபாடுகளுக்கான ஒப்பந்தத் திட்டத்தினை ஆராய்வதற்கும் பரிந்துரை செய்வதற்குமான ஒரு குழு நியமனம் செய்யப்பட்டது. PCU இன் வேறுபாடுகளை ஆராய்வதற்கான குழுவிற்கான கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் களப் பயணங்களும் மேற்கொள்ளப்பட்டன. குழுவினால் குறித்துக் காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பான தெளிவினைப் பெற்றுக்கொள்வதற்காக ஒப்பந்தக்காரர் தொடர்பு கொள்ளப்பட்டதுடன், இதன் போது உறுதி செய்யப்படாத மற்றும் மதிப்பீடு செய்யப்படாத செலவுகளின் அடிப்படையில் செலவுகளிலிருந்து சுமார் ரூபா. 29 மில்லியன் குறைக்கப்படல் வேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தக்காரர் மற்றும் திட்ட பொற்யியலாளருக்கான கொடுப்பனவுகள் மற்றும் காப்புறுதிகள் மற்றும் உத்தரவாதங்களின் முறையான பராமரிப்பு போன்ற தரச் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டன. மேலும், நிறைவேற்றப்பட்ட திருத்த வேலைகளை அடிப்படையாக வைத்து நிலத்தைப் பயன்படுத்துவது தொடர்பான மூலோபாயத் திட்டம் காணப்படாமையினால் கதிரான திட்ட வளாகமானது எவ்வாறு வினைத்திறனான அடிப்படையில் பயன்படுத்தப்படலாம் என்பதை மதிப்பிடுவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

IT பூங்கா அம்பாந்தோட்டை: இத் திட்டமானது தற்பொழுது பேச்சுவார்த்தை மட்டத்தில் காணப்படுவதுடன், இப் பேச்சுவார்த்தைச் செயற்பாடு தொடர்பில் பிரதேச செயலக திணைக்களம் மற்றும் SLLRDC ஆகியவற்றின் ஆலோசனைகள் தொடர்ச்சியாக பெறப்படுகின்றன. முற்கொடுப்பனவு உத்தரவாதத்தின் கீழ் தேவையான பராமரிப்புகள் தொடர்பான தொடர்ச்சியான கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. மத்தியஸ்த நடவடிக்கைகளுக்காக SLLRDC இனால் மேலதிக கொடுப்பனவு கோரப்பட்டதன் காரணமாக தற்பொழுது கலந்துரையாடல் செயன்முறை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

நிருவாக விவகாரங்கள்: 2020 டிசம்பர் 31ஆந் திகதியன்று இருந்த மொத்தப் பணிக்குழுவின் எண்ணிக்கை 228ஆகக் காணப்பட்டது. மொத்தப் பணிக்குழுவினரில் 04 பேர் சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகளிலும், 29 பேர் நடுத்தர முகாமைத்துவப் பதவிகளிலும், 151 பேர் இணைப்புப் பதவிகளிலும், 44 பேர் சிற்றூழியர் பதவிகளிலும் இருந்தனர். TRCSL இற்கான அங்கீகரிக்கப்பட்ட பணிக்குவினரின் எண்ணிக்கை 290 ஆகக் காணப்பட்டது.

இத் துறையில் நிலவும் கேள்வியை நிறைவு செய்யும் வகையிலும், வழமையான முயற்சிகளானது புதிய எல்லைகளையும் தொழில்நுட்பத்தினையும் தொட்டுள்ள நிலையிலும் அடிப்படை திறன்களையுடைய மனித வளத்தினைக் கொண்டு நிறுவனத்தை வலுப்படுத்தி நிறுவனத்தை மீள் கட்டமைத்தல் இவ்வவுடத்தின் ஒரு மிக முக்கிய தேவையாக இனங்காணப்பட்டுள்ளது. TRCSL இன் எதிர்பார்ப்புகள் மற்றும் தேவைகளை கருத்தில் கொண்டு TRCSL இனது தற்கால தேவைகளை அடிப்படையாக வைத்து நிறுவன ஊழியர் படை மற்றும் பணியில் அமர்த்தும் திட்டம் ஆகியவற்றை அமுல் படுத்தி அபிவிருத்தி செய்வதற்கான முக்கிய நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் மீளாய்வு செய்து தேவையான பரிந்துரைகளை வழங்குவதற்கான ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளதுடன், ஊழியரகளைப் பணியில் அமர்த்தலுக்கான ஒரு புதிய திட்டத்தினை உருவாக்குவதில் SLIDA ஆலோசனை சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்ட அதேவேளை, தற்கால முறன்பாடுகளும் குறைபாடுகளும் முறையாக கருத்தில் கொள்ளப்படுகின்றன என்பதையும் செயற்பாடுகள் தற்பொழுது அமுலில் உள்ளன என்பதை உறுதி செய்யும் வகையிலும் கடமை தரக்கணிப்பீட்டுத் திட்டமொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், நிறைவேற்றுப் பதவிகளுக்காக நிலவும் வெற்றிடங்கள் தற்பொழுது அமுலில் உள்ள அனுமதிக்கப்பட்ட பணியில் அமர்த்தும் திட்டத்திற்கும் காணப்படும் தேவைகளுக்கும் ஏற்ப நிறைவு செய்யப்படல் வேண்டும். கடமை அடிப்படையிலான உள்ளக கணக்காய்வாளர் (தொழில்நுட்ப) பதவிக்கான விண்ணப்பங்கள் பத்திரிகை விளம்பரம் ஊடாக கோரப்பட்டது. உதவிப் பணிப்பாளர் (மனித வளங்கள் மற்றும் அபிவிருத்தி) பதவிக்காக தகுதி வாய்ந்த ஒரு அதிகாரி இரண்டாந்தர அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், மற்றுமொரு உதவிப் பணிப்பாளர் (நிதி) இவ்வருடம் கடமையில் இணைந்தார்.

மேலும், வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தின் நோக்கங்கள் அடையப்பெறுவதையும் அனைத்துத் துறைகளினதும் தலைமைத்துவங்களின் பங்களிப்புடன் காலாண்டுக்குரிய முன்னேற்றம் நடைபெறுவதனையும் உறுதி செய்யும் வகையில் TRCSL அடிப்படை காலாண்டு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தியது.

வருடத்தினுள் தேவையான நிறுவன ரீதியான செயற்பாட்டுத் திட்டம், இடைக்கால கூட்டுறவுத் திட்டம், முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் 2019ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை ஆகியன தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

அரசாங்கத்தின் வழிகாட்டல்களுக்கமைவாக, இலகுவான பயன்பாட்டிற்காகவும், சம்பந்தப்பட்ட பிரிவுகளினால் தேவையான அமுலாக்கல்களை மேற்கொள்வதற்காகவும் நிதி அமைச்சு, சனாதிபதி செயலகம், பொது நிர்வாகம் மற்றும் ஏனைய நிறுவனங்களால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகளை தரவேற்றம் செய்வதற்காக ஒத்துழைப்பு அடிப்படையிலான ஒரு நிகழ்நிலை அலைவரிசையினை TRCSL ஆரம்பித்துள்ளது.நிறுவனத்தின் நன்மை கருதி, பணிக்குழுவினரின் அறிவு, திறன், மனப்பாங்கு மற்றும் வினைத்திறன் ஆகியவற்றை விருத்தி செய்யும் வகையில் TRCSL 27 உள்நாட்டு, வெளிநாட்டு, நிகழ்நிலை பயிற்சி, மாநாடுகள் மற்றும் செயலமர்வு நிகழ்ச்சிகளை நடாத்தியது. இதற்கு மேலதிகமாக, கோவிட் பிரயாணத் தடை காரணமாக நிகழ்நிலைக்கு மாற்றப்பட்ட தொலைத்தொடர்பு தொழிற்பாட்டு விவகாரங்கள் தொடர்பிலான பல்வேறு உயர் மட்ட சர்வதேச நிகழ்நிலை கூட்டங்கள், மாநாடுகள், கற்றல் குழுக் கூட்டங்கள் மற்றும் அமர்வுகளில் TRCSL இன் சிரேஷ்ட பணிக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்தப் பெறுவனவுத் திட்டத்தினை ஆணைக்குழு அங்கீகரித்தது. இக்காலப்பகுதியினுள் கனிஷ்ட பெறுவனவுகள் குழுவின் 07 கூட்டங்களும், சிரேஷ்ட பெறுவனவுகள் குழுவின் 04 கூட்டங்களும் நடைபெற்றன. கனிஷ்ட பெறுவனவுகள் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பெறுவனவுகளின் உத்தேசிக்கப்பட்ட பெறுமதி சுமார் ரூபா. 5,058,869.42 ஆகவிருந்ததுடன், சிரேஷ்ட பெறுவனவுகள் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பெறுவனவுகளின் உத்தேசிக்கப்பட்ட பெறுமதி சுமார் ரூபா. 61,682,235.08 ஆகக் காணப்பட்டது.

வாடிக்கையாளர் தொடர்பு மற்றும் சேவை வசதி ஏற்பாட்டு முன் அலுவலக முகாமைத்துவத் திட்டம் / விரிவான சேவைக்கான வாடிக்கையாளர் உதவிப் பிரிவு / வலையமைப்பு மற்றும் பாவனையாளர் முறைப்பாட்டுப் பிரிவு ஆகியவற்றை அமைப்பதற்கான வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. ஊடகப் பிரிவு செயற்பாடுகளாவன TRCSL நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான விற்பனை மேம்படுத்தல் சாதனங்கள் மற்றும் விவரணக் காணொலிகள் ஆகியவற்றை தயாரித்தல் மற்றும் அதற்கான உதவிகளை வழங்குதல், இலத்திரனியல் ஊடகங்கள், சமூக வலைத்தளங்கள் மற்றும் TRCSL வலையமைப்பின் ஊடாக பொதுமக்கள் விழிப்புனர்வு நிகழ்ச்சிகளை நடாத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தன. வுசுஊளுடு நூல் நிலையமானது TRCSL பணிக்குழுவினர் மற்றும் வெளி நபர்களின் அறிவினை மேம்படுத்துவதற்கு தேவையான வாசிப்பு மற்றும் ஆவண ரீதியிலான உதவிகளை வழங்கியதுடன், இத் துறையின் தற்போதைய தகவல்கள் தொடர்பான இற்றைப்படுத்தல்களையும் வழங்கியது.

மேலும், பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு கண்காணிப்புச் சுற்றின் அடிப்படையில், பணிக்குழுவினருக்கான சிறந்த பணியாற்றல் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதை உறுதி செய்யும் வகையில், கட்டடங்களில் இனங்காணப்பட்ட திருத்தங்கள் மற்றும் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கொவிட் இற்கான ஏற்பாடுகள் தொடர்பில், நிர்வாக செயற்பாடுகளாவன பணிக்குழுவினருக்கான தனிப்பட்ட சுகாதார பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான பாதுகாப்பு அங்கிகள் மற்றும் தேவையான சுகாதார கண்காணிப்பு உபகரணங்களை வழங்குதல் ஆகியவற்றை உறுதி செய்தது. பணிக்குழுவினரின் உச்சமட்ட பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில், கொவிட் காலப்பகுதியில் பணிக்குழுவினரை கடமையில் ஈடுபடுத்தல் மற்றும் கண்காணித்தல் உள்ளிட்ட சுகாதார பரிசோதனைகளுக்குத் தேவையான வசதிகளும் வழங்கப்பட்டன.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிடல் உருமாற்றல் முன்னெடுப்பு: நிறுவனக் கட்டமைப்பினுள் தகவல் தொழில்நுட்பப் பிரிவொன்று காணப்படாத சந்தர்ப்பத்தில், TRCSL இனது டிஜிடல் உருமாற்ற செயற்பாட்டின் போது தகவல் தொழில்நுட்பமானது மிக முக்கிய பங்கை வகிக்கும் என எதிர்பார்க்கப்படுவதனால், அமைப்புக்கான அடிப்படை தொழில்நுட்ப வசதிகள் மற்றும் உந்துதல் கிடைக்கப்பெறுவதை உறுதி செய்வதற்காக தற்பொழுதுள்ள தகவல் தொழில்நுட்ப பிரிவிற்கான ஊக்குவிப்பினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப பிரிவின் ஆரம்ப செயற்பாடுகளில் ஒன்றாக அமைப்பின் தகவல் தொழில்நுட்ப சொத்துக்களை டிஜிடல் மயப்படுத்துவதாக இருந்ததுடன், இத் திட்டமானது அனைத்து தகவல் தொழில்நுட்ப சொத்துக்களும் வினைத்திறனாக முகாமை செய்யப்பட்டு சொத்து பாவனைக் காலச் சுழற்சி மற்றும் பயன்பாடு ஆகியவற்றுக்கான பரிகாரத்தை வழங்கும் வகையில் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

மேலும், பணிக்குழுவினரை நிகழ்நிலைக் கடமை புரிதலில் ஈடுபடுத்துவதற்கு தேவையான அனுமதி இற்றைப்படுத்தல்களை உறுதி செய்வதன் மூலம் மைக்ரோசொப்ட் குழு அடித்தளத்தின் ஊடாக அமுல்படுத்தப்பட்ட ஒரு வியாபார உள்ளடக்க முகாமைத்துவம் மற்றும் ஒத்துழைப்பினை மேலும் அதிகரிக்கவும் TRCSL இல் மின் அஞ்சல் வசதிகளை விஸ்தரிப்பது வருட ஆரம்பத்தின் ஒரு மிக முக்கிய முன்னெடுப்பாகக் காணப்பட்டது. இம் முன்னெடுப்புடன், ஒரே அடித்தளத்தில் ஒன்றிணைக்கப்பட்ட கோவை முகாமைத்துவம் மற்றும் பணிக்குழு தொடர்புகள் ஆகியவற்றுக்கான ஒரு விசேட தளம் அனைத்து பிரிவுகளுக்கும் கிடைப்பது உறுதி

செய்யப்பட்டது.இம் முன்னெடுப்பானது, 2020 மார்ச் மாதம் 20ஆம் திகதி அரசாங்கத்தினால் கொவிட் தனிமைப்படுத்தல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட காலப்பகுதியில் தனது சேவைகள் அனைத்தையும் நிகழ்நிலையில் ஆரம்பித்த முதல் அரசாங்க நிறுவனம் எனும் பெயரை TRCSL இற்குப் பெற்றுத் தந்தது.

இதன் மூலம் தேவையான பணிக்குழுவினர் வீடுகளிலிருந்து வேலை செய்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டதுடன் பணிக்குழு அங்கத்தவர்களுக்கிடையிலான தொடர்புகள் அனைத்தும் நிகழ்நிலையில் மேற்கொள்ளப்பட்டன.

TRCSL இற்கான ஒரு புதிய தகவல் தொழில்நுட்ப பராமரிப்பு சட்டகம் அறிமுகப்படுத்தப்படுவதற்காகவே டிஜிடல் அடித்தளத்தின் பயன்பாடு அவசியமாகியதுடன், ஒழுங்குபடுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப சொத்துக்களின் பராமரிப்பு மற்றும் BYOD அருகலை கொள்கைகளை அதிகரித்தல் தொடர்பிலான இவ்வாறான இரண்டு ஆரம்ப பராமரிப்புப் பத்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. கணினி உட்கட்டமைப்பின் மேலதிகப் பயன்பாடு என்பது, டிஜிடல் சேவைத் தகவல்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப கருவிகள் கொள்வனவு மீதான இணையத்தளங்கள் மற்றும் சமூக வளைத்தளங்கள் தொடர்பிலான தொடர்ச்சியான இற்றைப்படுத்தல் மேற்கொள்ளப்படுவதுடன், பிரச்சினை தீர்த்தலுக்கான பணிக்குழுவின் ஒத்துழைப்பு, அலையகலப் பயன்பாடு மற்றும் அருகலை உட்கட்டமைப்பு ஆகியவற்றின் மீதான சீரான செயற்பாடுகளுக்கான வலையமைப்பு மேம்படுத்தலைக் குறிக்கின்றது.

TRCSL இன் தேவையான தொழில்நுட்ப இயலுமை விருத்தியின் கீழ், 0365, MS குழுக்கள், திட்டமிடுனர், MS கொள்வனவுக் கட்டளை மற்றும் MS பகிர்வுப்புள்ளி ஆகிய பயன்படுத்தப்பட்ட அடித்தளங்களின் மீதான டிஜிடல் அடித்தளம் மற்றும் பணி உருமாற்றம் தொடர்பிலான ஒரு பயிற்சித் தொடர் நடைபெற்றது.

மேலும், ஒரு விசேட திட்டமாக, IT துறையிலிருந்து பெற்ற தொழில்நுட்ப ஆரம்பத்திலிருந்து கிடைத்த தொண்டர் உதவியுடன் இணைந்த வகையில் நாட்டினுள் சட்டத்திற்கு முறனான வகையில் மேற்கொள்ளப்படும் தொலைபேசி இறக்குமதியினை கண்டுபிடிப்பதற்கான ஐஆநுஐ முகாமைத்துவ முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது SLT தரவு மையத்தின் TRCSL இனது முதல் வானலை விரிவாக்கி செயற்படுத்தலாக இவ்வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சொத்து முகாமைத்துவ முறையானது, மற்றுமொரு செயலியாகக் காணப்பட்டதுடன், பிரிவு சார்ந்த துணை தன்னியக்க செயற்பாடானது அன்றாட விடயங்களை தெரிவு செய்வதனை முகாமை செய்வதற்கான பல்வேறு பிரிவுகளுக்கான MS பகிர்வுப்புள்ளி செயலாக்கியின் உதவியைப் பெற்றிருந்தது. உள்ளார்ந்த பணிக்குழுவினருக்கான செய்திகள் மற்றும் வெளிவாரி பங்காளிகளுக்கான குறுஞ்செய்தியை மையப்படுத்திய சமிக்ஞைகளையும் தற்பொழுது தரக்கூடிய, துறை முகாமைத்துவப் பிரிவிற்கான குறுஞ்செய்தியை அடிப்படையாகக் கொண்ட செயலி செயற்படுத்தல் முறை மற்றும் உள்ளார்ந்த பணிக்குழுவினருடன் தொடர்பு கொள்ளக்கூடிய குறுஞ்செய்தி செயலி ஆகியன அறிமுகப்படுத்தப்பட்டன.

தற்பொழுது, காலத்தின் தேவையாகிய அதிகரித்து வரும் வாடிக்கையாளர்களது முறைப்பாடுகளை முகாமை செய்யும் வகையில் திட்டமிடப்பட்ட தொடர்பு மைய வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், சிறந்த வாடிக்கையாளர் மற்றும் பாவனையாளர் நலனை உறுதி செய்யும் வகையில், PABX தரமுயர்த்தலுடன் கூடிய ஒன்றிணைந்த வாடிக்கையாளர் உறவு முகாமை முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், TRCSL இற்கான டிஜிடல் கையெழுத்து வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், வுசுஊளுடு இன் உள்ளும் மற்றும் வெளி பங்காளர்களுடனும் ஆவணங்கள் தொடர்பான நம்பகமான தொடர்பாடல் நடைபெறுவதையும் எதிர்காலத்தில் பத்திரிகைத் தாள்களற்ற ஒரு சூழல் அமைவதை உறுதி செய்யும் வகையில் தேவையான பெறுவனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிதி: 2021 இற்கான வருடாந்த வரவு செலவு தொடர்பான அறிக்கைகள், 2021 நிதி அதிகாரக் குழுவின் அறிக்கை, 2019 இற்கான வருடாந்த நிதிக் கூற்றுக்கள் ஆகியன நிறைவு செய்யப்பட்டுள்ளன. 2020 இற்கான வருடாந்த நிதி அறிக்கை தயாரிக்கப்படுகின்றது. 01.04.2019 முதல் அமுலாகும் வகையில், எந்தவொரு பொது கூட்டுத்தாபனத்தின் மூலமும் திரண்ட நிதியத்திற்காக செலுத்தப்படும் அனைத்துக் கொடுப்பனவுகளும் தகுதிகாண் கொடுப்பனவுகளாகக் கருதப்பட முடியுமெனவும், அவ்வாறான கூட்டுத்தாபனங்களின் வருமான வரி கணக்கெடுப்பின் போது அது கழிக்கப்பட முடியுமெனவும் அறிவிக்கப்பட்டதன் காரணமாக, 2020/21 மதிப்பீட்டு ஆண்டிற்கான சுய மதிப்பீட்டு அடிப்படையிலான காலாண்டு வருமான வரி பூச்சியமாகக் காணப்பட்டது. இதற்கமைவாக, TRCSL இனது திரண்ட நிதியத்திற்கான பங்களிப்பானது அதன் வருமான வரிப் பொறுப்புக்களை விடவும் அதிகமாகக் காணப்பட்டதனால், 2019/2020 மதிப்பீட்டு ஆண்டின் போது 3 சுய மதிப்பீட்டு அடிப்படையிலான கொடுப்பனவுகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதே அடிப்படையில், 2020/2021 மதிப்பீட்டு ஆண்டின் போதும் TRCSL எந்தவொரு சுய மதிப்பீட்டு அடிப்படையிலான கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளவில்லை.

நிதிச் சட்டம் மற்றும் தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தின் கீழ் அனைத்து அறவீடுகளும் (தொலைத் தொடர்புகள் அறவீடு, தொலைத் தொடர்பு அபிவிருத்தி அறவீடுகள், குறுஞ்செய்தி அறவீடுகள், கோபுர அறவீடுகள்) குறித்த காலத்தில், முறையாக அறவிடப்பட்டு திரண்ட நிதிக்கு சேர்க்கப்பட்டது. உள்நாட்டு வருமான வரிச் சட்டத்தின் கீழான அனைத்து வரிகளும் (VAT, PAYE/APIT, முத்திரை வரி) மற்றும் ஊழியர் நலனுக்கான பங்களிப்புகளும் (EPF மற்றும் ETF) செலுத்தப்பட்டன.

சேவை பெறுநர்களின் நலன் கருதி, அட்டை கொடுப்பனவு வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், தற்பொழுது பொது மக்கள் நிறுவப்பட்டுள்ள POS முறைமையினூடாக அட்டைக் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும். வினைத்திறனான அனுமதிப்பத்திர புதுப்பித்தல் செயன்முறையினை மேற்கொள்ள உதவும் நேரடி நிதி மாற்றல் மற்றும் நேரடி வைப்புகள் ஊடாக கொடுப்பனவுகளை அங்கீகரித்தல் மற்றும் உச்ச மட்ட வாடிக்கையாளர் திருப்தி ஆகியனவும் இவ்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. துறைப் பிரிவானது நிதிப் பிரிவுடனான தகவல் பரிமாற்றத்தினை மேற்கொண்டதிலிருந்து, வரிக்குப் பின்னரான உறுதிப்படுத்தலின் பின்னர் குறித்த தரப்பினருக்கான சுயவிவர விலைப்பட்டியல்களை குறித்த நேரத்தில் அனுப்புவதனை நெறிப்படுத்தும் விடயம் பூரணப்படுத்தப்பட்டது. (கொவிட் 19 காலப்பகுதியினுள், வாடிக்கையாளர்கள் தாமதமின்றி முறையாக ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதனை உறுதி செய்யும் வகையில், அனைத்து சுயவிவர விலைப்பட்டியல்களும் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டன.

TRCSL இன் 2019 இற்கான தொகை மதிப்பீடு பூரணப்படுத்தப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது.

உள்ளகக் கணக்காய்வு: வருடத்திற்கான நான்கு கணக்காய்வு குழுக் கூட்டங்கள் நடைபெற்றதுடன், இதர வருமானங்கள், வங்கி இணக்கங்களை உறுதிப்படுத்தல், தேசிய கணக்காய்வு அலுவலகம் மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் ஆகியவற்றின் கணக்காய்வு தொடர்பான விசாரணைகள் மற்றும் பதில்கள் மீதான கணக்காய்வு விடயங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

TRCSL இன் பெறுவனவுகள், TRCSL இன் கொடுப்பனவுகள், TRC சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் விற்பனையாளர் அனுமதிப்பத்திரங்களை வினியோகித்தல், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல், ஊழியர்களுக்கான கடன் மற்றும் முற்கொடுப்பனவுகளை வழங்குதல், TRCSL இன் முதலீடுகள், TRCSL இல் காணப்படும் தீயணைப்பு பாதுகாப்பு உத்திகள், 2018 இற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு மதிப்பீடு மற்றும் உள்ளக கட்டுப்பாடுகள் போன்றவை தொடர்பான உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

2020 க்கான ஆணைக்குழு இன் மூலோபாய முன்முயற்சிகள் ஒரு தொற்றுநோயால் தூண்டப்பட்ட சூழலுக்கு ஏற்ப

- வீடுகளிலிருந்து பணி புரியும் அமைப்பு / காரியாலய சூழலிலிருந்து பணி புரிதல்.
- உத்தியோகத்தர்களின் போக்குவரத்திற்காக ஊரடங்கு அனுமதிச் சீட்டு, தொடரூந்து மற்றும் பேரூந்து அனுமதிச் சீட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டமை.
- அலுவலக வளாகத்தில் உத்தியோகத்தர்களுக்கான சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளை ஏற்பாடு செய்தமை.
- நிகழ்நிலை ஆய்வுகளின் ஊடாக உத்தியோகத்தர்களின் சுகாதாரம் தொடர்பான தகவல்களைத் திரட்டியமை
- பொதுப் போக்குவரத்தை பயன்படுத்திய பதவியணியினருக்கு அலுவலக உத்தியோகத்தர் போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செயற்படுத்தியமை
- காரியாலய PABX முறையினை மேம்படுத்தியமை மற்றும் வாடிக்கையாளர்களுக்கான அழைப்பு மாற்றல் வசதிகள்
- வேலை செய்யும் அமைப்பு தொடர்பான அரசாங்க சுற்றறிக்கைகள் மற்றும் விதிமுறைகளை அமுல்படுத்தியமை
- அவ்வப்போது மாறக்கூடிய தேவைகளின் அடிப்படையில் சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பு சேவை நடவடிக்கைகளை செயற்படுத்தியமை
- அலுவலக பணிகளின் தொடர்ச்சியான செயற்பாட்டிற்காக கடமை நேர ஒழுங்குகளை ஏற்படுத்தி உறுதிப்படுத்துதல்.
- நிறுவனத் தலைவர், அமைச்சு, சர்வதேச நிறுவனங்கள், வெளிநாட்டு தொடர்பு முகவர்கள் மற்றும் ஏனைய கூட்டங்கள் நிகழ்நிலை ஊடாக நடாத்தப்பட்டமை
- WFH காலப்பகுதியில் அத்தியாவசிய சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக உத்தியோகத்தர்களைத் தொடர்பு கொள்வதற்கான அலுவலக வலைத்தளம் உருவாக்கப்பட்டமை
- வலைத்தளத்தின் ஊடாகவும் சமூக மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின ஊடாகவும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டமை
- அலுவலகத்தில் வாடிக்கையாளர் நிகழ்நிலை கேள்வி பதில் மற்றும் சந்திப்புகளுக்கான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டமை
- உள்நாட்டு QR குறியீட்டின் பயன்பாடு மற்றும் மேற்பார்வை முறைமையை அலுவலகத்தில் ஏற்படுத்தியமை
- தேவையான உத்தியோகத்தர்களுக்காக PCR பரிசோதனைகளை மேற்கொண்டமை
- அலுவலக வளாகத்தை வழக்கமாக கிருமி நீக்கம் செய்தமை
- அலுவலக உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட பாதுகாப்பிற்காக இலவசமாக முகக் கவசங்கள் வழங்கியமை
- வாராந்த WFH அறிக்கைகளை தயாரித்து அமைச்சுக்கு சமர்ப்பித்தமை
- தொற்றுநோய் நிலைமையில் வீட்டிலிருந்து வேலை செய்தல் 'வீட்டிலிருந்து கற்றல் செயற்பாடுகளுக்காக புதிய பயன்பாட்டு போக்குகளுக்காக புதிய இறுப்பனவு பொதிகளை அறிமுகப்படுத்தியமை
- வீடுகளிலிருந்து பணி புரிவதற்கான அறிவினை விருத்தி செய்தல் மற்றும் கற்றல் அலைவரிசைகளை உருவாக்கி உத்தியோகத்தர்களுக்காக வழங்கியமை
- பிராந்திய ரீதியாக உத்தியோகத்தர்களுடன் அலுவலக வேலைகளை செயற்படுத்துவதற்கும் நிகழ்ச்சிகளை நடாத்துவதற்குமாக எம்எஸ் தீம்ஸ் குழுமங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- தொலைத்தொடர்புக் கோபுரங்களை அமைப்பதற்கான வழிகாட்டல்களை தயாரித்தல்
- நிகழ் நிலை ஊடாக பிராந்திய ரீதியான செயற்பாட்டுத் திட்டங்கள், முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் ஆகியன நடாத்தப்பட்டன
- உத்தியோகபூர்வ கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அவற்றுக்கான பதில்களை வழங்குவதற்காகவும் மின்னஞ்சல் முறை பயன்படுத்தப்பட்டது
- வீட்டிலிருந்து வேலை செய்யும் போது பதவியணியினரால் தொலைபேசியூடாக பொதுமக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன
- பொதுமக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் ஒழுங்குபடுத்துனர்களின் நடவடிக்கைகளை கவனிப்பதற்குமான சுகாதார விருத்திப் பணியகத்துக்கான 1999 சுருக்கக் குறியீடு வழங்கப்பட்டமை
- அவசரமாகத் தீர்க்கப்பட வேண்டிய ஒழுங்குபடுத்தல் மற்றும் பொதுவான வேலைச் சுழற்சிகளிலும் தொழிற்பாட்டு பிரச்சினைகளை தீர்த்தல்
- தேவையான ஒழுங்குகளுக்காக ஒழுங்குபடுத்தல் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ளல்
- தோலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துனர்களுக்கான உபகரண விடுகைகளை வழங்கல்
- COVID-19 தகவல் பரிமாற்றத்திற்கான சுருக்கக் குறியீட்டு இலக்கங்களை அமுல்படுத்துவதற்காக நிலையான மற்றும் கைப்பேசி ஒழுங்குபடுத்துனர்களுடன் இணைப்பை ஏற்படுத்தியமை தகவல்கள் (117, 119, 135, 1390, 1999)
- சமூக ஊடகங்கள் மற்றும் நிகழ்நிலை பிரச்சினைகள் தொடர்பான பொதுமக்களின் முறைப்பாடுகளைத் தீர்த்தமை.
- ஆய்வு முன்வைப்புக்களை நடாத்தியமை.

- COVID-19 தொடர்பான தகவல்கள் மற்றும் விழிப்புனர்வினை ஏற்படுத்தும் வகையில் அழைப்பு ஒலிகளை அறிமுகம் செய்வதற்காக நிலையான மற்றும் கைப்பேசி ஒழுங்குபடுத்துனர்களுடன் இணைப்பை ஏற்படுத்தியமை. 3 ஒலிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- COVID-19 தொற்றாளர்கள் உள்ள இடங்கள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக ICTA மற்றும் நிலையான மற்றும் கையடக்க தொலைபேசி ஒழுங்குபடுத்துனர்களுடன் கூட்டிணைப்பை ஏற்படுத்தியமை.
- அனைத்து பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கான அரச ர்-கற்றல் தளங்களை அணுக இலவச தரவை வழங்கத் தேவையான அங்கீகாரத்தை வழங்குதல்
- கோவிட் தொற்றுநோய்களின் போது நுகர்வோரிடமிருந்து மாறிவரும் கோரிக்கைகளை பூர்த்தி செய்ய விரைவான புதிய தொகுப்புகளை அறிமுகப்படுத்துவதில் கட்டணக் குழு முயற்சிகள் மேற்கொண்டமை.
- Evங்கிச் சேவை ஊடாக வரி மற்றும் கட்டணங்களைச் செலுத்திய ஒழுங்குபடுத்துனர்களின் பெறுவனவுகள் தொடர்பாக தொடர்புகளை ஏற்படுத்தி சரி பார்த்தமை.
- குறித்த பிராந்தியத்துடன் தொடர்பான வருமானங்களை அறவிடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டமை மற்றும் வருமான அறவிடல் முறையொன்றினை அறிமுகப்படுத்தியமை.
- COVID-19 தொடர்பான சமூக ஊடக தகவல்களை உத்தியோகபூர்வ ஊடகங்களில் பரவச் செய்தமை.
- வீட்டுச் சூழலிலிருந்து பணி புரியும் கலாச்சாரத்தினை அறிமுகப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.
- பிரதான ஊடகங்கள் மூலம் முக்கிய தகவல்களையும் அத்தியவசிய செய்திகளையும் வெளியிட்டமை.
- தேவையான தகவல்கள் தொடர்பில் சமூக ஊடகங்களின் மூலம் பொது மக்களுக்கான விழிப்புனர்வினை வழங்கியமை.
- கொழும்பு தாமரைக் கோபுரத்தின் தொழிற்பாடுகளின் முன்னேற்றத்தினைக் கண்காணித்தமை மற்றும் தேவையான பிரிவினருடன் தொடர்பினை ஏற்படுத்தியமையும்.
- வாடிக்கையாளருக்கு அட்டைகள் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ள அறிமுகப்படுதப்பட்டமை.
- "I-need" நிகழ்நிலை முறைமையினூடாக காணாமல் போன கைபேசிகளை தேடும் முறைமை மற்றும் இலங்கை பொலிசுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை செயற்படுத்தியமை.
- "Gamata Sannivedanaya" திட்டத்தின் கீழ் கிராமங்களில் உள்ள coverage இனை கண்டறிவதற்கான கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டமை.
- பிராந்திய முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நிகழ் நிலையில் நடாத்தியமை.
- கொவிட் பூட்டுதலின் போது உடன்படிக்கையுடன், வாடிக்கையாளர்களது இணைப்பைத் துண்டிக்காது நிதி தொடர்பான ஆபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கான பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு ஒழுங்குபடுத்துனருக்கு அனுமதி வழங்கியமை.
- விதிக்கப்பட்ட தடைகளை நீக்குவதன் மூலம் ஒழுங்குபடுத்துனர்களின் நிதி ஆபத்தினை குறைத்தல்.
- வாடிக்கையாளர்களுக்கான ஈ பட்டியல் மூலம் கட்டணம் செலுத்தும் முறை அறிமுகப்படுத்தப்பட்டமை
- நேரடி வைப்புக்கள் மற்றும் வங்கி நிதி மாற்றீடுகளை ஏற்றுக்கொண்டமை மற்றும் தேவையான அனைத்து தகவல்களையும் மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொண்டமை.

ஆணைக்குழு இன் செயலாற்றலும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளலும் - 2020

அபிவிருத்தி தொடர்பான சர்வதேச புரிந்துணர்வானது தற்பொழுது செழுமை, பொருளாதார வாய்ப்புகள், சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக நலன்களை மேம்படுத்தும் நிலைபேறான அபிவிருத்தியை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றது. அந்தவகையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) அடைந்துகொள்வதற்கான பிரதான ஊடகங்களாக தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICTs) ஆகியன காணப்படுகின்றன.

மனித முன்னேற்றத்தினை துரிதப்படுத்துவதிலும் டிஜிடல் பிரிவிற்கான பாலத்தை அமைப்பதிலும் சர்வதேச கூட்டிணைப்புடனான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பிரதிபலிப்பானது பெரும் தாக்கத்தை கொண்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளால் இனங்காணப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்புகள் மற்றும் ICT துறைகளில் SDG களின் அடைவுகளை வேகமாக்குகின்ற நோக்கில் 2020 ஆம் ஆண்டிற்கான எமது செயற்பாடுகளில் SDG களின் முன்னெடுப்புகளும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

செயற்பாடுகள்	அடைவுகள்	எஸ்.டி.ஜீ இன் இலக்குகள் / நோக்கங்கள்
உரிமம் பெற்ற தொலைதொடர்பு செயற்படுத்துனர்களால் குரல் மற்றும் தரவு / பிராட்பேண்ட் சேவைகளின் சேவைகளின் தரத்தை கண்காணிக்க 5G சோதனைகள், எண் பெயர்வுத்திறன், IPV6 அமலாக்கம் மற்றும் விதிகள் / ஒழுங்குமுறைகளை அறிமுகப்படுத்துதல்	• ஆண்டின் தொடக்கத்தில் 5G சோதனைகள் தொடங்கப்பட்டன • எண் பெயர்வுத்திறன் முயற்சி தொடங்கப்பட்டது, பொது ஆலோசனை செயல்முறை செயல்படுத்தப்பட்டது. • கடலுக்கடியில் நீர்மூழ்கிக் கப்பல் கேபிள் பின்னடைவு திட்டம் வெளியுறவு அமைச்சு மற்றும் UNODC உடன் இணைந்து தொடங்கப்பட்டது. • தொலைத்தொடர்பு சாதனங்களின் இறக்குமதியின் நிலையான முகாமைத்துவத்திற்காக RTTE விதிகள். அறிமுகப்படுத்தப்பட்டமை • கமட்ட சன்னிவேதனய திட்டத்தைத் தொடங்கி 100% 4G / பைபர் இணைப்பை உறுதி செய்வதற்காக இணைப்பு உள்கட்டமைப்பை இலங்கையில் உருவாக்குவதல். • வேலை மற்றும் வாழ்க்கை முறையின் புதிய விதிமுறைகளுக்கு ஏற்ப நுகர்வோருக்கு தேவையான புதிய தொகுப்புகளை அறிமுகப்படுத்துதல். • தற்போதுள்ள சேவை அளவுருக்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டது. • குரல் மற்றும் விதிகளை அறிமுகப்படுத்தப்படுவதற்கு செய்ய வேண்டிய திருத்தங்கள் குறித்து செயற்படுத்துனர்களுடன் கலந்துரையாடப்பட்டது. • தற்போதுள்ள புரோட்பேண்ட் அளவுருக்களில் திருத்தங்களைச் செய்ய செயற்படுத்துனர்களுடனான கலந்துரையாடலுக்கு முன்னர் நாட்டின் வெவ்வேறு இடங்களில் இணைய வேகம் அளவிடப்படுகிறது. • திருத்தப்பட்ட அளவுருக்களை அமுல்படுத்திய பின்னர் 2020 ஆம் ஆண்டில் புதிய விதிகள் / விதிமுறைகள் வழங்கப்படும். • குரல் சேவைகள் மற்றும் பிபி சேவைகளுக்கு: வரைவு அளவுருக்கள்.பரீட்சார்த்த அடிப்படையில் செயற்பாட்டர்களால் செயல்படுத்தப்பட்டுள்ளன.	**எஸ்.டி.ஜ 8 – சிறப்பான வேலை மற்றும்.** பொருளாதார வளர்ச்சி. அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் சிறப்பான வேலையை ஊக்குவித்தல். **எஸ்.டி.ஜ 9 – தொழில், புதுமை மற்றும் உட்கட்டமைப்பு.** நெகிழக்கூடிய உட்கட்டமைப்பை உருவாக்குதல், நிலைபேறான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை வளர்த்தல்.

குரல் மற்றும் தரவு / புரோட்பேண்ட் சேவைகளுக்காக ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இல் அமைத்துள்ள சேவை தரங்களின் அளவுருவை செயற்படுத்துனர்கள் பின்பற்றுவதை உறுதிசெய்தல்.	• நிலையான செயற்படுத்துனர்களால் சேவை அளவுருக்கள் தரத்துடன் பின்பற்றப்படுகிறது. • கையடக்க தொலைபேசி செயற்படுத்துனர்கள் சேவை அளவுருக்களை தரத்துடன் பின்பற்றுகின்றனர். • நிலையான செயற்பாட்டாளர்கள் - மூன்று செயற்பாட்டாளர்களும் 16 14 சேவை அளவுருக்கை ள சமர்ப்பித்துள்ளனர் • கையடக்க தொலைபேசி செயற்படுத்துனர்கள் - நான்கு கையடக்க தொலைபேசி செயற்படுத்துனர்களும் 14 சேவை அளவுருக்கள் அளவினை சமர்ப்பித்துள்ளனர்.	**எஸ்.டி.ஜீ 8 – சிறப்பான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி.** அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் சிறப்பான வேலையை ஊக்குவித்தல். **எஸ்டிஜீ 9 - தொழில், புதுமை மற்றும் உட்கட்டமைப்பு.** நெகிழக்கூடிய உட்கட்டமைப்பை உருவாக்குதல், நிலைபேறான கைத் தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை வளர்த்தல்.
தொலைத் தொடர்புத் துறையின் விரைவான முன்னேற்றங்களைச் சந்திக்க தற்போதைய இலங்கை தொலைத்தொடர்பு சட்டத்தில் புதிய திருத்தங்களை உருவாக்குதல்.	• விரைவான பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான தொழில்நுட்பத்தின் புதிய முன்னுதாரணங்களை செயற்படுத்துவதை உறுதி செய்வதற்காக பிரிவுகளிலிருந்து உள்ளீடுகளைப் பெற்ற பின்னர் சட்டத் திருத்தங்கள் சட்ட வரைவுத் திணைக்களத்திற்கு பரிந்துரைக்கப்பட்டன. • சட்ட வரைவுத் திணைக்களத்துடன் ஆலோசனை நடைபெற்றது. • சட்டத் திருத்தங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற செயற்முறை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	**எஸ்.டி.ஜீ 8 – சிறப்பான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி.** அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் சிறப்பான வேலையை ஊக்குவித்தல்.
பல்வேறு தொலைத்தொடர்பு சேவைகளை வழங்குவதற்காக சட்டத்தின் விதிகளின் கீழ் உரிமங்களைப் பெறுவதற்கான தேவை குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல்.	• பொது மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை செய்தித்தாள்கள், இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் எஸ்.எம்.எஸ் ஊடாக நடாத்துதல். • பிரதேச செயலகத்திலிருந்து வியாபார பதிவுகளைப் பெற்றுக் கொண்டவர்கள் களிடமிருந்தும் விற்பனை அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொண்டு அறிவித்தவர்களிடமிருந்தும் விரிவான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்	**எஸ்.டி.ஜீ 8 – சிறப்பான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி.** அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் சிறப்பான வேலையை ஊக்குவித்தல்.
செயற்படுத்துனர்களால் சமர்ப்பித்த கட்டண திட்டங்களை செயன்முறைப்படுத்துதல்.	• மேம்படுத்தல் / பருவகால சலுகைகள், விளம்பர கட்டணங்கள் மற்றும் நிரந்தர கட்டண திட்டங்களின் முன்மொழிவுகள். செயன்முறைப்படுத்தப்பட்டன. • கொவிட் இன் பின்னர் வேலை மற்றும் கற்றலுக்கான புதிய வடிவிலான தேவையான புதிய பொதிகள் ஆரம்பிக்கப்பட்டன.	**எஸ்.டி.ஜீ 8 – சிறப்பான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி.** அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் சிறப்பான வேலையை ஊக்குவித்தல்.
தொலைத்தொடர்பு சூழலில் வாடிக்கையாளர் பாதுகாப்பை உறுதி செய்தல்	• உரிமம் பெற்ற செயற்படுத்துனர்களுடன் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. • பாவனையாளர்களின் பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	**எஸ்.டி.ஜீ 10 - குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள்.** நாடுகளுக்குள்ளும் இடையிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல்.
''கமட்ட சன்னிவேதனய'' செயற் திட்டம் ஆரம்பிக்கப்பட்டமை. (இல்கையை இணைத்தல்)	• 2021 இன் அரச வரவு செலவுத் திட்டத்தில் கீழ் நாட்டின் தேசிய செயற்திட்டமொன்றாக குறிப்பிடப்பட்டும் அடையாளப்படுத்தப் பட்டும் உள்ளது.	**எஸ்.டி.ஜீ 8 – சிறப்பான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி.** அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான


நாட்டில் 100% சதவீதம் 4G/பைபர் புரோட்பேன்ட் மேவுகை	• தொலைத்தொடர்பு அபிவிருத்திக் (TDC) கட்டணங்களை வழங்கு வதற்கான வழிகாட்டுதல்கள் மாத்தறை மாவட்டத்தில் விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டது. • இரத்தினபுரி மாவட்டம் இரண்டாம் கட்ட செயற்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் தொழில்நுட்ப ஆய்வு நடைமுறையில் உள்ளது. • முன்னுரிமை அடிப்படையில் 4G கவரேஜை உள்ளடக்கும் வகையில் பாதுகாக்கப்படாத கிராமப்புறங்களில் விரைவான கவரேஜ் வசதி திட்டங்கள் முடிக்கப்பட்டன. • அந்த பகுதிகளின் பாடசாலை மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப வசதிகள் வழங்கப்பட்டன மற்றும் செயற்பாட்டர்களின் உதவியுடன் பாடசாலைகளில் கணினி ஆய்வு கூடத்தை உருவாக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. • எட்டு மாவட்டங்களில் கவரேஜ் கிடைக்கும் தன்மை மற்றும் தொழில்நுட்ப விசாரணை பற்றிய கணக்கெடுப்புகள் மற்றும் 4G கவரேஜ் தேவையான பகுதிகளை அடையாளம் காணப்பட்டது. • 17 நாட்டின் 17 மாவட்டங்களில் கவரேஜ் கிடைப்பனவு குறித்த ஆய்வுகள் நடந்து வருகின்றன. • கவரேஜ் மேம்பாட்டிற்காக தொழில்நுட்ப வெளிக்கள செயற்பாடுகளை மேற்கொள்வது.ம் செயற்பாட்டில் உள்ளது.	பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் சிறப்பான வேலையை ஊக்குவித்தல். **எஸ்.டி.ஜீ 10 - குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள்.** நாடுகளுக்குள்ளும் இடையிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல். **எஸ்.டி.ஜீ 11 - நிலைபேறான நகரங்கள் மற்றும் சமூகங்கள்.** நகரங்களை உள்ளடக்கிய, பாதுகாப்பான, நெகிழ வைக்கும் மற்றும் நிலைபேறானதாக மாற்றுதல்.
விழிப்புணர்வு மூலம் நியாயமான ஒழுங்குபடுத்தும் சூழலை உறுதி செய்தல்	• பாடசாலை விழிப்புணர்வு திட்டங்களை நடாத்துதல். • பொது மக்கள் பாடசாலை விழிப்புணர்வு திட்டங்களை நடாத்துதல். • கல்வியை உள்ளடக்கிய மற்றும் டிஜிட்டல் பிளவுகளைக் குறைப்பதை உறுதி செய்வதற்காக உத்தியோகபூர்வ இ-கற்றல் தளங்களுக்கு அனைத்து அரசின் பல்கலைக்கழகங்களுக்கும் பாடசாலைகளுக்கும் இலவச அணுகலை உறுதி செய்தல்	**எஸ்.டி.ஜீ 7 - மலிவு மற்றும் வலுவான சக்தி.** அனைவருக்கும் மலிவு, நம்பகமான, நிலையான மற்றும் நவீன ஆற்றலுக்கான அணுகலை உறுதிசெய்தல். **எஸ்.டி.ஜீ 10 - குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள்.** நாடுகளுக்குள்ளும் இடையிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல்.
தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப கழிவு முகாமைத்துவ திட்ட திட்டத்தை நடாத்துதல்.	• கண்டி, மெனராகல், பதுளை, புத்தளம், கொழும்பு கம்பஹா, அனுராதபுரம், கேகால, நுவரெலியா, காலி மற்றும் மாத்தளை அறிவூட்டல் வேலைகளை நடாத்துதல்	**எஸ்.டி.ஜீ 3 - நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு.** ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதிசெய்து, எல்லா வயதினருக்கும் மற்றும் அனைவருக்கும் நல்வாழ்வை ஊக்குவித்தல். **எஸ்.டி.ஜீ 11 - நிலைபேறான நகரங்கள் மற்றும் சமூகங்கள்.** நகரங்களை உள்ளடக்கிய, பாதுகாப்பான, நெகிழ வைக்கும் மற்றும் நிலையானதாக மாற்றுதல். **எஸ்.டி.ஜீ 12 - பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி.** நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதி செய்தல்.

வாடிக்கையாளர்கள் மற்றும் செயற்படுத்துனர்களுக்கு நியாயமான மற்றும் நியாயமான தீர்வுகளை உறுதி செய்தல்.	• நுகர்வோர் முறைப்பாடுகளின் செயன்முறைப்படுத்தப்பட்ட கடித தொடர்பு தொல்லை அழைப்புகள், எஸ்எம்எஸ், சமூக ஊடகங்கள், நிலையான இணைப்புகள், கோபுர பிழைகள் மற்றும் சிம், PEO TV மற்றும் இணையம், பட்டியலிடல், சிடிஎம்ஏ. • தவறான கையடக்க தொலைபேசிகளில் கோரிக்கைகளை கையாள்தல் மற்றும் தொலைந்த கையடக்கத் தொலைபேசிகளை கண்டறிய புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட முறைமையை ஒரே நேரத்தில் பயன்படுத்துதல். • வீசா / மாஸ்டர் அட்டை கொடுப்பனவு முறைகளை அறிமுகப்படுத்துதல்	**எஸ்.டி.ஜீ 8 – சிறப்பான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி.** அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் சிறப்பான வேலையை ஊக்குவித்தல். **எஸ்.டி.ஜீ 10 - குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள்.** நாடுகளுக்குள்ளும் இடையிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல். **எஸ்.டி.ஜீ 16 – அமைதியான, நீதியான மற்றும் வலுவான நிறுவனங்கள்.** நியாயமான, அமைதியான மற்றும் உள்ளடக்கிய சமூகங்களை ஊக்குவித்தல்.
உட்கட்டமைப்பு வரிசைப்படுத்தல் மற்றும் வசதிகள்	• தொலைத்தொடர்பு உள்கட்டமைப்பு வரிசைப்படுத்தல் தொடர்பான ஒருங்கிணைந்த விடயங்கள். • தொலைத்தொடர்பு உள்கட்டமைப்பு வரிசைப்படுத்தல் மற்றும் தொலைதொடர்பு கோபுரங்கள் தொடர்பான பொதுமக்களின் முறைப்பாடுகளைக் கையாள்வது குறித்த பொது விழிப்புணர்வு திட்டங்களை நடத்தப்பட்டன. • ஆண்டெனா கட்டமைப்புகள் குறித்த வழிகாட்டுதலின் திருத்தத்தை இறுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. இது ஒப்புதல் செயல்பாட்டில் உள்ள நடைமுறை சிக்கல்களை நிவர்த்தி செய்கிறது மற்றும் பொது சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் பிற கவலைகள் குறித்து உரிய கவனம் செலுத்துகையில் தொலைத்தொடர்பு துறையில் தடையற்ற வளர்ச்சிக்கு உதவுகிறது. • உயரமான கட்டிடங்களில் தொடர்பு சேவைகளை வழங்குவதற்கான தொழில்நுட்ப தரநிலை வழிகாட்டியைத் தயாரித்தல்.	**எஸ்.டி.ஜீ 9 - தொழில், புதுமை மற்றும் உட்கட்டமைப்பு.** நெகிழக்கூடிய உட்கட்டமைப்பை உருவாக்குதல், நிலையான தொழில் மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை வளர்ப்பது.
காணப்படுகின்ற இலக்கமிடல் திட்டங்கள் மற்றும் உத்தேச திருத்தத் தேவைகளை மீளாய்வு செய்தல்	• மீளாய்வு பூர்த்தி செய்யப்பட்டது. • உள்ளக தொடர்பாடலுக்காக 3 இலக்க குறியீடு இனங்காணப்பட்டுள்ளது.	**எஸ்.டி.ஜீ 8 – சிறப்பான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி.** அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் சிறப்பான வேலையை ஊக்குவித்தல். **ஸ்.டி.ஜீ 9 - தொழில், புதுமை மற்றும் உட்கட்டமைப்பு.** நெகிழக்கூடிய உட்கட்டமைப்பை உருவாக்குதல், நிலையான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை வளர்ப்பது

கேபிள் ரீவி சேவை வழங்குநர்களின் செயற்பாடுகளை கண்காணித்தல்.	• கேபிள் டிவி நெட்வேர்க் அமைப்புகளின் விபரங்களை சேகரித்து புதுப்பித்தல்	 **எஸ்டிஜீ 9 - தொழில், புதுமை மற்றும் உட்கட்டமைப்பு.** நெகிழக்கூடிய உட்கட்டமைப்பை உருவாக்குதல், நிலைபேறான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை வளர்த்தல்.
2020 ஆம் ஆண்டிற்கான பயிற்சி நடவடிக்கைகள் குறித்து சர்வதேச அமைப்புகளுடன் ஒருங்கிணைத்தல்.	• மேம்பட்ட பயிற்சி குழு (ஏரீசீ) மற்றும் பயிற்சி தேர்வுக் குழு (ரீஎஸ்சீ) மற்றும் அமைச்சின் அங்கீகாரம் ஆகியவற்றைப் பெற்ற பின்னர் வெளிநாட்டு பயிற்சி / ஆய்வு வருகைகளில் பங்கேற்க உத்தியோகத்தர்களைத் தேர்ந்தெடுப்பது. • பயிற்சி திட்டங்கள் / ஆய்வு வருகைகளுக்குப் பிறகு அறிவு பகிர்வு திட்டங்கள் நிகழ்நிலை ஊடாக நடாத்தப்பட்டன. • சர்வதேச நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிபுணர்களுடன் இணைந்து நடத்தப்பட்ட மாநாடுகள் மற்றும் பயிற்சித் திட்டங்களுக்கு அனுமதிப்பத்திர செயற்பாட்டாளர்கள் அழைக்கப்பட்டனர்.	 **எஸ்.டி.ஜீ 4 - தரமான கல்வி.** அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் தரமான கல்வியை உறுதிசெய்து வாழ்நாள் முழுவதும் கற்றலை ஊக்குவித்தல்  **எஸ்டிஜீ 9 - தொழில், புதுமை மற்றும் உட்கட்டமைப்பு.** நெகிழக்கூடிய உட்கட்டமைப்பை உருவாக்குதல், நிலைபேறான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை வளர்த்தல்.
டி.வி.இ.சி உடன் டவர் தொழில்நுட்ப பயிற்சி திட்டத்தை அறிமுகப்படுத்தல்	• மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் சிலங்கா டெலிகொம் உடன் இணைந்து தொலைதொடர்பு தொழில்நுட்ப செயற்பாட்டாளர்நிகழ்ச்சி ஆபரேட்டர்கள் ஆகியோருடன் ,ணைந்து தொடங்கப்பட்டது. தொலைத்தொடர்பு கோபுர டெக்னீசியன் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது • தேசிய தேர்ச்சி தரநிலைகள் (என்.சி.எஸ்) மற்றும் பாடத்திட்டத்தின் வளர்ச்சி தொடர்பான விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டு தற்போது டி.வி.,.சி.யில் அங்கீகாரததுடன் செயல்படுத்தப்படுகிறது.	 **எஸ்.டி.ஜீ 4 - தரமான கல்வி.** அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் தரமான கல்வியை உறுதிசெய்து வாழ்நாள் முழுவதும் கற்றலை ஊக்குவித்தல்  **எஸ்டிஜீ 9 - தொழில், புதுமை மற்றும் உட்கட்டமைப்பு.** நெகிழக்கூடிய உட்கட்டமைப்பை உருவாக்குதல், நிலைபேறான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை வளர்த்தல்.
தொலைத்தொடர்பு சூழலில் வாடிக்கையாளர் பாதுகாப்பை உறுதி செய்தல்	• உரிமம் பெற்ற செயற்படுத்துனர்களுடன் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. • பாவனையாளர்களின் பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	 **எஸ்.டி.ஜீ 10 - குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள்.** நாடுகளுக்குள்ளும் இடையிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல்.
WTISD நோக்கத் திட்டம் 2020.	• WTISD 2020 எனும் கருப்பொருளில் விழிப்புணர்வு திட்டம் - நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கு ஐசீடீ "Connect 2030: என விழிப்புணர்வு திட்டம் நடாத்தப்பட்டது.	 **எஸ்.டி.ஜீ 4 - தரமான கல்வி.** அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் தரமான கல்வியை உறுதிசெய்து வாழ்நாள் முழுவதும் கற்றலை ஊக்குவித்தல்
ஊழியர்களுக்கான ஐ.சீ.ரீ திறன் இயலளவு. (த.தொ. மற்றும் ஏனைய பதவியணி)	• வீட்டுச்சூழலில் எம்.எஸ் தீம் வழியாக ஊழியர்களுக்கான நிகழ்நிலை பயிற்சி திட்டங்களை நடத்தப்பட்டன. • பூர்த்தி செய்யப்பட்ட மைக்ரோசாப்ட் - வீட்டிலிருந்து அவர்களின் பணிகளைப் புதுப்பிக்கவும் கண்காணிக்கவும் பட்டியல் பயிற்சி	 **எஸ்.டி.ஜீ 4 - தரமான கல்வி.** அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் தரமான கல்வியை உறுதிசெய்து வாழ்நாள் முழுவதும் கற்றலை ஊக்குவித்தல்

இலங்கையில் எஸ்.டி.ஜீ முன்னேற்றங்களுக்காக ஐ.சீ.ரீ யில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சர்வதேச சிறந்த நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல். உள்நாட்டு பல்கலைக் கழகங்கள், செயற்படுத்துனர்கள், தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் NAITA ஆகியவற்றின் உதவியுடன் உள்ளுர் ஐ.சீ.ரீ தொண்டர் நிகழ்ச்சிதிட்டத்தை ஏற்பாடு செய்தல்.	• கஷ்ட பிரதேச பாடசாலைகளில் உள்ள மாணவர்களிடையே ஐ.சி.டி கல்வியறிவை வளர்ப்பதற்காக இந்த திட்டம் கல்வி அமைச்சின் ஐ.சி.டி கிளையுடன் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டது. முன்னைய ஆண்டு பயிற்சி பெற்ற தன்னார்வலர்கள் ஐ.சி.டி தொண்டர்களாக பணியாற்ற கம்பாஹா, அனுராதபுரா, பொலன்னருவாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டனர். தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இருவரும் இந்த திட்டத்தின் மூலம் பயனடைந்தனர்.	**எஸ்.டி.ஜீ 4 - தரமான கல்வி.** அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் தரமான கல்வியை உறுதிசெய்து வாழ்நாள் முழுவதும் கற்றலை ஊக்குவித்தல் **எஸ்டிஜீ 9 - தொழில், புதுமை மற்றும் உட்கட்டமைப்பு.** நெகிழக்கூடிய உட்கட்டமைப்பை உருவாக்குதல், நிலைபேறான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளை வளர்த்தல். **எஸ்டிஜீ 10 - குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள்.** நாடுகளுக்குள்ளும் இடையிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல்.
ITU, APT போன்உதவித் திட்டங்கள்	• APT மற்றும் ITU இனால் நிகழ்நிலை / கற்றல் பயிற்சி நிகழச்சி மற்றும் கூட்டங்கள் மற்றும் மாநாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டன.	**எஸ்.டி.ஜீ 4 - தரமான கல்வி.** அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் தரமான கல்வியை உறுதிசெய்து வாழ்நாள் முழுவதும் கற்றலை ஊக்குவித்தல் **எஸ்.டி.ஜீ 17 - இலக்குகளுக்கான கூட்டாண்மை.** நிலைபேறான வளர்ச்சிக்கான உலகளாவிய கூட்டாண்மைக்கு புத்துயிர் அளித்தல்.

டெல்கோ செக்டார் டெமோகிராபிக்ஸ்



அட்டவணை 01: தொலைத்தொடர்பு துறையின் புள்ளிவிபர கண்ணோட்டம்

முறைமை உரிமங்களின் எண்ணிக்கை	29
நிலையான அணுகல் தொலைபேசி சந்தாக்களின் எண்ணிக்கை	2,613,140
100 சந்தாக்களில் நிலையான அணுகல் தொலைபேசி சந்தாக்கள்	11.9
செல்லுலர் கையடக்க தொலைபேசி சந்தாக்களின் எண்ணிக்கை	28,739,277
100 சந்தாக்களில் செல்லுலர் கையடக்க சந்தாக்கள்	131.1
நிலையான குறுகலான சந்தாக்கள	58
நிலையான புரோட்பேண்ட் சந்தாக்கள்	1,956,325
கைடக்க புரோட்பேண்ட் சந்தாக்கள் (3G, 4G)	15,567,665
பொது கட்டண தொலைபேசி சாவடிகளின் எண்ணிக்கை	461

* தற்காலிக தரவு


குறிப்பு SLT (PLC), லங்கா பெல் மற்றும் டயலொக் புரோட்பேண்ட் என்பவற்றுக்கு அவற்றின் அனுமதிப்பத்திர உடமையாளர்களுக்கு கொடுப்பனவு தொலைபேசி மற்றும் தரவு சேவைகள் வழங்கும் உரித்துள்ளது.

2020 நடு ஆண்டு சனத்தொகை = 21.919 மில்லியன்

விளக்கப்படம் 01: முறைமை உரிமங்களின் எண்ணிக்கை




விளக்கப்படம் 02: நிலையான புரோட்பேண்ட், நரோபேண்ட் மற்றும் கையடக்க புரோட்பேண்ட் சந்தாக்கள்




* தற்காலிக தரவு

விளக்கப்படம் 03: தொலைநோக்கு



* தற்காலிக தரவு


விளக்கப்படம் 04: நிலையான மற்றும் கையடக்க சந்தாதாரர்களின் வளர்ச்சி



* தற்காலிக தரவு

2011 - 2020 காலப்பகுதியில் நிலையான மற்றம் நடமாடும் சேவை வழங்குனர்களால் ஆண்டு ரீதியாக முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளன. (முதலீடுகளானவை ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் மற்றும் தொட்டு உணரமுடியாத சொத்துக்கள் நடைமுறை வேலைகளுக்கு மேலதிகமாக உள்ளடக்கப்பட்டவையாகும்.

விளக்கப்படம் 05: தொலைத்தொடர்பு துறையில் முதலீடுகள்




	2009	2010	2011	2012	2013	2014	2015	2016	2017	2018	2019	2020
மொத்தம்	44885	34033	56054	50118	68561	45084	48948	86084	78263	65831	93452	64523
கையடக்க	33678	24387	41999	29508	49509	23444	22703	27121	36151	37389	49423	39824
நிலையான	11207	9646	14055	20610	19052	21640	26245	58963	42112	28442	44029	24699

* தற்காலிக தரவு


குறிப்பு 2020 ஆண்டில் நடைமுறையிலுள்ள மூலதன வேலைகள் முதலீடுகளின் பகுதிகளாக கருதப்படவில்லை

விளக்கப்படம் 06: கையடக்க மற்றும் நிலையான அணுகல் செற்படுத்துனரினால் ஒரு பயனருக்கான சராசரி வருமானம்




* தற்காலிக தரவு

விளக்கப்படம் 07: தொலைத்தொடர்பு வரியின் வளர்ச்சி



* தற்காலிக தரவு


விளக்கப்படம் 08: செஸ்



* தற்காலிக தரவு

TRCSL நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்த அரச பொதுத் திறைசேரியின் திரட்டு நிதிக்கு வழங்கிய அனுப்புகைகள்

விளக்கப்படம் 09: திரண்ட நிதிக்கு பணம் அனுப்புதல



* தற்காலிக தரவு

அனுமதிப்பத்திர முகாமைத்துவம பிரிவு

கண்ணோட்டம்

தேசிய நலனுக்கு அவசியமானதாகக் கருதப்படும் சேவைகளின் சகல நியாயமான கோரிக்கைகளையும் பூர்த்தி செய்வதற்காக, நம்பகமான மற்றும் ஆற்றல்மிக்க உள்நாட்டு மற்றும் சர்வதேச தொலைத்தொடர்பு சேவைகளை வழங்குவதனை, தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு உறுதி செய்தல் வேண்டும். 1996 இன் 27 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 1991 இன் 25 ஆம் இலக்க தொலைத் தொடர்புகள் சட்டத்தின் 17 ஆவது பிரிவின் பிரகாரம், அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட செயற்படுத்துனர்களினால் மாத்திரம் தொலைத்தொடர்பு சேவைகளை வழங்குவது உறுதிசெய்யப்படுதல் வேண்டும். குறித்த சட்டத்தின் மேற்குறிப்பிட்ட பிரிவின் பிரகாரம் முறைமை அனுமதிப்பத்திர அதிகாரத்தின் கீழன்றி எந்தவொரு நபரும் இலங்கையில் பொது தொலைத் தொடர்பு முறைமையொன்றை செயற்படுத்த முடியாது. முறைமை அனுமதிப்பத்திரமானது பொதுமக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆணைக்குழுவின் பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு அமைச்சரினால் முறையாக வழங்கப்படுகின்றது.

தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளின் அடிப்படையில் தற்பொழுது, அனுமதிப்பத்திரங்களின் வகைகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

வசதிகளை அடிப்படையாகக் கொண்ட அனுமதிப்பத்திரங்கள்

தொலைத்தொடர்பு சேவைகளை வழங்கும் செயற்பாட்டில், எவ்வகையானதொரு பொது தொலைத்தொடர்பு வலையமைப்பொன்றை நிறுவுவதற்கும் செயற்படுத்துவதற்கும் தேவைப்படும் மிக அரிதான வளங்களான அதிர்வெண் ஸ்பெக்ட்ராம் அல்லது வழி, இலக்கங்களின் உரித்து என்பவற்றைப் பயன்படுத்தி சுய உட்கட்டமைப்பை அமைத்துக் கொள்வதற்கான அதிகாரத்தை இவ்வகை அனுமதிப்பத்திரம் வழங்குகின்றது.

வசதிகளை அடிப்படையாகக் கொள்ளாத அனுமதிப்பத்திரங்கள்

பொதுமக்களுக்கான தொலைத் தொடர்பு சேவைகளை வழங்குவதற்காக தனது சுய உட்கட்டமைப்பை அமைத்துக் கொள்வதற்கு அதிகாரமளிக்கப்படாத செயற்படுத்துனர்கள், தொலைத்தொடர்பு வலையமைப்பு கூறுகளை (பரிமாற்ற கொள்ளளவு மற்றும் நிலைமாற்றி) வசதிகளை அடிப்படையாகக் கொண்ட எவரேனுமொரு செயற்படுத்துனர்களிடமிருந்தும் குத்தகைக்கு பெற்றுக் கொள்ளல் வேண்டும். அத்தகைய அனுமதிப்பத்திரங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள் ஒதுக்கப்படாது.

அனுமதிப்பத்திர வகைகள்

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் 17 ஆம் பிரிவின் பிரகாரம் தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளின் அடிப்படையில் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்களின் வகைகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

i. நிலையான செயற்படுத்துனர்கள்
ii. நடமாடும் செயற்படுத்துனர்கள்
iii. சர்வதேச தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்கள் (வெளிப்புற நுழைவாயில் செயற்படுத்துனர்கள்)
iv. தரவு தொடர்பாடல் செயற்படுத்துனர்கள்
v. இணைய சேவை வழங்குநர்கள்
vi. கேபள் விநியோக நெட்வேர்க் செயற்படுத்துனர்கள்
vii. நேரடி வீட்டு செய்மதி ஒளிபரப்பு செயற்படுத்துனர்கள்
viii. ட்ரங்க் வானொலி செயற்படுத்துனர்கள்
ix. செய்மதி சேவைகள்
x. பெக்ஹோல் / இறுதி எல்லை கட்டமைப்பு செயற்படுத்துனர்கள்

தொழில்நுட்ப-நடுநிலை அணுகுமுறைக்கு ஏற்ப, விண்ணப்பதாரர்கள் தங்கள் சொந்த வணிக முடிவுகளை அடிப்படையாகக் கொண்ட உத்தேச செயல்பாடுகளுக்கு மிகவும் திறமையான தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கு எப்போதும் வளர்ந்து வரும் சந்தை இயக்கவியலால் உந்தப்பட்டுகின்றனர். அது அனுமதிப்பத்திர நிபந்தனைகளால் விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் மற்றும் பொது நலன் சார்ந்த அக்கறைகளுக்கு உட்பட்டதாக அமையும்.

அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதும், அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள் தங்கள் நெட்வேர்க்குகளில் மற்றும் சேவை வழங்கல்களில் ஏதேனும் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் அதற்காக TRCSL இன் முன் அனுமதியைப் பெற வேண்டும்.

தொலைத்தொடர்பு நெட்வேர்க் இனை நிறுவுவதற்கு தேவையான ஸ்பெக்ட்ரம், இலக்கம் மற்றும் வழியுரித்து போன்ற அரிதான வளங்கள் அனுமதிப்பத்திரத்தின் பகுதியாக கருதப்படாத போதிலும் இருப்பிற்கு ஏற்ப ஒதுக்கப்படும்.

வசதிகளை அடிப்படையாகக் கொண்ட அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள் அனுமதிப்பத்திரம் பெற்ற ஏனைய தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்கள், வியாபார வாடிக்கையாளர்கள் மற்றும் பொது மக்கள் உட்பட மூன்றாம் தரப்பினருக்கு சேவைகளை வழங்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

வசதிகளை அடிப்படையாகக் கொண்ட அனுமதிப்பத்திரங்கள் பத்து ஆண்டுகள் மற்றும் ஐந்து ஆண்டுகள் என்ற அடிப்படையில் வழங்கப்படுகின்றன, ஆனால் வசதிகளை அடிப்படையாகக் கொள்ளாத அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் ஐந்து ஆண்டுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதன் நியமமான கால எல்லையைத் தாண்டாத காலத்தின், செயலாற்றலைப் பொறுத்து, அதே நிபந்தனைகளுடன் அல்லது / மற்றும் மாறுபட்ட நிபந்தனைகளுடன் அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்துக் கொள்ளலாம்.

வழங்கப்படும் சேவையின் வகையைப் பொறுத்து அவ்வப்போது TRCSL இனால் அனுமதிப்பத்திர கட்டணம் நிர்ணயிக்கப்படும். அதற்கு மேலதிகமாக அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள் செஸ் மற்றும் தொலைத்தொடர்பு வரியை செலுத்துதல் வேண்டும்.

TRCSL இனால் அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறை

இலங்கை தொலைத்தொடர்பு சட்டத்தின் பிரிவு 17 இல் உள்ள ஏற்பாடுகள் மற்றும் 2006.03.10 ஆம் திகதிய 1435/20 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் TRCSL இனால் வெளியிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திர வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப அனுமதிப்பத்திர விண்ணப்பங்களை கையாளுதல் வேண்டும்.

இலங்கை தொலைத்தொடர்பு சட்டத்தின் 17 ஆவது பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்க ஆர்வமுள்ள தரப்பினர்கள் அனுமதிப்பத்திர வழிகாட்டிகள் மற்றும் விதிமுறைகளில் காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக TRCSL இடம் முன்வைத்தல் வேண்டும்.

1. வழங்கப்பட வேண்டிய அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையை TRCSL முன்கூட்டியே தீர்மானிப்பதில்லை. இருப்பினும், பொது நலன் கருதி மற்றும் சந்தை நிலைமை காரணமாக TRCSL இன் இயற்கை மற்றும் / அல்லது வரையறுக்கப்பட்ட வளக் கட்டுப்பாடுகள் மற்றும் தேவையான இதர காரணங்களின் அடிப்படையில் அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையை ஆணைக்குழு குறைக்கலாம்.
2. நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலின் பிரகாரம் விண்ணப்பத்தினை வெற்றிகரமாக மதிப்பீடு செய்ததன் பின்னர் வரைவு அனுமதிப்பத்திரத்திற்கான அங்கீகாரத்தை ஆணைக்குழு வழங்கும்.
3. முறையீடுகள் / ஆட்சேபனைகளை முன்வைப்பதற்காக வரைவு அனுமதிப்பத்திரம் பொதுமக்களின் பார்வைக்கு விடப்படும்.
4. கிடைக்கப்பெற்ற முறையீடுகள் / ஆட்சேபனைகள் தொடர்பாக ஆணைக்குழுவினால் பரிசீலனைகளை மேற்கொண்டு அவற்றை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.
5. ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் தொலைத்தொடர்பு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும்.

அனுமதிப்பத்திர கட்டமைப்பு

சந்தை வளர்ச்சி மற்றும் சமுதாயத்தின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கு உகந்த சூழலை வழங்குவதற்கு, தொழில்நுட்பங்கள் மற்றும் அடுத்த தலைமுறை நெட்வேர்க்குகளின் ஒருங்கிணைப்பை ஆணைக்குழு எதிர்பார்க்கிறது. இந்த வகையில் பின்வரும் அம்சங்களையும் TRCSL கருத்திற் கொள்கின்றது.

- போட்டியை ஊக்குவித்தல
- சேவையின் தரம்
- புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல்
- செயற்திறன் மற்றும் ஒருங்கிணைப்பு
- திறந்த அணுகல்

அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்தல்

- எடிசலாட் லங்கா (பிரை) லிமிட்டட் - மொபைல் செயற்படுத்துனர் அனுமதிப்பத்திரம
- டிஷ் ரீவீ லங்கா (பிரை) லிமிட்டட் - (உரிமை மாற்றக் கோரிக்கை பரிசீலிக்கப்படுகின்றது)

அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்கும் செயற்பாடு

- சிட்டி கேபல் லின்க்ஸ் (பிரை) லிமிட்டட் - கேபல் விநியோக நெட்வேர்க் செயற்படுத்துனர் அனுமதிப்பத்திரம்
- டயலொக் புரோட்பேன்ட் நெட்வேர்க் (பிரை) லிமிட்டட் - இணைய சேவை வழங்குநர் அனுமதிப்பத்திரம
- டாடா கொம்யூனிகேஷன்ஸ் லங்கா (பிரை) லிமிட்டட் - இணைய சேவை வழங்குநர் அனுமதிப்பத்திரம்

2020 ஆம் ஆண்டின் செயலாற்றல்

தற்போதைய அனுமதிப்பத்திர கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு உள்ளாகவில்லையென்பதோடு அது சேவை கட்டுப்பாடுகளுடன் கூடிய உட்கட்டமைப்பு வகையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கின்றது. இருப்பினும், தொழில்நுட்ப ஒருங்கிணைப்பின் வருகையால், ஒரே ஒரு உட்கட்டமைப்பைக் கொண்டு பரந்த அளவிலான சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். சேவைகளை

மட்டுப்படுத்துவதானது வளரும் சந்தை இயக்கவியல் மீது தடைகளை ஏற்படுத்தலாம். எனவே, பயன்பாட்டு சேவை வழங்கலை எளிதாக்க ஒரு புதிய அனுமதிப்பத்திர கட்டமைப்பை அறிமுகப்படுத்துவதன் முக்கியத்துவம் உருவாகியது. தற்போதுள்ள அனுமதிப்பத்திர கட்டமைப்பு மதிப்பாய்வில் உள்ளதோடு தொலைத்தொடர்புத் துறைக்குத் திட்டமிடப்படாத ஒழுங்குமுறை தடைகளை நீக்கி, ஒருங்கிணைந்த அனுமதிப்பத்திர வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்காக தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் கூடிய ஒரு புதிய அனுமதிப்பத்திர கட்டமைப்பை அறிமுகப்படுத்தி வருகிறது. இந்த நடவடிக்கைக்கு சர்வதேச தொலைத்தொடர்பு யூனியன் (ITU) மூலம் ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

அவ்வாறே, 17 ஆம் பிரிவிற்கு அமைய அனுமதிப்பத்திரத்திற்கான மிக முக்கிய தேவைப்பாடொன்றாக நெட்வேர்க் அங்கீகாரம் இருந்த போதிலும் கடந்த காலங்களில் அத் தேவைப்பாடு அனுமதிப்பத்திரத்துடன் முறையாக சேர்க்கப்பட்டிருக்கவில்லை. எனவே, செயற்படுத்துனர் நெட்வேர்க் / சேவை கணக்கெடுப்பின் அடிப்படையில் இதை அமுல்படுத்துவதற்கான ஒரு செயற்பாடு இடம்பெற்று வருகிறது.

தற்போதைய அனுமதிப்பத்திர வழிகாட்டுதலானது வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் மாற்றங்களை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகளுக்கு அமைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், புதுப்பிப்பதற்கான தனியான மற்றும் ஒதுக்கப்பட்ட அத்தியாயமொன்று இல்லை. புதிய அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான தற்போதைய புதுப்பித்தல் நடைமுறை அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதில் தேவையற்ற தாமதத்தை ஏற்படுத்துகின்றது. அதன் காரணமாக, இந்த வழிகாட்டி திருத்தப்பட்டு, புதுப்பித்தல், இரத்து செய்தல், உரிமை மாற்றம் போன்றவற்றுக்கான புதிய அத்தியாயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

வலையமைப்புகள் பிரிவு

கண்ணோட்டம்

இலங்கையில் இயங்கும் அரச மற்றும் தனியார் தொலைத்தொடர்பு நெட்வேர்க்குகள் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பொறுப்பு தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நெட்வேர்க் பிரிவினைச் சாரும்.

பொது தொலைத்தொடர்பு நெட்வேர்க்குகளுக்கான தேசிய இலக்க திட்டத்தை நிர்வகித்தல், சமிக்ஞை குறியீடுகளை ஒதுக்குதல், நடமாடும் நெட்வேர்க் குறியீடுகளை ஒதுக்குதல், பொருள் அடையாளங்காட்டிகளை ஒதுக்குதல், தொலைதொடர்பு உட்கட்டமைப்பை அமைப்பதற்கு வசதியளித்தல், தொலைத்தொடர்பு உபகரண விற்பனையாளர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல், வகை அங்கீகார சான்றிதழ்கள் வழங்குதல், நெட்வேர்க் சாதனங்களை இறக்குமதி செய்தல் மற்றும் சுங்க தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்தல் மற்றும் இலங்கையிலுள்ள தொலைத்தொடர்பு நெட்வேர்க்குகளுக்கு புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்த உதவுதல் ஆகியன நெட்வேர்க் பிரிவின் கண்காணிப்பின் கீழ் வரும் விடயங்களாகும்.

செயற்பாடுகள்

தொலைத்தொடர்புகள் சட்டத்தின் பிரகாரம் 2020 ஆம் வருடத்தில் நெட்வேர்க் பிரிவின் மூலம், பல்வேறு துறைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயல்பாடுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

இலக்கங்களை ஒதுக்குதல்

இலங்கையின் தொலைத் தொடர்புத் துறையின் தேசிய இலக்கத் திட்டத்தை நிர்வகிப்பதற்கான பொறுப்பு ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இனைக் கொண்டுள்ளதோடு தொலைத்தொடர்பு நெட்வேர்க்குகளுக்குத் தேவையான இலக்கங்களிலான வளங்கள் ஒரு அரிதான வளமாக காணப்படுகின்றது. நாட்டிலுள்ள தொலைத்தொடர்பு நெட்வேர்க்குகளுக்கு கிடைக்கக்கூடிய இலக்க வளத்தைப் பயன்படுத்துவதற்கான கட்டமைப்பையும் வழிகாட்டுதல்களையும் இலக்கங்களை ஒதுக்கும் திட்டம் வகுக்கிறது. இலக்கங்கள் ஒதுக்குதல் ஒரு பற்றாக்குறை வளமாக இருப்பதால், அது முறையான திட்டமிடலுடன் நிர்வகிக்கப்படல் வேண்டும். எனவே இலக்கங்களை ஒதுக்கும் திட்டமானது புதிய முன்னேற்றங்கள் மற்றும் தொழில்துறையின் தற்போதைய போக்குகளைப் பொறுத்து தொழில்துறையின் தேவைக்கேற்ப அவ்வப்போது மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளது. இந்த செயற்பாட்டுடன் தொடர்புடைய நடவடிக்கைகளின் சுருக்கம் கீழே தரப்படுகின்றது.

- தேசிய இலக்க வளத்தை நிர்வகித்தல்
- அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கான குறுகிய குறியீடுகளை ஒதுக்குதல்
- குறுகிய குறியீடுகள் தொடர்பான விடயங்களில் தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களை ஒருங்கிணைத்தல்
- சர்வதேச மற்றும் தேசிய சமிக்ஞை புள்ளி குறியீடுகள், நெட்வேர்க் குறியீடுகளை தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களுக்கு ஒதுக்குதல்
- பொருள் அடையாளங்காட்டிகளை ஒதுக்குதல்

இலக்க பெயர்வுதிறனை செயல்படுத்தல்

இலங்கையின் தொலைத்தொடர்பு நெட்வேர்க்குகளில் இலக்க பெயர்வுத்திறனை செயற்படுத்துவதற்கு ஆணைக்குழுவினால் கொள்கை ரீதியான தீர்மானமொன்று எடுக்கப்பட்டுள்ளது. சர்வதேசத்தின் சிறந்த நடைமுறைகளை ஆராய்வதன் மூலமும், தொழிற்துறை மற்றும் பிற பங்குதாரர்களிடமிருந்து கருத்துக்களைப் பெறுவதன் மூலமும் பொருத்தமான முறைமையொன்றை முன்மொழிவதற்காக நெட்வேர்க் பிரிவின் தலைமையின் கீழ் ஒரு உள்ளக குழு உருவாக்கப்பட்டது. அக்குழுவினால் ஆரம்ப ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வரைவு பொது ஆலோசனை ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

உட்கட்டமைப்பினை பயன்படுத்துதல்

செப்பு அல்லது ஒளியியல் பைபர் நெட்வேர்க்குகள், கடலுக்கடியில் உள்ள கேபள் தரையிறங்கும் நிலையங்கள் மற்றும் தொலைத்தொடர்பு அண்டெனா கோபுரங்கள் போன்ற தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பைப் பயன்படுத்துவதற்கான வசதி நெட்வேர்க் பிரிவால் மேற்கொள்ளப்படும் மற்றொரு முக்கிய செயற்பாடாகும். தற்போதுள்ள நெட்வேர்க்குகளின் விரிவாக்கத்திற்கான அனுமதியைப் பெற அல்லது மேலே குறிப்பிடப்பட்ட பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தி புதிய சேவைகளை அறிமுகப்படுத்த தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். நெட்வேர்க் பிரிவானது பல தொடர்புடைய அரசாங்க நிறுவனங்களின் இணக்கப்பாட்டுடன் பொருத்தமான அங்கீகாரங்களை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு உதவுகிறது.

தொலைத்தொடர்புத் துறையின் நிலைபேறான வளர்ச்சியைப் பேணும் அதே சந்தர்ப்பத்தில், சூழல் பாதிப்புகள், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள், தேசிய பாதுகாப்பு மற்றும் பொது நலன்களையும் கருத்திற் கொண்டு செயலாற்றுகின்றது. இவை தொடர்பாக பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட கடமைகள் பின்வருமாறு சுருக்கித் தரப்பட்டுள்ளன.

- தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு வரிசைப்படுத்தல் தொடர்பான விடயங்களில் பாதுகாப்பு அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை போன்ற பல்வேறு அரசு அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயற்படுதல்.
- புதிதாக வாங்கப்பட்ட அண்டெனா கட்டமைப்பு முகாமைத்துவ அமைப்புமுறை (ASMS) மென்பொருள் மூலம் அண்டெனா கட்டமைப்புகளை நிறுவுவதற்கான விண்ணப்பத்தை செயற்படுத்துதல். 2020 ஆம் ஆண்டில் சகல செயற்படுத்துனர்களும் தமது வானலை தளப் பட்டியலை சமர்ப்பித்துள்ளனர். ASMS இல் உள்ள தகவல்களோடு செயற்படுத்துனர்களின் தகவல்களை சரிபார்க்கும் செயற்பாடு 50% தரவுகள் வரை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- உட்கட்டமைப்பை பயன்படுத்தும் திட்டங்களை செயற்படுத்துவதில் அனுமதி பெற்ற தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களுக்கு உதவுதல்.
- தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு பயன்பாடு சம்பந்தமான பொது விழிப்புணர்வு திட்டங்களை நடாத்துதல்.
- கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள் பிரிவின் ஒருங்கிணைப்புடன், இலங்கையில் செயற்படுத்துனருக்கான IPv4/IPv6 பிஜிபி ரூட்டிங் குறித்த உள்நாட்டு பயிற்சி வகுப்பை APT & APNIC உதவியுடன் நடாத்துதல்.
- தொலைத்தொடர்பு கோபுரங்கள் தொடர்பான பொதுமக்கள் முறைப்பாடுகளைக் கையாளுதல்.
- தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு வரிசைப்படுத்தல் தொடர்பாக தனிநபர்கள் / நிறுவனங்கள் சமர்ப்பித்த திட்ட முன்மொழிவுகளை ஆராய்ந்து பரிந்துரைகளைச் செய்து அறிக்கைகள் சமர்ப்பித்தல்.
- அங்கீகார செயற்பாட்டில் உள்ள நடைமுறை சிக்கல்களை நிவர்த்தி செய்வதற்காக அண்டெனா கட்டமைப்புகள் தொடர்பான செயன்முறை கோவையின் திருத்தத்தை நிறைவு செய்ததுடன் பொது சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் பிற தேவைகள் தொடர்பாக உரிய கவனம் செலுத்தி தொலைத்தொடர்பு துறையின் தடையற்ற வளர்ச்சிக்கு உதவுகிறது.
- உயரமான கட்டிடங்களில் தொடர்பு சேவைகளை வழங்குவதற்கான தொழில்நுட்ப தரநிலை வழிகாட்டியைத் தயாரித்தல்.

4G வரிசைப்படுத்தலில் நிலவும் தொழில்நுட்பக் கட்டுப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள அண்டெனா அமைப்பு வழிகாட்டுதலின் அண்டெனா ஸ்ட்ரக்சர் ∴பார்ம் (ASF) கோட்பாட்டினை தளர்த்துவதற்கு ஆணையத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இந்த மாற்றத்தின் மூலம், அருகில் உள்ள ASF நிலையத்திலிருந்து குறைந்தது 2 கிமீ தொலைவில் அமைந்துள்ள இடங்களில் 30 மீட்டருக்கும் அதிகமான உயரம் கொண்ட கோபுரங்களை எழுப்ப எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, நாடு முழுவதும் 4ஜி கவரேஜ் விரிவாக்கத்திற்கு தேவையான கோபுரங்களை நிறுவுதல் துரிதப்படுத்தப்படும்.

கேபள் டிவி சேவைகளின் சட்டவிரோத செயற்பாட்டினை கட்டுப்படுத்தல்

சட்டத்தின் பிரிவு 22(அ)(1) இன் படி, குறித்த நோக்கத்திற்காக ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர அதிகாரத்தின் கீழ் தவிர எந்தவொரு நபரும் எந்தவொரு வளாகத்திலும் கேபள் பணிகளை மேற்கொள்ள முடியாது. குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தின் உதவியுடன் நாடு முழுவதும் சட்டவிரோத கேபள் ரீவி சேவைகளை வழங்கும் செயற்பாட்டினைக் கட்டுப்படுத்துவதில் நெட்வேர்க் பிரிவு ஈடுபட்டுள்ளது.

கேபள் டிவி சேவை வழங்குநர்களின் செயல்பாட்டைக் கண்காணித்தல்

1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 17 ஆவது பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் 22 ஆம் பந்தியின் படி, ஆணைக்குழுவினால் கோரப்படுமிடத்து தொழில்நுட்ப, வணிக மற்றும் பிற தகவல்களை வழங்குவதற்கு செயற்படுத்துனர்கள் கடமைப்பட்டுள்ளனர்.

கேபல் டிவீ செயற்பாடு தொடர்பான மேற்குறித்த தகவல்கள் நெட்வேர்க் பிரிவினால் காலாண்டு அடிப்படையில் சேகரிக்கப்படுவதோடு கட்டுப்பாட்டு அறைகளின் நெரடி பரிசோதனைகளை எழுமாறாக மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்கிறது.

வகை அங்கீகாரம் மற்றும் உபகரண அனுமதி

தொலைத்தொடர்பு சட்டத்தின் பிரிவு 5(q) இன் ஏற்பாடுகளின் அடிப்படையில் தொலைத்தொடர்பு அமைப்புமுறையொன்றுடன் இணைக்கப்படக்கூடிய தொலைத்தொடர்பு சாதனங்களை அங்கீகரிப்பதற்கான அதிகாரத்தை ரீ.ஆர்.சீ.எஸ்.எல். கொண்டுள்ளது. பிரிவு 5(q) இல் அளிக்கப்பட்ட கடமைகளைச் செய்யுமுகமாமக, சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் வழங்கப்பட்ட முறைமை அனுமதிப்த்திரத்தின் 2ம் அட்டவணையில் உள்ள, ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வகை அங்கீகாரம் வழங்கப்பட்ட தொலைத்தொடர்பு சாதனங்களை இணைப்பதற்கு சகல செயற்படுத்துனர்களையும் ஆணைக்குழு கட்டாயப்படுத்தியுள்ளது.

அதன்படி, தொலைபேசி உபகரணங்கள், தொலைநகல் இயந்திரங்கள், PABX (தனியார் தானியங்கி கிளை பரிமாற்றம்), மோடம்கள், கம்பியில்லா தொலைபேசிகள் மற்றும் வாடிக்கையாளர் வளாகத்திலுள்ள வேறு எவ்வகையான உபகரணங்களும், அவை செயற்படுத்துனர்களால், விற்பனையாளர்களால் அல்லது தனிநபர்களால் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட சகல உபகரணங்களும் அனுமதி பெற்ற நெட்வேர்க்குகளுடன் இணைப்பதற்கு வகை அங்கீகாரம் தேவைப்படுகிறது.

டெர்மினல் நெட்வேர்க் கருவிகளுக்கான வகை அங்கீகார நடைமுறைகளை மேற்கொள்வதற்கும், நெட்வேர்க் தொடர்பான அனைத்து உபகரணங்களையும் இறக்குமதி செய்வதற்கான சுங்க / முதலீட்டு சபை / இறக்குமதி

கட்டுப்பாட்டாளருக்கு அங்கீகாரக் கடிதங்களை வழங்குவதற்குமான பொறுப்பு நெட்வேர்க் பிரிவைச் சாரும். இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் பின்வருமாறு சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

- தொலைத்தொடர்பு டெர்மினல் மற்றும் நெட்வேர்க் சாதனங்களின் வகை அங்கீகார நடைமுறைகளை மேற்கொள்ளல்.
- தடை நீக்கல் நோக்கங்களுக்காக சுங்க / முதலீட்டு சபை / இறக்குமதி கட்டுப்பாட்டாளருக்கு அங்கீகார கடிதங்கள் மூலம் பரிந்துரைகளை வழங்குதல்.
- ஐ.ரீ.யூ வின் பரிந்துரைகள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி இலங்கையில் தொலைத்தொடர்பு துறையில் நெட்வேர்க் கருவிகளின் தொழில்நுட்ப தரங்களை பின்பற்றுவதை உறுதி செய்தல்.
- சட்டவிரோத சர்வதேச அழைப்பு தடைகளை தடுப்பதற்காக வாய்ஸ் ஓவர் இன்டர்நெட் புரோட்டொகோல் (VOIP) போர்ட், புரோட்டொகோல் மற்றும் செயலிகளை தடுக்க தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களுக்கு அங்கீகாரங்களை வழங்குதல்.
- தொலைத்தொடர்புத் துறை தொடர்பான விடயங்களில் பொது பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு தொடர்பான பொலிஸ் / குற்றவியல் புலனாய்வுத் துறை (சிஐடி) விசாரணைகளுக்கு உதவுதல்.
- அரச நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவனங்களின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களில் (TECs) பங்கேற்பதுடன் தொலைத்தொடர்பு தொடர்பான தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்குதல்.

விற்பனையாளர் அனுமதிப்பத்திரம்

தொலைத்தொடர்பு சட்டத்தின் பிரிவு 21 இன் பிரகாரம், ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர அதிகாரம் இன்றி எந்தவொரு நபரும் இலங்கையில் எந்தவொரு தொலைத்தொடர்பு உபகரணங்கள் அல்லது வானொலி தகவல்தொடர்பு சாதனங்களையும் வணிக் நோக்கத்திற்காக உற்பத்தி செய்யவோ, இறக்குமதி செய்யவோ, விற்பனை செய்யவோ, ஒப்பந்தம் செய்யவோ, வாடகைக்கு விடவோ, குத்தகைக்கு விடவோ, செயல்முறை விளக்கமளிக்கவோ, பராமரிக்கவோ அல்லது திருத்த வேலைகளை மேற்கொள்ளவோ கூடாது. விற்பனையாளர் அனுமதிப்பத்திரம் என்பது தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவால் மேற்கூறிய செயல்களைச் செய்வதற்கான அங்கீகாரமாகும். விற்பனையாளர் அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பான செயற்பாடுகள் பின்வருமாறாகும்;

- தேவையான நிபந்தனைகள் விண்ணப்பதாரரால் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதை உறுதிசெய்ததன் பின்னர் விற்பனையாளர் அனுமதிப்பத்திர விண்ணப்பங்களை செயன்முறைக்கு உட்படுத்தி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.
- விற்பனையாளர் அனுமதிப்பத்திர அதிகார பிரதேசத்தை நிர்வகித்தல்.
- விற்பனையாளர்கள் உரிமம் தொடர்பான விடயங்களில் பொது பாதுகாப்பு சட்டம் ஒழுங்கு தொடர்பான பொலிஸ் / குற்றவியல் புலனாய்வுத் துறை (சிஐடி) விசாரணைகளுக்கு உதவுதல்.

சட்டவிரோத விற்பனையாளர்களை புலனாய்வுக்கு உட்படுத்துதல்

செல்லிட தொலைபேசிகள் உட்பட தொலைத்தொடர்பு சாதனங்களின் சட்டபூர்வமான விற்பனை நிலையங்களை அமைப்பதை கட்டாயப்படுத்துவதற்கு / ஊக்குவிப்பதற்கு நெட்வேர்க்குகள் பிரிவு பொது விழிப்புணர்வு பிரசாரங்களை மேற்கொள்வதோடு இலங்கை பொலிஸின் உதவியுடன் சட்டவிரோத விற்பனையாளர்களின் புலனாய்வையும் தொடர்ந்து செய்து வருகின்றது.

விற்பனையாளர் அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளில் மாற்றங்களை மேற்கொள்ளல்

சிம் அட்டை உட்செலுத்தப்படத்தக்க சாதனங்களுக்கான சந்தை அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக பொதுமக்களின் பாதுகாப்பு கருதி இந்த சாதனங்களின் இறக்குமதி மற்றும் விற்பனை முறைமைப்படுத்தப்படல் வேண்டும். எனவே, இந்த தேவையை நிவர்த்தி செய்வதற்காக விற்பனையாளர் அனுமதிப்பத்திரத்தின் தற்போதைய நிபந்தனைகள் மாற்றப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

அட்டவணை 02: நெட்வேர்க்குகள் பிரிவால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பான புள்ளிவிபரங்கள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன

விபரம்	2019	2020
வழங்கப்பட்டுள்ள விற்பனையாளர் அனுமதிப்பத்திரங்களின் மொத்த எண்ணிக்கை	845	794
நிறுவப்பட்டுள்ள மொத்த கோபுரங்களின் எண்ணிக்கை	7160	7312
கோபுரம் தொடர்பாக கிடைக்கப்பெற்றுள்ள மொத்த முறைப்பாடுகள்	168	183
கையாளப்பட்ட மொத்த விசாரணைகள் (கோபுரம் தொடர்பாக)	80	26
கோபுரம் தொடர்பான மொத்த நீதிமன்ற வழக்குகள்	0	0
நடாத்தப்பட்ட மொத்த பொதுமக்கள் விழிப்புணர்வூட்டும் நிகழ்வுகள்	03	04
வழங்கப்பட்ட மொத்த புதிய வகை அனுமதிப்பத்திரங்கள்	14	09
வழங்கப்பட்ட மொத்த இறக்குமதி தடைநீக்க அனுமதிகள்	3797	2400
மொத்த தனியார் தடைநீக்க அனுமதிகள்	15	06
வழங்கப்பட்ட மொத்த குறுகிய குறியீட்டு இலக்கங்கள்	78	18

இலக்கம் வழங்குதல்

குறுகிய குறியீட்டு இலக்கங்கள் ஒதுக்குதல்

பொது மக்களால் அல்லது வாடிக்கையாளர்களால் விரைவான அணுகல் தேவைப்படும் சூழ்நிலைகளில் நிறுவனங்களுக்கு குறுகிய குறியீட்டு இலக்கங்கள் ஒதுக்கப்படுகின்றன. நிறுவனத்தின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு இரண்டு வெவ்வேறு குறுகிய குறியீட்டு இலக்க வரிசைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன, அதாவது அரச நிறுவனங்களுக்கு ஒரு இலக்க வரிசை, மற்றொன்று தனியார் துறை நிறுவனங்களுக்கு. அரசாங்க நிறுவனங்களுக்கான நான்கு இலக்க குறுகிய குறியீடுகளை ஒதுக்குவதற்கு குறுகிய குறியீட்டு பரப்பெல்லை 19XX ஒதுக்கப்பட்டுள்ளது. இதேபோல், தனியார் துறை நிறுவனங்களுக்கான நான்கு இலக்க குறுகிய குறியீடுகளை ஒதுக்க குறுகிய குறியீட்டு பரப்பெல்லை 13XX ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசாங்க நிறுவனங்கள்

2020 ஆம் ஆண்டில், 19xx இலக்க வரிசையில் பதினொரு (11) குறுகிய குறியீட்டு இலக்கங்கள் அரசாங்க நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டன. அந்நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் அந்தந்த குறுகிய குறியீட்டு இலக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளன.

அட்டவணை 03: அரசாங்க நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட குறுகிய குறியீடுகள்

நிறுவனம்	குறுகிய குறியீட்டு இலக்கம்
இலங்கை புகையிரத திணைக்களம்	1971
லங்கா சதொச லிமிட்டட்	1998
சுகாதார மேம்பாட்டு பணியகம்	1999
ஏயாபோர்ட் அன்ட் ஏவியேஷன்ஸ் சர்விசஸ் (எஸ்எல்) லிமிட்டட்	1994
பொலிஸ் தலைமையகம்	1997
பொலிஸ் தலைமையகம் - குற்ற புலனாய்வு பிரிவு	1917
தேசிய சேமிப்பு வங்கி	1972
இலங்கை மகாவலி அதிகாரசபை	1976
மத்திய சுற்றாடல் அதிகாரசபை	1981
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்	1940
கொவிட் - 19 எதிர்பாரா பரவலை தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம்	1906

தனியார் துறை நிறுவனங்கள்

2020 ஆம் ஆண்டில், 13xx இலக்க வரிசையில் ஆறு (06) குறுகிய குறியீடுகள் தனியார் துறை நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டன. நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் அந்தந்த குறுகிய குறியீடுகள் பட்டியலிடப்பட்டுள்ள அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 04: தனியார் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட குறுகிய குறியீடுகள்

நிறுவனம்	குறுகிய குறியீட்டு இலக்கம்
லிட்ரோ கேஸ் லங்கா லிமிட்டட்	1311
யூனியன் அஷ்யூரன்ஸ் பீஎல்சீ	1330
டயலொக் அக்சியாட்டா பீஎல்சி	1377 1390
டயலொக் அக்சியாட்டா பீஎல்சி	1355
சம்பத் வங்கி பீஎல்சீ	1345
லாப் கேஸ் பீஎல்சீ	1310

உட்கட்டமைப்பை நிறுவுதல்

தொலைத்தொடர்பு கோபுரங்களின் நிர்மாணம்

நிர்மாணிக்கப்பட்ட தொலைத்தொடர்பு கோபுரங்களின் மொத்த எண்ணிக்கை 7312 வரை அதிகரித்துள்ளதுடன் அதில் 2020 இல் நிர்மாணிக்கப்பட்ட 152 புதிய கோபுரங்களும் அடங்கும்.

உட்கட்டமைப்பை நிறுவுதல் தொடர்பான முறைப்பாடுகளைக் கையாளுதல்

கோபுர நிர்மாணத்திற்கு எதிராக பொது மக்களால் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளுக்காக நெட்வேர்க் பிரிவு 2020 ஆம் ஆண்டில் 80 விசாரணைகளை நடாத்தியது. 2020 ஆம் ஆண்டில் தொலைத்தொடர்பு கோபுரங்கள் தொடர்பான நீதிமன்ற வழக்குகள் எதுவும் இடம்பெறல்லை. 2020 ஆம் ஆண்டில் கோபுரங்கள் தொடர்பான 183 பொது முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

2020 ஆம் ஆண்டில், இத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்த தொழில் வல்லுநர்களின் உதவியுடன் நான்கு (04) பொது விழிப்புணர்வு பிரசாரங்கள் நெட்வேர்க்குகள் பிரிவினால் நடாத்தப்பட்டது. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் முக்கிய நோக்கம் மின்காந்த கதிர்வீச்சு மற்றும் மின்னல் போன்ற அண்டெனா கோபுரங்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து பொது மக்களுக்கு அறிவுறுத்துவதாகும்.

விற்பனையாளர் அனுமதிப்பத்திரம்

2020 ஆம் ஆண்டில் பல்வேறு வகையான தொலைத்தொடர்பு சாதன விற்பனையாளர்களுக்கு 794 விற்பனையாளர் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

வகை அங்கீகாரம் மற்றும் உபகரண அனுமதி

நெட்வேர்க் உடன் தொடர்புடைய உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கான வகை அங்கீகாரம் மற்றும் அனுமதி கடிதங்களை வழங்குவதற்கான கோரிக்கைகளை செயற்படுத்துவது தொடர்பாக பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்ட ஒழுங்குபடுத்தும் செயல்பாட்டை நெட்வேர்க் பிரிவு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

அட்டவணை 05: வழங்கப்பட்ட உபகரணங்கள் அனுமதி மற்றும் அங்கீகார வகைகளின் எண்ணிக்கை

விபரம்	**2020 இல் வழங்கப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை**
உபகரணங்கள் விடுவிப்பு அனுமதி	2400
வகை அங்கீகாரங்கள்	09

ஸ்பெக்ரம் முகாமைத்துவம் பிரிவு

கண்ணோட்டம்

வானொலி அதிர்வெண் ஸ்பெக்ட்ரம் என்பது இயற்கையான வரையறுக்கப்பட்ட வளமாக இருப்பதன் காரணமாக சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தையும் பொருளாதார வளர்ச்சியையும் வளப்படுத்துவதற்கு அதன் பயன்பாட்டின் மூலம் பெறக்கூடிய நன்மைகளை அதிகரிப்பதற்கு முறையாக நிர்வகிக்கப்படுதல் வேண்டும். ஸ்பெக்ட்ரம் தொடர்பான அனைத்து விடயங்களுக்கும் இலங்கை தொலைத்தொடர்பு சட்டத்தால் பணிக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காகவும், வானொலி அதிர்வெண் ஸ்பெக்ட்ரம் ஓர் அரிய தேசிய வளமாக இருப்பதன் காரணமாக அதனை வினைத்திறனுடன் நிர்வகிப்பதற்காகவும் ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவ பிரிவுக்கு ஆணைக்குழுவினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை தொலைத்தொடர்பு சட்டத்தின் பிரிவு 10(அ) இன் பிரகாரம், வானொலி அதிர்வெண் ஸ்பெக்ட்ரம் இன் பாவனையை மற்றும் நிலையான செயற்கைக்கோள் சுற்றுப்பாதை தொடர்பான விடயங்களை நிர்வகிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் அவசியமேற்படும்போது அதிர்வெண்களைப் பயன்படுத்துவதைத் திரும்பப் பெறுவதற்கு, நிறுத்தி வைப்பதற்கு அல்லது தடைசெய்வதற்கான இலங்கையில் உள்ள ஒரே சட்டபூர்வமான அதிகார அலகு இலங்கையின் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (TRCSL) ஆகும்.

வானொலி தகவல்தொடர்பு சேவைகளைப் பயன்படுத்துபவர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கும், வானொலி ஸ்பெக்ட்ரமைப் பாதுகாப்பதற்கும், வானொலி தகவல்தொடர்பு நிறுவல்களால் வெளியிடப்படும் மின்காந்த இடையூறுகளைக் குறைப்பதற்கான விதிகளுக்கு இணங்குவதற்கும் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

செயற்பாடுகள

- சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் வானொலி விதிமுறைகள் (பிரிவு 5) மற்றும் தேசிய முன்னுரிமைகளுக்கு ஏற்ப அதிர்வெண் அலைவரிசைகளை ஒதுக்குதல்.
- ஸ்பெக்ட்ரம் திட்டமிடல்.
- அதிர்வெண்கள், இருப்பிடங்கள், கடத்தும் சக்தி, அழைப்பு அறிகுறிகள் போன்ற பிரதான அதிர்வெண் பதிவேட்டை (எம்.எப்.ஆர்) பராமரித்தல்.
- பிரிவு 22 இல் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதன் மூலம் அதிர்வெண்களை ஒதுக்குதல்
- சட்டவிரோத பயன்பாடு, பயன்படுத்தப்படாத ஸ்பெக்ட்ரம் மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஸ்பெக்ட்ரம் ஆகியவற்றைக் கண்டறிய வானொலி ஸ்பெக்ட்ரம் கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்ளல்.
- வானொலி ஸ்பெக்ட்ரம் பயன்பாடு மற்றும் நாட்டிற்கு சொந்தமான செயற்கைக்கோள் சுற்றுப்பாதையின் பயன்பாட்டை நிர்வகிக்கும் விதிமுறைகள், தொழில்நுட்ப அளவுருக்கள் மற்றும் தரங்களை நிறுவுதல்.
- வானொலி தொடர்பு சாதனங்களுக்கான தொழில்நுட்ப தரங்களை வரையறுத்தல்.
- நாட்டின் சமூக-பொருளாதார இலக்குகளுக்கான ஒப்பீட்டு முக்கியத்துவத்தின் அடிப்படையில் பல்வேறு சேவைகளுக்கு போதுமான ஏற்பாடுகளைச் செய்வதற்காக ஸ்பெக்ட்ரத்தை நிர்வகித்தல்.
- அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப தரநிலைகள் மற்றும் அளவுருக்களுக்கு ஏற்ப வானொலி தகவல்தொடர்பு நிலையங்களின் செயல்பாடு இடம்பெறுகின்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு அனுமதிப்பத்திர இணக்க ஆய்வுகளை மேற்கொள்ளல்.
- வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய சேவைகளுக்கு இடமளிக்கும் வகையில் புதிய ஸ்பெக்ட்ரம் இடத்தை விடுவிப்பதற்காக வானொலி தகவல்தொடர்பு சேவைகளை முறையாகக் குறைப்பதற்கு ஸ்பெக்ட்ரம் மீள் பதித்தல்.
- வானொலி அலைவரிசைகளைப் பயன்படுத்துவதற்கான பிராந்திய மற்றும் சர்வதேச ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பைப் பேணுதல்.
- அங்கீகரிக்கப்பட்ட உமிழ்வுகளின் பொருந்தக்கூடிய தன்மை மற்றும் குறுக்கீடு இல்லாத பயன்பாடு ஆகியவற்றை சரிபார்ப்பதுடன் குறுக்கீடுகளின் மூலத்தைக் கண்டறிந்து அடையாளம் காணுதல் மற்றும் அவற்றைத் தீர்த்தல்.
- ஸ்பெக்ட்ரம் பயன்படுத்தலுக்காக செலுத்த வேண்டிய அனுமதிப்பத்திர கட்டணத்தை அறவிடுதல்.
- அமெச்சூர் வானொலி மற்றும் உலகளாவிய கடல்சார் இடர் பாதுகாப்பு அமைப்பு (GMDSS) பரீட்சைகளை நடாத்துதல்.
- வானொலி டேர்மினல் கருவிகளுக்கான (RTE) வகை அங்கீகாரங்களை வழங்குதல்.

பயன்படுத்தப்படும் சேவை வகைக்கு ஏற்ப வானொலி அதிர்வெண் ஸ்பெக்ட்ரம் பல்வேறு தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. சேவை வகை ஒரு பரந்த வகைப்பாடாக உள்ளதுடன் பிரிவின் பணி அத்தகைய வகைப்பாட்டின் பிரகாரம் அமுல்படுத்தப்படுகிறது.

தொலைத்தொடர்பு சட்டத்தின் பிரிவு 22 இன் பிரகாரம், வானொலி அதிர்வெண் உமிழும் கருவியைப் பயன்படுத்தும் எந்தவொரு நபரும் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப்பத்தித்தை வைத்திருத்தல் வேண்டும். வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டாலே தவிர இதுபோன்ற சம்பவங்களை நிர்வகிக்க விதிக்கப்பட்டுள்ளபடி கட்டணம் செலுத்தியதன் பின்னர் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றது. அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டு அனுமதிப்பத்திரத்துடன் சேர்த்து வழங்கப்படுகின்றன. நிபந்தனைகள் சேவைக்கு சேவை வேறுபடலாம். அத்தகைய நிபந்தனைகள் மீறப்படும் பட்சத்தில் சாதனங்களை முத்திரையிட்டு அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்வதற்கான அதிகாரத்தைக் ரீ.ஆர்.சீ.எஸ்.எல் கொண்டுள்ளது.

நாட்டின் பிரசை ஒருவரின் அல்லது கம்பனியொன்றின் கோரிக்கையின் பேரில் இறக்குமதி அனுமதி வழங்கப்படுவதற்கு முன்னர், உபகரணங்கள் உரிய தரங்களுடன் பொருந்துகின்றனவா என்பதையும், குறித்த சாதனங்களை இயக்குவதற்கு அனுமதிக்கப்பட்ட அதிர்வெண் இருப்பதை உறுதி செய்கின்றது. இந்த நடவடிக்கை அனுமதி பெற்ற ஸ்பெக்ட்ரம் பயனாளிகளுக்கு ஏற்படும் வானொலி குறுக்கீடுகளை குறைக்கிறது.

இருப்பினும், ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவ பிரிவு பயனாளிகளிடமிருந்து அவர்களின் பரிமாற்றங்களை பாதிக்கும் குறுக்கீட்டை உணரும் போதெல்லாம் முறைப்பாடுகளைப் பெறுகிறது. குறுக்கீட்டின் மூலத்தைக் கண்டறிந்து அதற்கான தீர்வு நடவடிக்கைகளை எடுக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

ஆண்டின் செயலாற்றுகை

ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவ பணிகளின் மீள்கட்டமைப்பு

ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவ பிரிவானது அதன் பணிகளின் சீரான செயல்பாட்டிற்காக மறுசீரமைக்கப்பட்டுள்ளது. அதுதவிர, நேரலை வாடிக்கையாளர் முகாமைத்துவ முறைமையின் ஊடாக வாடிக்கையாளர் கோரிக்கைகளை கையாளுவதற்கு உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பங்குதாரர்களுடன் மின்னணு முறையில் தொடர்பு கொள்வதற்காக அரை-தன்னியக்க ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெக்ட்ரம் கட்டண மீளமைப்பு அடங்கலாக வானொலி ஸ்பெக்ட்ரம் அனுமதிப்பத்திர விதிகளை அறிமுகப்படுத்துதல்

அலைவரிசை அனுமதிப்பத்திரக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்ட அனைத்து பயனர்களுக்கும் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (சில அனுமதிப்பத்திரங்களுக்கான ஸ்பெக்ட்ரம் அனுமதிக் கட்டணம் திருத்தப்பட்டுள்ளதோடு அது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது). தற்போதைய ஸ்பெக்ட்ரம் கட்டணங்களில் சில 20 ஆண்டுகளுக்கும் மேலாக திருத்தப்படவில்லை. முன்மொழியப்பட்ட ஸ்பெக்ட்ரம் கட்டண திருத்தத்திற்கு ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டது. பூர்த்தி செய்யப்பட்ட வரைவு ஆவணம் சட்ட அனுமதிக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

IMEI சரிபார்ப்பு அமைப்பை மேம்படுத்துதல்

IMEI சரிபார்ப்பு முறைமையானது சந்தையில் விற்கப்படும் தொலைபேசிகள் இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டவையா என்பதை உறுதிப்படுதிக் கொள்வற்கு மக்களுக்கு உதவுகிறது. இம்முறைமை செயற்பாட்டுத் திறனானது குறைந்தே காணப்பட்டது மேலும் சகல வானொலி தொலைதொடர்பு சாதனங்களையும் உள்ளடக்கிய ஒப்புதல் அளிப்பு செயற்பாட்டு முறைமையொன்றை மேம்படுத்துவதற்கான பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விவரக்கூற்று மற்றும் வடிவமைப்புத் தேவைப்பாட்டு மாதிரி நிர்வாகப் பிரிவுக்கு அனுப்பப்பட்டது. பல்வேறு நிர்வாக ரீதியான சிக்கல்கள் மற்றும் நாட்டில் காணப்படுகின்ற கொவிட் 19 நிலைமை காரணமாக இது தொடர்பான பெறுகை செயற்பாட்டை நிறைவு செய்வது தாமதமாகியது. எனவே இப்பணி முன்னேற்ற மதிப்பீடு மீளாய்வின் போது இப்பணி மூன்றாவது காலண்டில் தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்கு மாற்றப்பட்டது.

பின்னர் இம்முறைமைன் ஆரம்பநிலை பதிப்பு ஒன்று தகவல் தொழில்நுட்பப் பிரிவின் உதவியுடன் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டதுடன் அப்முறைமை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவால் பரீட்சிக்கப்பட்டது. அது நல்ல விதமாக இயங்கியமையால், வுசுஊளுட ஆனது மேற்கொள்ளப்பட்டுவரும் பெறுகை செயற்பாடுகளை ரத்து செய்ய முடிவு செய்தது. பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய இம்முறைமைய மேலும் மேம்படுத்த முடிவு செய்யப்பட்டது.

ஆய்வு கூடமொன்றை நிறுவுதல்

கொள்வனவு செய்யப்பட வேண்டிய கருவிகள் அடையாளங்காணப்பட்டு கருவிகளின் பெயர்பட்டியல் நிர்வாகப் பிரிவிடம் கையளிக்கப்பட்டது. அமைச்சுகள் மாற்றப்பட்டதன் காரணமாக செயற்பாடு தாமதடைந்ததுடன், 2021ஆம் ஆண்டில் இது தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

அடுத்த 5 வருடத்துக்கான ஸ்பெக்ரம் பாதை வரைபடத்தை / 5G ஸ்பெக்ரம் திட்டத்துக்கான ஆயத்தம்

TRCSL ஆரம்பநிலை 5G பரீட்சிப்புகளை சகல செல்லிடத்தொலைபேசி செயற்படுத்துநர்கள் ஊடாக ஆரம்பித்ததுடன். வணிகரீதியான 5G சேவைகளுக்கு முன்னர் பரீட்சிப்புக்காக 3.5 புரோட்பேண்ட் ஐ ஒதுக்கியது

மேலும் தேசிய 5G ஸ்பெக்ரம் கொள்கையொன்றை தயாரிப்பதற்கான பணிகளும், இலங்கையில் வணிகரீதியான 5G சேவைகளை நோக்கி நகர்வதற்கான தந்திரோபாய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இப்பயனுள்ள முயற்சிகள் புதிய 5G உடன் தொடர்பான பொருட்கள் மற்றும் சேவைகளை கண்டுபிடிக்கவும், சர்வதேச 5G சந்தைக்கு செல்வதற்கு வழியமைக்கவும், தொழிற்சாலைகள் 5G அனுகூலங்களை அடையவும் தேவையான களத்தை அமைத்துக் கொடுக்கும்.

இவ்விலக்கை பூர்த்தி செய்வதற்கு சர்வதேச தொலைத்தொடர்பு யூனியனிடமிருந்து (ITU) நிபுணர்களின் உதவியை TRCSL கோரியது. சர்வதேச தொலைத்தொடர்பு யூனியனிடமிருந்து பெறப்பட்ட நிபுணர்களின் தகைமை ஆவணங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டதுடன், TRCSL வேறு சில கூடுதல் தகவல்கள் உட்பட நிபுணர்களின் அதிக எண்ணிக்கையிலான தகைமை ஆவணங்களைக் கோரியது. நிலவும் கோவிட் -19 தொற்றுநோய் நிலைமை காரணமாக, சர்வதேச தொலைத்தொடர்பு யூனியனிடமிருந்து எங்களுக்கு சரியான பதில் கிடைக்கவில்லை. எனவே, இந்த விடயம் தொடர்பாக சுவிட்சர்லாந்தில் உள்ள சர்வதேச தொலைத்தொடர்பு யூனியன் செயலகத்துடன் இணைப்பாக்கங்களை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. முன்னேற்ற மதிப்பாய்வின்போது, இந்நிகழ்ச்சித்திட்டத்தை 2021 ஆம் ஆண்டுவரை தொடர்வதற்காக ஏனைய சர்வதேச நிறுவனங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களிடமிருந்து நிபுணத்துவ உதவிகளைப் பெற்றுக்கொள்ள பணிப்பாளர் நாயகம் முடிவு செய்தார்.

ஒளிபரப்பு உரிம முகாமைத்துவத்தை அறிமுகம் செய்தல்

ஒளிபரப்பு உரிம முகாமைத்துவம் தொடர்பாக ஊடக அமைச்சுடன் பல கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. புதிய உரிமம் விண்ணப்பங்கள் மற்றும் தற்போதுள்ள வலையமைப்புகளை விரிவுபடுத்துவது தொடர்பாக ஆராய்ந்து பரிந்துரைகளை செய்வதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது.

ஒப்புதல்களை ஒழுங்குபடுத்தும் விடயத்தில் ஏனைய அரச நிறுவனங்களுடன் இணைந்து செயற்படல்

ஒப்புதல் செயல்முறையை நெறிப்படுத்தும் வகையில் சுங்கத் திணைக்களத்துடன் ஒருங்கிணைவ பூர்த்தியாக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக பிரச்சினைகளைத் தீர்க்கும் விடயத்தில் ஏனைய சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

தொலைகாட்சி ஒளிபரப்பினை இலக்க முறைப்படுத்தல் (டிஜிட்டல் மயமாக்கலுக்கான) முயற்சிகள்

இலங்கைக்கு ஏற்ற சிறந்த தொழில்நுட்பங்களுக்கான ஆலோசனையாகவும், இலவச அணுகல்.்பார்வைக்கான சிறந்த மாற்று அணுகுமுறையாகவும் இலக்கமுறை தொலைகாட்சி மற்றும் இலக்கமுளை வானொலி ஒலிபரப்பு ஆகியன தொடங்கப்பட்டன. தொலைக்காட்சி ஒளிபரப்பின் இலக்க மயமாக்கல் அடுத்த ஆண்டு ஊடக அமைச்சின் ஒத்துழைப்புடன் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டதுடன், இந்த பணியை முடிக்க அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட்டது.

அதிர்வெண்கள் செயற்திட்டமும் சீர்திருத்தங்களும்

அதிர்வெண் ஒதுக்கீட்டின் தேசிய அட்டவணை தயாரிக்கப்பட்டு, பொதுமக்களின் தகவலுக்காக இணையதளத்தில் வெளியிடப்பட்டது. பிரதான அதிர்வெண் பதிவு கணினி முகாமைத்துவ தரவுத்தள முறைமையினால் இற்றைப்படுத்தப்பட்டது.

நடமாடும் .்நிலையான சேவைகளுக்கான 2600 மெகா ஹெர்ட்ஸ் வீச்சு ஒதுக்கீடு பூர்த்தி செய்யப்பட்டது. இவ்வருடத்தில் முப்படைகள் மற்றும் இலங்கை காவல்துறையினருக்கான அலைவரிசை ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும், கல்வி அமைச்சுடன் ஒருங்கிணைந்து கல்வி அடிப்படையிலான தொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசைகளும் கல்வி நோக்கங்களுக்காக நாடளாவிய தொலைத் தொடர்பு வலைப்பின்னல் அமைப்பதற்கான அதிர்வெண் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு கடல்சார் உபகரணங்கள், ட்ரோன்கள், ஜிபிஎஸ் சாதனங்களை இறக்குமதி செய்வதற்கான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியது. ஒளிபரப்புச் சேவைகளில் அதிர்வெண் முன்பதிவுகளை ரத்து செய்வது தொடர்பான விசேட விதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அதிர்வெண் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்

அட்டவணை 06: ஸ்பெக்ட்ரம் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை

சேவை வகை	**ஆண்டு**		
	2018	2019	2020
நிலையான சேவை	167	160	159
ஒளிபரப்பு சேவை (தொலைக்காட்சி மற்றும் வானொலி)	39*	49	41
டிரங்கிங் / பேஜிங் / சிட்டிசன் பேண்ட்	10	07	5/1
தரவு / வானொலி டெலிமெட்ரி சேவை	20/28	45/47	18/23
வானூர்தி மற்றும் கடல்சார் சேவைகள்			
(i) விமான நிலையங்கள்	74	69	67
(ii) துறைமுங்கள்	94	121	105
(iii) கடல் நடமாடும்	1041	575	174
(iv) வானூர்தி நடமாடும்	12	08	08
தனியார் நடமாடும் வானொலி சேவை	361	193	159
அமெச்சூர் வானொலி	33	64	46

* *பிரதான அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை மட்டுமே*

அட்டவணை 07: பெறப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள

சேவை	**பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை**		
	2018	2019	2020
ரீவி மற்றும் ஒலி ஒளிபரப்பு	5	5	2
எனைய சேவைகள்	32	22	23

அட்டவணை 08: வழங்கப்பட்ட அனுமதி கடிதங்களின் எண்ணிக்கை

சேவை வகை	**ஆண்டு**		
	2018	2019	2020
சி.டி.எம்.ஏ உள்ளிட்ட நிலையான சேவை	506	765	781
ஒலிபரப்பு சேவை (ரீவி மற்றும் வானொலி)	57	81	90
கையடக்க தொலைபேசி சேவைகள்			
(i) விநியோகத்தர் அனுமதிப்பத்திரம்	6526	7263	5010
(ii) நடமாடும் செயற்படுத்துனர்கள்	757	11011	1030
(iii) தனியார் நடமாடும் வானொலி	190	155	95
தரவு சேவை / வானொலி டெலிமெட்ரி	173	130	113
செயற்கைக்கோள் சேவை	153	222	138+
அமெச்சூர் வானொலி	21	78	20
குறைந்த சக்தி சாதனங்கள்	1036	1215	466*
கடல்சார் தொடர்பாடல்	-	-	118

* தற்காலிக தரவு

அதிர்வெண் கண்காணிப்பு மற்றும் புலனாய்வு

வானொலி அதிர்வெண் ஸ்பெக்ட்ரம் கண்காணிப்பு என்பது ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவ நடவடிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும். 22 ஆம் பிரிவு அனுமதிப்பத்திரத்தை வழங்கும்போது குறுக்கீடு இல்லாத வானொலி தகவல்தொடர்பு முறையின் உத்தரவாத பயன்பாட்டை உறுதி செய்கிறது. ஆர்.எப் டிரான்ஸ்மிற்றர்கள் அலைவரிசை உமிழ்வுகளில் இருந்து போலியான மற்றும் தேவையற்றவற்றை உருவாக்குவதால் குறுக்கீடு இல்லாமல் வானொலி தகவல்தொடர்பு சேவையைப் பயன்படுத்துவது மிகவும் கடினமாகும். மேலும், அவை உணர்திறன் பெறுநர்களை செறிவூட்டலுக்குள் செலுத்துவதுடன் இது எதிர்பாராத குறுக்கீடுகளை ஏற்படுத்தும். எனவே, குறுக்கீட்டைக் கண்டறிதல் மற்றும் குறைப்பது மிகவும் சவாலான பணியாக இருப்பதுடன் அவற்றைக் கண்டறிவதற்கு நவீன கருவிகளின் தேவை அவசியமாகும். ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவ பிரிவானது கொழும்பு, கதிரான மற்றும் கண்டியில் மூன்று பிராந்திய கண்காணிப்பு மையங்களை (ஆர்.எம்.சி) பராமரிக்கிறது. மேலும், இந்த நோக்கத்திற்காக தொலை கண்காணிப்பு நிலையமொன்றை (ஆர்.எம்.எஸ்) யக்கலவில் பராமரிக்கின்றது. ரீ.ஆர்.சீ.எஸ்.எல் அதன் நடமாடும் நடவடிக்கைகளுக்காக நவீன ஸ்பெக்ட்ரம் கண்காணிப்பு வாகனத்தை வைத்திருக்கின்றது. இந்த முறைமையால் அனைத்தையும் தொலைவிலிருந்து அணுகலாம்.

ஒரு நாடு தழுவிய கண்காணிப்பு முறைமை / புதிய தன்னியக்க ஸ்பெக்ரம் முகாமைத்துவ முறைமை

இவ்விரண்டு செயல்பாடுகளையும் ஒரே நேரத்தில் நிறைவு செய்ய தீர்மானிக்கப்பட்டது. மேலும், ஒருங்கிணைந்த அதிர்வெண் முகாமைத்துவம் மற்றும் நாடுதழுவிய கண்காணிப்பு முறைமை ஒன்றுக்கான பெறுகை செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த வேலை 2021 ஆம் ஆண்டிலும் தொடரும்.

வானொலி மற்றும் தொலைத்தொடர்புகள் முடிவிட உபகரணங்களுக்கான வகை ஒப்புதல் விதிகள் 2020 அறிமுகப்படுத்தல் மற்றும் அமுலாக்கல் (RTTE)

இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவானது வானொலி மற்றும் தொலைத் தொடர்புகள் முடிவிட உபகரணங்களுக்கான வகை ஒப்புதல் விதிகள் அறிமுகப்படுத்தல் மற்றும் அமுல்படுத்தலுக்கான புதிய வகை ஒப்புதல் ஒழுங்குவிதியை 2020 டிசம்பர் 16ஆந் திகதி நடைமுறைக்கு வரும்விதத்தில் வெளியிட்டது. புதிய வகை ஒப்புதல் விதிமுறையானது இறக்குமதி, சந்தைப்படுத்தல், உற்பத்தி மற்றும் இலங்கையில் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள அனைத்து வகையான RTTE மீதும் பிரயோகிக்கப்படும். பழைய முறையின்கீழ் 2020 டிசம்பர் 16ஆந் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்ட அனைத்து வகை ஒப்புதல் சான்றிதழ்களும் 2021 யூன் 17ஆந் திகதியுடன் தானாகவே காலாவதியாகிவிடும்.

1. RTTE வகை ஒப்புதல் விதிகளின் முக்கிய நோக்கங்கள்:
    i. ஆர்.டி.டி.ஈ இன் வகை ஒப்புதலுக்கான செயல்முறையை வரையறுத்தல்
    ii. ஆர்.டி.டி.ஈ இன் இயக்க அதிர்வெண் இலங்கையின் தேசிய அதிர்வெண் ஒதுக்கீட்டு அட்டவணை (NFAT) உடன் இணங்குவதை உறுதிசெய்தல்.
    iii. ஆர்.டி.டி.ஈ ஆனது ஏனைய வானொலி தகவல் தொடர்பு சேவைகள் அல்லது தொலைத்தொடர்பு வலைப்பின்னல்கள் இடையூறு விளைவிக்காமல் இருப்பதையும் மேலும் வானொலி அதிர்வெண் குறிக்கீடுகளின் வெளிப்புற ஆதாரங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாமல் இருப்பதையும் உறுதி செய்வதாக அமைதல்
    iv. ஆர்.டி.டி.ஈ ஆல் உருவாக்கப்படும் மின்காந்தக் கோளாறுகள் அருகாமையில் செயல்படும் பிற உபகரணங்களின் செயல்பாட்டைச் சிதைக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவதுடன் அருகிலுள்ள பிற உபகரணங்களின் செயல்பாட்டின் விளைவாக ஏற்படக்கூடிய மின்காந்தக் கோளாறுகளுக்கு ஆர்.டி.டி.ஈ ஏற்றுக்கொள்ளக்கூடிய காப்புமுறையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    v. பெறுகைக்கு முன்னர் இணைப்பு இ மற்றும் ஆர்டிடிஇ விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய தரத்திற்கு ஆர்.டி.டி.ஈ இணங்கி நடப்பதை உறுதி செய்ய வேண்டியதன் தேவைப்பாட்டை பயனாளிகள் அறிந்து கொள்ளக்கூடியதாக இருத்தல்.
    vi. மின் அபாயங்கள் அல்லது ஆர்டிடிஈ பயன்பாட்டின்போது எழும் பிற தீங்கு விளைவிக்கும் நச்சுப்புகைகளிலிந்து இறுதி பயனர்களின் உடல் நலம் மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்தல்
    vii. இலங்கையில் உள்ள தொலைத்தொடர்பு வலையமைப்புகளுடன் பொருந்தாத ஆர்.டி.டிஈ இருந்து பயனர்களைப் பாதுகாத்தல்
    viii. ஆர்.டி.டி.ஈ வழங்குவதில் போட்டித்தன்மையை ஏற்படுத்தல் மற்றும் பயனாளிகக்கு மலிவு விலையில் பல்வேறு வகையான ஆர்.டி.டி.ஈ கிடைப்பதை ஊக்குவித்தல்.
2. வகை ஒப்புதல் விதிகளில் சேர்க்கப்பட்டுள்ள சில முக்கியமான உருப்படிகள்:
    i. ஒரு ஆர்டிடிஈ வகை ஒப்புதல் விதிகளின் கீழ் இரண்டு ஒப்புதல் திட்டங்கள் உள்ளன:
        - நிலையான வகை ஒப்புதல்: இதற்கு முன்னர் வகை ஒப்புதல் அளிக்கப்படாத் ஏதேனும் ஆர்.டி.டி.ஈ (வானொலி மற்றும் தொலைத்தொடர்புகள் முடிவிட உபகரணங்கள்)
        - எளிமைப்படுத்தப்பட்ட வகை ஒப்புதல்: ஏதேனும் ஆர்.டி.டி.ஈ ஆணைக்குழுவினால் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டிருக்கும் போது இந்த செயல்முறைக்கு சோதனை அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டியதில்லை இருப்பினும், ஒரு பிரதிநிதி மாதிரி தேவைப்படும்.

வகை ஒப்புதல் சான்றிழ்களை வழங்குவதற்காக வகை ஒப்புதல் கட்டண முறைமை ஒன்று அறிமுகம் செய்யப்பட்டது

i. விண்ணப்பத்துடன் சேர்த்து ஒரு மாதிரியும் சமர்ப்பிக்கப்படும். ஆணைக்குழுவானது வகை ஒப்புதலுக்காக விண்ணப்பிக்கபட்டுள்ள ஆர்டிடிஈ இன் இரண்டு மாதிரி அலகுகளை வைத்திருக்கும் உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது. வுகை ஒப்புதல் விண்ணப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்படும் மாதிரிகள் இரண்டு வருட காலத்துக்கு வைத்துக்கொள்ளப்படும்

ii. இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தகைமை பெற்ற ஆய்வுகூடங்களின் ஐளுழு.். ஐநுஊ 17025 ஐடுயுஊ தகைமை பெற்ற ஆய்வுகூடங்கள் அறிக்கைகளை மாத்திரமே ஏற்றுக்கொள்கிறது. விண்ணப்பத் திகதியிலிருந்து 3 மாதங்களுக்கு மேற்படாத வகையில் பரிசோதனையறிக்கை காணப்படல் வேண்டும்.

iii. அனைத்து வகை ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆர்டிடிஈ அதன் மேலுறையில் நிரந்தரமாக பொறிக்கப்பட்ட ஒரு முத்திரை காணப்படும். முத்திகைள் இலக்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் கொள்வனவு செய்யப்படல் வேண்டும்.

iv. நுிலையான வகை ஒப்புதலுக்கான காலம் 30 வேலை நாட்களாகும். மேலதிக கட்டணத்தை செலுத்தி வகை ஒப்புதல்களை அவசரமாக பெற்றுக்கொள்ளும் வசதியும் காணப்படுகின்றது.

v. வகை ஒப்புதல் சான்றிதழின் செல்லுபடியாகும் காலம் 4 ஆண்டுகளாகும்.

vi. பின்வரும் ஆர்டிடிஈ வகை ஒப்புதலிலிருந்து விலக்கு அளிக்கப்படலாம்.

- தொலைகாட்சி சேய்மை கட்டுப்பாட்டுக்கருவி, கராஜ் கதவு திறப்பான் போன்ற குறுகிய தூர இன்ப்ராரெட் சேய்மை கட்டுப்பாட்டு கருவிகள்.
- றுஐகுஐ, ப்ளூடுத் போன்ற குறுகிய தூர ரேடியோ தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் வு ஆர்டிடிஇ உட்பொதிக்கப்பட்ட டெஸ்க்டாப் கம்ப்யூட்டர்கள் மற்றும் மடிக்கணினிகள்
- 50 மெகாவாட்டிற்கு கீழ் உள்ள டிரான்ஸ்மிட்டர் கருவி
- கார் வழிசெலுத்தல் அலகுகள், புளூடுத் மற்றும் வைபை.். போன்ற குறுந்தூர தொழில்நுட்பமான கார் சேய்மை கட்டுப்பாடுகள் போன்றவற்றில் நிறுவப்பட்டுள்ள ஆர்டிடிஈ.
- பிரிவு 27 இன் கீழ் சுவுவுநு யை தமது தனிப்பட்ட பயன்பாட்டிற்காக நாட்டிற்கு கொண்டு வந்த நபர்கள்.

ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் அமெச்சூர் வானொலி செயற்படுத்துனர் சான்றிதழ் பரீட்சை

அமெச்சூர் வானொலி செயற்பாட்டு தகைமைச் சான்றிழ்களை வழங்குவதற்கான பொறுப்பை ஆணைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளடன், மூன்று பரீட்சைகளை பரீட்சைத் திணைக்களத்துடன் உதவியுடன் நடாத்துகிறது ளை வழங்கும் பொறுப்பில் உள்ள ஆணையம் தேர்வுத் துறையின் உதவியுடன் மூன்று தேர்வுகளை நடத்துகிறது. அமெச்சூர் ரேடியோ ஆபரேட்டர் உரிமம் மூன்று வகைகளைக் கொண்டுள்ளது: அமெச்சூர் வானொலி செயற்படுத்துனர் சான்றிதழ் மூன்று வகைப்படும்.

1. அமெச்சூர் ரேடியோ ஆபரேட்டரின் உயர் வகுப்பு உரிமம்
2. அமெச்சூர் ரேடியோ ஆபரேட்டரின் பொது வகுப்பு உரிமம்
3. அமெச்சூர் ரேடியோ ஆபரேட்டரின் தொடக்க வகுப்பு உரிமம்

பதினான்கு (14) வயதுக்கு மேற்பட்ட எவரும் பரீட்சைக்குத் தோற்ற தகுதியுடையவர். தேர்வில் பரீட்சை கட்டாய இரண்டு எழுத்து வினாத்தாள்களைக் கொண்டுள்ளது. ஒன்று மேம்பட்ட மின் தொழில்நுட்பமும் வானொலி தொலைதொடர்புகளும் மற்றது உரிமம் வழங்கும் நிபந்தனைகள், செயல்பாடுத்தும் வழிவகைகளும் நடைமுறைகளும் உயர்தர வகுப்பு எழுத்துப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு மாத்திரம் மோர்ஸ் கோட் பற்றிய செய்முறைப் பரீட்சையொன்றும் நடைபெறும். பரீட்சைகள் வழக்கமாக ஆங்கில மொழியில் வருடத்திற்கு ஒரு முறை நடாத்தப்படும்.

குறித்த விண்ணப்பப்படிவங்களை ஆணைக்குழுவின் காரியாலத்திலோ அல்லது இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின். ஏனைய விபரங்களை ஆணைக்குழுவின் அலுவலகத்திலிருந்தோ அல்லது பரீட்சை திகதிக்கு நான்கு வாரங்களுக்கு முன்னதாக வெளியிடப்படும் வர்த்தமானியிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம். "இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு முறை ஆணையம்" என்ற பெயரில் பணமாவோ அல்லது சேமிப்பு அல்லது கடனட்டை மூலமாகவோ அல்லது வங்கி வரைவோலையாகவோ எந்தவொரு வங்கியிலும் பரீட்சைக் கட்டணத்தை செலுத்துவதன் மூலம் பாடத்திட்டத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பரீட்சைக் கட்டணங்கள்:

பரீட்சை வகை	**பகுதி 1க்கான கட்டணம் (ரூ)**	**பகுதி 2 க்கான கட்டணம் (ரூ)**
உயர் தர வகுப்பு	250.00	125.00
பொது வகுப்பு	125.00	-
தொடக்க நிலை வகுப்பு	125.00	-

குறிப்பு: அரசு வரி மற்றும் வரி விதிப்பு உள்ளடங்கப்பாடாத.

இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு கடந்த ஆண்டு ஒரு அமெச்சூர் 156 பரீட்சார்த்திகள் கலந்துகொண்டனர். பின்வரும் அட்டவணை பரீட்சை முடிவுகள் பற்றிய தகவல்களைக் காட்டுகிறது. 18 மாணவர்களில், 10 மாணவர்கள் (55.5%) அமெச்சூர் வானொலி செயற்படுத்துநர் உயர் வகுப்பு உரிமத்தைப் பெற்றுக்கொண்டனர். 79 மாணவர்களில், 39 மாணவர்கள் (49%) அமெச்சூர் வானொலி செயற்படுத்துநர் பொது வகுப்பு உரிமத்தைப் பெற்றனர். 65 மாணவர்களில், 21 மாணவர்கள் (32%) முறையே அமெச்சூர் வானொலி செயற்படுத்துநர் தொடக்க வகுப்பு உரிம் பரீட்சையில் சிந்தியடைந்துள்ளனர்.

அமெச்சூர் வானொலி செயற்படுத்துநர் உரிம பரீட்சைப் பெறுபேறுகள

வகை	**உயர் தர வகுப்பு**	**பொது வகுப்பு**	**தொடக்க வகுப்பு**
சித்தியடைந்தோர்	10	39	21
சித்தியடையாதோர்	2	7	30
சமுகமளிக்காதோர்	6	27	14
மொத்தம்	18	73	65

போட்டி பிரிவு

கண்ணோட்டம்

நுகர்வோர் மற்றும் செயற்படுத்துனர்களின் ஆர்வத்தை பூர்த்தி செய்யும் திறமையான, முழுமையான தொலைத்தொடர்பு சேவையை வழங்கும் நோக்கத்திற்காக ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை போட்டி பிரிவு கையாள்கின்றது. நியாயமான கட்டணங்கள் மற்றும் தரமான சேவையைப் பேணும் அதே சந்தர்ப்பத்தில், இந்த பிரிவு கட்டண விடயங்கள், உள்ளக இணைப்பு சேவைகள், தொழில் தகவல்களை வெளியிடுதல் மற்றும் செயற்படுத்துனர்களின் செயற்திறனை பகுப்பாய்வு செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குகிறது. வசதி குறைந்த பகுதிகளுக்கு மற்றும் சேவை வழங்கப்படாத பகுதிகளுக்கு தொலைத்தொடர்பு வசதிகளை வழங்குவதற்கு செயற்படுத்துனர்களைத் தூண்டுவதும் இந்த பிரிவின் ஒரு அம்சமாகும். இந்த பிரிவினால் தொலைத்தொடர்பு வரி, சர்வதேச தொலைத்தொடர்பு செயற்படுத்துனர் வரி, செல்லுலர் கோபுர வரி, செல்லிட தொலைபேசி குறுந்தகவல் வரி மற்றும் செஸ் ஆகிய வரிகள் சேகரிக்கப்படுகின்றன. புதிய சேவைகளை வழங்கும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான செயற்படுத்துனர்களின் புதிய செயற்திட்டங்களில் ஈடுபடுவதற்காக இந்த நாட்டிற்கு வருகை தரும் வெளிநாட்டு நிபுணர்களின் விசாக்கள் இந்த பிரிவால் செயற்படுத்தப்படுகின்றன.

செயற்பாடுகள்

- உரிமம் பெற்ற செயற்படுத்துனர்களின் நிதி மற்றும் செயற்பாட்டு செயலாற்றலைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் போக்குகளைக் கண்காணித்தல்.
- தொழில்துறையின் புள்ளிவிபர தகவல்களை சேகரித்து ஆய்வு செய்தல்.
- தொழில்துறையிலிருந்து அரசாங்க வரி / கட்டணங்களை சேகரித்தல். (தொலைத்தொடர்பு வரி, செஸ், செல்லுலர் கோபுர வரி மற்றும் கையடக்க குறுஞ் செய்தி சேவைகள் வரி).
- இலங்கையில் தொலைத்தொடர்பு சம்பந்தமான திட்டங்களுடன் தொடர்புடைய வெளிநாட்டு நிபுணர்களின் விசாக்களைப் பெற்றுக்கொள்ள வசதி செய்தல்.
- உள்ளக இணைப்பு தொடர்பான பிரச்சினைகள் எழும்போது அது தொடர்பான தகவல்களை சேகரித்து சிக்கல்களைக் கையாளுதல்.
- கட்டணத்தை ஒழுங்குபடுத்துதல்.
- தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களின் உதவியுடன் வசதிகள் வழங்கப்படாத மற்றும் பின்தங்கிய பகுதிகளில் தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களை நடாத்துதல்.
- தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கழிவு முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.
- சர்வதேச தொலைத்தொடர்பு வரி அறவீடுகளை முறையாகவும் உரிய நேரத்திலும் மேற்காள்வதை உறுதி செய்தல்.
- அனுமதி பெற்ற செயற்படுத்துனர்களின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளை பெற்றுக்கொள்ளல்.
- PSTN செயற்படுத்துனர்களின் வருமானம், இலாப-நட்டம் மற்றும் முதலீடுகள் தொடர்பாக பகுப்பாய்வு செய்தல்.

2020ம் ஆண்டின் செயலாற்றல்

சந்தாதாரர் தளம்

2020 நவம்பர் 30ம் திகதியில் கையடக்க மற்றும் நிலையான அணுகல் சந்தாதாரர் தளம் 31,352,417 ஆக இருந்தது. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2019 ஆம் ஆண்டில் செல்லுலர் கையடக்க செயற்படுத்துனர்களின் சந்தாதாரர் எண்ணிக்கையில் அதிகரிப்பையும், நிலையான அணுகல் செயற்படுத்துனர்களை நோக்குகையில் 2018 ஆம் ஆண்டுன் ஒப்பிடும்போது சந்தாதாரர் எண்ணிக்கையில் குறைவையும் காண்பிக்கின்றது.

அட்டவணை 09: கையடக்க மற்றும் நிலையான அணுகல் சந்தாதாரர் தளங்களின் எண்ணிக்கை

வகை	2018	2019	2020*	மாற்றத்தின் சதவீதம்	
				2018-2019	2019-2020*
கையடக்க	32,528,104	32,884,099	28,547,381	1%	-13%
நிலையான அணுகல்	2,484,616	2,299,767	2,604,177	-7.4%	13%
மொத்தம்	35,012,720	35,183,866	31,151,558	0.5%	-11.4%

* தற்காலிக தரவு

ஒரு பயனாளிக்கான சராசரி வருமானம் (ARPU)

கையடக்க செயற்படுத்துனர் வகைக்கான 2020 ஆம் ஆண்டிற்கான ARPU (ஆண்டுக்கு) ரூ. 4,718 (மதிப்பிடப்பட்டுள்ளது) ஆக இருந்ததுடன் அதனை 2019 இன் ARPU உடன் ஒப்பிடும்போது 6% குறைவைக் காட்டியது. அதேபோல், நிலையான அணுகல் செயற்படுத்துனர் வகை கடந்த ஆண்டை விட 1% வீழ்ச்சியைக் காட்டியது.

அட்டவணை 10: கையடக்க மற்றும் நிலையான அணுகல் செயற்படுத்துனரின் ARPU


வகை	2016	2017	2018	2019	2020*	மாற்றத்தின் சதவீதம்			
						2016-2017	2017-2018	2018-2019	2019-2020*
கையடக்க	5,258	4,977	4,591	4,441	4718	-5%	-7.7%	-3.3%	6%
நிலையான அணுகல்	21,691	22,911	30,745	30,171	29,834	6%	34%	-1.9%	-1%

* தற்காலிக தரவு

தொலைத்தொடர்பு வரி (TL)

இலங்கை அரசாங்கத்தால் 2011 ஆம் ஆண்டில் தொலைத்தொடர்புத் தொழில்துறைக்கான தொலைத்தொடர்பு வரியை "ஒற்றை வீத வரி" என அறிமுகப்படுத்தப்பட்டதுடன் ஆரம்பத்தில் வரி விகிதம் விநியோக மதிப்பில் 20% ஆக இருந்தது. புரோட்பேண்ட் சேவைகளை ஊக்குவிக்கும் நோக்கில் 2013 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து 10% சலுகை தொலைத்தொடர்பு வரி வீதம் இணைய சேவைகளுக்கு விதிக்கப்பட்டது. ஏனைய தொலைத்தொடர்பு சேவைகளின் தொலைத்தொடர்பு வரி விகிதம் மாறாமல் இருந்தது. சனவரி 2014 முதல் அமுல்படுத்தப்பட்ட 20% வீத தொலைத்தொடர்பு வரி 25% ஆக அதிகரிக்கப்பட்டதோடு, இணைய சேவைகளுக்கான 10% வீத தொலைத்தொடர்பு வரி மாறாமல் இருந்தது. அதைத் தொடர்ந்து, செப்டம்பர் 2017 முதல் இணைய சேவைகளுக்கான வரி இரத்து செய்யப்பட்டது, இதன் விளைவாக 2016 உடன் ஒப்பிடும்போது 2017 ஆம் ஆண்டிற்காக சேகரிக்கப்பட்ட தொலைத்தொடர்பு வரியில் வீழ்ச்சி ஏற்பட்டது. 2018 நவம்பர் 10 முதல் அமுலுக்கு வரும் வண்ணம் 2018 நவம்பர் இல், தொலைத்தொடர்பு சேவைகளின் தொலைத்தொடர்பு வரி விகிதம் 25% முதல் 15% வரை குறைக்கப்பட்டதுடன் மீண்டும், தொலைத்தொடர்பு வரி விகிதம் 2020 டிசம்பர் இல் 25% வீதத்தால் குறைக்கப்பட்டதன் விளைவாக தற்போதைய தொலைத்தொடர்பு வரி விகிதம் 11.25% ஆகக் காணப்படுகின்றது.

விளக்கப்படம் 10: தொலைத்தொடர்பு வரி




* தற்காலிக தரவு

செஸ்

திருத்தப்பட்ட 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு சட்டத்தின் 22ஜி பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் செயற்படுத்துனர்களிடமிருந்து செஸ் வரி அறவிடப்படுகின்றது.

விளக்கப்படம் 11: செஸ்



செல்லூலர் கோபுர வரி (CTL)

2019 சனவரி 01 முதல் செயற்படும் வண்ணம், 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பகுதி XII இன் கீழ் செல்லூலர் கோபுர வரி விதிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய நிதிச் சட்டத்தின்படி, ஒவ்வொரு கையடக்க செயற்படுத்துனரும் ஆண்டுதோறும் ஒரு கோபுரத்திற்கு ரூபா 200,000 செலுத்த வேண்டும். மேலும் கையடக்க செயற்படுத்துனருக்கு கோபுரங்கள் சொந்தமில்லாத போதும் அதனைப் பயன்படுத்துவதற்காக கையடக்க தொலைபேசி செயற்படுத்துனர்களினால் செல்லூலர் கோபுர வரியொன்றை செலுத்துதல் வேண்டும். கோபுரத்தை பகிர்ந்து கொள்ளும் செயற்படுத்துனர்களால் அதற்கான வரியான ரூபா 200,000 தொகையை சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும். வரிகள் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிற்கு காலாண்டு அடிப்படையில் செலுத்தப்படல் வேண்டும். செல்லூலர் கோபுர வரி அறவீடானது 2019ம் வருடத்துடன் ஒப்பிடுகையில் 2020ம் வருடத்தில் 3% அதிகரிப்பைக் காட்டுகின்றது.

அட்டவணை 11: செல்லூலர் கோபுர வரி

ஆண்டு	2019	2020	**% மாற்றம்**
மொத்தம்	1,384,526,669.00	1,426,333,333.68	3%

கையடக்க குறுஞ் செய்தி சேவைகள் வரி (SMS வரி)

மொத்த எஸ்எம்எஸ் மீதான வரி 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பகுதி XIII ஆல் விதிக்கப்பட்டதுடன் செயற்படுத்துவதற்கான விதிமுறைகள் 2014/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி, கையடக்க செயற்படுத்துனர்கள் வணிக நோக்கங்களுக்காக பெறுநர்களின் குழுவுக்கு கையடக்க தொலைபேசிகள் மூலம் அனுப்பும் எஸ்எம்எஸ் ஒன்றுக்கு ரூபா. 0.25 வரி செலுத்துதல் வேண்டும். 2020 சனவரி 01 முதல் அமுல்படுத்தப்படும் வகையில் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவால் மாதாந்த அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது. எஸ்எம்எஸ் வரி அறவீடானது 2019ம் வருடத்துடன் ஒப்பிடுகையில் 2020ம் வருடத்தில் 0.08% குறைவைக் காட்டுகின்றது.

அட்டவணை 12: யைடக்க குறுஞ் செய்தி சேவைகள் வரி சேகரிப்பு

ஆண்டு	2019	2020	**% மாற்றம்**
மொத்தம்	419,023,886	418,650,661	0.08%

விசா விண்ணப்பங்களின் பரிந்துரை

தொலைத்தொடர்பு தொழிற்துறை வேகமாக மாறிவரும் தொழிற்துறையாக இருப்பதால், செயற்படுத்துனர்கள் உலகில் தொடர்ந்து வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களுடன் தங்கள் நெட்வேர்க்குகளை மேம்படுத்திக் கொள்வதற்கு முயற்சி செய்கிறனர். சிறப்புத் தேர்ச்சியைப் பெறுவதற்காக தங்கள் விசேட செயற்திட்டங்களில் பணியாற்றுவதற்காக செயற்படுத்துனர்கள் வெளிநாட்டு தொழில் வல்லுநர்களை வாடகைக்கு அமர்த்துகின்றனர். செயற்படுத்துனர்கள் சார்பாக ஆணைக்குழு அத்தகைய நிபுணர்களுக்கான விசாக்களை நிரல் அமைச்சிற்கு பரிந்துரை செய்கின்கிறது. 2020 ஆம் ஆண்டில் மொத்தமாக அத்தகைய நிபுணர்களின் 95 விசா விண்ணப்பங்கள் பிரிவினால் செயற்படுத்தப்பட்டன.

தொழில்துறை தகவல்களைக் கையாளுதல்

போட்டிப் பிரிவு தொழில் துறை தரவுகளை சேகரித்து TRCSL இணையத்தளத்தில் அவ்வப்போது தகவல்களை வெளியிடுகிறது. மேலும், இந்த பிரிவானது இலங்கை மத்திய வங்கி, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் (ஐரீயூ) மற்றும் ஆசிய பசுபிக் தொலைத்தொடர்பு-சமூகம் (ஏபிரீ) போன்ற தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு தொழில்துறை தகவல்களை வழங்குகின்றது.

உள்ளக இணைப்பை கையாளுதல்

2010 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட தற்போதைய உள்ளக இணைப்பு விகிதங்களை மீளாய்வு செய்வதற்கான நவடிக்கையை போட்டி பிரிவு ஆரம்பித்தது. ஆணைக்குழு செயற்படுத்துனர்களிடம் தங்கள் கருத்துக்களை எழுத்துபூர்வமாக ஆணைக்குழுவில் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டதோடு அவ்வாறு கிடைக்கப்பெற்ற சமர்ப்பணங்கள் மற்றும் கருத்துக்கள் தொடர்பாக தொழில்துறை கூட்டமொன்றும் நடாத்தப்பட்டது. அதில் சகல செயற்படுத்துனர்களும் தற்பொழுது அமுலிலுள்ள விகிதத்தில் தொடர்வதற்கு இணங்கியதன் காரணமாக ஆரம்பிக்கப்பட்ட மீளாய்வு நடவடிக்கை கைவிடப்பட்டது.

கட்டணங்கள்

2020 ஆம் ஆண்டில் 10 பருவகால கட்டண சலுகைகளும் 60 விளம்பர அடிப்படையிலான கட்டணங்களும், உரிமம் பெற்ற தொலைத்தொடர்பு செயற்படுத்துநர்களின் 40 நிரந்தர அடிப்படையிலான கட்டணங்களுக்கும் கட்டண ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

அது தவிர, 2020 ஆம் ஆண்டில் கட்டணப் பிரிவினால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- பாடசாலைப் பிள்ளைகள் இலவசமாக இ-தக்ஸலாவா கற்றல் தளத்திற்கு செல்லும் வசதி வழங்கப்பட்டமை.

  இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவானது சகல அரசாங்க பாடசாலைகளும் இ-தக்ஸலாவா தளத்தை (அதிகாரப்பூர்வ இலத்திரனியல் -கற்றல் தளம்) எந்த கட்டணமும் இல்லாமல் பயன்படுத்தும் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

- அரச பல்கலைக்கழக மாணவர்களுக்கான LEARN தளத்திற்கான இலவச அணுகல்

  இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (ருபுஊ) ஆகியன இந்த காலப்பகுதியில் கல்விச் சமூகத்திற்கு பல்கலைக்கழக டுஆளு ஐ இலவசமாக பயன்படுத்தும் வசதியை வழங்குவதற்காக இலங்கையில் உள்ள தொலைத்தொடர்பு செயற்படுத்துநர்களுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்துள்ளன.

- வீட்டிலிருந்து வேலை செய்தல் (றுகுர்) மற்றும் வீட்டிலிருந்து கற்றலில் ஈடுபடல் (ளுகுர்) செயற்பாடுகளுக்கென விசேட கட்டணப் பொதிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன

  கோவிட் -19 காலகட்டத்தில், அரசு நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் சமூகங்களுக்கிடையே தொடர்ச்சியான தொடர்பை வைத்திருப்பதற்காக தொலைத் தொடர்பு செயற்படுத்துநர்களின் ஒத்துழைப்புடன் வீட்டிலிருந்து வேலை செய்தல் பொதிகள் மற்றும் வீட்டிலிருந்து கற்றல் பொதிகள் சலுகை விலையில் அறிமுகப்படுத்தப்பட்டன.

- YouTube மற்றும் சமூக ஊடகங்களுக்கான "வரம்பற்ற" கட்டண சலுகைகளுக்கு ஒப்புதல் (Facebook, WhatsApp, Viber)
- தொலைக்காட்சி தளங்களுக்கான வரம்பற்ற மேலோடல் சலுகைகள் (Netflix, Amazon Prime)
- நெட்பிக்ஸ், அமேசான் பிரைம் போன்ற அடையாளம் காணப்பட்ட பொழுதுபோக்கு தளங்களுக்கான கட்டுப்பாடற்ற தரவுகளுடன் அங்கீகரிக்கப்பட்ட விசேட பொழுதுபோக்கு துணை நிரல்களுக்கான அனுமதி.
- கோவிட்-19 தொற்றுநோய் பரவுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் 1919 க்கு அனுப்பப்பட்ட அனைத்து குறுந்தகவல்கள் மற்றும் "ஸ்டே சேப்" வலைவாசலை இலவசமாக பயன்படுத்தும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- கட்டணம் தொடர்பான புள்ளிவிபர குறிகாட்டிகள் பற்றிய கணிப்பீடு
  ஐவுரு ஆனது நுகர்வோரின் பழக்கவழக்கங்கள் மற்றும் மாறுபட்ட பயன்பாட்டு முறைகளை பிரதிபலிக்கக்கூடியதாக பல்வேறுபட்ட விலைக் கூடைகளை பேணிவருவதுடன், இது நுகர்வோரின் பழக்கவழக்கங்களின் மாற்றத்திற்கு ஏற்ப அவ்வப்போது சரிசெய்யப்படும். இந்த விலைக் கூடைகள் மூன்று வெவ்வேறு தொழில்நுட்பங்களை உள்ளடக்கியுள்ளன. அவையாவன, மொபைல் டேட்டா, மொபைல் வொய்ஸ் மற்றும் நிலையான பிராட்பேண்ட் என்பனவாகும். கட்டணத்துடன் தொடர்பான புள்ளிவிபர குறிகாட்டிகள், ஐடியு நியமங்களின் அடிப்படையில் 5 வகையான விலைக்கூடைகளுக்கு ஏற்ப மொபைல் மற்றும் நிலையான கட்டண திட்டங்களின் மாதாந்திர பயன்பாட்டை பகுப்பாய்வு செய்வதன் மூலம் கட்டணம் தொடர்பான புள்ளிவிவர குறிகாட்டிகள் தயாரிக்கப்பட்டன.

- சர்வதேச பெஞ்ச்மார்க் படிப்பை நடாத்துதல்
  ஐவுரு ஆனது உறுப்பு நாடுகளிடையே தொலைத்தொடர்பு விலைகளை ஒப்பிட்டு ஆண்டுதோறும் "ICT விலை போக்கு" ஆக வெளியிடுகிறது. குரல் மற்றும் தரவு விகிதங்களில் இலங்கை மிகச் சிறந்த இடத்தைப் பிடித்துள்ளது. 2020 இல் வெளியிடப்பட்ட "டிஜிட்டல் வளர்ச்சியை அளவிடுதல் ஐஊவு விலை போக்குகள் 2019" அறிக்கையின்படி, சமீபத்திய அறிக்கை தொடர்பான தரவரிசை பின்வருமாறு.

அட்டவணை 13: இலங்கை ஐவுரு கட்டண போக்கு தரவரிசை

வகை	துரவரிசை 2019	துரவரிசை 2020
குரல் + தரவு குறைவான பயன்பாடு	14	13
குரல் + தரவு உயர்வான பயன்பாடு	33	23
தரவு மாத்திரம் நடமாடும் அகலக்கற்றை	29	8
நடமாடும் தரவு கூடை	9	7
நிலையான தரவு அகலக்கற்றை	26	20

"சுரக்ஷிதா சன்னிவேதனய" திட்டம்

பின்வரும் மாவட்டங்களில் இலத்திரனியல் கழிவு முகாமைத்துவம் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்தப்பட்டன.

கண்டி, மொனராகலை, பதுளை, புத்தளம், கொழும்பு, கம்பஹா, அனுராதபுரம், கேகாலை, நுவரெலியா மற்றும் காலி மாவட்டங்கள்.

சர்வதேச தொலைத்தொடர்பு செயற்படுத்துநர்களின் வரி அறவீடு (ITO வரி)

தொலைத்தொடர்பு மேம்பாட்டு கட்டணம் (TDC) அறவீட்டுத் தொகை ரூபா 4,293 மில்லியன் ஆகும்.



තාක්ෂණයෙන් බල ගැන්වුණු ශ්‍රී ලංකාවක්

கமட

சன்னிவேதனய

"இலங்கையை இணைப்போம்"

Gamata

Sannivedanaya

"Connect Sri Lanka"

அரசாங்கத்தின் தொழில்நுட்ப அடிப்படையிலான சமூகம் (ஸ்மார்ட் தேசம்) மற்றும் டிஜிட்டலுடன் இணைக்கப்பட்ட இலங்கையை உள்ளடக்கிய அரசின் தொலைநோக்கிற்கு ஏற்ப இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவானது நாடு முழுவதும் 100% 4G பைபர் பிரோட்பேண்ட் எல்லையை அடைய நாட்டின் புறக்கணிக்கப்பட்ட மற்றும் பின்தங்கிய பகுதிகளை அடையாளம் காண "கமதா சன்னிவேதனய" என்ற திட்டத்தை தொடங்கியுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ், இலக்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, தொலைதொடர்பு செயற்படுத்துநர்களுக்கு தொலைதொடர்பு அபிவிருத்திக் கட்டணம் (TDC) நிதி மூலம் அடையாளம் காணப்பட்ட கிராமப்புறங்களுக்கு 4G பைபர் பிரோட்பேண்ட் எல்லையை அடைய பண உதவி வழங்குகிறது. மேலும், அதிவேக இணைய அணுகல், சலுகை விலை வரம்பு மற்றும் நிலைத்தன்மை மற்றும் கிராமப்புற சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றுடன் கடைசி மைல் இணைப்பில் கவனம் செலுத்தி 4ஜீ பைபர் புரோட்பேண்ட் வலைப்பின்னலை உருவாக்கி ஊக்குவிக்க உள்ளது.

திட்டத்தின் முக்கிய நோக்கம், அதிவேக இணைய அணுகலுடன் கடைசி மைல் இணைப்பை மையமாகக் கொண்ட 4G//பைபர் பிராட்பேண்ட் நெட்வொர்க்கை உருவாக்கி மேம்படுத்துவது மட்டுமல்லாமல், மலிவு விலையில் பிராட்பேண்ட் சேவைகளை உறுதிசெய்து கிராமப்புற சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதும் ஆகும்.

25 மாவட்டங்களில் உள்ள 14,022 கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் 37,659 கிராமங்களை உள்ளடக்கிய மொபைல் ∴ நிலையான மற்றும் அகன்ற அலைவரிசை சேவைகளில் தரை மட்டத்தில் இருக்கும் கவரேஜ் நிலைகள் பற்றிய தகவல்களை சேகரிக்க நாடளாவிய ரீதியிலான கணக்கெடுப்பின் தொடக்கத்துடன் இந்த திட்டம் தொடங்கப்பட்டது.

இத்திட்டத்திற்குத் தேவையான அனைத்து தகவல்தொடர்பு கோபுரங்களும் இலங்கையில் தயாரிக்கப்பட்டு புதிய உள்ளூர் தொழில்துறையை உருவாக்குவதுடன், உள்ளூர் மூலப்பொருட்கள், தொழிநுட்ப அறிவு மற்றும் மனிதவளத்தின் அடிப்படையில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் டவர் உட்கட்டமைப்பில் ஈடுபடுவதற்கும் தொலைத்தொடர்பு செயற்பாட்டாளர்கள் ஊக்குவிக்கப்படுவதும் இத்திட்டத்தின் தனிச்சிறப்பு. நாட்டிற்குள் இலங்கை தயாரிப்புகளுக்கான சந்தை. TRCSL மேலும் சுற்றுச்சூழலுக்கும் குறைந்த பாதிப்பை ஏற்படுத்திய உள்கட்டமைப்புக்கு தேவையான மூலதனச் செலவினங்களை உகந்ததாக்குவதை உறுதிசெய்யும் கோபுர பகிர்வு முறையை மேலும் உறுதி செய்துள்ளது.

திட்டத்தின் முதலாம் கட்டத்தின் போது, களுத்துறை, பொலன்னறுவை, குருநாகல், மாத்தறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் உள்ள தெரிவு செய்யப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் கணக்கெடுப்பு நிறைவடைந்தது. கணக்கெடுப்பு மற்றும் தொழில்நுட்ப விசாரணைகளின் அடிப்படையில், மொபைல் ∴நிலையான தகவல் தொடர்பு வசதிகள் மற்றும் புரோட்பேண்ட் சேவைகளுக்கு துழாவுகை மேம்பாடுகள் தேவைப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை அடையாளம் காணப்பட்டுள்ளது.

கிராமப்புற மக்கள் செறிவு, பல்வேறுபட்ட புவியியல் பண்புகள், வானிலைப் பண்புகள் மற்றும் வருமான பங்கீடு போன்றவற்றைக் கருத்திற் கொண்டு இரத்தினபுரி மாவட்டமானது முதல் திட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்டது. இத்திட்டத்தினால் 125 பின்தங்கிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 4 ஜீ பைபர் புரோட்பேண்ட் வசதிகளைப் பெற்றுக்கொள்வதுடன் 500,000 இற்கும் மேற்பட்ட புறக்கணிக்கப்பட்ட பின்தங்கிய மக்கள் நன்மைகளை அடைகிறார்கள். இது கல்வி, சுகாதாரம் மற்றும் வணிக வாய்ப்புக்களை அடைய மக்களுக்கு ஒரு எல்லையற்ற வாய்ப்பாகும். முழு திட்டமும் முடிந்தவுடன், 4G பைபர் புரோட்பேண்ட் இணைப்பை இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து 575 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

TRCSL அனைத்து செயற்படுத்துனர்களுடனும் தொடர்ச்சியான தொழில்நுட்ப சந்திப்புகளை நடத்தியதுடன் புதிய தொலைத்தொடர்பு கோபுரங்கள் மற்றும் அடிப்படை நிலையங்களை அமைக்க 37 இடங்களை அடையாளம் கண்டது. இந்த திட்டம் 2021 ஏப்ரல் மாதத்திற்குள் முடிவடையும். இரத்தினபுரி மாவட்டம் 602 தேசிய மற்றும் மாகாண பாடசாலைகள், 23 பொலிஸ் நிலையங்கள், 37 மருத்துவமனைகள் மற்றும் 1400 இற்கும் அதிகமான ஏனைய அரசு நிறுவனங்களை தழுவிய புரோட்பேண்ட் இணைப்பை பெறவுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் 100% 4 ஜி பைபர் பிரோட்பேண்ட் துழாவுகையை அடைய கோபுர கட்டுமானத்திற்கு பொருத்தமான இடங்களைக் கண்டறிய சேவை வழங்குநர்களுடன் இணைந்து "கமட சன்னிவேதனய" குழு விஜயம் செய்ய தொடங்கியுள்ளது.

இரண்டாம் கட்டமாக குருநாகல் மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன் தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பதற்கான இடங்களை கண்டறிய தொழில்நுட்ப ஆய்வு நடத்தப்பட்டது.

கண்டி, மொனராகலை, பதுளை, புத்தளம், கொழும்பு, கம்பஹா, அனுராதபுரம், கேகாலை, நுவரெலியா மற்றும் காலி மாவட்டங்களில் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுடன் "கமட சன்னிவேதனாயா" திட்டம் (தரவு சேகரிப்பு பற்றிய ஆய்வு) கூட்டம் நடைபெற்றது.

கமதா சன்னிவேதனய “இலங்கையை இணைக்கவும்” திட்டத்தின் சிறப்பம்சங்கள்



4G / பைபர் பிராட்பேண்ட் கவரேஜ் முயற்சிகளை அடைய பங்குதாரர் திட்டமிடல் அமர்வுகள்









துரிதப்படுத்தப்பட்ட கவரேஜ் மேம்பாட்டு இயக்ககங்களின் சுருக்கம் - 2020

"காமதா சன்னிவேதனய" விற்கு இணையான சிறப்பு திட்ட முயற்சி

முழு இலங்கையையும் 4G/பைபர் தொழில்நுட்பத்துடன் வலுவூட்டுவதற்கான "கமதா சன்னிவேதனய" (இலங்கையை இணைக்கவும்) திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இணங்க. பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தொலைபேசி சிக்னல்கள் இருக்கும் இடத்தைக் கண்டறிந்து, ஆன்லைன் கல்வியில் ஈடுபடும் கிராமப்புற குழந்தைகளின் சிரமங்களைக் கண்டறிந்து, உரிமம் பெற்ற ஆபரேட்டர்களைக் கொண்டு உடனடியாக தேவையான முயற்சிகளை எடுத்து, தகவல் தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குவது அவசியம். அந்தப் பகுதிகளில் உள்ள பள்ளிகளின் தொழில்நுட்ப ஆய்வகங்கள் மற்றும் வகுப்பறைகள்.

லங்காகமவுக்கு

4G கவரேஜ் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன

லங்காகம கிராமம், நெலுவ பிரதேச செயலகப் பிரிவில் காலி மாவட்டத்தில் சிங்கராஜா மழைக்காட்டின் தெற்கு எல்லையில் அமைந்துள்ளது, இது கடுமையான தளவாடச் சவால்களை முன்வைக்கிறது. லங்காகம கிராம மக்கள் ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, TRCSL ஆல் நடத்தப்படும் "கமட சன்னிவேதனய" திட்டத்திற்கு இணையாக ஸ்ரீலங்கா டெலிகொம் மற்றும் மொபிடெல் சேவை வழங்குநர்களால் 4G வசதி ஏற்படுத்தப்பட்டது. லங்காகம ஆதர்ஷ கனிஷ்ட வித்தியாலயத்தில் ஸ்மார்ட் வகுப்பறை வசதி செய்யப்பட்டுள்ளது மற்றும் புதிய தகவல் தொழில்நுட்ப வசதிகளுடன் மாணவர்கள் தங்கள் திறமைகளை மேம்படுத்திக்கொள்ள முடியும். மேலும் இவ் விசேட நிகழ்வில் 18 வருடங்களுக்கு மேலாக பாடசாலையின் அபிவிருத்திக்காக அளப்பரிய அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அதிபர் திரு.சுமித் லால் அவர்களுக்கு விசேட அஞ்சலி செலுத்தப்பட்டது. லங்காகம கிராமம் இப்போது அதிவேக மொபைல் இணைப்பு தீர்வுடன் பொருத்தப்பட்டுள்ளது.












TRC
Telecom
Mobitel


Colombo




ROOM
Sri Lanka Telecom Mobitel
4G LTE


ROOM
Sri Lanka Telecom Mobitel
We Care, Always






ලංකාගම ඩිජිටල් නවෝදය
TRC
Sri Lanka Telecom
Mobitel
HUAWEI MateBook Series



மியாகலாவுக்கு

4G கவரேஜ் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன

மியாகல மொனராகலை மாவட்டத்தில் அடிப்படை தொலைபேசி இணைப்புகள் இல்லாத ஒரு தொலைதூர கிராமமாகும். கிராமத்தின் வேண்டுகோளின் அடிப்படையில், பணிப்பாளர் நாயகம் மற்றும் கமட சன்னிவேதனய குழு மொனராகலை மாவட்டத்தில் உள்ள மியாகல கிராமத்திற்கு விஜயம் செய்தனர். இக்கள விஜயத்தின் போது தொழில்நுட்ப குழுக்கள் அந்த பகுதியில் தகவல் தொடர்பு வசதிகள் இல்லை என்பதை உறுதிப்படுத்தின.

TRCSL இன் வழிகாட்டுதலின் கீழ், SLT, Mobitel மற்றும் Dialog மீயாகல (24.11.2020) பிரதேசத்திற்கு 4G கவரேஜை வழங்கியதுடன், தொலைத்தொடர்பு சேவைகள் மற்றும் கணினிகள், மடிக்கணினிகள் மற்றும் தொலைக்காட்சி போன்ற தகவல் தொழில்நுட்ப உபகரணங்களை மீயாகலை ஆரம்பப் பாடசாலையின் ஐவு ஆய்வகத்திற்கு நன்கொடையாக வழங்கியது. மாணவர்கள் இப்போது இ-தக்சலாவாவில் மின் கற்றலை அணுகலாம் மற்றும் நானாசா டிவியைப் பின்தொடரலாம்.


















5G












6 ශ්‍රේණිය



கெலிங்கந்தவுக்கு

4G கவரேஜ் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன

களுத்துறை மாவட்டத்தின் பாலிந்த நுவர பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பதுரலிய கெலின்கந்தவில் 4G இணைப்பைப் பெறுவதற்காக வீதிகளில் சிறுவர்கள் கற்கும் நிலையில், களுத்துறை மாவட்டத்தில் இணைப்பு வசதிகள் இன்மை தொடர்பில் TRC கவனத்தை ஈர்த்துள்ளது.

இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தனிப்பட்ட முறையில் "கமட்ட சன்னிவேதனய" குழு மற்றும் தொலைத்தொடர்பு செயற்படுத்துநர்களுடன் குறித்த இடத்தை பார்வையிட்டார். வருகையின் முக்கிய நோக்கம் 4G துழாவுகையை உடனடியாக அமைப்பதாகும்.

டிசம்பர் 04, 2020 அன்று மேற்கொண்ட விஜயத்தின் பின்னர், கெலிங்கந்த மற்றும் அதனைச் சுற்றியுள்ள தொலைதூர கிராமங்களுக்கு SLT, Mobitel மற்றும் Dialog ஆகியவற்றால் 4G கவரேஜ் வழங்கப்பட்டது.

மேலும், கெலிங்கந்த கனிஸ்ட வித்தியாலயத்திற்கான முழுமையான தகவல் தொழில்நுட்ப ஆய்வு கூடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. மேலும், கணினிகள், மடிக்கணினிகள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி இணைப்புகளும் பள்ளிக்கு வழங்கப்பட்டது.


DEFENDER






Sri Lanka
Telecom
Mobitel




Divisional Secretariat
PALINDANUWARA




Sri Lanka
Telecom
Mobitel
We Care, Always.
TRC


Regulatory Commission of Sri Lanka
LE BASE STATION ON-AIR
Powered by
Dialog
Dialog
Sri Lanka
Telecom
Mobitel


DONATION
SCHOOL DEVELOPMENT FUND
WP/MT/ KELINKANDA JANAPADAYA PRIMARY SCHOOL
KELINKANDA, AGALAWATTA.




We Care, Always.
LTE
FASTEST INTERNET
WIDEST COVERAGE




Handcrafted
Enro


Sri Lanka
Telecom


FASTEST INTERNE
WIDEST COVERAG

மொரகஹவெவவுக்கு

4G கவரேஜ் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன

மொரகஹவெவ, நவகத்தேகம மாணவர்கள் நிகழ்நிலை வகுப்புகளில் கலந்துகொள்வதற்காக படும் கஷ்டங்கள் குறித்து சமூக ஊடகங்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் விழிப்புணர்வுக்கு பதிலளிக்கும் முகமாக இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் "கமட சன்னிவேதனய" குழு சேவை வழங்குநர்களுடன் அந்த பகுதிக்கு விஜயம் மேற்கொண்டது. மூன்று வாரங்களுக்குள் மொரகஹவெவ பாடசாலைக்கு 4G துழாவுகை வசதியை வழங்குவதை உறுதி செய்யும் வகையில் தொழில்நுட்ப திட்டமிடல் செய்யப்பட்டது.

சேவை வழங்குநர்கள் தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் 4G உள்கட்டமைப்பு வசதிகளை தனகஹவெவ வித்தியாலயத்திற்கும் நன்கொடையாக வழங்கினர். புத்தளம் மாவட்டத்தில் மொரகஹவெவ, நவகத்தேகம பிரதேச செயலகப் பகுதிகளுக்கு 4G கவரேஜ் வழங்குவதற்கும் மேலும் கவரேஜ் விரிவாக்கம் திட்டமிடப்பட்டது.
















Telecommunications Regulatory Commission of Sri Lanka
MORAGAHAWEWA MOBILE BASE STATION ON-AIR
Powered by
Dialog
COMMISSIONING OF THE
MORAGAHAWEWA BASE STATIC
Dialog
Sri Lanka
Telecom
Mobitel
We Care. Always.
Dialog
Sri Lanka
Telecom




COMMISSIONING OF THE
MORAGAHAWEWA BASE STATION
Dialog


Sri Lanka
Telecom
Mobitel
We Care. Always.







FASTEST INTERNET
WIDEST COVERAGE
4G LTE




TRC


Dialog





AKIRA
INTERNET

பெரெலிஹெலவுக்கு

4G கவரேஜ் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் பெரலிஹெல, லுணுகம்வெஹெர பொது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க, பெரலிஹெல பிரதேசத்திற்கு அருகிலுள்ள எலகல்ல ஹட்ச் டவரில் மொபிடெல் சேவை வழங்குனரால் 4G வசதி ஸ்தாபிக்கப்பட்டது, இப்போது பெரலிஹெலவின் 80% க்கும் அதிகமான பகுதிகள் "கமட சன்னிவேதனய" திட்டத்திற்கு இணையாக வழங்கப்பட்டுள்ளன. இந்த கவரேஜ் விரிவாக்கத்தில், அதிகமான கிராம அலுவலர் பிரிவுகள் பயனடைந்தன.

பெரலிஹெலாவில் வழங்கப்பட்ட 4G கவரேஜின் வரைபடம்



கவரேஜ் மேம்பாடுகளுக்கான தொழில்நுட்ப புல வருகைகளின் சிறப்பம்சங்கள்

அனைத்து தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்களுடனும் இணைந்து, TRCSL ஆனது பின்வரும் மாவட்டங்களில் தொழில்நுட்ப கள விஜயங்கள் மூலம் கவரேஜ் மேம்பாட்டை நிறைவு செய்துள்ளது.

- ஹம்பாந்தோட்டை மாவட்டம் - பெலியத்த, வலஸ்முல்ல மற்றும் ஒமாரா
- மாத்தறை மாவட்டம் - தெய்யந்தர, தெனியாய, தலபலகந்த, தெஹிகம்பொல மற்றும் பஸ்கொட
- காலி மாவட்டம் - எல்பிட்டிய, பம்பரவன, உஸ்பிம்ஜனபடய, லியனகம கந்த, பனங்கல, சமகந்த, வல்லம்பகல மற்றும் பொரவாகம.


5123






















Dialog
HOME
Broadband

“கமட சன்னிவேதனய” உள்ளூர் கோபுர உற்பத்தியை செயல்படுத்துதல்








TANTRI







கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள் பிரிவு

கண்ணோட்டம்

தொலைத்தொடர்பு சட்டத்தின்படி, பொது தொலைத்தொடர்பு சேவைகளை வழங்குவது தொடர்பான கொள்கை விடயங்களில் அரசாங்கத்திற்கு ஆலோசனைகளை வழங்குதவற்கான அதிகாரத்தை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு கொண்டுள்ளது. அத்தோடு தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் சார்ந்த சகல விடயங்களிலும் சர்வதேச தொலைத்தொடர்புகள் சங்கம் அல்லது அதனுடன் இணைந்த நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கான பொறுப்பையும் கொண்டுள்ளது. தொலைத்தொடர்பு மற்றும் அதனுடன் தொடர்புற்ற துறையில் முன்னேற்றங்களையும் புதிய தொழில்நுட்பங்களையும் எய்துவதற்காக ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பது தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். உள்நாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான உதவிகளை வழங்குவதற்கு மற்றும் தொலைத் தொடர்புத் துறையின் வளர்ச்சிக்காக சர்வதேச சிறந்த நடைமுறைகளை ஊக்குவிக்குமுகமாக சர்வதேச மற்றும் உள்நாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை / செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஆணைக்குழுவினால் கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள் பிரிவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் அமைப்புகளின் மையப் புள்ளி என்றவகையில், இப்பிரிவானது சர்வதேச தொலைத்தொடர்புகள் ஒன்றியம் (ITU), ஆசிய பசுபிக் தொலைத்தொடர்பு-சமூகம் (APT), தெற்காசிய தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் சங்கம் (SATRC) உட்கட்டமைப்பு ஒழுங்குபடுத்தலுக்கான தெற்காசிய சம்மேலனம் (SAFIR) பொதுநலவாய தொலைத்தொடர்புகள் அமைப்பு (CTO) ஆகிய சர்வதேச அமைப்புகளின் உதவியுடன் பரந்தளவிலான ஒழுங்குபடுத்தல், ஒருங்கிணைப்பு மற்றும் துறைசார் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

செயற்பாடுகள்

கொள்கை

- தொலைத்தொடர்பு துறை தொடர்பான ஒழுங்குபடுத்தும் விடயங்களில் ஆலோசனைகளை வழங்குதல்.
- பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் உதவியுடன் ஆராய்ச்சி ஆய்வுகளை மேற்கொள்வதற்கு நிதி உதவிகளை வழங்குதல்.
- தொலைதூரப் பகுதிகளில் உள்ள மாணவர்கள் மற்றும் விஷேட கல்வித் தேவைகளைக் கொண்ட சமூகங்களிடையே தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கல்வியறிவை மேம்படுத்துவதற்கான திட்டங்களை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் நிதியுதவியுடன் அல்லது சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன் மேற்கொள்ளல்.

சர்வதேச தொடர்புகள்

- சர்வதேச தொலைத்தொடர்புகள் ஒன்றியம் (ITU), ஆசிய பசுபிக் தொலைத்தொடர்பு-சமூகம் (APT), தெற்காசிய தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் சங்கம் (SATRC) உட்கட்டமைப்பு ஒழுங்குபடுத்தலுக்கான தெற்காசிய சம்மேலனம் (SAFIR) பொதுநலவாய தொலைத்தொடர்புகள் அமைப்பு (CTO) ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்படும் மாநாடுகள் மற்றும் கூட்டங்களுக்கு இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் பல்வேறு சர்வதேச அமைப்புகளினால் ஏற்பாடு செய்யப்படும் கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் பயிற்சித் திட்டங்களில் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.
- சர்வதேச அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட தகவல்களை ஆணைக்குழுவிற்குள் பரப்புதல்.
- ஆணைக்குழுவின் ஏனைய பிரிவுகள் / தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்கள் /ஏனைய அரச நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தரவுகள் சேகரிக்கப்பட்டு தொகுக்கப்பட்டு ஆய்வு / கருத்தறியும் வினாப்பட்டியலுடன் தொடர்புடைய தகவல்களை சர்வதேச அமைப்புகளுக்கு வழங்குதல்.

2020 இல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

தொலைத்தொடர்பு துறையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி 2019.20

இலங்கை தொலைத்தொடர்பு சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின் படி, தொலைத்தொடர்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிப்பதற்கும் புதிய நுட்பங்களைப் பயன்படுத்துவதற்குமான பொறுப்பு தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவைச் சாரும். இலங்கையில் உள்ள அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களினால் தொலைத்தொடர்பு தொடர்பான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள் பிரிவினால் நிதி உதவி வழங்கப்படுகின்றது. தொலைத்தொடர்புத் துறையுடன் பொருந்தக் கூடிய தன்மையைக் கருத்தில் கொண்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டிற்கான கீழ்வரும் ஆராய்ச்சி ஆய்வுகள் தொடர்பாக அந்தந்த ஆராய்ச்சி குழுக்களினால் ஆரம்ப விளக்கக்காட்சி மற்றும் இரண்டு முன்னேற்ற விளக்கக்காட்சிகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

- ருஹுன பல்கலைக் கழகத்தின், பொறியியல் பீடத்தின், மின் மற்றும் தகவல் பொறியில் துறையின் முனைவர் சீ.கே.டப்ளிப். செனவிரத்ன அவர்களின் "Fast Uplink Grant - இயந்திர வகை தகவல்தொடர்புக்கான செயற்கை நுண்ணறிவு முறைமையின் தழுவல்". இது குறித்த ஆய்வுக் கட்டுரை ஒரு முன்னணி சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டில் (IEEE Globe Com 2020) வெளியிடப்பட்டுள்ளது.
- நவீன தொழில்நுட்பத்திற்கான ஆதர் சி கிளார்க் நிலையத்தின் தொலைத்தொடர்பு பிரிவின், பொறியியலாளர் ஜே.கே. ஜயவர்தன அவர்களின் "சிறிய வெள்ளம் தொடர்பான முன்கூட்டிய அறிகுறிகளுக்காக நகர்ப்புறங்களில் தொட்டி மற்றும் கால்வாய் நீர் மட்டத்தை நிகழ்நேரத்தில் கண்காணித்தல்"

TRCSL தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப தொண்டர் திட்டம் 2020

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்கான திறன் அபிவிருத்தி, ஊனமுற்ற / ஒதுக்கப்பட்ட மக்களை வலுவூட்டல் மற்றும் இலங்கையில் விஷேட கல்வியை மேம்படுத்துவதற்காக பல திட்டங்களை கடந்த சில ஆண்டுகளாக ஆணைக்குழு ஏற்பாடு செய்து வருகின்றது. விஷேட கல்வித் தேவைகள் உள்ள மாணவர்கள், விஷேட கல்விக் கற்கையுடன் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் கிராமப்புற பாடசலை மாணவர்களின் திறன் அபிவிருத்திக்காக சர்வதேச தொலைத்தொடர்புகள் சங்கம் (ITU), கொரியாவின் தேசிய தகவல் முகவர் நிலையம் (NIA) மற்றும் கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டதோடு அவற்றில் "ITU/NIA சர்வதேச தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தொண்டர் (IIV) நிகழ்ச்சித்திட்டம்" மற்றும் "TRCSL ICT தொண்டர் நிகழ்ச்சித்திட்டம்" ஆகியன சிலவாகும். ஆணைக்குழுவானது கடந்த 9 ஆண்டுகளில் நாடு முழுவதும் 100 கொரிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தொண்டர்கள் மற்றும் 16 உள்நாட்டு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தொண்டர்களை 3 மாதங்கள் வரையான காலப்பகுதிக்கு அனுப்பியுள்ளது.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தொண்டர் திட்டத்தை மறுசீரமைப்பதற்கான ஒரு அறிமுக திட்டமாக உள்நாட்டு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தொண்டர் நிகழ்ச்சித்திட்டமொன்றை ஐ.ரீ.யூ வின் வழிகாட்டுதலுடன், ஆணைக்குழு ஏற்பாடு செய்தது. இந்த திட்டமானது குறிப்பாக ஓரங்கட்டப்பட்ட சமூகங்கள் மற்றும் தொலைதூர பகுதிகளில் உள்ள மாணவர்கள் மத்தியில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கல்வியறிவை மேம்படுத்துவதற்காக கல்வி அமைச்சு, தொழிற்பயிற்சி அதிகாரசபை, பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டது. NVQ நிலை 4 அல்லது 5 (ICT இல் தேசிய சான்றிதழ்) தேர்ச்சி பெற்ற மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபை (VTA) மற்றும் தேசிய தொழிற்பயிற்சி மற்றும் தொழில்துறை பயிற்சி அதிகாரசபை (NAITA) ஆகியவற்றால் பரிந்துரைக்கப்பட்ட பதினாறு மாணவர்கள் ICT தொண்டர்களாக தெரிவு செய்யப்பட்டனர். இந்த தொண்டர்கள் துவக்க முகாமொன்றின் ஊடாக ஒரு மாத காலம் பயிற்சியளிக்கப்பட்டனர். முதலாவது மாதத்தில், அவர்கள் கணனி நிரலாக்கம், வலை செயலிகளை மேம்படுத்துதல் மற்றும் கற்பித்தல் அம்சங்கள் என்பன பற்றிய விடயங்களில் பயிற்சி பெற்றனர். அதன்பின், அவர்கள் இரண்டு மாதங்களுக்கு அனுராதபுரம், பொலன்னறுவை, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் உள்ள பதினாறு பாடசாலைகளுக்கு (ஒரு பாடசாலைக்கு ஒரு தொண்டர் என்ற ரீதியில்) அனுப்பப்பட்டனர். உள்நாட்டு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தொண்டர் திட்டத்தின் பயனாளிகளில் 300 க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஒரு சில ஆசிரியர்கள் அடங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2019 இல் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தொண்டர் திட்டத்தின் மறுஆய்வின் போது, தொண்டர்களின் சேவை காலத்தை நீட்டிக்க பல பாடசாலைகளிடமிருந்து கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. எனவே, சேவை பெறத்தக்க மற்றும் பரிந்துரைக்கப்பட்ட தொண்டர்களின் (ஐவர்) சேவைகள் மேலும் இரண்டு மாதங்களுக்கு 2020 இல் நீடிக்கப்பட்டு வழங்கப்பட்டன. சேவை காலத்தின் முடிவில், ஒவ்வொரு தொண்டர்களுக்கும் தங்கள் செயல் திறனான பங்கேற்பினைப் பாராட்டி சான்றிதழ் வழங்கப்பட்டது. ICT தொண்டர்களுக்கும் இலக்கு பயனாளிகளாகக் கருதப்பட்டனர், ஏனெனில் இந்தத் திட்டத்தின் மூலம் அவர்கள் பெற்ற அனுபவம்/வெளிப்பாடு அவர்களுக்கு சிறந்த வேலை வாய்ப்புகளைக் பெற்றுக்கொள்ள உதவும். இந்த உள்நாட்டு ஐசிடி தொண்டர் திட்டம் டிஜிட்டல் பிளவை இணைப்பதற்கான பயிலுனர்களை பயிற்றுவிக்கும் ஒரு பாரிய திட்டமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொலைத்தொடர்பு கோபுர தொழில்நுட்ப வல்லுநர் திட்டம்

தொலைத்தொடர்பு கோபுர தொழில்நுட்ப வல்லுநர் திட்டமானது மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC), இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களுடன் இணைந்து தொடங்கப்பட்டது. தேசிய திறன் தரநிலைகள் (NCS) மற்றும் தகைமை வளர்ச்சி தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு அனுமதியளிப்பு செயற்பாடு தற்போது TVEC இல் செயல்படுத்தப்படுகின்றது.

தொலைத்தொடர்பு ஆய்வுகள் மற்றும் ஏனைய கருத்தறியும் வினாப்பட்டியல்கள்

- **ஐ.ரீ.யூ உலக தொலைத்தொடர்பு / தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப குறிகாட்டிகளின் கருத்தறியும் வினாப்பட்டியல்கள் 2020**

  ஐ.ரீ.யூ இன் வேண்டுகோளின் பேரில், தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஏனைய பிரிவுகள் மற்றும் தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களின் உதவியோடு உலக தொலைத்தொடர்பு / தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப குறிகாட்டிகள் தொடர்பான ஒரு ஆய்வு நடாத்தப்பட்டது. தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களிடமிருந்து பெறப்பட்ட கணக்கெடுப்புத் தரவுகள் ஒன்றுசேர்க்கப்பட்டு, தொகுக்கப்பட்டு வழங்கப்பட்ட கால எல்லைக்குள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உலகளாவிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வளர்ச்சியின் நிலை குறித்த பகுப்பாய்வு அரசாங்கங்க நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்கள், அபிவிருத்தி வங்கிகள் மற்றும் உலகெங்கிலும் உள்ள தனியார் துறை ஆய்வாளர்களால் விரிவாக நம்பப்பட்டிருப்பதால், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மேம்பாட்டு குறியீட்டின் கணக்கீட்டிற்கான உலகளாவிய தரவை சேகரித்தல்/இற்றைப்படுத்துவதே கணக்கெடுப்பின் நோக்கமாகும். வழங்கப்பட்ட தரவுகள் உலக தொலைத்தொடர்பு/ தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப குறிகாட்டிகள் தரவுத்தளம், ஐடியூவின் புள்ளிவிவர வெளியீடுகள் மற்றும் உலக வங்கி வெளியீடுகள் போன்றவற்றை இற்றைப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டது.

- **ITU உலகளாவிய சைபர் பாதுகாப்பு ஆய்வு**

  உலகளாவிய சைபர் பாதுகாப்பு சுட்டி (GCI) கருத்தறியும் வினாப்பட்டியல்கள் என்பது இலங்கை CERT மற்றும் Tech CERT ஒத்துழைப்புடன் முடிக்கப்பட்டு ITU விடம் சமர்ப்பிக்கப்பட்ட மற்றொரு கணக்கெடுப்பு ஆகும். உலகளாவிய சைபர் பாதுகாப்பு சுட்டி (GCI) என்பது சைபர் பாதுகாப்பிற்கான நாடுகளின் ஈடுபாட்டினை அளவிடுவதற்கான பல-பங்குதாரர் முயற்சியாகும், அங்கு ஒவ்வொரு நாட்டின் வளர்ச்சியின் நிலை ஐந்து பிரிவுகளாக பகுப்பாய்வு செய்யப்படுகின்றது: சட்ட நடவடிக்கைகள், தொழில்நுட்ப நடவடிக்கைகள், நிறுவன நடவடிக்கைகள், திறன் அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்பு.

- **ITU-D இன் உலக தொலைத்தொடர்பு / தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஒழுங்குபடுத்தல் ஆய்வு 2020**

  ஐ.ரீ.யூ தொலைத்தொடர்புகள் அபிவிருத்தி பணியகத்தின் (BDT) வருடாந்த உலக தொலைத்தொடர்பு / தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஒழுங்குபடுத்தல் ஆய்வு என்பது ஐ.ரீ.யூ உறுப்பினர் நாடுகளின் நிர்வாகங்களிடமிருந்து புதிய தகவல்களை சேகரிப்பதற்கான ஒரு முறைமையாகும். கணக்கெடுப்பு பரந்த அளவிலான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கொள்கை மற்றும் ஒழுங்குபடுத்தல் சிக்கல்களை உள்ளடக்கியதுடன் அண்மைய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப போக்குகள் மற்றும் பரிணாமங்களை கண்காணிக்க அனுமதிக்கிறது. இப்பிரிவானது ஏனைய பிரிவுகளிடமிருந்து கணக்கெடுப்பு தரவுகளை சேகரித்து தொகுப்பதற்காக கல்துரையாடல்கள் மற்றும் கூட்டங்களை ஏற்பாடு செய்ததோடு முழுமையான கணக்கெடுப்பு அறிக்கையொன்றை வழங்கப்பட்ட கால எல்லைக்குள் ஐ.ரீ.யூ இற்கு சமர்ப்பித்தது. வருடாந்த உலக தொலைத்தொடர்பு / தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஒழுங்குமுறை ஆய்வுகள் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்கள் ITU ICT Eye தளம் மற்றும் ITU ICT Regulatory Tracker ஆகியவற்றில் கிடைக்கின்றன.

- **ITU/APT ஆய்வு குழு கருத்தறியும் வினாப்பத்திரங்கள் மற்றும் ஏனைய ஆய்வுகள்**

  தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்கள் / ஏனைய அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து தொடர்புடைய தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை இந்த பிரிவு செய்துள்ளது மற்றும் சேகரிக்கப்பட்ட தகவல்களின் ஒருங்கிணைப்புக்கு/தொகுப்புக்குப் பிறகு பின்வரும் கணக்கெடுப்புகள் மற்றும் கருத்தறியும் வினாப்பட்டியல்களை நிறைவு செய்தது.

  - ACCIMT (புதிய தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி கிளார்க் நிலையம்) - நிலையான வளர்ச்சிக்கான விண்வெளி தொழில்நுட்பம் பற்றிய ஆய்வு: அரச நிறுவனங்களிடையே தற்போதைய மற்றும் சாத்தியமான பயன்பாடு பற்றிய தேசிய ஆய்வு.
  - SATRC WG கொள்கை, ஒழுங்குமுறை மற்றும் சேவைகள் தொடர்பான APT கருத்தறியும் வினாக்கள்.
  - ஆசிய மற்றும் பசுபிக் நாடுகளில் ஸ்பெக்ட்ரம் முகாமை தொடர்பான திறன் அபிவிருத்தி குறித்த ITU ஆய்வு.

சர்வதேச தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை அமைப்புகளுடனான (ITU, APT, CTO, SATRC & SAFIR) ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்

கோவிட் -19 நிலைமை காரணமாக, தங்கள் பங்களிப்பை இடைவிடாது தொடருமாறு கோரப்பட்டதோடு தொடர்புடைய திட்டங்களுக்களுக்கான தமது பங்களிப்பை மெய்நிகர் சந்திப்புகள் மூலம் வழங்குவதற்கு சர்வதேச அமைப்புகள் உறுப்பு நாடுகளை ஊக்குவித்தன. இவ்வகையில் தொடர்புடைய சர்வதேச அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து, பணிப்பாளர் நாயகம் மற்றும் ஆணைக்குழு ஊழியர்கள் பின்வரும் முக்கிய நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்கு இப்பிரிவினால் திட்டமிடப்பட்டது.

1. "கோவிட் -19 தொற்றுநோய் நிலைமையின் போது தெற்காசியாவில் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துபவர்களுக்கான சவால்கள்", எனும் தலைப்பிலான 4 வது APT இணைய உரையாடல் - 22 ஜூன் 2020.

   பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர்/PIR இந்த இணைய உரையாடலில் கலந்து கொண்டு எங்கள் அனுபவங்களையும், கோவிட் -19 தொடர்பாக எடுக்கப்பட்ட முன்னேற்பாடுகள் சம்பந்தமாகவும் பகிர்ந்து கொண்டனர். தொற்றுநோய்களின் போது இலங்கையின் வெற்றிகரமான அனுபவங்கள் மற்றும் பாடங்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டதோடு ஏனைய கட்டுப்பாட்டாளர்களால் அவை பாராட்டப்பட்டன.

2. "கோவிட் -19 உடன் கூடிய உலகில் வர்த்தகம், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புக்கள்" பற்றிய CTO கூட்டம். 25 ஜூன் 2020, இயங்கலை, லண்டன், ஐக்கிய இராச்சியம்.

3. APT யின் 21 வது கூட்டம் - தெற்காசிய தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டாளர்கள் கவுன்சில் (APT - SATRC -21), 27 - 28 ஒக்டோபர் 2020.

   பணிப்பாளர் நாயகம் மற்றும் ஒரு சில நிர்வாக அதிகாரிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். பணிப்பாளர் நாயகம் இரண்டு கூட்ட அமர்வுகளுக்கு குழு உறுப்பினராக இருந்து தனது பங்களிப்பை வழங்கினார்.

4. பாகிஸ்தான் தொலைத்தொடர்பு அதிகாரசபை மற்றும் இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு போன்ற தெற்காசிய பிராந்தியத்தில் உள்ள ஏனைய தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துனர்களுடன் இருதரப்பு சந்திப்புகள் நடாத்தப்பட்டன.

   விசேடமாக இலக்க பெயர்வுதிறனை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக TRAI இன் தலைவரோடு ஒரு இயங்கலை சந்திப்பு மற்றும் PTA இன் தலைவரோடு இரண்டு இயங்கலை கலந்துரையாடல்களும் ஏற்பாடு செய்யப்பட்டன.

5. APT உறுப்பு நாடுகளுடனான (சீனா, தென் கொரியா மற்றும் ஜப்பான்) இயங்கலை கலந்துரையாடல்கள்.

   தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத்தொடர்பு துறையில் ஒத்துழைப்பு தொடர்பான விடயங்கள் சம்பந்தமாக APT உறுப்பு நாடுகளின் (தென் கொரியா மற்றும் ஜப்பான்) அமைச்சுக்களின் உயர் அதிகாரிகளுடன் மற்றும் ஒழுங்குபடுத்துனர்களுடன் இயங்கலை மூலம் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

6. The ITU Global CyberDrill 2020

   The ITU Global CyberDrill 2020 இன் இயங்கலை தொடர் அமர்வுகளில் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மற்றும் SLCERT இன் சில அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

7. பொதுச் சபையின் 15 வது அமர்வு (2- 5 டிசம்பர் 2020) மற்றும் APT இன் நிர்வாகக் குழுவின் 44 வது அமர்வு (7-10 திசெம்பர் 2020).

   பொதுச் சபையின் 15 வது அமர்வு (2- 5 திசெம்பர் 2020) மற்றும் நிர்வாகக் குழுவின் 44 வது அமர்வு (7-10 திசெம்பர் 2020) மற்றும் செயலாளர் நாயகம் மற்றும் ஆசிய பசிபிக் தொலைத்தொடர்பு சமூகத்தின் பிரதி செயலாளர் நாயக தேர்தலில் வாக்களிப்பதற்கு இலங்கையை பிரதிநிதித்துவம் செய்வதற்கான தூதுக்குழு மற்றும் சான்று ஆவணங்களை ஏற்பாடு செய்தது.

8. ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவ அமைப்புத் திட்டம், IPV6 இனை நடைமுறைப்படுத்துதல் மற்றும் புதிய அனுமதிப்பத்திர கட்டமைப்பு தொடர்பான நிபுணர் உதவித் நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு ITU/APT உடனான இயங்கலை கலந்துரையாடல்கள்.

சர்வதேச அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து திறன் அபிவிருத்தி மற்றும் பயிற்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன

ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கான தொலைத்தொடர்பு தொடர்பான திறன் அபிவிருத்தி மற்றும் பயிற்சித் திட்டங்களை ITU, APT மற்றும் SAFIR உடன் ஒருங்கிணைந்து பிரிவின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது.

பயிற்சிக்குப் பிந்தைய விளக்கக்காட்சிகளைப் பயன்படுத்தி அறிவு பகிர்வு அமர்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

2020 ஆம் ஆண்டிற்கான உயர் பயிற்சிக் குழுவின் அங்கீகாரத்துடன் 11 பயிற்சித் திட்டங்கள், 3 கருத்தரங்குகள் மற்றும் 3 மாநாடுகள்/கூட்டங்களில் பங்கேற்க பொருத்தமான ஆணைக்குழு அதிகாரிகளை முன்மொழிவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது

சர்வதேச நிறுவனங்களின் ஆண்டு சந்தாக்கள்

இலங்கையானது சர்வதேச தொலைத்தொடர்புகள் ஒன்றியம் (ITU), ஆசிய பசுபிக் தொலைத்தொடர்பு-சமூகம் (APT), தெற்காசிய தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் சங்கம் (SATRC), பொதுநலவாய தொலைத்தொடர்பு அமைப்பு (CTO) மற்றும் உட்கட்டமைப்பு ஒழுங்குமுறைக்கான தெற்காசிய கூட்டமைப்பு (SAFIR) போன்றவற்றில் உறுப்பினராக உள்ளது. இந்த நிறுவனங்களின் உறுப்புரிமையை தொடர்ந்து வைத்திருப்பதற்கு வருடாந்த அடிப்படையில் சந்தா செலுத்தப்படுகிறது. குறித்த சர்வதேச தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு செலுத்தும் உறுப்பினர் கட்டணம் கீழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 14: சர்வதேச நிறுவனங்களுக்கான ஆண்டு சந்தாக்கள்

ITU	APT	CTO
CHF 159,000 மார்ச் 2020	USD 15,420 மார்ச் 2020	GBP 25,000 யூலை 2020

இந்த சர்வதேச நிறுவனங்களிடமிருந்து தொலைத்தொடர்பு / தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையில் திறன் அபிவிருத்திக்கான தொழில்நுட்ப உதவி, நிபுணர் உதவி, செயற்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் நட்புறவு நிகழ்வுகள் போன்றவற்றை இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு பெற்றது.

உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினம் 2020

உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினம் ஒவ்வொரு ஆண்டும் மே 17 ஆந் திகதி சர்வதேச தொலைத்தொடர்பு சங்கம் (ITU) நிறுவப்பட்டதையிட்டு கொண்டாடப்படுகின்றது. உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினத்தின் முக்கிய நோக்கம், சமூக-பொருளாதார வளர்ச்சியில் தவகல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களை எவ்வாறு உள்வாங்கிக் கொள்வது மற்றும் டிஜிட்டல் பிளவை இணைப்பது எவ்வாறு என்பது பற்றி உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும். 2020-உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினத்தின் கருப்பொருள் "2030 இணை இணைத்தல்" : நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் (SDGs)" ஆவதோடு உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினத்தை குறிக்குமுகமாக நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதற்கு மற்றும் '2030 இணை இணைத்தல்' நிகழ்ச்சி நிரலை ஊக்குவிப்பதற்கும் உறுப்பு நாடுகளுக்கு அழைப்பு விடுத்தது.

இந்த ஆண்டுக்கான 'உலக தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் சமூக தினத்தை' கருப்பொருளாகக் கொண்டு தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் இணையத்தளம் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை இந்த பிரிவு மேற்கொண்டது. உலக தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் சமூக தினத்தையொட்டி அதிமேதகு ஜனாதிபதி, மாண்புமிகு பிரதமர், சர்வதேச தொலைத்தொடர்புகள் ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் மற்றும் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோரின் செய்திகள் எமது இணையத்தளத்தில் வெளியிடப்பட்டன.

இணக்கம் மற்றும் விசாரணை பிரிவு

கண்ணோட்டம்

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் முக்கிய நோக்கங்களில் ஒன்று இலங்கையில் நம்பகமான மற்றும் ஆற்றல்மிக்க தேசிய மற்றும் சர்வதேச தொலைத்தொடர்பு சேவையை வழங்குவதை உறுதி செய்வதாகும். இந்த நோக்கத்திற்காக, தொலைத்தொடர்பு சேவை வழங்குனர்கள் நம்பகமான, ஆற்றல்மிக்க மற்றும் தரமான தொலைத்தொடர்பு சேவையை வழங்குவதற்கான ஒழுங்குபடுத்தும் கடப்பாடுகளுக்கு இணங்குவதை உறுதிப்படுத்த ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இதற்காக தொழில்துறையின் தொடர்ச்சியான கண்காணிப்பு, விசாரணை மற்றும் புலனாய்வு ஆகியன அவசியப்படுவதோடு பொருத்தமான ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை அமுல்படுத்தி நுகர்வோர் முறைப்பாடுகளைச் செயற்படுத்துவதுடன் அவற்றின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வுகளைக் கண்டறிவதன் மூலம் வாடிக்கையாளர் திருப்தியை வழங்குவதுடன் நிறுவனத்தின் சுயநிலைமையும் மேம்படுத்தலாம். இந்த பொறுப்புகளை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் இணக்கம் மற்றும் புலனாய்வுப் பிரிவு கையாள்கிறது.

சேவையின் தரம் (QoS)

செயற்பாடுகள்

- அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள QoS தரநிலைகள் மற்றும் PSTN செயற்படுத்துனர்களுடன் செய்துகொள்ளப்பட்டுள்ள உள்ளக ஒப்பந்தங்களை பின்பற்றுவதை கண்காணித்தல்.
- PSTN செயற்படுத்துனரின் நெட்வேர்க் செயலாற்றல் தொடர்பாக தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு நிர்ணயித்த QoS அளவுரு இலக்கு மதிப்புகளின் அடைவு நிலையை கண்காணித்தல்.
- குரல் மற்றும் புரோட்பேண்ட் சேவைகளுக்கான PSTN செயற்படுத்துனர்களால் அளவிடப்பட்ட சேவை தரம் (QoS) அளவுரு மதிப்புகள் மற்றும் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் கணக்காய்வு செய்யப்பட்ட மதிப்பீடுகள் ஆகியவற்றுக்கு இடையிலான ஒப்பீடு குறித்த அறிக்கையைத் தயாரித்தல்.
- தகவல் அளவீடுகள் மற்றும் செயலாற்றல் அளவீடுகளின் துல்லியத்தை மேம்படுத்துவதற்காக மற்றும் அறிந்து கொள்ளும் பொருட்டு PSTN செயற்படுத்துனர்கள் மத்தியில் ஒப்பீட்டு அறிக்கையை வழங்குதல்.
- அவ்வப்போது கணக்காய்வு செய்வதன் மூலம் PSTN செயற்படுத்துனர்களால் மேற்கொள்ளப்பட்ட QoS செயலாற்றல் அளவீடுகளின் துல்லியத்தை மதிப்பிடுதல்.
- தொலைத்தொடர்பு சேவைகளின் QoS இற்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளைத் தயாரித்தல்.
- QoS இனை செல் மட்டத்தில் கண்காணித்தல் மற்றும் கணக்காய்வு செய்து வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் QoS இன் மேம்பாடுகளுக்காக செயற்படுத்துனர்களுடன் கலந்துரையாடல்.

செயலாற்றல்

- PSTN செயற்படுத்துனர்களிடமிருந்து பெறப்பட்ட மாதாந்த QoS அறிக்கைகளின் சமர்ப்பிப்புகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் தேவையான இடங்களில் QoS அளவுருக்களை மேம்படுத்துவதற்காக அவர்களுடன் கலந்துரையாடுதல்.
- நான்கு காலாண்டுகளுக்குமான ஒப்பீட்டு அறிக்கையைத் தயாரிப்பதுடன் தகவல் அளவீடுகள் மற்றும் செயற்திறன் அளவீடுகளின் துல்லியத்தை மேம்படுத்துவதற்காக PSTN செயற்படுத்துனர்கள் மத்தியில் விநியோகித்தல்.
- PSTN செயற்படுத்துனர்கள் நெட்வேர்க் பிரிவுகளிலிருந்து செயலாற்றல் அளவீட்டு தரவைப் பெற்று, தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு வழங்கிய சமன்பாட்டின் பிரகாரம் கணக்கிட்டு, QoS அளவுரு வடிவத்தில் மீண்டும் அறிக்கையிடுதல். தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு செயற்படுத்துனரின் நெட்வேர்க்கைப் பார்வையிடுவதுடன் கணக்கீட்டு முறை மற்றும் QoS அளவுருக்களைக் கணக்கிடுவதற்காக நெட்வேர்க் பிரிவுகளிலிருந்து பெறப்பட்ட மூல தரவை மீள்மதிப்பீடு செய்தல்.

கண்காணிப்பு

செயற்பாடுகள்

- திருத்தப்பட்ட 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு வழங்கிய அனுமதிப்பத்திரத்தின் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் PSTN செயற்படுத்துனர்களால் பின்பற்றப்படுவதை கண்காணித்தல்.
- சட்டத்தின் பிரிவு 21 இன் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளுக்கு இணங்குவதை கண்காணித்தல் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்காதபோது தேவையான ஒழுங்குமுறை நடவடிக்கைகளை எடுத்தல்.
- அனுமதிப்பத்திரம் பெற்ற PSTN செயற்படுத்துனர்களால் அங்கீகரிக்கப்படாத கட்டண தொகுப்புகள் வழங்குவதை கட்டுப்படுத்த ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை கண்காணித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளல்.
- அனுமதிப்பத்திரம் பெற்ற செயற்படுத்துனர்களின் நெட்வேர்க்குகளுக்கு சட்டவிரோத அழைப்பு தடைப்படுதல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரித்து, அவசியமெனின் பொருத்தமான ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை எடுத்தல்.
- அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் விற்பனையாளர்களால் வகை அனுமதி வழங்கப்படாத தொலைத்தொடர்பு உபகரணங்களை விற்பனை செய்வது குறித்து விசாரணைகளை நடத்துவதுடன் அனுமதிப்பத்திரத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறுவது கண்டுபிடிக்கப்படின் தகுந்த நடவடிக்கைகளை எடுத்தல்.
- தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு வழங்கிய செல்லுபடியாகும் விற்பனையாளர் அனுமதிப்பத்திரம் இல்லாத விற்பனையாளர்களால் தொலைத்தொடர்பு உபகரணங்களை சட்டவிரோதமாக விற்பனை செய்வது தொடர்பாக கண்காணித்து விசாரணை செய்வதுடன் சட்டவிரோத நடத்தை ஏதேனும் கண்டறியப்பட்டால், அவசியமெனக் கருதப்படும் பொருத்தமான ஒழுங்குமுறை நடவடிக்கைகளை எடுத்தல்.
- அனுமதிப்பத்திரம் பெற்ற செயற்படுத்துனர்களால் சந்தையில் அங்கீகரிக்கப்படாத கட்டண தொகுப்புகளை வழங்குவதை கண்காணித்து தேவையான ஒழுங்குமுறை நடவடிக்கைகளை எடுத்தல்.
- இணக்க நடவடிக்கைகளுக்கு பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைத் தயாரித்தல்.
- நாட்டிற்கு IMEI-இயக்கப்பட்ட சாதனங்களை இறக்குமதி செய்வதை நெறிப்படுத்துதல்.
- செயற்படுத்துனர்களால் சிம் பதிவுசெய்தலை கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் மற்றும் தேவையான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை எடுத்தல்.
- பல்வேறு தொலைத்தொடர்பு சேவைகளை வழங்குவதற்கான சட்டத்தின் விதிகளின் கீழ் அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதற்கான தேவை குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல்.

செயலாற்றல்

- வகை அங்கீகாரம் வழங்கப்படாத தொலைத்தொடர்பு உபகரணங்களை விற்பனையாளர்களால் விற்பனை செய்த 07 சந்தர்ப்பங்களின் விசாரணைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.
- அனுமதிப்பத்திரம் பெற்ற செயற்படுத்துனர்களால் அங்கீகரிக்கப்படாத கட்டண தொகுப்புகளை வழங்குவதற்கான 4 சந்தர்ப்பங்களின் விசாரணைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.
- செயற்படுத்துனர்களால் அனுமதிப்பத்திரத்தின் பிரிவு 17 ன் நிபந்தனைகளை கடைபிடிப்பதை கண்காணிப்பதற்கு பதின்மூன்று (13) ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.
- விற்பனையாளர்களால் அனுமதிப்பத்திரத்தின் பிரிவு 21 ன் நிபந்தனைகளை கடைபிடிப்பதை கண்காணிப்பதற்கு எட்டு மாவட்டங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.
- தொலைத்தொடர்பு சேவைகளை வழங்க அனுமதிப்பத்திரமொன்று அவசியம் என்பது தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்தியது.
- சிம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலின் படி வாடிக்கையாளர்களை மீள்பதிவு செய்ய செயற்படுத்துனர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்களா என்பதை பரீட்சிப்பதற்கு மூன்று (03) பௌதீக கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.
- வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் கட்டணப் பொதிகளின் கட்டணம் வசூலிக்கும் வழிமுறைகள் தொடர்பாக பதினாறு (16) கணக்காய்வுகள் நிறைவு செய்யப்பட்டன.

புலனாய்வு மற்றும் விசாரணை

செயற்பாடுகள்

- தொழில்நுட்ப இடையூறுகள் மற்றும் அனைத்து அங்கீகரிக்கப்படாத நடைமுறைகளையும் குறைப்பதற்கு விதிமுறைகளுக்கு இணங்க தேவையான ஒழுங்குமுறை செயற்பாடுகளை விசாரணை செய்தல்.
- தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு குறித்த அரசாங்க உத்தரவுகளுக்கு இணங்க ஒழுங்குமுறை நடவடிக்கைகளில் புலனாய்வு மற்றும் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- செயல்முறை, செயற்திறன் மற்றும் அதிகாரம், செயற்பாடு மற்றும் கடமைகளின் வெளிப்பாடு தொடர்பான எந்த விடயத்திலும் அறிவுரை வழங்குவதற்காக, அவசியமென கருதப்படும் அறிவுரை வழங்கும் அமைப்புகளின் மூலம் புலனாய்வு ஆலோசனைகளை வழங்குதல்.

செயற்திறன்

- காவல்துறையின் / சிஐடி யின் கோரிக்கைகளின் பிரகாரம் அவர்களின் விசாரணைகளுக்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.
- தொலைத்தொடர்பு சேவைகளின் சட்டவிரோத செயல்பாடுகள் குறித்த தொழில்நுட்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது.
- IMEI சரிபார்ப்பு தீர்வை உள்ளடக்கிய சிம் சாதனம்/விற்பனையாளர் பதிவு செயல்முறைகள் நெறிப்படுத்தப்பட்டது.
- சட்டவிரோத DTH/கேபிள் டிவி சேவை வழங்குநர்களை மட்டுப்படுத்துதல்.
- சைபர் துன்புறுத்தல் சம்பந்தமான முறையீடுகளை முகாமைத்துவம் செய்தல்.

நுகர்வோர் முறைப்பாடுகள் மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு

1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க (1996 இல் திருத்தப்பட்ட) இலங்கை தொலைத்தொடர்பு சட்டத்தின் பிரிவு 09 இன் படி, ஒரு தொலைத்தொடர்பு சேவைக்கான சந்தாதாரர் அல்லது பொது உறுப்பினர் செயற்படுத்துனரினால் வழங்கப்படும் தொலைத்தொடர்பு சேவைகள் தொடர்பாக ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யும் பொழுது ஆணைக்குழு அத்தகைய முறைப்பாட்டடை விசாரணைக்கு உட்படுத்துவதற்கு அவசியமெனக் கருதுவதாயின் அதற்கான விசாரணையை மேற்கொள்ளும். அத்தோடு இதுபோன்ற முறைப்பாட்டுக்கு தீர்வு தேவைப்படலாம் என்பதால் இதுபோன்ற தீர்வு நடவடிக்கைகளை எடுக்க ஆணைக்குழு உத்தரவிடலாம்.

அத்தகைய விசாரணைகளின் போது, முறைப்பாட்டை அளிப்பதற்குத் தூண்டிய எந்தவொரு காரணத்தையும் அல்லது விடயத்தையும் சீர்செய்வதற்கு அவசியமானதாகக் கருதப்படும் எவ்வகையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பொருத்தமாயின் நஷ்டஈடு வழங்குவதற்கும் ஆணைக்குழுவினால் உத்தரவிடப்படலாம்.

செயற்பாடுகள்

தொலைத்தொடர்பு சேவை தொடர்பாக சந்தாதாரரிடமிருந்து அல்லது எந்தவொரு பொது உறுப்பினரிடமிருந்து பெறப்படும் நுகர்வோர் முறைப்பாட்டு கடிதங்களைக் கையாளுதல். இத்தகைய முறைப்பாடுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு தேவையான பரிந்துரைகளுடன் தொடர்புடைய சேவை வழங்குநருக்கு அனுப்பப்படும். நுகர்வோர் உறவுப் பிரிவு அதனைப் பின்பற்றி சேவை வழங்குநரிடம் முறைப்பாடுகளுக்கு நியாயமான தீர்வை வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறது. சேவை வழங்குநரால் வழங்கப்பட்ட தீர்வில் முறைப்பாட்டாளர் திருப்தி அடையவில்லையென்றால், முறைப்பாடு தொடர்பாக இரு தரப்பினருக்குமிடையில் கலந்துரையாடுவதற்கு பிரதி பணிப்பாளர்-இணக்கப்பாடு (நுகர்வோர் முறைப்பாடுகள் மற்றும் பொது விழிப்புணர்வு) அவர்களின்ன பங்குபற்றலுடன் சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்படுகிறது, ஆணைக்குழுவானது இரு தரப்பினரும் பிரச்சனைக்கு சுமுகமான தீர்வை அடைவதற்கு வசதியளிக்கின்றது.

அத்தகைய முயற்சி வெற்றியளிக்கவில்லையென்றால், இவ்வாறான முறைப்பாடுகளை நுகர்வோர் முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்றகான உள்ளக குழுவுக்கு அனுப்பப்படும்.

செயற்திறன்

தவறவிடப்பட்ட கையடக்க தொலைபேசிகள் தொடர்பான கோரிக்கையை கையாளுதல்

சமூக பொறுப்பின் ஒரு அங்கமாக மேற்கூறிய சேவைக்கு மேலதிகமாக, தவறவிடப்பட்ட கையடக்க தொலைபேசிகளைக் கண்டுபிடிக்கும் செயற்பாட்டில் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஒரு மத்தியஸ்தராக செயல்படுகின்றது. தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களுக்கு தினமும் பெறப்படும் முறைப்பாடுகளை முன்வைப்பதுடன் அது தொடர்பாக செயற்படுத்துனர்களினால் வழங்கப்படும் பதில்கள் தொடர்புடைய பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

விழிப்புணர்வு திட்டம்

நுகர்வோர் முறைப்பாடுகளை பகுப்பாய்வு செய்யும் போது, தொலைபேசிகளின் பயன்பாடு மற்றும் ஏனைய தொடர்புடைய பிரச்சினைகள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வின் முக்கியத்துவம் அறியப்படுகின்றது. எனவே, பரந்த அளவிலான விழிப்புணர்வு திட்டங்கள் சமூகத்திற்கு பயனுள்ள சேவையை வழங்கும் என்பதை நாங்கள் புரிந்துவைத்துள்ளோம். தோலைத்தொடர்பு எவ்வாறு நெறிமுறையாக பயன்படுத்தப்படுகிறது என்பது

குறித்து பொது மக்களுக்கு தெளிவுபடுத்தப்படல் வேண்டும் என ஆணைக்குழு உறுதியாக நம்புகின்றது. இவ்விடயம் தொடர்பாக ஒழுங்குபடுத்துனர்களின் சமூக பொறுப்பு குறித்தும் நாங்கள் கவனத்திற் கொண்டுள்ளோம்.

1. **பொலிஸ் உத்தியோகத்தர்கள்**
   கட்டான தேசிய பொலிஸ் கல்லூரி மற்றும் களுத்துறை பொலிஸ் பயிற்சி கல்லூரி ஆகியவற்றில் விரிவுரைகள் நடாத்தப்பட்டதோடு, மிரிஹான பொலிஸ், கொழும்பு சிறப்பு அதிரடிப் படைகளுக்கான உள்ளக சேவைப் பயிற்சி மற்றும் இலங்கை இராணுவத்திற்கு வளவாளர் வசதியும் வழங்கப்பட்டது. தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் சட்ட வரையறைக்குட்பட்டு அடிப்படை தகவல்களை பொது மக்களுக்கு அறிவுறுத்துவதற்காக பல தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டது.

2. **பொதுமக்கள்**
   தகவல்தொடர்பாடலை நெறிமுறையாக பயன்படுத்துவது குறித்து பொது மக்களுக்கு அறிவுறுத்துவதற்காக சுவரொட்டிகள், துண்டு பிரசுரங்கள் மற்றும் ஸ்டிக்கர்களை நாங்கள் தயாரித்துள்ளோம். அனைத்து புகையிரத நிலையங்கள், பொலிஸ் நிலையங்கள், பாடசாலைகள் என்பவற்றிற்கு சுவரொட்டிகள் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் ஸ்டிக்கர்கள் பொது போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டன.

சட்டப் பிரிவு

கண்ணோட்டம்

அனைத்து சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் பிரச்சினைகளுக்கும் ஆணைக்குழுவிற்கு ஆலோசனைகளை வழங்குவதில் சட்டப்பிரிவு முக்கிய பங்கு வகிக்கிறது. தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சார்பாக இருக்கும் அனைத்து வழக்கு விடயங்களையும் இந்த பிரிவு நிர்வகிக்கிறது.

தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஒழுங்குபடுத்தல் செயல்பாடுகளுக்கு சட்டப் பிரிவொன்று அவசியமாகும். தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மேற்கொள்ளும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் தொடர்பாக திருத்தப்பட்ட 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புச் சட்டத்தின் அடிப்படையில் மற்றும் ஏனைய தொடர்புடைய சட்டங்களின் அடிப்படையில் சட்ட ஆலோசனையை வழங்குவதற்கான பொறுப்பை சட்டப் பிரிவு கொண்டுள்ளது.

செயற்பாடுகள்

ஒப்பந்தங்களை தயாரித்தல், தொலைத்தொடர்புத் துறை தொடர்பான முதன்மை மற்றும் இரண்டாம் நிலை சட்டங்களை (உதாரணம்.: சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் தரநிலைகள்) விளக்குதல், ஆலோசனை செய்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல் என்பன தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் சட்டப் பிரிவின் பொறுப்புகள் மற்றும் செயற்பாடுகள் ஆகும். ஆணைக்குழுவின் ஏனைய பிரிவுகள் மற்றும் அனுமதிப்பத்திர உரிமையாளர்கள், பங்குதாரர்கள், அமைச்சுக்கள் ∴ பிரிவுகள் மற்றும் ஏனைய நிறுவனங்களால் குறிப்பிடப்படும் விடயங்களில் சட்டப் பிரிவு சட்ட ஆலோசனையை வழங்குகிறது. பல்வேறு ஒழுங்குபடுத்தும் விடயங்களில் சட்ட நடவடிக்கை தேவைப்படும் போது ஆணைக்குழுவிற்கு அறிவுரைகளை வழங்குவதோடு 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புச் சட்டத்தின் கீழ் வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளையும் சட்டப் பிரிவு மேற்கொள்ளும். உச்ச நீதிமன்றம், மேல்முறையீட்டு நீதிமன்றம், நீதவான் நீதிமன்றம், உயர் நீதிமன்றம் மற்றும் தொழிலாளர் இணக்கசபை போன்றவற்றில் தொடரப்பட்டுள்ள வழக்குகளில் ஆணைக்குழு ஒரு தரப்பாக இருக்கும் சந்தர்ப்பங்களில் அவற்றை கையாள்வதற்கான பொறுப்பு இப்பிரிவைச் சாரும்.

2020 ஆம் ஆண்டின் செயற்திறன்

2020 ஆம் ஆண்டில், கோவிட் -19 காரணமாக நாடு முடக்கப்பட்டிருந்த போதிலும், ஆணைக்குழுவின் பல ஒழுங்குமுறை நடவடிக்கைகளில் சட்டப் பிரிவானது ஈடுபட்டு தனது பங்களிப்பை வழங்கியது.

ஸ்பெக்ட்ரம் சிக்கல்கள், விற்பனையாளர் அனுமதிப்பத்திர சிக்கல்கள், தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களின் நெட்வர்க்குகள் தொடர்பான விடயங்கள் தொடர்பாக சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டதோடு நிலையான, கையடக்க சேவைகள் மற்றும் கேபள் டிவி சேவைகளின் பிரிவு 17 அனுமதிப்பத்திர இணக்கத்திற்கான முன்முயற்சிகளுக்கு சட்ட ஆலோசனை வழங்கப்பட்டது.

வாடிக்கையாளர் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பல முறைப்பாடுகள் தொடர்பாக சட்ட ஆலோசனை வழங்கப்பட்டது.

குற்றப் புலனாய்வு தொடர்பான காவல்துறையினரின் குற்றங்களை விசாரிக்க உதவுவதற்கான முயற்சியாக 2020 ஆம் ஆண்டில் குற்றவியல் விசாரணை தொடர்பான 346 நீதிமன்ற உத்தரவுகளை சட்டப் பிரிவு செயல்படுத்தியுள்ளது.

தொலைத்தொடர்பு துறையின் விரைவான முன்னேற்றங்களை அடைவதற்கு தற்போதைய இலங்கை தொலைத்தொடர்பு சட்டத்தில் புதிய திருத்தங்களை உருவாக்கும் பணியை நாங்கள் முன்னெடுத்துள்ளோம்.

வழக்கு நடவடிக்கை

ஆறு டெல்கோ தொடர்பான வழக்குகள் மற்றும் இரண்டு ஊழியர்களின் பணிநீக்கம் தொடர்பான விடயங்கள் உட்பட எட்டு சட்ட நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டில் நிறைவடைந்தன, அனுமதிப்பத்திரங்களை இரத்து செய்தல், அதிர்வெண் ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடுகள், பிரிவு 17 முறைமை அனுமதிப்பத்திரம் போன்ற விடயங்களில் நீதிமன்றங்களில் பல வழக்குகள் நிலுவையில் உள்ளன. 2020 ல் ஆணைக்குழுவுக்கு எதிராக ஒரு நீதிமன்ற வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது.

சிறப்பு செயற்திட்டங்கள பிரிவு

கண்ணோட்டம்

இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அபிவிருத்தி திட்டங்களை மற்றும் தேசிய நலன் கருதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பு விசேட செயற்திட்டங்கள் பிரிவைச் சாரும்.

அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் ஊடாக தொலைத்தொடர்பு துறையை மேம்படுத்துவதற்கான செயற்திட்டங்களை அமுல்படுத்துவதை முக்கிய இலக்காகக் கொண்டு இப்பிரிவு செயலாற்றுகின்றது. அத்தோடு தொலைத்தொடர்புத் துறையின் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்கு உதவும் ஆராய்ச்சி திட்டங்களை நடாத்துவதில் பங்களிப்புச் செய்து வருகின்றது.

செயற்பாடுகள்

- கொழும்பு தாமரை கோபுரத் திட்டத்தை செயல்படுத்துதல்.
- தொலைத்தொடர்பு ஊடக நிலைய மேம்படுத்தல் பணிகளைத் தொடர்தல் (ஹம்பாந்தோட்டை IT Park திட்டம்).
- இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பிரதான கட்டிடத்தின் விரிவாக்கமாக தலைமை அலுவலகத்தின் புதிய கட்டிடத்தை அபிவிருத்தி செய்தல்.
- கதிரான அதிர்வெண் கண்காணிப்பு நிலையத்தின் புதுப்பிப்பு மற்றும் மறுசீரமைப்பு பணிகள்.
- தாமரை கோபுரம் கட்டம் 02 திட்டத்தை வாகனங்கள் நிறுத்தும் வசதியுடன் பல்வகை மேம்பாட்டுடன் செயல்படுத்துதல்.
- ஆராய்ச்சி திட்டங்களின் முன்னேற்றம்.

ஆண்டின் செயல்திறன்

2020 ஆம் ஆண்டில் விஷேட திட்டப் பிரிவு பின்வரும் திட்டங்களை செயல்படுத்துவதைத் தொடர்ந்து முன்னெடுத்தது.

கொழும்பு தாமரை கோபுர செயற்திட்டம்

உலகின் அனைத்து வளர்ந்த நகரங்களிலும் மையப்படுத்தப்பட்ட ஒளிபரப்பு கோபுரம் ஒரு பொதுவான அம்சமாகும். அத்தகைய கோபுரத்தின் முக்கிய நோக்கம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை மற்றும் வானொலி ஒலிபரப்பு சேவைகளை நடாத்துவதற்கு உதவுவதோடு தொலைத்தொடர்பு நெட்வேர்க்குகளுக்கான மையமாக செயற்படுவது ஆகும்.

ஒற்றை அண்டெனா பயன்பாட்டுடன், ஒரே திசையில் இருந்து சமிக்ஞைகள் ஒளிபரப்புவதன் நல்ல வரவேற்பானது பொதுமக்களுக்கான முக்கிய பயனாக உள்ளதுடன் உட்கட்டமைப்பு பகிர்வு காரணமாக குறைந்த மூலதனம் மற்றும் குறைந்த செயற்பாட்டு செலவுகள் என்பன அத்தகைய வளர்ச்சியிலிருந்து ஒளிபரப்பாளர்களுக்கு கிடைக்கத்தக்க முக்கிய நன்மைகளாகவுள்ளது.

மையப்படுத்தப்பட்ட ஒளிபரப்பு கோபுரங்கள் எப்போதுமே நகரத்தின் வானலைகளில் ஒரு சிறந்த அம்சமாக உள்ளதுடன் அதிகப்படியான நம்பிக்கையற்ற ஒளிபரப்பு வசதிகளைக் குறைப்பதன் மூலம் நகரத்தின் வானலைகளின் அழகை மேலும் மேம்படுத்த உதவுகிறது.

மையப்படுத்தப்பட்ட ஒளிபரப்பு கோபுரங்கள் எப்போதுமே ஒரு அடையாளச் சின்னமாக திழ்கின்றது. அத்தோடு இது பெரும்பாலும் நகரத்தின் மத்தியில் அமைந்துள்ளமையினால் காணியின் மதிப்பு உள்ளிட்ட அபிவிருத்திச் செலவுகள் கணிசமானளவு அதிகமாக காணப்படுகின்றது. எனவே உயர் கண்காணிப்பு தளம், உணவகங்கள், விற்பனை நிலையங்கள் போன்ற பல கவர்ச்சிகரமான இடங்கள் வணிக தொகுதியின் பாவணைய அதிகரிக்க உதவுவதோடு அதன் காணரமாக கோபுர தொகுதியின் முதலீடுகளை நியாயப்படுத்தவும், செயற்பாட்டைத் தக்கவைப்பதன் மூலம் வருமானத்தை உறுதி செய்ய வழிவகுக்கின்றது.

கொழும்பு தாமரை கோபுரத்தின் முக்கிய கவர்ச்சி


- கொழும்பு நகரம் மற்றும் புறநகர்ப் பகுதிகளின் பரந்த காட்சியை பார்வையாளர்கள் அனுபவிக்கத்தக்க வகையில் உயர் கண்காணிப்பு தளம்
- இரண்டு விருந்து அரங்குகள் - திருமணங்கள், சமூக மற்றும் கூட்டுறவு நிகழ்வுகளுக்கு
- விஜபி விருந்தினர்களுக்கான தங்குமிட வசதி, விருந்து மண்டப செயற்பாடுகள் என்பவற்றிற்கு உதவுவதற்கான அரச விருந்தினர் மாளிகை
- பாரிய விற்பனை நிலைய வளாகம் மற்றும் உணவுச் சாலைகள்
- சுழலும் உணவகம

- டிஜிட்டல் காணொளி ஒளிபரப்பு சேவைகள், ஒலி ஒலிபரப்பு, கொழும்பு நகரம் மற்றும் புறநகர்ப் பகுதிகளை உள்ளடக்கிய அனலொக் ஒலிபரப்பு வசதிகளின் இணை இருப்பிடம் ஆகியவற்றிற்கு துணைபுரியும் திறன் கொண்ட அண்டெனா மாஸ்ட்.
- மட்டுப்படுத்தப்பட்ட வாகன நிறுத்துமிட வசதிகளுடன் சிறந்த முறையில் பொழுதைக் கழிப்பதற்கு பொது மக்களுக்கான பெரிய பூந்தோட்டம்.


அட்டவணை 15: ஒப்பந்தத்தின் சுருக்கம்

வாடிக்கையாளர் (முதலீட்டாளர்)	இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்கு படுத்தல் ஆணைக்குழு
ஒப்பந்தக்காரர்	CEIEC & ALIT
ஒப்பந்தத்தின் வகை	வடிவமைப்பு மற்றும் நிர்மாணம்
திட்டத்திற்கான பொறியலாளர்	மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் திட்ட ஆலோசனை பிரிவு
ஒப்பந்த விலை	அ.டொ. 104.3 மில்லியன்.
ஆரம்பித்த திகதி	16 நவம்பர் 2012
ஒப்பந்த திட்டம் பூர்த்தியடையும் திகதி	2017 ஒக்தோபர் 31 (ஆரம்ப நிர்மாண காலம் 912 நாட்கள் + TRCSL இனால் கால நீடிப்பு வழங்கப்பட்டது)
செயற்திட்டத்திற்கு பிரதான ஒப்பந்காரர் மற்றும் பொறியியலாளரால் செய்யப்பட்ட தற்காலிக செயற்திட்ட பூர்த்தித் திகதி	31 திசெம்பர் 2019

விளக்கப்படம் 12: திட்டமிடப்பட்ட மற்றும் உண்மையான முன்னேற்றம் மற்றும் இலக்கு பூர்த்தித் திகதியின்றி தொடர்கிறது



2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான முன்னேற்றம்



அட்டவணை 16: கொழும்பு தாமரை கோபுர செயற்திட்டத்தின் முன்னேற்றம

விபரம்	பூர்த்தி %
ஆண்டெனா மாஸ்ட்	100%
பிரதான தளத்தினை துப்பரவாக்குதலும் வர்ணம் அடிதத்லும்	99%
கோபுர வீட்டின் பொருத்துதல்கள்	99.9%
கோபுர கட்டமைப்பிற்கு வர்ணம் அடித்தல்	100%
உள்ளக அலங்காரம்	99%
கோபுர வீட்டின் மின் பொருத்துதல்கள்	98%
கோபுர வீட்டின் தீயணைப்புக்கான நீர்	98%
கோபுர வீட்டின் நீர் வழங்கல் மற்றும் வடிகால்	100%
கோபுர அடித்தள மின் நிறுவல்	100%
கோபுர அடித்தள நீர் வழங்கல் மற்றும் வடிகால்	100%
வெளிப்புற மின்சார நிறுவல்கள்	100%
கோபுர அடித்தள கூரை	100%
வெளிச்ச கோபுர வீடு, அடித்தளம் மற்றும் கட்டமைப்பு	100%
பாரந்தூக்கி (லிப்ட்) மற்றும் எஸ்கலேட்டர்கள்	98%
கட்டிட முகாமைத்துவ நுண்ணறிவு முறைமை	80%



அட்டவணை 17: தாமரைக் கோபுர வேலைகளின் பொழிப்பு

கொழும்பு தாமரைக் கோபுர செயற்திட்டம்	செயற்திறன்
கொழும்பு தாமரைக் கோபுரத்தின் நிர்மாணம்	CANC இன் நியமனம் சிறிய குறைபாடுகளை சீர்செய்தல் மற்றும் கண்காணிப்பு பாரிய குறைபாடுகளை சீர்செய்தல் தடுக்கமுடியாத இக்கட்டான நிலை அறிவிக்கப்பட்டது. COC க்கான விண்ணப்பம் செயலாக்கப்பட்டது. மேலதிக கழிவுநீர் இணைப்பு கோரப்பட்டது. பராமரிப்பு ஒப்பந்தங்களை வரைதல் பயிற்சி ஆவணங்களை வரைதல் பொது இடங்களில் தீயணைப்பு கருவித் தொகுதிகளை பிரதியீடு செய்தல் PI Cover தொடர்பான வேலைக்கான மீளளிப்புடன் தொடர்புடைய PCU ஆலோசணைக்குழு நீடிப்பிற்கான அமைச்சரவைப் பத்திரம் பரிசீலனையில் உள்ளது.
தாமரைக் கோபுர PCU ஆலோசணை கட்டணம்	ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கேற்ப, PCU திட்ட நிறைவு அட்டவணையை சமர்ப்பிக்கும் வரை PCU இன் ஆலோசனை சேவை நீட்டிக்கப்பட்டது. PCU அங்கீகரிக்கப்பட்ட திட்ட நிறைவு அட்டவணையை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.
கொழும்பு தாமரைக் கோபுர கட்டிடத் தொகுதியை வணிகமயமாக்கல்	நிறுவனத்தை தோற்றுவிப்பதற்கான அனுமதியைப் பெறுவதற்காக அமைச்சரவையில் ஒரு குறிப்பைச் சமர்ப்பிப்பதற்கு சட்டமா அதிபரின் கருத்துக்களும் ஆலோசனைகளும் பெறப்பட்டன. CLT க்கான மதிப்பீடு தீயணைப்பு விசைக்குழாய், ABB தொகுதி (DEMO விடம் இருந்து), மின்பிறப்பாக்கி, மின்தூக்கி, குளிர் தண்ணீர் அமைப்பு, VRV முறைமை, VAV முறைமை, தீப்பாதுகாப்பு விசைக்குழாய் மற்றும் குழாய் பொருத்திகளுக்காக கிடைக்கப்பெற்ற பராமரிப்பு ஒப்பந்தங்களை PCU மீளாய்வு செய்தது. வணிகமயமாக்கல் நடவடிக்கைகள் மற்றும் ஒப்பந்தக்காரரிடமிருந்து கோபுரத்தை ஏற்றுக்கொள்ளும் சாத்தியக்கூறுகளைத் தொடங்குவதற்கு TRCSL ஆல் பிரத்யேக குழு ஒன்று திரட்டப்பட்டது. குழுவைத் தவிர, வல்லுநர்களின் தன்னார்வக் குழுவும் கோபுரத்திற்கான வணிகமயமாக்கல் திட்டம் மற்றும் மூலோபாயத்தை உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளது.
சோதனை மற்றும் ஆணையிடுதல்	சிறிய குறைபாடு திருத்த ஆய்வு அறிக்கையைப் பெறுவதற்கான ஒத்துழைப்பு பாரிய குறைபாடுகளை சரிசெய்தல் (திரை சுவர் நீர் கசிவு போன்றவை). FDAC, BMS, CCTV அமைப்பு, தரை குறிகாட்டிகள் மற்றும் Aces கட்டுப்பாட்டு முறைமை ஆகியவற்றை பரீட்சித்தல். BMS, தற்போதைய பலவீனமான நுண்ணறிவு முறைமை, மத்திய வாயுசீராக்கி ஆகியவற்றின் பயிற்சிப் பொருட்களின் மீளாய்வு. DEMO வின் பரிந்துரையின்படி வழக்கமான செயற்பாட்டின் அடிப்படையில் மின்பிரப்பாக்கிகளை சீராக்கம் செய்தல். ஒவ்வொரு ஒழுக்காற்று மற்றும் வாராந்த முன்னேற்ற மதிப்பாய்வு கூட்டங்களினதும் மீளாய்வு.



கொழும்பு தாமரை கோபுரத்தின் முன்மொழியப்பட்ட பணமாக்க திட்டம



COLOMBO
LOTUS TOWER
EPICENTER OF TECHNOLOGY

A NATIONAL EMBLEM FOR A PROUD COUNTRY

THE COLOMBO LOTUS TOWER IS THE ULTIMATE CULMINATION OF BROAD KNOWLEDGE AND HARD WORK BY PROFESSIONALS.

FOR THE VERY FIRST TIME IN SRI LANKA,
MANY FORMS OF TECHNOLOGY COME TOGETHER TO CREATE A PLATFORM FOR KNOWLEDGE AS WELL AS ENTERTAINMENT.





THE MAIN PURPOSE OF THE TOWER IS THE FACILITATION OF A SINGLE TRANSMISSION HUB FOR TELECOMMUNICATION, TV AND RADIO.

THIS CONTRIBUTES GREATLY TO THE REDUCTION OF THE CITY'S CARBON FOOTPRINT, WHILE ALSO HELP TO IMPROVE THE OVERALL QUALITY OF TRANSMISSIONS.

LOTUS TOWER

EPICENTER OF TECHNOLOGY



1. TOWER BASE
2. LOTUS TOWER PODIUM BASE
3. MAIN ENTRANCE TO PODIUM BASE
4. ENTRANCE TO PODIUM BASE-01
5. ENTRANCE TO PODIUM BASE-02
6. ENTRANCE TO PODIUM BASE-03
7. PARKING SPACE
8. SRI LANKA POST HEADQUARTERS
9. ENTRANCE AND EXIT
10. WATER FEATURE
11. LANDSCAPED AREA
12. ENTRANCE PAVILION
13. OPEN PLAZA
14. THE RIBBON OF BEIRE- WALKWAY
15. WATER SHOW AREAS
16. OBSERVATION DECK
17. JETTY
18. FLOATED DINING RESTAURANTS
19. AREA FOR PUBLIC PARK
20. TERMINAL PODIUM
21. PARKING SPACE FOR BUSSES
22. ADMIN FACILITY BUILDING
23. GYM & MANAGEMENT BUILDING
24. GARBAGE COLLECTION BUILDING



MASTER PLAN

LUXURY SUITES

(8100 sq. ft.)


ON THE LOOKOUT FOR LUXURIOUS TRENDY ROOMS OOZING WITH CHARACTER AND COMPLETE WITH A MAGNIFICENT VIEW? LOOK NO FURTHER;

FOUND ALONG THE **BEST LOCATIONS** OF THE TOWER HOUSE AT THE 239M LEVEL.


FEATURING A L**UXURIOUS** AND **COZY** INTERIOR ALL VIP ROOMS OVERLOOK AMAZING VIEWS OF THE CITY'S URBAN FABRIC.

COMFORT IS SUPREME WITHIN THESE SPACES AND WILL **CREATE LASTING MEMORIES.**











GROUND FLOOR


THE CONCEPTUAL APPROACH

THE LOTUS, WHICH IS ASSOCIATED AS AN EMBLEM IN SRI LANKAN CULTURE IS A SYMBOL OF THE LORD BUDDHA, HIS PURE TEACHINGS AND THE BUDDHIST TRADITION.

THE ESSENCE OF THE LOTUS TOWER IS CONTINUED AS INSPIRATION FOR THE GROUND LEVEL INTERIOR.

THE LOTUS FORM IN ABSTRACTS IN ENVISIONED TO SYMBOLIZE THE LORD BUDDHA AND HIS ENLIGHTENMENT IS MARVELOUSLY REPRESENTED BY THE INCORPORATION OF LIGHT.

IT IS EXPRESSED ARCHITECTURALLY, AS AN ABSTRACTED SKELETAL FORM OF THE LOTUS, AND IS ILLUMINATED AND HUNG BELOW A MIRROR CLAD CEILING TO GENERATE ENDLESS REFLECTIONS WITHIN A SPACE, CREATING A FEELING OF SELF-REALIZATION.



MAIN SPACES

ENTRANCE LOBBY

EXHIBITION GALLERY (4639sq. ft.)

SOUVENIRS SHOP (3630 sq. ft.)

FOOD COURT
(10365 sq. ft.)

VISITOR INFORMATION

L.E.D. WALL AT
ENTRANCE LOBBY

DIGITAL
TOUCH SCREEN DISPLAY

ROBOT ASSISTANTS

A.R. LOCATION MAP



THE REVOLVING RESTAURANT

GIVING YOU EVERY POSSIBLE VIEW OF THE CITY, EACH TIME YOU LOOK BEYOND.

WATCH THE COLOMBO CITY WAKE UP TO THE LUSH MORNING AND GO THROUGH THE VARIED AND EXCITING MOTIONS OF ITS DAY UNTIL THE BEAUTIFULLY ILLUMINATED EVENING SKY TAKES OVER USHERING IN THE BUSTLING CITY NIGHT GLOW WITH MILLIONS OF MOVING AND STATIONARY LIGHTS.
A VIEW LIKE NO OTHER, ALL WHILE ENJOYING THE BEST OF CUISINES.

THE BIERA LAKE, COLOMBO PORT, PORT CITY, ALL THE STANDING PINNACLES OF SKY LINE UP TO THE HORIZON OF INDIAN OCEAN.

ENJOY WATCHING THE COLOMBO PORT, THE NEW PORT CITY AND THE ENTIRITY OF THE COLOMBO SKYLINE ALIGN ITSELF TO THE HORIZON OF THE INDIAN OCEAN




SEE THE CITY OF COLOMBO IN 90 MINUTES

224 PAX

THE FINEST CUISINE

(9300 sq. ft.)



OBSERVATION DECK

360⁰ VIEW OF THE COLOMBO COMMERCIAL CITY FABRIC.

A VIEW OF ALL THE PINNACLES OF COLOMBO'S SKYLINE AGAINST A BACKDROP OF THE FRESH INDIAN OCEAN.

SKY IS THE LIMIT FOR WHAT CAN BE SEEN.

SURE TO BE THE NEXT SOCIAL MEDIA SENSATION IN SRI LANKA. #LOTUS

SKY LOUNGE / INTERNAL OBSERVATION DECK

(10365 sq. ft.)



SOVENIRSHOP

A VAST ARRAY OF SOUVENIRS THAT BRING OUT THE RICH HERITAGE AND CULTURE OF THE ISLAND ARE AVAILABLE HERE, RANGING FROM TRADITIONAL FOOD ITEMS TO INDIGENOUS AYURVEDIC AROMATICS AND COSMETIC ITEMS.
















FIRST FLOOR

AS ONE OF THE FASTEST GROWING ECONOMIES IN THE WORLD, SRI LANKA NOW OPENS ITS DOORS TO BRING IN THE LATEST TECHNOLOGICAL EXPERIENCES FOR ITS CITIZEN.



- INNOVATION CENTER (6888 sq. ft.)
- ESPORTS AREA (5252 sq. ft.)
- DIGITAL BANKING AREA (1483 sq. ft.)
- COFFEE LOUNGE (4183 sq. ft.)
- DIGITAL ART MUSEUM (2300 sq. ft.)
- 7D CINEMA (1097 sq. ft.)

TOWER HOUSE

THE LOTUS PETALS CONCEAL WITHIN THEM NINE FULLY FURNISHED, LUXURIOUS FLOORS / NINE FULLY FURNISHED FLOORS
LIE WITHIN THE BEAUTIFUL LOTUS PETALS OF THE FLOWER.



RESTAURENT & BANQUET HALL

SPECIAL EVENTS FOR 350 PAX CAN BE ACCOMMODATED IN THE SPECIAL RESTAURANT OR THE BANQUET HALL FEATURING AN UNIQUE ILLUMINATIVE INTERIOR DESIGN AND THE PANORAMIC VIEW OF COLOMBO'S COMMERCIAL CITY FABRIC FROM BEYOND THE 360^0 GLASS FACADE.

(9600 sq. ft.)








TOWER BASE ROOF TERRACE

(15564 sq. ft.)





LET'S SHARE THE GRAND EXPERIENCE AND TOGETHER, WE MAKE THE WORLD.



VIEW FROM LOTUS TOWER OBSERVATION DECK.


WELCOME TO...

THE COLOMBO LOTUS TOWER

SRI LANKA IS AN ISLAND LIKE NO OTHER AND DESIRES
CONTINUED PEACE AND SEEKS DEVELOPMENT.
THE LOTUS FLOWER SYMBOLIZES
PURITY, ENLIGHTENMENT AND HONESTY TO ALL SRI LANKANS.

IT IS A FUSION OF REALITY AND THE IDEAL AND IS ALSO
THE PERFECT COMBINATION OF THE PAST AND THE FUTURE.

THE LOTUS FLOWER WHICH IS
THE INSPIRATION BEHIND THE COLOMBO LOTUS TOWER,
SYMBOLIZES SRI LANKA'S FLOURISHING DEVELOPMENT.



SOUVENIR SHOP

(3630 sq. ft.)







ENTRANCE & TICKETING PAVILION

LOCATED ALONG THE ENTRANCE PATH OF THE LOTUS TOWER, THIS SECTION CREATES A POCKET, AND MAKES ONE PAUSE IN THEIR JOURNEY.

OBSERVATION DECK TICKETING FACILITIES WILL ALSO BE LOCATED IN THE PAVILION.

THE AREA SEMI-ENCLOSED WITH WHITE PANELS AND GLASS, MAKES ONE FOCUS TOWARDS THE LOTUS TOWER, WHICH IS VISIBLE THROUGH THE SKYLIGHT ALONG THE PAVILION.

தாமரை கோபுரம் பகுதி 02 செயற்திட்டம் - பல்வகை அபிவிருத்தியுடன் வாகன நிறுத்துமிட வசதி

கொழும்பு தாமரை கோபுர வளாகத்திற்கு நீண்ட கால அடிப்படையில் அனைத்து பங்குதாரர்களுக்கும் அதன் நன்மைகளை அதிகரித்துக் கொள்வதற்கு அதனைச் சூழவுள்ள பகுதிகளின் சரியான வளர்ச்சி மிகவும் முக்கியமானதாகும். தற்பொழுது கொழும்பு தாமரை கோபுர வளாகத்தின் அபிவிருத்தி செய்யப்படாத சுற்றுப்புறத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஒரு பிரதான திட்டத்தை கூட்டாக இணைந்து மேற்கொள்வதற்கு குறிப்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் (UDA) இணைந்து பணியாற்றுவதற்கான ஒரு தனித்துவமான வாய்ப்பு முன்வைக்கப்பட்டுள்ளது. சூழவுள்ள எந்தவொரு இடையூறான வளர்ச்சியும் தாமரை கோபுர வளாகத்தின் நீண்டகால வெற்றியை கடுமையாக பாதிக்கவல்லது.

திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் தற்போதைய நிலை

- அருகிலுள்ள நிலத்தை பொழுதுபோக்கு வசதிகளுடன் கூடிய ஒரு பல்நோக்கு வாகன தரிப்பிட வளாகமாக உருவாக்குவதற்கு ஆணைக்குழு முயற்சி எடுத்துள்ளது.
- ஏற்கனவே நில ஒதுக்கீட்டிற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளதுடன் நிலத்தை கையகப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு மற்றும் நிலத்தின் உரிமை மாற்ற செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
- ஆணைக்குழு அருகிலுள்ள நிலத்தை நிர்மாணித்து மாற்றம் செய்தல் (BOT) அடிப்படையில் மேம்படுத்த முடிவு செய்துள்ளது.
- பெறுகை செயன்முறை மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுவதற்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு மற்றும் செயற்திட்டக் குழுவை நியமிக்க அனுமதி கோரி பாதுகாப்பு அமைச்சினால் அமைச்சரவை பத்திரம் முன்வைக்கப்பட்டுள்ளது.
- காணி கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த நடவடிக்கைகள் சட்டப் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.

அம்பாந்தோட்டை ஐரீ பார்க் (IT Park)

2012 யூலை 04 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 2012-06-14 திகதிய 12/0836/501/019 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு ஏற்ப ஒரு தொலைத்தொடர்பு ஊடக மையத்தை (ஹம்பாந்தோட்டை IT Park செயற்திட்டம்) நிறுவுவதற்கு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தது.

இந்த செயற்திட்டத்திற்கான திட்ட சாத்தியக்கூறு அறிக்கை KPMG கணக்காய்வு நிறுவனத்தினால் தொகுக்கப்பட்டதுடன், செயற்திட்டத்தை வணிக அடிப்படையில் இலாபகரமானதாக மாற்றுவதற்கு வணிக பங்குதாரர்கள் மற்றும் குத்தகைதாரர்களைக் கண்டுபிடிக்கும் பொறுப்பை இலங்கை முதலீட்டு சபை ஏற்றுக்கொண்டு அனுசரணை வழங்கியது.

இந்த செயற்திட்டத்தின் பொறியியளராக இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (SLLRDC) நியமிக்கப்பட்டதோடு அங்கீகரிக்கப்பட்ட கேள்வி நடைமுறையை பின்பற்றி கேள்விகோரல் மேற்கொள்ளப்பட்டு துடாவே பிரதர்ஸ் (தனியார்) லிமிட்டட் நிறுவனத்திற்கு நிர்மாண ஒப்பந்தம் வழங்கப்பட்டது. இந்த வளாகத்தை துடாவே பிரதர்ஸ் நிறுவனத்திடம் 2014 யூலை 11 அன்று இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் ஒப்படைக்கப்பட்டதுடன் நிர்மாண பணிகள் 2016 ஆகஸ்ட் 11 அன்று ஆரம்பிக்கப்பட்டது. நிர்மாணத்திற்கான கால எல்லை 730 நாட்களாகும்.

ஒப்பந்தக்காரர் கட்டிடத்தின் பிரதான கட்டமைப்பை 3 ஆவது மாடி வரை 2015 யூன் இற்குள் திட்டமிட்டபடி முடித்திருந்தார். இருப்பினும் இப்பகுதியில் திட்டமிடப்பட்ட ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதையும், இதன் காரணமாக ஐ.ரீ பார்க் இன் வருமானம் ஈட்டும் திறனை மோசமாக பாதிக்கும் என்பதையும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, BOI மற்றும் ஜனாதிபதி செயலகம் ஆகியவை அவதானித்தது.

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவானது தலைப்பிடப்பட்ட செயற்திட்டம் தொடர்பான உண்மைத் தன்மையை ஆராய்ந்து, அந்த கட்டிடத்தின் நிர்மாணத்தை 3 ஆவது மாடி மட்டத்துடன் பூர்த்திசெய்ய முடிவு செய்தது.

இந்த திட்டத்தின் பொறியியல் ஆலோசகராக SLLRDC திட்டத்தின் மறுசீரமைப்பில் கலந்துகொண்டிருந்தபோது, இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு மற்றும் துடாவே பிரதர்ஸ் (தனியார்) லிமிட்டட் இடையேயான ஒப்பந்தம் காலாவதியானது. இதன் விளைவாக, இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவானது வேறு வழியின்றி திட்டத்தின் பொறியலாளர் என்ற வகையில SLLRDC இன் பரிந்துரையின் பேரில் துடாவே பிரதர் (தனியார்) லிமிட்டட் உடனான இந்த ஒப்பந்தத்தை முடிவுறுத்தியது.

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐரீ பார்க் செயற்திட்டத்தின் தற்போதைய நிலை

இந்த திட்டம் நடுவர் தீர்ப்பு நடவடிக்கையின் கீழ் உள்ளதோடு ஏற்கனவே உள்ள சட்ட விடயங்களுக்கு சட்டப் பிரிவினால் அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர் திட்டம் ஆரம்பிக்கப்படும்.

கொழும்பு தலைமை அலுவலக விரிவாக்க கட்டிடம்

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்திற்கு புதிய ஐந்து மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு நிர்வாகம் முடிவு செய்தது. மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் திட்ட ஆலோசனை பிரிவு (PCU) இந்த செயற்திட்டத்தின் பொறியியலாளராக நியமிக்கப்பட்டது. திட்ட ஆலோசனை பிரிவானது பிரதான கட்டிடத்துடன் இணைந்தவாறு உருக்கினால் கட்டமைக்கப்பட்ட கட்டிடமொன்றை ஏனைய இரண்டு கட்டிடங்களை இணைக்கும் பாலங்களுடன் வடிவமைத்துள்ளது. மொத்த செயற்திட்டத்திற்கான தொகையான 502 மில்லியன் ரூபா நிதிக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. விரிவான BOQ இன் படி, நிர்மாண மதிப்பீட்டு செலவின் 5% ஆலோசனைக் கட்டணம் உட்பட மொத்த மதிப்பீடு 344 மில்லியன் ரூபா ஆகும்.

புதிய கட்டிடத் திட்ட இலக்குகள் குறிக்கோள்கள் மற்றும் பலன்கள்

அபிவிருத்தி செயற்திட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள் பின்வருமாறு.

- ஒழுங்குபடுத்தும் சேவைகளைப் பெறுவதற்காக தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிற்கு தொடர்ந்து வருகை தரும் பொது மக்கள், செயற்படுத்துனர்கள் மற்றும் ஒளிபரப்பாளர்களுக்கு சிறந்த மற்றும் மிகப்பயனுள்ள வசதிகளை வழங்குதல்.
- உற்பத்தித்திறன் மற்றும் செயற்திறனை மேம்படுத்த ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் உள்ள ஊழியர்களுக்கு உட்கட்டமைப்பு தேவைகளை வழங்குதல்.
- செயற்திறனை அதிகரிப்பதற்கும் செலவினைக் குறைப்பதற்கும் வளாக எல்லையினுள் கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளுக்கான வசதிகளை மேம்படுத்துதல்.

இந்த அபிவிருத்தி திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் பலன்கள் பின்வருமாறு

- பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்காக பிரிவுகளை திறனாக மறுசீரமைத்தல்.
- பொது விழிப்புணர்வு திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் போன்றவற்றுக்கு சிறந்த இடத்தை வழங்குதல்.
- தேசிய நலனுக்காக ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணி ஆதனங்களை முறையாகப் பயன்படுத்துதல்.

திட்டத்தின் முன்னேற்றம்

அட்டவணை 18: கொழும்பு தலைமை அலுவலக விரிவாக்க கட்டிட திட்டத்தின் முன்னேற்றம்

விபரம்	பூர்த்தி %
பைலிங்	100%
உருக்கு கட்டமைப்பு	100%
கொங்கிரீட் வேலைகள்	90%
மின்சார வேலைகள்	30%
குழாய் வேலைகள்	50%
IT உட்கட்டமைப்பு	20%
வர்ணம் தீட்டுதலும் செம்மைப்படுத்தலும்	45%

அட்டவணை 19: கொழும்பு தலைமை அலுவலக விரிவாக்க கட்டிடத்தின் பொழிப்பு

புதிய அலுவலகம் கட்டும் திட்டம்	செயற்திறன்
கட்டிட நிர்மாண பூர்த்தி ஆலோசணை கட்டணம்	சுகாதார பொருத்துதல்கள், டைல்களுக்கான அனுமதி. படிக்கட்டு, வாயுசீராக்கி முறைமை போன்ற வடிவமைப்பு தவறுகள் மதிப்பாய்வு செய்யப்பட்டது. ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட BOQ தவறுகள் மதிப்பாய்வு செய்யப்பட்டது. மலசலகூட தொகுதி, விதானம் மற்றும் நுழைவு புறக்கூட பணிகளை முடிப்பதற்கான ஆரம்பகட்ட கலந்துரையாடல்கள். புதிய வேலைகளுக்கான ஏல ஆவணத்தின் ஆரம்பகட்ட வேலைகள். பாலம் கட்டுமானங்களில் கணிசமான முன்னேற்றம். மாடி கொங்கிரீட் நிறைவு, சுவர் சாந்து பூசுதல் மற்றும் பொட்டி பூசுதல், மின்சார கம்பியிடல், டேட்டா கம்பியிடல், கூரை வேலைகள். மின்தூக்கி வழங்கப்பட்டுள்ளது, தடுப்புச்சட்டங்கள் பொருத்தப்பட்டன. செயல்பாட்டிற்காக ஒப்படைப்பதற்கு கட்டிடத்தின் நிறைவுக்காக காத்திருக்கிறது.









கதிரான புனரமைப்பு மற்றும் புதுப்பித்தல் திட்டம்

கதிரான அதிர்வெண் கண்காணிப்பு நிலையம் பிராந்திய மட்டத்தில் UHF/VHF வானொலி அதிர்வெண் பகுப்பாய்வு தேவைகளையும், தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் HF (உயர் அதிர்வெண்) கண்காணிப்பு மற்றும் திசை கண்டுபிடிப்பையும் கண்காணிக்க கண்காணிப்பு மற்றும் திசை கண்டுபிடிக்கும் சாதனங்கள் மற்றும் அமைப்புகளுடன் பொருத்தப்பட்டுள்ளது. இந்த நிலையம் HF கண்காணிப்பு மற்றும் திசை கண்டுபிடிப்பிற்காக ITU வில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உலக வங்கியின் நிதியுதவி திட்டத்தின் கீழ் Rohde மற்றும் Schwarz வழங்கிய கட்டளையிடும் உபகரணங்கள் மற்றும் முறைமை மூலம் கதிரான அதிர்வெண் கண்காணிப்பு நிலையம் 2000 இன் முற்பகுதியில் உயர் தரமான கண்காணிப்பு நிலையமாக மேம்படுத்தப்பட்டது. கதிரானவை ஒரு சுயாதீனமான முழுமையான பிராந்திய கண்காணிப்பு நிலையமாக செயல்படுத்துவதற்கு, நடமாடும் அதிர்வெண் கண்காணிப்பிற்காக கண்காணிப்பு வாகனம் (MFMSV) மற்றும் அலுவலக பணிகளுக்கான டபல் கெப் வாகனம் ஆகியன உட்பட ஒரு பொறியியலாளர், இரண்டு தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்கள் மற்றும் நிர்வாக ஊழியர்கள் குழு ஆகியோர் கதிரானவில் நிறுத்தப்பட்டுள்ளனர். சில வருடங்களின் பின்னர், தலைமை அலுவலகத்தில் அவசர ஊழியர் தேவைப்பாடு காரணமாக, இந்த நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ள ஊழியர்களை ஒதுக்கப்பட்ட வாகனங்களுடன் தலைமை அலுவலக அதிகாரிகளால் திரும்ப அழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

2000 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் உலக வங்கி நிதியுதவி திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பொருள் மற்றும் கண்காணிப்பு உபகரணங்கள் கடந்த தசாப்தத்தில் படிப்படியாக காலங்கடந்த நிலைக்கு உள்ளாகின. நிலம் மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டதனால் தொலைத்தொடர்புகள் ஆணைக்குழு நிர்வாகம் கண்காணிப்பு நிலைய எல்லைகளை மீதமுள்ள நிலங்களுக்கு (சுமார் 53 ஏக்கர்) மட்டுப்படுத்த முடிவு செய்தது. அதன்படி, மழை நீர் செல்வதற்காக கால்வாய்க்கு ஒதுக்கப்பட்ட இரண்டு ஒதுக்கப்பகுதிகளில் முடிக்கப்படாமல் மீதமுள்ள நிலத்தை பாதுகாப்பதற்கு ஒரு பாதுகாப்பு சுவர் நிர்மாணிக்கப்பட்டது. பாதுகாப்பு சுவரின் ஒரு பகுதி சரிந்து விழும் நிலையில் உள்ளதுடன் மழைநீர் வடிந்து செல்வதற்காக குறித்த சுவரின் சில பகுதிகளை கிராமத்தினர் சேதப்படுத்தியுள்ளனர்.

உயர் அதிர்வெண் இயக்கத்தை கண்டறிதல் (HFDF) முறைமையைத் தவிர உலக வங்கி நிதியளிப்புடனான திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உபகரணங்கள், அதன் பயன்படுத்தக்கூடிய காலகட்டம், புதிய தொழில்நுட்பங்களுடன் பொருந்தாத தன்மை மற்றும் நவீன கண்காணிப்பு அம்சங்கள் கிடைக்காத போதிலும் இன்னும் அவை பயன்பாட்டில் உள்ளன. இதற்கிடையில், HFDF அமைப்பானது அதன் தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவத்தின் காரணமாக 2015 ஆம் ஆண்டில் முன்னுரிமை நடவடிக்கையின் அடிப்படையில் பதிலீடு செய்யப்பட்டது.

கடந்த தசாப்தத்தில் புறக்கணிக்கப்பட்ட கட்டிடம் மற்றும் அதனுடன் தொடர்புடைய வசதிகள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட வேண்டும். கண்காணிப்பு வசதிகளை விரிவாக்குவதற்காக தீவின் பரந்த அடிப்படையிலான ஒரு திட்டத்தை முக்கியமான இதர நிலப்பரப்பிற்கும் செயல்படுத்துவதற்கு ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது. கதிரான அதிர்வெண் கண்காணிப்பு நிலையமானது பிராந்திய அலுவலகங்களில் ஒன்றாக செயற்படும்.

கதிரானவில் உள்ள கண்காணிப்பு நிலையத்தை புனரமைப்பு மற்றும் புதுப்பிப்பதற்கான கேள்வி ஆவணம், பொறியியலாளரின் மதிப்பீடு, வடிவமைப்பு மற்றும் வரைபடங்களை சமர்ப்பிக்க மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் செயற்திட்ட ஆலோசனை பிரிவை ஆணைக்குழு கோரியுள்ளது.

கதிரான அதிர்வெண் கண்காணிப்பு நிலைய வளாகத்தில் தொழில்நுட்ப, நிர்வாக மற்றும் துணை ஊழியர்களைக் கொண்ட ஒரு குழுவுடன் ஒரு பிராந்திய அலுவலகத்தை நிறுவுவதற்கு ஆணைக்குழு எதிர்பார்க்கின்றது. எனவே, ஊழியர்களின் தங்குமிட வசதிகளையும் கருத்தில் கொண்டு ஒரு நிரந்தர பிராந்திய அலுவலகத்திற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவது அவசியமக இருக்கின்றது. கதிரான அதிர்வெண் கண்காணிப்பு நிலைய வளாகத்தின் கணிசமான பகுதி ஏற்கனவே பல்வேறு நபர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால், மீதமுள்ள நிலங்களை மேலும் ஆக்கிரமிப்புகளிலிருந்து தடுப்பதற்கு பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டிள்ளது. எனவே, அதனைப் பாதுகாப்பதற்கு, பாதுகாப்பு சுவரை வலுப்படுத்துவதோடு பாதுகாப்பு அரண்களையும் நிறுவுதல் வேண்டும். இந்த நிலையில் ஆணைக்குழுவின் எதிர்கால இலக்குகளை நிறைவேற்றுவதற்கு பின்வரும் புனரமைப்பு மற்றும் நிர்மாணங்கள் முன்மொழியப்பட்டுள்ளன:

i. தற்போதுள்ள பாதுகாப்பு வசதிகளை புதுப்பித்தல்
ii. இருக்கும் காப்பகங்களைப் புதுப்பித்தல்
iii. தேவையற்ற பாழடைந்த கட்டிடங்களை அகற்றுதல்.
iv. தற்போதுள்ள கேட்போர்கூடம் மற்றும் அலுவலக கட்டிடத்தை புதுப்பித்தல்.
v. தற்போதுள்ள தனியாட்களின் விடுதிகளை புதுப்பித்தல்.
vi. தற்போதுள்ள கண்காணிப்பு நிலைய கட்டிடத்தை புதுப்பித்தல்.
vii. பாதுகாப்பு சுவரை நிர்மாணித்து தேவையான பாலங்களை அமைத்தல்.
viii. புதிய அலுவலக கட்டிடத்தை நிர்மாணித்தல்.
ix. பாதுகாப்பு அரண்களை அமைத்தல் (உள்ளக வீதிகள், புதிய நுழைவு வாயில், நடை பாதை பாதுகாப்பு நோக்கங்களுக்காக தளத்தை சூழவுள்ள பகுதிகளில்).
x. மேல் நிலை நீர் தொட்டியை புதுப்பித்தல்.

இந்த தேவைகளின் செலவு மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்காக மொரட்டுவ பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டன. களப்பரிசோதனை வருகைகளுக்குப் பிறகு, மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் PCU வினால் கட்டிட வரைபடங்கள், கேள்வி ஆவணம் மற்றும் திட்டத்திற்கான பொறியியலாளரின் மதிப்பீட்டை 5% ஆலோசணைக் கட்டணம் இன்றி 200 மில்லியன் ரூபா தொகைக்கு சமர்ப்பித்துள்ளது.

அபிவிருத்தி திட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள் பின்வருமாறு.

- கதிரான பிராந்திய அலுவலகத்தில் ஈடுபடுத்த எதிர்பார்க்கப்படும் ஊழியர்களுக்கு உட்கட்டமைப்பு தேவைகளை வழங்குதல்.
- தளத்தின் பாதுகாப்பை மேம்படுத்துதல்.
- கண்காணிப்பு உபகரணங்களுக்கு பாதுகாப்பான இடத்தை வழங்குதல்.
- இந்த பிராந்திய அலுவலகம் மூலம் சிறந்த மற்றும் திறமையான ஒழுங்குமுறை சேவைகளை வழங்குவதானது ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தின் தற்போதைய மையப்படுத்தப்பட்ட பணிச்சுமையைக் குறைப்பதற்கு ஏதுவாக அமையும். "கட்டுநாயக்க விமான நிலையம் வழியாக நாட்டிற்குள் தொலைத்தொடர்பு உபகரணங்கள் இறக்குமதி செய்வதற்காக ஆணைக்குழுவின் அனுமதிக் கடிதம் தேவைப்படும் பயணிகளுக்கு மற்றும் நீர்கொழும்பு மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் மீன்பிடி பணியில் ஈடுபட்டவர்களுக்கு ஆணைக்குழுவின் அதிர்வெண் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்மொழியப்பட்ட கதிரான அலுவலகம் ஒரு வசதியான இடமாக இருக்கும்.
- தேசிய / சர்வதேச கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளுக்கு ஒரு இட வசதியை வழங்குதல்.
- மேலும் ஆக்கிரமிப்புகளிலிருந்து நிலத்தைப் பாதுகாத்தல்.

இந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் அனுகூலங்கள் பின்வருமாறு:

- பிராந்திய அலுவலகமொன்றினூடாக பொதுமக்களுக்கு பயனுள்ள பரவலாக்கப்பட்ட சேவை.
- பிராந்திய மட்டத்தில் குறுக்கீடு மற்றும் வழக்கமான கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல், அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மிகவும் செயற்திறனாக செயற்படுத்த உதவுகிறது.
- சட்டவிரோத அதிர்வெண் பயனாளிகளை அடையாளம் காணும் திறனை அதிகரித்தல்.
- பொது விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் போன்றவற்றுக்கு சிறந்த இடத்தை வழங்குதல்.
- தேசிய நலனுக்காக ஆணைக்குழுவுக்குச் சொந்தமான நிலச் சொத்துக்களை முறையாகப் பயன்படுத்துதல்.

செயற்திட்டத்தின் முன்னேற்றம்

அட்டவணை 20: கதிரான புனரமைப்பு மற்றும் புதுப்பித்தல் செயற்திட்டத்தின் முன்னேற்றம்

விபரம்	பூர்த்தி %
இடிப்பு வேலை	100%
பழைய கட்டிடத்தின் புதுப்பித்தல்	100%
புதிய கட்டிடத்தின் அஸ்திவார வேலை	100%
புதிய கட்டிடத்தின் சிவில் நிர்மாணம்	70%
மின்சார பணிகள்	20%
குழாய் வேலைகள்	50%
நிறப்பூச்சு மற்றும் செப்பனிடல்கள்	50%

இறுதி அறிக்கையை சமர்ப்பித்த பொறியலாளர் பரிந்துரைத்த மாறுபாட்டின் அடிப்படையில் ஆணைக்குழு எடுக்க வேண்டிய ஒப்பந்த நடவடிக்கைகளை மீளாய்வு செய்யவும் பரிந்துரைக்கவும் ஒரு குழு நியமிக்கப்பட்டது. அதன்பிரகாரம் வேலையின் நோக்கம் முடிவு செய்யப்படும். செயல்பாட்டிற்காக கையளிப்பதற்கு கட்டிடத்தின் நிர்மாண நிறைவுக்காக காத்திருக்கிறது.

கதிரான புனரமைப்பு மற்றும் புதுப்பித்தல் திட்டம்



ஆராய்ச்சி திட்டங்களின் முன்னேற்றம்

இந்த ஆண்டில் இரண்டு ஆராய்ச்சி திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

1. முன்கூட்டிய இடர் எச்சரிக்கை மற்றும் முகாமைத்துவ முறைமை.
    - தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்துடன் (NBRO) ஆரம்ப கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.
    - கோவிட் -19 நிலைமை காரணமாக திட்டமிடப்பட்ட இலக்கை அடைய முடியவில்லை.
    - இந்த திட்டம் 2021 ஆம் ஆண்டில் தொடரும்.

2. வெளிநாட்டு ஆய்வகங்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன்கூடிய ஆய்வகங்களை இலங்கையிலுள்ள பல்கலைக்கழங்களில் நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றிய ஆராய்ச்சி.
    - இந்த திட்டத்திற்காக 26.5GHz அலைவரிசையைப் பயன்படுத்துமாறு மொரட்டுவ பல்கலைக்கழகத்திற்கு ஆணைக்குழு அறிவித்தது.
    - எனினும் மொரட்டுவ பல்கலைக்கழகம் 3.4GHz இலிருந்து 3.6GHz இற்கு இடைப்பட்ட அலைவரிசையிலிருந்து அதிர்வெண்ணை கோரியுள்ளது.
    - கோரப்பட்ட அதிர்வெண் அலைவரிசைகளை வழங்க முடியாத நிலையுள்ளதால், ஆராய்ச்சி ஆய்வகங்களை நிறுவுவதற்காக மாற்று அதிர்வெண் அலைவரிசைகளை கண்டறிவதற்கு மொரட்டுவ பல்கலைக்கழகத்துடன் தொடர்ந்து கலந்துரையாடல்களை ஆணைக்குழு மேற்கொண்டு வருகிறது.

நிர்வாகம், மனிதவளம், கூட்டிணைந்த விவகாரங்கள் மற்றும் திட்டமிடல் பிரிவு

கண்ணோட்டம்

பரந்த அளவிலான பணிகளை மேற்கொள்ளும் இப்பிரிவின் பங்கு ஒட்டுமொத்த நிறுவனத்தின் சீரான செயற்பாட்டிற்கு மிக முக்கியமானது. நிர்வகித்தல், வழிநடத்துதல், மனித வளத்தை நிர்வகித்தல் மற்றும் உத்தியோகத்தர்களின் பணியின் தரத்தை மேம்படுத்துவதற்கு உகந்த ஒரு பௌதீக சூழலை உருவாக்குதல் போன்ற பகுதிகள் இதில் அடங்கும். இதனைத் தவிர, கூட்டிணைந்த விவகாரங்கள், திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு, நிறுவனத்திற்குள்ளேயான மற்றும் ஏனைய நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு, அலுவலக தேவைகள் மற்றும் ஊழியர்களுக்கு ஆதரவான வசதிகள், ஊழியர்களின் நலனை உறுதி செய்தல், நூலக வசதி மற்றும் நிறுவனங்களின் முக்கிய நிகழ்வுகளின் ஊடக செய்தி சேகரிப்பு என்பன பிரிவின் விரிவுபடுத்தப்பட்ட நோக்கங்களாக இருக்கின்றன.

செயற்பாடுகள்

- மனிதவள முகாமைத்துவம் மற்றும் பொது நிர்வாகம் தொடர்பாக விதிகள், சுற்றறிக்கைகள், ஒழுங்குமுறைகள் மற்றும் நடைமுறைகளைத் தயாரித்தல்.
- ஆட்சேர்ப்பு, சேவை உறுதிப்படுத்தல், செயலாற்றுகை மதிப்பீடு, பதவி உயர்வு, லீவு பதிவுகள், வருகை, இடமாற்றங்கள், ஒழுக்கக் கட்டுப்பாடு, விடுவிப்பு மற்றும் உத்தியோகத்தர்களின் ஓய்வு தொடர்பான அனைத்து விடயங்களையும் மேற்கொள்வது.
- ஊழியர்களின் தனிப்பட்ட கோவைகளை பராமரித்தல்.
- உரிய சிரேஸ்ட முகாமையாளர்களுடன் கலந்தாலோசித்து, ஒவ்வொரு பதவிக்குமான வேலை விளக்கங்களுடன் ஆணைக்குழுவிற்கான ஆளணி திட்டத்தைத் தயாரித்தல்.
- மனித வள மேம்பாட்டு பாதீட்டைத் தயாரித்தல்.
- பயிற்சி நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) மற்றும் ஊழியர்களுக்குத் தேவையான பிரயாண, பதிவு மற்றும் ஏனைய ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.
- பாதுகாப்பு, சுத்தம் செய்தல், கட்டிட பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு மற்றும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்தல் போன்ற வெளியக வள சேவைகள் தொடர்பான நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு.
- மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசி சேவைகள் போன்ற பயன்பாட்டு சேவைகளை செயற்திறனாக வழங்குவதை உறுதி செய்தல்.
- வாகன தொகுதியின் பராமரிப்பு.
- ஆணைக்குழுவின் ஏனைய பிரிவுகளுக்கு இடப்பெயர்வு சேவை ஏற்பாடுகளை வழங்குதல்.
- வருடாந்த பெறுகைத் திட்டத்தை தயாரித்து செயற்படுத்துதல்
- நிதி அதிகாரத்தின் எல்லைக்கு ஏற்ப கொடுப்பனவுகளுக்கான பரிந்துரை / அங்கீகாரத்தை அளித்தல்
- காப்பகங்கள் / பதிவு அறை பராமரிப்பு
- வருடாந்த பொருள் கணக்கீட்டு சபை தீர்மான அடிப்படையில் அகற்றப்பட்ட பொருட்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
- தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதி செய்தல்.
- பொது முயற்சிகள் திணைக்களம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் தேசிய சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவுடன் தொடர்பைப் பேணுதல்
- ஊழியர்களுக்கான ஆயுள் காப்புறுதி மற்றும் மருத்துவ காப்புறுதி திட்டத்தை நிர்வகித்தல்.
- ஊழியர்களுக்கு நலன்புரி சேவைகளை வழங்க நலன்புரி நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் குறைகளை கையாளுதல்.
- செயல்நடவடிக்கைத் திட்டம், கூட்டிணைந்த திட்டம், முன்னேற்ற அறிக்கை மற்றும் ஆண்டறிக்கை தயாரித்தல் தொடர்பான நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு.
- பாராளுமன்ற கேள்விகளுக்கான பதில்களைச் சமர்ப்பித்தல், கணக்காய்வாளர் நாயகத்தின் மற்றும் பொது முயற்சிகளுக்கான குழுவிற்கு (கோப்) அறிக்கைகளை சமர்ப்பித்தல் மற்றும் அமைச்சரவை பத்திரங்களை சமர்ப்பித்தல் தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
- ஆணைக்குழுவின் பொதுவான செயற்பாடுகள் தொடர்பான விடயங்களில் ஏனைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு.
- முந்தைய கூட்டிணைந்த சமூக பொறுப்புணர்வு (CSR) நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களில் கலந்துகொள்வது.
- நூலகம் மற்றும் ஊடக பிரிவுகளின் நிர்வாகம்.

2020ம் ஆண்டின் செயலாற்றல்

தாபன வேலைகளும் ஆளணியை மறுசீரமைத்தலும்

நிர்வாக பிரிவானது, தனிநபர் கோவைகளை பராமரித்தல், ஆட்சேர்ப்பு, சேவை உறுதிப்படுத்தல், பதவி உயர்வு, லீவு பதிவுகள், வருகை, ஊழியர்களின் செயற்திறன் மதிப்பீடு, ஒழுக்காற்று விசாரணைகள் போன்ற ஊழியர்களின் தாபன பணிகளை மேற்கொள்கின்றது.

2020 ஆம் ஆண்டில், ஊழியர்களுக்கான செயலாற்றல் மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கும், 185 நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு சம்பள உயர்வுகளை வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2020 ஆம் ஆண்டில் 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி, 218 உத்தியோகத்தர்களின் சம்பள பரிமாற்றங்கள் தயாரிக்கப்பட்டு, அது தொடர்பான ஆவணங்கள் நிதிப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தவிர, ஊழியர்களின் முன்னேற்ற மீளாய்வு அறிக்கைகள் தயாரித்தல், அதிகாரிகளின் சேவையை உறுதிப்படுத்தல் மற்றும் பதவி உயர்வு தொடர்பான சம்பள மாற்றங்களை தயாரித்தல் மற்றும் ஊழியர் சேமலாப நிதியில் உத்தியோகத்தர்களை பதிவு செய்தல் ஆகியவற்றில் இந்த பிரிவு ஈடுபட்டுள்ளது. ஆரம்ப ஒழுக்காற்று விசாரணையொன்றும் மேற்கொள்ளப்பட்டது.

மொத்தமாக 261 உத்தியோகத்தர்களுக்கு மூன்றில் இரண்டு 2/3 மீளளிப்புக்கள், 24 இடர் கடன்கள், 07 வாகனக் கடன்கள் என்பன வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஓய்வுபெற்ற மூன்று ஊழியர்களுக்கான பணிக்கொடை கொடுப்பனவுகள் வழங்குவதற்கு இப்பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த பதவியணியினர் 228 ஆகும். மொத்த ஊழியர்களில், சிரேஷ்ட நிர்வாக பதவிகளில் 04 பேரும், நடுத்தர நிர்வாக பதவிகளில் 29 பேரும், இரண்டாம் தர நிலையில் 151 பேரும் சிற்றூழியர் தரத்தில் 44 பேரும் உள்ளனர். ஆணைக்குழுவினது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை 290 ஆகும்.

பதவியணியினர், நிறுவன விளக்கப்படம் மற்றும் ஆட்சேர்ப்பு திட்டம் (SOR) ஆகியவற்றை மீளாய்வு செய்வதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப, உற்பத்தித் திறனான மற்றும் புதுப்பிக்கப்பட்ட சேவையை வழங்கும் நோக்கத்துடன் நிறுவன அமைப்பு வரைபடம் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டத்தை (SOR) மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக SLIDA நிறுவனத்தின் ஆலோசனை சேவை பெறப்பட்டுள்ளதோடு அதற்கான பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தின் தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப நிறைவேற்று அதிகார துறையிலுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும். உள்ளக கணக்காய்வாளர் (தொழில்நுட்பம்)–(பணி ஒப்படை அடிப்படையில்) பதவிக்காக பத்திரிகை விளம்பரம் மூலம் இந்த ஆண்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டு தற்பொழுது நேர்முகப்பரீட்சை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டது.

14 ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களுக்கு மற்றும் 06 இரண்டாம் நிலை ஊழியர்களுக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டது. கொழும்பு தாமரை கோபுரத்திற்கு 05 ஆலோசக உதவியாளர்கள் பணி ஒப்படை அடிப்படையில் நியமிக்கப்பட்டனர். நிர்வாக மற்றும் நிதி பிரிவுகளுக்கு 02 உதவிப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். 01 முகாமைத்துவ உதவியாளர் தரம் 1 இற்கு உயர்த்தப்பட்டார். தகுதிகாண் காலத்திற்குப் பின்னர், 04 முகாமைத்துவ உதவியாளர் மற்றும் 06 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் சேவை நிரந்தரமாக்கப்பட்டது. ஒப்பந்த காலம் முடிவடைந்ததன் காரணமாக 02 ஒப்பந்த உத்தியோகத்தர்களின் சேவை முடிவுறுத்தப்பட்டது. அத்தோடு 2020 ஆம் ஆண்டில் 03 உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்றனர்.

அரசாங்க பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்களைச் சேர்ந்த 18 மாணவர்கள் 06 மாத காலத்திற்கு களப் பயிற்சி அடிப்படையில் பயிற்சியாளர்களாக சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இதனூடாக அவர்களுக்கு தொழிற்துறை பற்றிய தெளிவினைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு கிட்டியுள்ளது.

29 உத்தியோகத்தர்கள் தங்கள் கடமைகளின் செயலாற்றல் வளர்ச்சிக்கு உதவும் சிக்கல்-தீர்வு, சேவை நோக்குநிலை மற்றும் விடய அறிவு போன்ற தன்மைகளை மதிப்பிடுவதற்கான தடைதாண்டல் போட்டி பரீட்சைகளை எதிர்கொண்டனர்.

தேவையான பிரிவுகளுக்கு திறமையான சேவையை வழங்குவதற்காக 09 உள்ளக இடமாற்றங்கள் மற்றும் கடமை மேவுகை அடிப்படையிலான பதிலீடுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

அலுவலக சுற்றறிக்கைகள் வழங்கல் மற்றும் அலுவலக நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல்

2020 ஆம் ஆண்டில், நிதி அமைச்சு, ஜனாதிபதி செயலகம் மற்றும் பொது நிர்வாக அமைச்சினால் சுற்றறழக்கை பயன்பாட்டிற்காக நிகழ்நிலை வழியொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சுற்றறிக்கைகள் பிரிவுத் தலைவர்கள் உட்பட குறித்த உத்தியோகத்தர்களுக்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இலகுவாக பரீட்சிப்பதற்கும் நிகழ்நிலை ஊடாக பதிவிறக்கம் செய்ய முடியும்

நிர்வாகம் மற்றும் மனிதவளப் பிரிவினால் பின்வரும் சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டன. இன்னும் நிறுவனத்திற்குள் நிலைத்திருக்கும் தன்மை, செயற்திறன் மற்றும் வினைத்திறனை மேம்படுத்த அலுவலக நடைமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பயிற்சி

TRCSL ஊழியர்களுக்கு அவர்களின் அறிவை மேம்படுத்துவதற்கும், திறன்களை வளர்ப்பதற்கும், அணுகுமுறைகளை மாற்றுவதற்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகளை வழங்கியது. 2020 ஆம் ஆண்டிற்கான பயிற்சித் திட்டங்கள் /புலமைப்பரிசில்கள் / கருத்தரங்குகளில் ரீ.ஆர்.சீ.எஸ்.எல் உத்தியோகத்தர்கள் பங்கேற்றமைது தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

அட்டவணை 21: 2020 சமுகமளித்த வெளிநாட்டு நிகழ்ச்சிகள்

	நடாத்தப்பட்ட பயிற்சித் திட்டங்கள் /புலமைப்பரிசில்கள் / பெலோசிப்/ கருத்தரங்குக	நாடு	காலப்பகுதி		பங்குபற்றிய-வர்களின் எண்ணிக்கை
			இருந்து (தி/மா/ஆ)	வரை (தி/மா/ஆ)	
01	SAFIR இனால் ஒழுங்கு செய்யப்பட்ட 18ஆவது இணை பாடநெறி	IIM அஹமதாபாத் குஜராத்	20 ஜனவரி 2020	23 ஜனவரி 2020	01
02	ITU ஆய்வுக் குழு II - சமிக்ஞை செய்தல், "சர்வதேசத் தரவுப் பரிமாற்றத்தில் cloud computing இன் சட்டதிட்டங்கள் மற்றும் தொழிநுட்பம்" தொடர்பான இலத்திரனியல் கற்றல் பாடநெறி 15 – 22 ஜுன் 2020	நிகழ்நிலை பயிற்சி	15 யூன் 2020	22 யூன் 2020	01
03	ITU செயற்கைக்கோள் தொடர்பான செயலமர்வுத் தொடர்	வெபிநானர்	07 செப்தம்பர் 2020	25செப்தம்பர் 2020	01
04	ITU உலகலாவிய சைபர் பயிற்சி 2020	நிகழ்நிலை	15 செப்தம்பர் 2020	05 நவம்பர் 2020	01
05	WRC-23 இற்கான முதலாவது மாநாட்டின் APT அமைப்புக் குழுவிற்கான நிகழ்நிலைக் கூட்டம் (APG23-1)	மாநாடு	24 செப்தம்பர் 2020	25 செப்தம்பர் 2020	01
06	ITU தொடர்பான இலத்திரனியல் கற்றல் பாடநெறி "QoS தொழிநுட்பம் மற்றும் நிலைத்த மற்றும் நடமாடும் சட்டங்கள்"	நிகழ்நிலை பயிற்சி	28 செப்தம்பர் 2020	05 ஒக்தோபர் 2020	01
07	பட்டை முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை தொடர்பான APT பயிற்சிப் பாடநெறி (மெய்நிகர் பயிற்சிநெறி) சென்னை, இந்தியா	நிகழ்நிலை பயிற்சி	05 ஒக்தோபர் 2020	16 ஒக்தோபர் 2020	02
08	APT-SATRC இன் 21 ஆவது கூட்டம்	நிகழ்நிலை கூட்டம்	27 ஒக்தோபர் 2020	28 ஒக்தோபர் 2020	02
09	ITU இலத்திரனியல் கற்றல் பாடநெறி " மொபைல் பட்டை இணையம், 5G மற்றும் எதிர்கால சேவைகள்"	நிகழ்நிலை பயிற்சி	17 நவம்பர் 2020	14 திசெம்பர் 2020	01
10	"வானொலி மீடிறன் மின்காந்தப் புலத்துடனான மனிதத் தொடர்பு" தொடர்பான ITU ஆசிய – பசுபிக் சிறந்த நிலையம் நிகழ்நிலைப் பயிற்சி நெறி	நிகழ்நிலை பயிற்சி	23 நவம்பர் 2020	06 திசெம்பர் 2020	03
11	"சைபர் பாதுகாப்பு மற்றும் சிக்கலான உட்கட்டமைப்புப் பாதுகாப்பு" தொடர்பான ITU ஆசிய – பசுபிக் சிறந்த மையம் நிகழ்நிலைப் பயிற்சி நெறி	நிகழ்நிலை பயிற்சி	23 நவம்பர் 2020	05 திசெம்பர் 2020	02
12	தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு குறுக்கு எல்லை தரவுப் பரிமாற்றம் தொடர்பான APT நிகழ்நிலைப் பயிற்சி நெறி	நிகழ்நிலை பயிற்சி	23 நவம்பர் 2020	25 நவம்பர் 2020	04

13	இணையம் தொடர்பான விடயங்களுடனான சிறந்த இடைத்தொடர்பு தொடர்பான APT நிகழ்நிலைப் பயிற்சி நெறி சியன் தபால் மற்றும் தொலைத்தொடர்பு பல்கலைக்கழகம் (XUPT) சியன், சீனா	நிகழ்நிலை பயிற்சி	30 நவம்பர் 2020	08 திசெம்பர் 2020	01
14	உலக வானொலி தொடர்பாடல் செயலமர்வு – பகுதி 01	நிகழ்நிலை கருத்தரங்கு	30 நவம்பர் 2020	04 திசெம்பர் 2020	02
15	உலக வானொலி தொடர்பாடல் செயலமர்வு – பகுதி 02	நிகழ்நிலை கருத்தரங்கு	07 திசெம்பர் 2020	11 திசெம்பர் 2020	
16	ஆசிய பசுபிக் தொடர்பாடல் சமூகத்தின் 15th பொதுச் சபை அமர்வு	நிகழ்நிலை மாநாடு	03 திசெம்பர் 2020	05 திசெம்பர் 2020	06
17	ஆசிய பசுபிக் தொடர்பாடல் சமூகத்தின் 44th முகாமைத்துவக் குழு அமர்வு	நிகழ்நிலை மாநாடு	07 திசெம்பர் 2020	10 திசெம்பர் 2020	
18	அவசர தொலைதொடர்பு மூலம் அனர்த்த மீளமைப்பைக் கட்டியெழுப்புதல் தொடர்பான ITU, USTTI செயலமர்வு	வெபிநானர்	15 திசெம்பர் 2020	16 திசெம்பர் 2020	02
19	சேவைத் தரம் (QoS) மற்றும் தொலைமருத்துவத்திற்கு உதவுவதற்கான இணைய வலையமைப்புப் பாதுகாப்பு தொடர்பான APT பயிற்சிநெறி, தொலைத் தொடர்புப் பயிற்சி நிலையம், பாரத ரத்னா பிம் ராவோ நிறுவனம், ஜபல்பீர், இந்தியா	நிகழ்நிலை பயிற்சி	16 திசெம்பர் 2020	22 திசெம்பர் 2020	02

அட்டவணை 22: 2020 சமூகமளித்த உள்நாட்டு நிகழ்ச்சிகள்

திட்டம்	நிறுவகம்	இடம்	காலப்பகுதி	பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை
பொது பெறுகை நடைமுறை	வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம்	SDFL விரிவுரை மண்டபம்	30 மற்றும் 31 யூலை 2020	01
அரச நிறுவனங்களின் கணக்காய்வு விசாரணைகளை எவ்வாறு குறைத்துக் கொள்வது	வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம்	SDFL விரிவுரை மண்டபம்	30 மற்றும் 31 யூலை 2020	01
ஆபத்தினை அடிப்படையாக கொண்ட உள்ளக கணக்காய்வுத் திட்டம்	Prag நிறுவகம்	கிரேன்ட் ஒரியன்டல் ஹொட்டெல் கொழும்பு 01	27 ஆகஸ்ட் 2020	01
நட்டங்கள், வெட்டி விடல் பதிவழிப்புக்கள்	வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம்	SDFL விரிவுரை மண்டபம்	24 மற்றும் 25 ஆகஸ்ட் 2020	01
பொருட்கள் சேவைகளுக்கான கேள்வி ஆவணங்கள் தயாரித்தல்	வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம்	SDFL விரிவுரை மண்டபம்	27 மற்றும் 28 ஆகஸ்ட் 2020	01
அலுவலக முகாமை, சிறப்பான வாடிக்கையாளர் சேவை	D & R துறைசார் அபிவிருத்தி நிலையம்	கோல்பேஸ் ஹொட்டெல் கொழும்பு 03.	24 மற்றும் 25 செப்தம்பர் 2020	01
பொது பெறுகை நடைமுறை	வரையறுக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி நிதியம்	SDFL விரிவுரை மண்டபம்	24 மற்றும் 25 செப்தம்பர் 2020	01
இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் 41 ஆவது தேசிய மாநாடு (2020 இல் பிற்போடப் பட்டது)	இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம்	Virtual Conference	18 - 21 சனவரி 2021	04

பெறுகை நடவடிக்கைகள்

ஆணைக்குழுவிற்கு பல்வேறு வகையான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் செயற்பாடுகளை பிரிவு ஒருங்கிணைக்கின்றது. இந்த நடவடிக்கைகளில் கேள்வி ஆவணங்கள் தயாரித்தல், விளம்பரப்படுத்துதல், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் (TECs) மற்றும் பெறுகை குழுக்களள (PCs) நியமித்தல், தேவையான அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக அறிக்கைகளைத் தயாரித்து முன்வைத்தல், சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தீர்மானங்களை அறிவித்தல், சட்டப் பிரிவின் ஒத்துழைப்புடன் சேவை ஒப்பந்தங்களைத் தயாரித்தல், சேவை வழங்குநர்களின் பணிகளை மேற்பார்வை செய்தல் மற்றும் சேவை ஒப்பந்தங்களிலிருந்து முரண்பாடுகள் காணப்படும்போது அவற்றை சீர்செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

மீளாய்வுக்குட்பட்ட காலகட்டத்தில், சிறு பெறுகை குழு மற்றும் சிரேஸ்ட பெறுகை குழு கூட்டங்களின் எண்ணிக்கை முறையே 07 மற்றும் 04 ஆக இருந்தது. சிறு பெறுகை குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பெறுகையின் மொத்த அண்ணளவான பெறுமதி ரூபா 5,058,869.42 ஆவதோடு சிரேஸ்ட பெறுகை குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பெறுகையின் அண்ணளவான பெறுமதி ரூபா 61,682,235.08 ஆகும்.

இந்த பிரிவு மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசி சேவைகளை செயற்திறனாக வழங்குவதை உறுதிசெய்ததுடன், ஆணைக்குழுவின் அனைத்து பிரிவுகளுக்கும் காகிதாதிகள் அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை உரிய நேரத்தில் வழங்குவதை உறுதி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

அலுவலக பராமரிப்பு நடவடிக்கைகளின் கீழ் மற்றும் விராந்தை பகுதியின் உட்கட்டமைப்பு வேலைகளை நிறைவு செய்தமை, சுவர்களுக்கான வர்ணப் பூச்சு பூசுதல், பிரிவுகளுக்கான தரைவிரிப்புகள் விநியோகம் மற்றும் வெளியேற்ற விசிறிகள் மற்றும் வாயு சீராக்கி, கதவுகள், மின்தூக்கி ஆகியவற்றின் பழுதுபார்ப்பு நடவடிக்கைகள், எல்லை சுவர்கள் முள்வேலிகள் மற்றும் மழைநீர் வடிகால் நிர்மாணம் ஆகியன மேற்கொள்ளப்பட்டன.

கோவிட்-19 சூழ்நிலையில் நிறுவனத்தின் சீரான செயற்பாட்டிற்கு தேவையான சேவைகள் மற்றும் பொருட்களை வெளிப்படையான, செலவு குறைந்த மற்றும் நியாயமான முறையில் வழங்க உரிய நடவடிக்கைகள் சரியான நேரத்தில் மேற்கொள்ளப்பட்டன.

வாகன அணியின் பராமரிப்பு

2020 ஆம் ஆண்டில், ஆணைக்குழுவின் வாகன அணியில் பதினொரு கார்கள், இரண்டு டபல்கெப் வண்டிகள், நான்கு ஜீப்கள், ஆறு வேன்கள், ஒரு பஸ், மூன்று லொரிகள் மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் இருந்தன. ஆய்வு நடவடிக்கைகளுக்கு செல்லல், கோவிட் தொற்று காலப்பகுதியில் அலுவலகத்திற்கு உத்தியோகத்தர்களை அழைத்து வருதல் போன்றவற்றிற்கு பஸ் வண்டி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அணியின் சில வாகனங்கள் பணிப்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்டதோடு ஏனைய வாகனங்கள் ஆய்வு நடவடிக்கைகள், கூட்டங்கள் / செயலமர்வுகள் / கருத்தரங்குகளில் பங்கேற்றல் போன்ற நடவடிக்கைகளுக்கும் அலுவலக பயணங்கள் மற்றும் உத்தியோகபூர்வ கடிதங்களை விநியோகித்தல் போன்ற உத்தியோகபூர்வ பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டன.

2020 ஆம் ஆண்டில் பழுதுபார்ப்பு பணிகள், டயர்கள், பற்றரிகளை மாற்றுதல் மற்றும் வாகன அணிக்கான வருமான அனுமதிப்பத்திரங்களை பெறுவதற்காக ரூபா 5,689,931.98 தொகை செலவிடப்பட்டது.

உற்பத்தித்திறன் / 5S எண்ணக்கரு

ஆணைக்குழுவின் அனைத்து ஊழியர்களுக்கும் உற்பத்தித்திறன் / 5S எண்ணக்கரு குறித்த விழிப்புணர்வு MS Teams ஊடாக ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்டது. காணொளி ஆவணப்படங்கள் மற்றும் உற்பத்தித்திறன் / 5S எண்ணக்கரு தொடர்பான படங்கள் MS Teams இனைப் பயன்படுத்தி வெளியிடப்பட்டன. கோவிட் -19 தொற்று நோயை கட்டுப்படுத்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஆணைக்குழுவில் நடாத்தப்பட்டுள்ளன. தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான பதிவு அறை தரவுத்தள அட்டவணைப்படுத்தல் முறைமையானது நிர்வாகப் பிரிவில் நிறைவடைந்துள்ளது. பிரிவு அளவில் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட பதிவு அறைகளை நிறுவுவதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போதைய கோவிட;-19 தொற்றுநோய் சூழ்நிலையில், வீட்டிலிருந்து வேலை செய்யும் முறைமை மூலம் பொதுமக்களுக்கான சேவைகளை வழங்கும் நடவடிக்கையை ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது. அதன் பிரகாரம், தொலைத்தொடர்பு / ஒழுங்குமுறை தொடர்பான விடயங்கள் சம்பந்தமாக வாடிக்கையாளர் உசாவல்களில் நேரடியாக ஈடுபடும் அதிகாரிகளைத் தொடர்புகொள்வதற்கான தொடர்புத் தகவல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. பிரிவுகளில் உள்ள வரையறுக்கப்பட்ட இடங்களில் காகித அடிப்படையிலான கோப்புகளை சேமித்து வைப்பதற்கான கோப்பு அலுமாரிகளை நிறுவுவதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

பொருத்தமான ஏற்பாட்டு உதவி

அலுவகத்தின் முறையான செயற்பாட்டிற்கு இன்றிமையாத நடவடிக்கைகளை ஆணைக்குழுவின் ஏனைய பிரிவுகளுக்கான பொருத்தமான ஏற்பாட்டு உதவிகள் நிர்வாக பிரிவினால் வழங்கப்பட்டன. இந்த வருடத்தில் 122 செய்தித்தாள் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டதோடு நிர்வாக அறிக்கைகள், அமைச்சரவை பத்திரம், செய்தித்தாள் விளம்பரங்கள், வர்த்தமானி அறிவித்தல்கள், செய்திகள் மற்றும் அலுவலக திட்டப் பணிகள் போன்றவற்றிற்கான சிங்கள மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மற்றும் ஆங்கிலத்திலிருந்து சிங்கள மொழிற்கான மொழிபெயர்ப்பு பணிகள் மற்றும் வெளியாள் வள ஒத்துழைப்புடன் தமிழ் மொழிபெயர்ப்பு பணிகள் என சுமார் 20 சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

கொடுப்பனவுகளுக்கான பரிந்துரை / அங்கீகாரம்

சம்பள அதிகரிப்புகள், மேலதிக நேர கொடுப்பனவுகள், சம்பள நிலுவைகள், பிரயாணக் கொடுப்பனவுகள் மற்றும் இணைந்த படிகள், ஒழுங்காற்று விசாரணைக் கட்டணம், வாகன பழுதுபார்ப்பு செலவுகள், குறுகிய கால பாவணை பொருட்களை கொள்வனவு செய்தல், உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள், புத்தகங்கள் மற்றும் பருவகால வெளியீடுகள் மற்றும் சேவைகள் வழங்கல் (பாதுகாப்பு, துப்பரவு சேவை, நீர், தொலைபேசி, மின்சாரம்) தொடர்பான பல்வேறு கொடுப்பனவுகளுக்கு அங்கீகாரம் வழங்குவது நிர்வாகப் பிரிவின் ஒரு முக்கியமான செயற்பாடாகும். உறுதிச்சீட்டுக்களை கவனமாக ஆராய்ந்து சிபாரிசு அல்லது கட்டணத்தின் தன்மை மற்றும் நிதி அதிகார எல்லையைப் பொறுத்து அங்கீகாரம் பிரிவினால் வழங்கப்பட்டது. அத்தோடு கொடுப்பனவுகளை தாமதமின்றி மேற்கொள்வதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

நலன்புரி நடவடிக்கைகள்

இவ்வருடத்தில் பின்வரும் நலன்புரி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த ஆணைக்குழுவின் நலன்புரிச் சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளை ஊக்குவிப்பதற்காக பரிசுகளை வழங்குதல்.
- 2020/2021 ஆம் ஆண்டிற்கான ஆணைக்குழுவின் ஊழியர்களின் Group, Life and Medical Insurance திட்டம் புதுப்பிக்கப்பட்டதோடு ஆணைக்குழுவின் சொத்துக்கள், இயந்திரத் தொகுதி, உபகரணங்கள் மற்றும் வாகனத் தொகுதிக்கான 2020/2021 இற்கான காப்புறுதி நடவடிக்கையும் நிறைவடைந்துள்ளது.

ஊடகம் தொடர்பான நடவடிக்கைகள்

2020 ஆம் ஆண்டில், ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்கள், செயற்திட்டங்கள், ஆரம்ப நிகழ்வுகள் மற்றும் முக்கிய நிகழ்வுகளுக்கு ஊடகப் பிரிவு ஊடகக் காப்பினை வழங்கியது. கோவிட்-19 சூழ்நிலையில், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தயார் செய்யப்பட்டு சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டது. ஊடகப் பிரிவினால் உரிய இடங்களைப் பார்வையிட்டதோடு சமீபத்திய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி புகைப்படம் எடுத்து வீடியோக்களைப் பதிவுசெய்து அவற்றில் திருத்தங்களை மேற்கொண்டு காப்பக சேகரிப்பில் சேமித்து வைக்கப்பட்டது.

விளம்பர உருப்படிகள் மற்றும் ஆவணப்பட வீடியோக்கள் WTISD 2020, மின் கழிவு முகாமைத்துவ திட்டம் மற்றும் IMEI பதிவு போன்றவற்றை தயாரிப்பதற்கு மற்றும் சமூக ஊடகங்கள் மற்றும் ஆணைக்குழுவின் இணையதளம் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவதற்கான செயற்பாடுகளுக்கு பிரிவு உதவியது.

பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக பல்வேறு நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட வீடியோ காட்சிகளை தொகுத்தமைக்கும் நடவடிக்கைகளில் இந்த பிரிவு ஈடுபட்டுள்ளது.

தாமரை கோபுர திட்டத்தின் குறிப்பிட்ட வளர்ச்சி நிலைகளை படமாக்குதல், தகவல் சேகரித்தல் மற்றும் சேமித்து வைத்தல் நடவடிக்கைகள், பாடசாலை விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், கடற்கரை துப்புரவு தினம், நலன்புரி நடவடிக்கைகள் மற்றும் 'கமட்ட சன்னிவேதன' சம்பந்தமான கூட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப கணக்கெடுப்புகள் ஆகியவற்றை ஊடக பிரிவு மேற்கொண்டது.

நூலகம்

தொலைத்தொடர்புத் துறையில் ஈடுபட்டுள்ள தனிநபர்கள் மற்றும் பிற ஆர்வமுள்ள தரப்பினருக்கு அவர்களின் அறிவைப் மேம்படுத்த உதவும் நோக்கில் ஆணைக்குழுவின் நூலகம் நிறுவப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் நூலகத்தில் தொலைத்தொடர்பு தொடர்பான பாடப்புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளின் பரந்தளவிலான தொகுப்பு உள்ளதுடன் பயனாளிகளின் தேவையை பூர்த்தி செய்வதற்காக இது தொடர்ந்து விரிவுபடுத்தப்பட்டு வருகின்றது. ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு மட்டுமல்லாமல், ஆராய்ச்சியாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் போன்ற வெளித்தரப்பினர்களுக்கும் இந்த நூலகம் தகவல் குறிப்புகளை பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை வழங்குகின்றது. பின்வரும் நடவடிக்கைகள் 2020 இல் மேற்கொள்ளப்பட்டன.

நூலகத்தின் பராமரிப்பு மற்றும் பலப்படுத்துதல்

- 2020 ஆம் ஆண்டிற்கான தவணைக் காலம் சந்தா கட்டணங்கள் செலுத்தி புதுப்பிக்கப்பட்டதோடு புதிய சஞ்சிகைகளுக்கான சந்தா கட்டணங்கள் செலுத்தப்பட்டன.
- எதிர்கால தகவலுக்கான விசேட விடயங்களாக செய்தித்தாள்களில் கட்டுரைகள் (அசல்) தொகுப்பை தயாரித்தல்.
- ஆணைக்குழுவின் ஆவணங்களைப் பயன்படுத்தி ஆவணப்படுத்தல் சேவைகள் மற்றும் பிரித்தெடுப்பு சேவைகளை மேற்கொள்ளல்.
- ஆணைக்குழு தொடர்பான ஆவணங்களை சேகரித்து எளிதான குறிப்புக்காக தனித்தனியாக ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளது.
- தொலைத்தொடர்பு துறையில் விடய தலைப்புகளைப் பயன்படுத்தி தொலைத்தொடர்பு பற்றிய கலைக்களஞ்சியத்தை தயாரிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டது.

- இணையம் மற்றும் இன்ட்ராநெட் வழியாக பயனாளிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தகவல்களை பரப்புதலை (SDI) வழங்குவதற்காக செய்தி ஆவணங்களின் குறிப்பிட்ட மூலக் கட்டுரைகளுக்கு தரவு செயலாக்கம் செய்யப்பட்டுள்ளது.
- பூர்ண (PURNA) நூலக தரவுத்தள பராமரிப்பு ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. பூர்ண தரவுத்தளத்தைப் பயன்படுத்தி இலத்திரனியல் முறையில் நூலக கடன் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. பூர்ண நூலக தரவுத்தள பராமரிப்பு அமைப்பை பூர்ண-வலை அடிப்படையிலான ஒருங்கிணைந்த நூலக அமைப்பிற்கு மாற்றப்பட்டது.
- அலுவலக விளம்பரங்கள், பதவி வெற்றிட அறிவிப்புகள், தாமரை கோபுர திட்டம், சட்டங்கள், அதிவிஷேட வர்த்தமானிகள், குறுகிய குறியீடுகள், முகநூல்/தகவல் தொழில்நுட்பம் பற்றிய முக்கிய தகவல்களின் தொகுப்பு மற்றும் புத்தகங்களுக்கான தற்போதைய விழிப்புணர்வு சேவைகள் தொடர்பான தகவல்களை சேகரித்தல் மற்றும் அவற்றின் குறிபாட்டிகளை தயாரித்தல்
- பயில்முறை வானொலி தகவல் சேகரிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.
- பிரிட்டிஷ் கவுன்சில் உறுப்புரிமை புதுப்பிக்கப்பட்டு, பொது நடமாடும் நூலக உறுப்புரிமையை பெறுவதற்கு எமது ஊழியர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.
- இணையத்தளம் வழியாக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு அதிவிஷேட வர்த்தமானி வெளியீடுகள் மற்றும் சட்டங்களின் தரவுகளை ஸ்கேன் செய்து தரவுத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது.
- நூலகத்தின் உட்புற கட்டமைப்பு மாற்றப்பட்டு மறுவடிவமைப்பு செய்யப்பட்டது.
- புத்தகங்களின் வகைப்பாட்டில், உலகளாவிய தசம வகைப்பாட்டின் புதிய பதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

தகவல் தொடர்பு தொழில்நுட்ப பிரிவு

கண்ணோட்டம்

உரிய பங்குதாரர்களிடையே புதிய வேலை சூழல் மற்றும் கலாசாரத்தை செயல்படுத்துவதற்குத் தேவையான மென்பொருள், தீர்வு மற்றும் தளத்தை செயல்படுத்துவதன் மூலம் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் (ICT) பிரிவானது ஆணைக்குழு முழுவதும் டிஜிட்டல் உருமாற்றத்தை அறிமுகப்படுத்தியது. ஆணைக்குழுவின் ஊழியர்கள் மற்றும் அதன் வாடிக்கையாளர்களுக்கான சமீபத்திய அதிநவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்ப உள்ளக மற்றும் வெளிப்புற செயல்முறைகளை உருவாக்குவதற்கான தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான தீர்வுகளை இது வழங்கும். ஆணைக்குழுவின் செயல்பாடுகளின் செயற்திறன் மற்றும் வினைத்தறனை உறுதி செய்வதற்கும் தகவல் தொழில்நுட்பத்தின் தந்திரோபாய பயன்பாட்டின் மூலம் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட நிறுவனங்களை செயல்படுத்துவதற்கும் தகவல் தொழில்நுட்ப பிரிவு முக்கிய பங்கு வகிக்கிறது. ஆணைக்குழுவின் ஊழியர்களிடையே தொழில்நுட்பம் மற்றும் அதன் பயன்பாட்டை அறிமுகப்படுத்துவதற்கு மேலுமொரு திறன் மேம்பாடு/அறிவு மேம்பாட்டுத் திட்டங்களின் தொடர் ஏற்பாடு செய்யப்பட்டது.

செயற்பாடுகள் மற்றும் குறிக்கோள்கள்

- நிறுவனத்திற்கான தகவல் தொழில்நுட்ப திட்டவரைபை தயாரித்தல், வடிவமைத்தல், செயல்படுத்துதல் மற்றும் தகவல் தொழில்நுட்ப கொள்கை மற்றும் ஆளுகை முறைமையை பராமரித்தல். இணக்கமில்லாத பகுதிகளை அடையாளம் காண்பதற்கு ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு அது தொடர்பாக அறிக்கை தயாரிக்கப்படுதல் மற்றும் இணக்கப்பாடற்ற சிக்கல்களை சீர்செய்வதற்கு நடவடிக்கையெடுத்தல்.
- ICT நெட்வெர்க் மற்றும் அதன் இணைய பாதுகாப்பு ஆய்வுகளை உரிய முறைமை சாதனங்களினூடாக நிர்வகித்தல், கண்காணித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் மற்றும் அது தொடர்பான அறிக்கைகளை தயாரித்தல்.
- நிறுவனத்தின் LAN மற்றும் WAN ஆகியவற்றின் சீரான செயல்பாட்டை உறுதி செய்தல்.
- புதிய தொழில்நுட்பத்தினை மதிப்பீடுசெய்து நிறுவனத்தின் டிஜிட்டல் மாற்றத்தை மேம்படுத்துவதற்கு பொருத்தமான ஒன்றை தெரிவுசெய்து பயன்படுத்துதல்.
- சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுடன் ஒருங்கிணைப்புகளை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் அனைத்து தகவல் தொழில்நுட்ப திட்டங்களின் முன்னேற்ற அறிக்கைகளையும் திட்டமிடுதல், தயார் செய்தல் மற்றும் கண்காணித்தல்.
- வேலை செய்யும் கலாச்சாரம், உற்பத்தித்திறன் மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்கு மென்பொருள் முறைமை, தரவுத்தளம் மற்றும் உட்கட்டமைப்பை உருவாக்குதல், பயன்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல்.
- ஏனைய பிரிவுகளின் ஒத்துழைப்புடன் ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வுகளை மேற்கொண்டு டிஜிட்டல் மாற்றத்திற்கான மென்பொருள், வன்பொருள் மற்றும் உட்கட்டமைப்பு தேவைகளை அடையாளம் காணல்.
- தரவுத்தளங்கள், மூல குறியீடு மற்றும் காப்புப்பிரதிகளின் பதிவுகளை பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட முறையில் வைத்திருத்தல்
- ICT சொத்து பதிவேட்டை பராமரித்தல் மற்றும் தேவையான செலவு எல்லையில் ICT கொள்முதல் திட்டத்தை தயார் செய்தல்.
- டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட நிறுவனம் என்ற ரீதியில் டிஜிட்டல் மாற்றத்தை உள்வாங்குவதற்காக ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கான புதிய அறிவையும் திறமையையும் பெற்றுக் கொள்வதற்கான ஒருங்கிணைப்புகள் மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளல்.
- அனைத்து வருடாந்த பராமரிப்பு மற்றும் தவணைக் கட்டண ஒப்பந்தங்கள் சரியான நேரத்தில் கண்காணிக்கப்பட்டு செயல்படுத்தப்படுவதை உறுதிசெய்தல்.
- அனைத்து IT அணுகல் தொடர்பான நிர்வாக நற்சான்றுகளையும் பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட வழியில் பராமரித்தல்.
- புதிய உத்தியோகத்தர்களின் பயிற்சி தேவைகளை மதிப்பீடு செய்து ICT பயிற்சி குறித்த வருடாந்த திட்டத்தை தயார் செய்தல். பயிற்சி அட்டவணையை செயல்படுத்துதல்.
- ICT பானையாளர்களுக்கு ஒத்துழைப்பு சேவைகளை வழங்குவதற்கு பொருத்தமான பணியாளர்கள்/வளங்களை ஒதுக்குதல் மற்றும் உதவி மைய ஒத்துழைப்பு முறைமையை செயல்படுத்துதல்.

செயலாற்றல்

ஆணைக்குழுவிற்கு புதிய ஐவு கட்டுப்பாட்டு முறைமையை அறிமுகப்படுத்துதல்

ICT சூழலை சரியான திசையில் ஒன்றிணைப்பதற்கான ஒரு கட்டாய காரணியாக ஆணைக்குழுவிற்கு ICT கட்டுப்பாட்டு முறைமை ஆவணம் இருக்கின்றது. தற்போது ஆணைக்குழுவிற்காக நான்கு ICT கட்டுப்பாட்டு ஆவணங்கள் வெளியிடப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன. வெளியிடப்பட்ட நிர்வாக ஆவணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- O365 இல் உள்ள TEAMS இன் உரிமையாளர்களுக்கான வழிகாட்டுதல்.
- TEAMS இல் Microsoft Planner மற்றும் Microsoft Notebook ஆகியவற்றை சேர்த்தல்.
- ஆணைக்குழுவில் MS O365 முழுவதும் ஆகுயு இனை அமுல்படுத்துதல்.
- ஆணைக்குழு தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பிற்குள் BYOD கொள்கையை அமுல்படுத்தல்.

சீரான செயற்பாட்டிற்காக ஆணைக்குழுவின் வலையமைப்பு மற்றும் பாதுகாப்பு முறைமை / ஆணைக்குழுவின் நெட்வெர்க்கின் மேம்பாட்டைக் கண்காணித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் மேம்படுத்துதல்

ஆணைக்குழுவின் வலையமைப்பு சூழலை அங்கீகரிக்கப்படாத அணுகல், பாதிப்பை ஏற்படுத்தும் சாதனங்கள் மற்றும் வைரஸ் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பதற்காகவும், முறையற்ற செயல்பாடுகளின் ஈடுபாட்டைத் தடுப்பதற்கும் ஒரு அதி-உயர் பாதுகாப்பு முறைமையை ஆணைக்குழு நிறுவியுள்ளது. ஆணைக்குழுவின் நெட்வெர்க் சூழலைப் பாதுகாப்பதற்கு நெட்வெர்க்கில் பாதுகாப்பு முறைமைகள் மற்றும் / பயர்வோல் போன்றன நிறுவப்பட்டன. கடந்த சில ஆண்டுகளில், ஆணைக்குழுவின் நெட்வெர்க் பயனர்கள் இணையத்திற்கான முழுமையான திறந்த அணுகல் காரணமாக குறைந்த நெட்வெர்க் வேகத்தை அனுபவிக்க வேண்டியிருந்தது. மேம்பட்ட பாதுகாப்பு கொள்கைகள் மற்றும் / பயர்வோல் அமைப்பில் தேவையான பாதுகாப்பு விடயங்கள் மற்றும் கொள்கைகளைப் பயன்படுத்தி இணைய அணுகலை வடிகட்டியதன் மூலம் தகவல் தொழில்நுட்ப பிரிவினால் நெட்வெர்க்கை விரைவுபடுத்த முடிந்தது.

ஆணைக்குழுவின் பாதுகாப்பு முறைமையின் (பயர்வோல்) முழு பயன்களையும் பெறுவதற்கு வலையமைப்பு சூழலுக்கு பதிவுகள், பகுப்பாய்வு, முகாமை மற்றும் பாதுகாப்புத் தகவல் நிகழ்வு கட்டுப்பாட்டகம் (SIEM) போன்றவற்றைப் பராமரிப்பது அவசியமாகும். நெட்வொர்க் செயல்பாட்டு நுண்ணறிவுகளைப் பெறுவதற்கு பயர்வோல் பதிவுகளை, பாதுகாப்பு நிகழ்வுகளை கண்காணித்தல் மற்றும் 24/7 அலைவரிசை பயன்பாடு ஆகியன அவசியமாகும்.

ஊழியர்களுக்கான ஒத்துழைப்பு மற்றும் சிக்கல்களை சரிசெய்தல்

தகவல் தொழில்நுட்ப பிரிவானது ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப சிக்கல்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டதோடு இணையத்தளம் மற்றும் சமூக ஊடக தளங்களின் வழக்கமான புதுப்பிப்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் கொள்முதல் தொடர்பான பகுப்பாய்வுகளை மேற்கொண்டது.

ICT திறன் மேம்பாடு

தொழில்நுட்ப வளர்ச்சிக்காக, நிறுவன ஊழியர்களுக்குரிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) அறிவு அவசியமாகும். ஆணைக்குழுவின் ஊழியர்களின் தொழில்நுட்ப விழிப்புணர்வை அதிகரிப்பதனை இலக்காகக் கொண்டு, ICT பிரிவு உள்ளக ஊழியர்களின் அறிவை மேம்படுத்துவதற்கு பல ICT தொடர்பான தொழில்நுட்ப அறிவூட்டல் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தது. பெரும்பாலானோர் மைக்ரோசொப்ட் தயாரிப்புகளை பயன்படுத்துவதன் காரணமாக மைக்ரோசொப்டின் அடிப்படை மற்றும் மேம்பட்ட அறிவு பெரும்பாலான ஊழியர்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டது. O365, Planner, MS booking, MS SharePoint list போன்ற டிஜிட்டல் தளங்கள் மற்றும் உருமாற்றம் தொடர்பான தொடர்ச்சியான பயிற்சிகள் வழங்கப்பட்டது. குறிப்பாக Microsoft Teams தொடர்பான பயிற்சி ஊழியர்களுக்கு வழங்கப்பட்டமையினால் அதனூடாக கோவிட்-19 தொற்றுநோய் நிலைமையில் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துவதற்கு பயன்படுத்தப்பட்டது. மேலும், Microsoft List தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டதோடு அதனூடாக ஊழியர்களின் தினசரி வேலைகளை புதுப்பிக்கவும் கண்காணிக்கவும் பயன்படுத்தப்படுகின்றது.

நாட்டின் சட்டவிரோத தொலைபேசி இறக்குமதியைக் கண்காணிப்பதற்காக IMEI சரிபார்ப்பு முறைமை / IMEI முகாமை முறைமை பற்றிய செயற்திட்டம் SLT மெய்நிகர் தரவு நிலையத்தில் இயக்கப்படுகின்றது

இலங்கையில் ஒரு உபகரண அடையாளப் பதிவேட்டை (EIR) நிறுவுவதற்கான முக்கிய தேவைப்பாடு இருந்தது. உடனடி தேவையாக, இலங்கையில் மொபைல் நெட்வெர்க்குகளில் பயன்படுத்தப்படும் அங்கீகரிக்கப்படாத IMEI- இயக்கப்பட்ட சாதனங்களை அடையாளம் காண்பதற்கு தேசிய IMEI சரிபார்ப்பு முறைமையை செயல்படுத்துவதை ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்ப பிரிவு நிறைவு செய்துள்ளது. இந்த முறைமையின் ஊடாக, ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படாத சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட IMEI சாதனங்களை மொபைல் நெட்வெர்க்குகளிலிருந்து தடைசெய்வதற்கான செயற்பாட்டினை, அனுமதி கிடைத்ததன் பின்னர் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தவுள்ளது. இந்த முறைமையானது ஆணைக்குழுவின் கீழ் இலங்கையில் உள்ள IMEI இலக்கங்களின் மிகப்பெரிய தரவுத்தளமாக மாறியுள்ளது.

தானியங்கி மற்றும் செயல்படுத்தல் திட்ட செயல்முறை

நிறுவனத்தின் சீரான செயற்பாடுகளின் பொருட்டு ஆணைக்குழுவின் செயல்பாடுகளை டிஜிட்டல் மயமாக்குதவதற்கான பணிகளில் ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்ப பிரிவு தற்பொழுது ஈடுபட்டுள்ளது. இதுவரை, தகவல் தொழில்நுட்ப பிரிவினால் பின்வரும் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- செயல்திறன் மதிப்பீட்டு தொகுதியுடன் மனிதவள முகாமைத்துவம் (அவசர தேவை நிமித்தம்) ஒரு உள்நாட்டு தயாரிப்புக்கு ஒரு POC இளை வழங்க முடிவு செய்யப்பட்டது. உள்நாட்டு தயாரிப்புகளிலிருந்து இரண்டு விளக்கக்காட்சிகள் காட்டப்பட்டன. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டது. டெண்டர்/விலைகோரல் மற்றும் செயல்படுத்தலுக்கான நடவடிக்கைகள் நிர்வாக பிரிவு மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரிவினால் மேற்கொள்ளப்படவுள்ளது.
- தகவல் தொழில்நுட்ப உதவி மையம் (IT help desk)
- சொத்து முகாமைத்துவ முறைமை (Asset Management System)
- ஸ்பெக்ட்ரம் முகாமை - ஸ்பெக்ட்ரம் முகாமைத்துவ பிரிவில் எஸ்எம்எஸ் அடிப்படையிலான பயன்பாட்டு செயலாக்க முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- நெட்வெர்க் பிரிவு பயன்பாட்டு முகாமைத்துவ முறைமை
- ஆணைக்குழுவின் ஊழியர்கள் வாடிக்கையாளர் மற்றும் விற்பனையாளர்களுடன் தொடர்பு கொள்வதற்கான எஸ்எம்எஸ் நுழைவாயில் உருவாக்கம்.
- ஆணைக்குழுவின் அழைப்பு மையம் (கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக POC இடைநிறுத்தப்பட்டது) மற்றும் வாடிக்கையாளர் உறவு முகாமை (CRM)
- ஆணைக்குழுவின் நெட்வெர்க் மேம்பாடு மற்றும் IP PABX உடனான ஒருங்கிணைப்பு (செயற்பாட்டில் உள்ளது). அழைப்பு மையம் மற்றும் CRM செயல்பாட்டுடன் அழைப்பு கையாளும் தளங்களுக்கான Teams மற்றும் PABX ஒருங்கிணைப்பு.
- கட்டண விண்ணப்பங்களின் தானியங்கி முறைமை மற்றும் செயற்படுத்துனர் நிலை (POC) மேற்கொள்ளப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. POC வெற்றிகரமாக இல்லாததால் புதிய தளமொன்றை மீண்டும் உருவாக்குவதற்:கு முடிவு செய்யப்பட்டது.
- நிதி முகாமைத் தீர்வு (கொள்முதல் செயற்பாடின் கீழ்)
- ஆணைக்குழுவில் டிஜிட்டல் கையொப்பத்தை அறிமுகப்படுத்தல் (செயற்பாட்டில் உள்ளது).
- தற்போதுள்ள Active directory இனை Azure cloud ஆக மேம்படுத்துதல்.

இயங்கலை சந்திப்பு தளம்

கோவிட் -19 தொற்றுநோய் நிலைமையின் போது, உத்தியோகபூர்வ பணிகளுக்கான இயங்கலை சந்திப்பு மற்றும் ஒத்துழைப்பு தளத்தின் உடனடி தேவைப்பாடு இருந்தது. ஆணைக்குழுவானது ஏற்கனவே Microsoft 365 உடன் சேர்த்து Microsoft Teams இற்கும் சந்தாதாரராக இணைந்துள்ளமையினால் மேற்கூறிய தளத்தைப் பயன்படுத்தி இயங்கலை கூட்டங்களையும் ஒன்றுகூடல்களையும் மேற்கொள்ள முடிந்தது. தற்காலத்தில், வீட்டிலிருந்து அல்லது அலுவலகத்திலிருந்து மேற்கொள்ளப்படும் பெரும்பாலான உத்தியோகபூர்வ வேலைகள் மற்றும் கலந்துரையாடல்கள் Microsoft Teams மூலம் இடம்பெறுகின்றன.

கூட்டங்கள் / சந்திப்புகளுக்கான இயங்கலை முன்பதிவு

கோவிட் -19 தொற்றுநோய் நிலைமையின் போது ஆணைக்குழுவின் வாடிக்கையாளர்கள் / விற்பனையாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் இயங்கலை முன்பதிவு முறைமை ஆரம்பிக்கப்பட்டது. முன்பதிவு வசதிகள் இயங்கலை சந்திப்புகள் மற்றும் நேரடி சந்திப்புகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மைக்ரோசொப்ட் ஷெயார்பொய்ண்ட் (Microsoft SharePoint) இயங்கலை தளம்

பிரிவுகளின் மற்றும் கிளைகளின் கடமைகளை வீட்டிலிருந்து அல்லது அலுவலகத்திலிருந்து மேற்கொள்வதனைக் கண்காணிப்பதற்காக Microsoft SharePoint இயங்கலை தளமானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நடைமுறையிலுள்ள செயற்பாடுகள்

- முழுமையான தானியங்கி நிதி முகாமைத்துவ முறைமையை செயல்படுத்துதல்.
- செயல்திறன் மதிப்பீட்டு தொகுதியுடனான முழு தானியங்கி மனிதவள முகாமைத்துவ முறைமையை செயற்படுத்துதல்.
- ஆணைக்குழுவில் டிஜிட்டல் கையொப்பத்தை அறிமுகப்படுத்துதல்.
- தற்போதுள்ள Active directory இனை Azure cloud இற்கு மேம்படுத்துதல்.
- ஆணைக்குழு முழுவதுக்குமான முழுமையான டிஜிட்டல் மாற்றம்.
- தற்போதுள்ள IMEI மற்றும் TA முறைமையை மேம்படுத்துதல்.
- தற்போதுள்ள TRCSL இணையத் தளங்களை மேம்படுத்துதல்.

நிதி பிரிவு

கண்ணோட்டம்

நிதிப் பிரிவின் முக்கிய செயற்பாடு நிதி முகாமைத்துவம் என்பது ஆணைக்குழுவின் அனைத்து கண்காணிப்பு செயற்பாடுகளையும் உள்ளடக்கியது. வருமானத்தைச் சேகரிப்பது மற்றும் முறையான முதலீட்டின் மூலம் அத்தகைய நிதிகளின் உகந்த பயன்பாடு ஆகியவை முக்கிய சிறப்பம்சங்களாகும். கட்டுப்படுத்துதல் மற்றும் இரண்டாவதாக செலவு இல்லை என்பது மட்டுமல்ல, குறிப்பாக நிதி விதிமுறைகளின் தொடர்புடைய விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள், தொடர்புடைய சுற்றறிக்கைகள் மற்றும் ஆணைக்குழுவின் முடிவுகள் போன்ற சட்டரீதியான தேவைகளுக்குள்ளும் செயற்படுதல்.

மேலும், துல்லியமான நிதி பதிவுகளை பராமரிப்பது நிதிப் பிரிவின் முக்கிய பொறுப்புகளில் ஒன்றாகும், ஏனெனில் ஆணைக்குழு முக்கிய முடிவை எடுக்க வேண்டியுள்ளது. பரிவர்த்தனைகளின் துல்லியம் மற்றும் முழுமையை தீர்மானிக்க நிதி அறிக்கைகள் அனைத்து நிதிக் கொள்கைகளும் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் வெளியிடும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள் மற்றும் கணக்கியல் நியமங்களுக்கு இணங்குவதை

உறுதிசெய்யவும் அனைத்து அரச நிறுவனங்களும் சட்டத்திற்கு கட்டுப்பட்டவை என்பதை உறுதிசெய்யவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. இலங்கையின் கணக்காளர்கள் மற்றும் நிதி நடைமுறைகள் அரசாங்கத்தின் நிதி விதிமுறைகளுக்கு இணங்குகின்றன. மீளாய்வாண்டில் எங்கள் நிதிநிலைமை அறிக்கைகளை கண்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்துள்ளோம். நிதிப் பிரிவின் செயற்பாடுகள் நிதி அறிக்கைகளில் வரலாற்றுத் தரவைப் பதிவு செய்வது மட்டுமல்லாமல் நிதி நிர்வாகம், செலவுக் கட்டுப்பாடு, திட்ட மதிப்பீடு, அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் மூலோபாய தீர்மானமெடுப்பதில் செயற்திறன் மற்றும் வினைத்திறனாக பங்கேற்பது ஆகியவை பிரிவின் முக்கியமான செயற்பாடுகளாகு

செயற்பாடுகள்

- நிதி விளைவுகளைப் வெளியிடுதல், பாதீடு / எதிர்வுகூறலுடன் வேறுபாடு மற்றும் அதற்கான காரணங்கள்.
- ஆண்டு பாதீடு / எதிர்வுகூறல் தயாரித்தல்.
- உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்.
- அனைத்து நிலையான சொத்துகளின் பதிவுகளையும் பராமரித்தல் மற்றும் பாதுகாப்பு மற்றும் பொருத்தமான உச்ச பயன்பாட்டை உறுதி செய்தல்.
- மூலதன மற்றும் வருமானம் செலவு திட்டங்களை செயற்படுத்துவதில் உயர் முகாமைத்துவத்திற்கு வழிகாட்டுதல் மற்றும் உதவுதல்.
- வரி திட்டமிடல் மற்றும் தொடர்புடைய சட்டரீதியான அதிகாரத்தரப்புன் இணங்குதல்.
- கணக்காய்வாளரின் அறிக்கை மற்றும் கணக்காய்வு குழு அறிக்கைகள் போன்ற குறிப்பிட்ட கால செயற்பாடு மற்றும் நிதி அறிக்கையை மீளாய்வு செய்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் மற்றும் விலகல்கள் ஏதேனும் இருந்தால் அவற்றை சரிசெய்ய சரியான / பொருத்தமான நடவடிக்கை எடுத்தல்.
- அரசாங்கம் மற்றும் பாராளுமன்றச் சட்டத்தால் விதிக்கப்பட்ட பல்வேறு வரிகளை உடனடியாக சேகரிப்பதை உறுதி செய்தல் மற்றும் பின்தொடர்தல்.
- ஆண்டுதோறும் நிதி அதிகார வழங்கலை தயாரித்தல் மற்றும் ஆணைக்கழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு தேவையான திருத்தங்களைச் செய்தல்.
- நிதிச் சட்டம் மற்றும் தொலைத்தொடர்பு வரிச் சட்டத்தின் கீழ், அரசாங்க திறைசேரிக்கு சேகரிக்கப்பட்ட நிதியை உடனடியாக அனுப்புவதை உறுதி செய்தல்.
- மிகையான நிதிகளின் உச்ச பயன்பாட்டை உறுதி செய்தல், குறைந்த ஆபத்து, அதிக வருமானம் இருந்தால் முதலீடு செய்தல்.
- ஆணைக்குழுவின் காலாண்டு மற்றும் ஆண்டு நிதிநிலைமை அறிக்கைகளைத் தயாரித்தல்.
- வருமானம், செலவு, மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றின் புள்ளிவிபர பதிவுகளை பராமரித்தல் மற்றும் உயர் முகாமைத்துவத்திற்கு அவர்கள் கோரும் போது தகவல்களை வழங்குதல்.

செயலாற்றல்

வருடாநத பாதீடு / நிதி அதிகார / நிதி அறிக்கை

2021 இன் வருடாநத பாதீடு, 2021 நிதி அதிகார கையளிப்பு கூற்று, 2019 இன் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான அறிக்கைகள் ஆணைக்குழுவன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்ட்டதன் பின்னர் பூர்த்தி செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டன.

காலாண்டு ரீதியான நிதி அறிக்கைகள்

2020 04 காலண்டுகள் / வருடாந்த நிதி அறிக்கை தயாரித்தல் நடைபெற்று வருகின்றன.

காலாண்டு வருமான வரி நலன்

எந்தவொரு அரசாங்க கூட்டுத்தாபனமொன்றினாலும் திரட்டு நிதிக்கு செலுத்தும் அனைத்து கொடுப்பனவுகளும் தகுதிவாய்ந்த கொடுப்பனவாகக் கருதப்படுவதுடன் உள்நாட்டு இறைவரி தொடர்பான 07.01.2020 ஆம் திகதிய அமைச்சரவை பத்திரத்தின் (திருத்தத்தின்) படி 01.04.2019 முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் கூட்டுத்தாபனத்தின் வருமானம் வரி கணிப்பீட்டின் போது கழிக்கலாம் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, 2019 வரியாண்டில் 3 சுய மதிப்பீடு அடிப்படையிலான 3 கொடுப்பனவுகள் மாத்திரமே செய்யப்பட்டிருந்தன. குறித்த அமைச்சரவை பத்திரம் வெளியிடப்பட்டவுடன் இறுதி காலாண்டு கட்டணம் செலுத்துதல் நிறுத்தப்பட்டது.

அதன்படி, 2019 மதிப்பீட்டு ஆண்டிற்கு, ரூபா திரட்டு நிதிக்கு அனுப்பப்பட்ட 8,950,000,000 தகைமையுடைய் தொகையாகக் கருதப்பட்டது, எனவே அந்த மதிப்பீட்டு ஆண்டிற்கு வரி விதிக்கக்கூடிய வருமானம் இல்லை.

அதே அடிப்படையில், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு 2020/2021 ஆம் ஆண்டிக்கான சுய மதிப்பீட்டு அடிப்படையில் வருமான வரி செலுத்துதல்களையும் செய்யவில்லை.

இறுதி வருமான வரி கணக்கீடு

தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு 2020/2021 ஆம் ஆண்டிக்கான வருமானத்திலிருந்து திரட்டு நிதிக்கு ரூபா 5,000,000,000 கொடுப்பனவு செய்தமையயால் 2020/2021 ஆம் ஆண்டிக்காக வருமான வரியாக எவ்வித கொடுப்பனவும் மேற்கொள்ளப்படவில்லை.

தொலைத்தொடர்பு வரி விதிப்பு சட்டத்தின் கீழும் நிதிச் சட்டத்தின் கீழும் மாதாந்த சேகரிப்பு

தொலைத்தொடர்பு வரி விதிப்புச் சட்டத்தின் கீழும் நிதிச்சட்டத்தின் கீழும் மாதாந்த வரிகள் சேகரிக்கப்பட்டு குறித்த திகதிகளில் பொது திறைசேரிக்கு கீழே காட்டப்பட்டுள்ளவாறு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. 1 காலாண்டு - ரூபா 3,712 மில்லியன், 2 ஆம் காலாண்டு - ரூபா 3,718 மில்லியன் 3 ஆம் காலாண்டு - ரூபா 3,840 மற்றும் 4 ஆம் காலாண்டு - ரூபா 3,713 மில்லியன்

2019 பொருள் மெய்மையாய்வு

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL) 2019 பொருள் மெய்மையாய்வு அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டு பணிப்பாளர் நாயகம், தேசிய கணக்காய்வு அலுவலகம் மற்றும் உள்ளக கணக்காய்வுப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

நேரடிப் பணம /காசோலை வைப்புக்கள் / நிகழ்நிலை நிதிய மாற்றல்

கொவிட் 19 தொற்று காரணமாக நிதிப்பிரவிவு நேரடி வைப்பு மற்றம் வங்கி நிதிய மாற்றம் என்பவற்றை பொறுப்பேற்றல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் பற்றுச்சீட்டு தீர்வுசெய்யப்பட்டவுடன பெயரளவுப் பட்டியல் விபரங்கள் ‘குறித்த அறிவித்தல் போன்ற தகவல்கள் அனைத்தும் மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

அதன் பெறுபேறாக நாடு பல தடவைகள் மூடப்பட்டிருந்த போதும் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் நிதி வழியில் உட்பாய்ச்சல் மற்றும் வருமான சேகரிப்பு தொடர்பாக செயற்பாடுகளுக்கு தடையொன்று ஏற்படவில்லை.

நிதிப்பிரிவின் தானியங்கி செயற்பாடு

இவ்வாண்டில் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தகவல் டிதொழில்நுட்ப பிரிவின் ஒத்துழைப்புடன் செயற்பாடுகளின் தரம் மற்றம் சரியானத்மையை மேம்பத்துவது மற்றம் செயலாற்றல் அபிவிருத்தி என்பவற்றறிகாக பிரிவின் செயற்பாடுகளை தானியங்கியாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இச்செயற்பாடுகள் தொடர்பாக விவரக்குறிப்புக்களத் தயாரிப்பதற்காக ஆரம்ப கலந்துரையாடல்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப தேவைகள் இனங்காணப்பட்டுள்ளன.

1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தொலைத்தொடர்பு சட்டத்தின் கீழ் வருமானம்

1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தொலைத்தொடர்புச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 1991 இன் 27 ஆம் இலக்க தொலைத்தொடர்புச் சட்டத்தின் மூலம் ஆணைக்குழுவின் வருமானத்தைப் பெறுவதற்கும் சேகரிப்பதற்கும் சட்டரீதியான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, ஆணைக்குழு வருமானத்தை “வானொலி அனுமதிப்பத்திரக் கட்டணம், செஸ் கட்டணம், முறைமை செயற்படுத்துனர் அனுமதிப்பத்திரக கட்டணம், விற்பனையாளர் அனுமதிப்பத்திரம்” மூலம் பெறுகிறது / சேகரிக்கிறது. பொது சுவிட்ச் தொலைபேசி நெட்வேர்க் (பிஎஸ்டிஎன்) செயற்படுத்துனர் மற்றும் வானொலி அதிர்வெண் பயனாளிகளிடமிருந்து கட்டணம்

மற்றும் ஏனைய தொடர்புடைய கட்டணங்களை சேகரிக்கின்றது. ஆணைக்குழுவின் வருமானம் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.


அட்டவணை 23: ஆணைக்குழுவின் வருமானம்

வருமான மூலம்	2018 (ரூபா '000)	2019 (ரூபா '000)	2020 (ரூபா '000)
முறைமை செயற்படுத்துனர் அனுமதிப்பத்திர கட்டணம்	122,449	168,367	5,402
செஸ் கட்டணம்	4,550,706	4,713,115	4,674,874
வானொலி அதிர்வெண் அனுமதிப்பத்திரக் கட்டணம்	10,789,520	7,048,994	6,724,408
அதிர்வெண் முற்பண கட்டணம்	1,071,429	4,032,143	-
விற்பனையாளர்கள் அனுமதிப்பத்திர கட்டணம்	13,818	13,726	14,393
அமெச்சூர் வானொலி அனுமதிப்பத்திர கட்டணம்	164	85	88
கப்பல் நிலைய அனுமதிப்பத்திர கட்டணம்	450	-	-
விமான அனுமதிப்பத்திர கட்டணம்	401	-	-
கம்பியில்லா தொலைபேசி விநியோகத்தர் கட்டணம்	114,619	116,388	94,408
பரீட்சைக் கட்டணம்	368	312	203
வகை அனுமதிப்பத்திக் கட்டணங்கள்	-	-	102
விண்ணப்ப செயலாக்க கட்டணம்	1,020	1,016	400
குறுகிய குறியீடு கட்டணங்கள்	26,531	31,888	34,250
நானாவித வருமானம் (நிலையான வைப்பு, ஊழியர் கடன்கள் போன்றவற்றிலிருந்து வட்டி வருமானம்)	1,108,519	369,992	488,995
மொத்தம்	17,799,994	16,496,026	12,037,523

2011 இன் 21 ஆம் இலக்க தொலைத்தொடர்பு வரிச் சட்டத்தின் கீழ் சேகரிப்பு

2019 நவம்பர் 01 ஆந் திகதி வரை தொலைத்தொடர்பு வரி 15% ஆக இருந்தது. அரசாங்கத்தால் 25% குறைப்பு குறைப்பு செய்யப்பட்டதுடன் புதிய தொலைத்தொடர்பு வரி விகிதம் 11.25% ஆகும். இது 2019 திசெம்பர் 01 முதல் அமுலுக்கு வருகின்றது. 2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தொலைத்தொடர்பு வரிச் சட்டத்தின் ஏற்பாட்டின் படி தொலைத்தொடர்பு சேவைகள் சிறப்பாக வழங்கப்படுகிறது.

விளக்கப்படம் 13: தொலைத்தொடர்பு வரி



நிதிச் சட்டத்தின் கீழ் சேகரிப்பு

சர்வதேச தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்கள் வரி

மேற்குறிப்பிட்ட கண்ட வருமானத்தைத் தவிர, 2009 இன் 13 ஆம் இலக்க நிதிச் சட்டத்தால் திருத்தப்பட்ட 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் படி, ஆணைக்குழு சர்வதேச தொலைத்தொடர்பு செயற்படுத்துனர் வரியை சர்வதேச தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களிடமிருந்து சேகரித்தது.

எனவே, ஆணைக்குழு உள்வரும் உள்நாட்டு அணுகல் கட்டணமாக நிமிடத்திற்கு 0.06 அமெரிக்க டொலர்களை சேகரித்ததுடன் இதில் 50% திரட்டு நிதிக்கு அனுப்புவதுடன் 50% தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணமாக நிறுத்திவைக்கப்படுகிறது.

மேலும், ஆணைக்குழு வெளிச்செல்லும் உள்நாட்டு அணுகல் கட்டணங்கள் என வெளிச்செல்லும் சர்வதேச அழைப்புகளிலிருந்து நிமிடத்திற்கு ரூபா 3.00 இனை அறவிடுகின்றது. இது 2019 யூலை 01 முதல் ஒழிப்புச் செய்யப்பட்டது.


செல்லூலர் கோபுர வரி

இந்த வரி 2019 சனவரி 01 முதல் புதிய வரியாக அறிமுகப்படுத்தப்பட்டதுடன் ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இனால் காலாண்டு ரீதியாக சேகரிக்கப்பட்டு திரட்டு நிதிக்கு அனுப்பப்படும்.

எஸ்எம்எஸ் (SMS) வரி

இது மொத்த எஸ்எம்எஸ் என அறிமுகப்படுத்தப்படுவதுடன் எஸ்.எம்.எஸ் ஒன்றுக்கு ரூபா 0.25 வீதம் 2019 ஏப்ரல் 01 முதல் விதிக்கப்படுகிறது.

விளக்கப்படம் 14: சர்வதேச தொலைத்தொடர்பு செயற்படுத்துனர் வரி




* தற்காலிக தரவு

இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் மொத்த சேகரிப்பு

ஆணைக்குழுவின் மொத்த சேகரிப்பு கீழே காட்டப்பட்ட மூலங்களனி கீழ் சேகரிக்கப்பட்ட வருமானத்தைக் கொண்டுள்ளது,

i. 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு சட்டத்தால் திருத்தப்பட்ட 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புச் சட்டம்
ii. 2011 இன் 21 ஆம் இலக்க தொலைத்தொடர்பு வரி சட்டம்
iii. 2009 இன் 13 ஆம் இலக்க நிதிச் சட்டத்தில் திருத்தப்பட்ட 2004 இன் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம்.

விளக்கப்படம் 15: மொத்த சேகரிப்பு



*தற்காலிக தரவு

திரட்டு நிதிக்கு பணம் அனுப்புதல்

2020ல் ஷரூ. கீழ்க்கண்டவாறு அரசாங்க வருவாயை வலுப்படுத்த TRC மூலம் 18.8 பில்லியன் அரசாங்க கருவூலத்திற்கு மாற்றப்பட்டது.

அட்டவணை 24: திரண்ட நிதிக்கு பணம் அனுப்புதல்

விபரம்	2018 ரூபா பில்லியன்	2019 ரூபா பில்லியன்	2020* ரூபா பில்லியன்
தொலைத்தொடர்பு சட்டம் / ரீ.ஆர்.சி நிதியம்	21.85	7.95	4.0
தொலைத்தொடர்பு வரி	24.35	15.07	10.82
தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணம் 50%	2.79	2.67	2.15
வெளிச்செல்லும் உள்நாட்டு அணுகல் கட்டணங்களுக்கு வரி	0.54	0.19	0
எஸ்எம்எஸ் வரி	-	0.42	0.42
கோபுர வரி	-	1.38	1.42
மொத்தம்	**49.53**	**27.68**	**18.8**

*தற்காலிக தரவு

சொத்து, பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஷரூ. 0.6 மில்லியன், ஷரூ. 2.56 மில்லியன், ஷரூ. 0.37 மில்லியன், 0.16 மில்லியன் ரூ 1.32 மில்லியன் ஏர் கண்டிஷனர்கள், கணினி, இதர அலுவலக உபகரணங்கள், கையடக்க தொலைபேசி மற்றும் அலுவலக தளபாடங்கள் ஆகியவற்றை ஷரூ. 2020 ஆம் ஆண்டில் சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களில் 5.01 மில்லியன் சேர்த்தல்.

முதலீடு

ஆணைக்குழு மக்கள் வங்கியுடன் பணச் சந்தை நாளாந்த பரிவர்த்தனைக் கணக்கைப் பேணிச்சென்று 2020 ஆம் ஆண்டில் இதுபோன்ற பணச் சந்தை பரிவர்த்தனைகள் மூலம் ரூபா 219 மில்லியன் வட்டி வருமானத்தை உழைத்திருந்தது.

உள்ளக கணக்காய்வு பிரிவு மற்றும் தணிக்கை குழு புதுப்பிப்புகள்

உள்ளக கணக்காய்வு

கண்ணோட்டம்

உள்ளக கணக்காய்வு என்பது உத்திகள், குறிக்கோள்கள் மற்றும் ஆபத்தை கருத்தில் கொள்ளும்போது நிறுவனத்திற்கும் அதன் பங்குதாரர்களுக்கும் மதிப்பு சேர்க்கும் நோக்கில் ஒரு சுதந்திரமான செயற்பாடாகும். ஆளுகை, இடர் முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டு செயல்முறையை மேம்படுத்துவதற்கான வழிகளை வழங்க முயற்சிப்பதுடன் வெளிநிலை ரீதியாக தொடர்புடைய உத்தரவாதத்தை வழங்குகிறது. தரவு மற்றும் வணிக செயல்முறைகளின் முறையான பகுப்பாய்வு மற்றும் மதிப்பீடுகளின் அடிப்படையில் அனுபவம் மற்றும் பரிந்துரைகளை வழங்குவதன் மூலம் ஒரு நிறுவனத்தின் நிர்வாகம், செயற்திறன், இடர் முகாமைத்துவம் மற்றும் செயற்திறனை மேம்படுத்துவதற்கான உந்துசக்தியாக இது உள்ளது. ஒருமைப்பாடு மற்றும் பொறுப்புக்கூறலுக்கான அர்ப்பணிப்புடன் ஒரு நிறுவனத்திற்குள் உள்ளக கணக்காய்விற்கான நோக்கம் பரந்த அளவில் உள்ளதுடன் செயற்பாடுகளின் செயற்திறன், நிதி அறிக்கையின் நம்பகத்தன்மை, மோசடிகளைத் தடுப்பது மற்றும் விசாரணை செய்தல், சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்குதல் போன்ற பகுதிகளை உள்ளடக்கியிருக்கியுள்ளது.

ரீ.ஆர்.சீ.எஸ்.எல் இன் உள்ளக கணக்காய்வு பிரிவின் (உள்ளக கணக்காய்வாளர்) தலைவர் நேரடியாக ஆணைக்குழுவிற்கு அறிக்கை அளித்து அறிக்கைகள் கணக்காய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன. நிர்வாக ரீதியாக, உள்ளக கணக்காய்வாளர், பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கிறார்.

செயற்பாடுகள்

- TRCSL இன் தற்போதைய கணக்கு வைப்பு மற்றும் அறிக்கையிடல் செயற்பாடுகளை மெம்படுத்துதல் மற்றும் மீளாய்வு செய்தல்.
- TRCSL இன் நோக்கங்களை அடைவதற்காக ஏதேனும் சிக்கல்கள் ஏதேனும் இருந்தால் அது பற்றிய தாக்கங்களை புலனாய்வு செய்தல்.
- TRCSL சொத்துக்கள் எந்த அளவிற்கு இழப்புகள் மற்றும் மோசடிகளிலிருந்து பாதுகாக்கப்படுகின்றதா என்பதைக் கண்டறிதல்
- கொடுக்கல் வாங்கல்களின் தேவைகள், கொடுக்கல் வாங்கல்களின் நன்மைகள் மற்றும் கழிவுகள் மற்றும் விரயங்களை குறைப்பதன் மூலம் செலவுக் குறைப்பு பகுதிகளை ஆராய்வது குறித்து விசாரணை நடத்துதல்.
- மேற்கூறிய பணிகளின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் கணக்காய்வுக் குழுவிற்கு அறிக்கைகளை சமர்ப்பித்தல் மற்றும் கணக்காய்வுக் குழு கூட்டங்களை ஏற்பாடு செய்தல்.
- கணக்காய்வுக் குழுவின் தீர்மானங்களை பொருத்தமான நடவடிக்கை எடுக்க பிரிவுகளின் தலைவர்களுக்கு தயாரித்து அனுப்புதல்.
- அரை ஆண்டு அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்.
- ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் / உறுப்பினர்கள் கோரும் போது விசேட புலனாய்வுகளை மேற்கொள்ளுதல்.
- அவ்வப்போது பணிப்பாளர் நாயகம் / ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட பல்வேறு குழுக்களுக்கு உதவுதல் மற்றும் பரிந்துரைகளை வழங்குதல்.

செயல்திறன்

2020 ஆம் ஆண்டில், உள்ளக கணக்காய்வுப் பிரிவு பின்வரும் செயற்பாடுகளை மேற்கொண்டது.

அட்டவணை 25: உள்ளக கணக்காய்வுப் பிரிவு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

#	விபரங்கள்	பூர்த்தி / செயல் வடிவில்/ஏனைய
01	TRCSL இன் பெறுவனவுகள் (காசு, காசோலை மற்றும் காசுக்கட்டளை)	உள்ளகக் கணக்கய்வு அறிக்கை பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
02	TRCSL இன் கொடுப்பனவுகள (சம்பளம் மற்றும் தொடர்புடைய செலவினங்கள் தவிர, உத்தியோகத்தர் கடன்கள் முற்பணங்கள்)	உள்ளகக் கணக்கய்வு அறிக்கை பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது
03	1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தொ.தொ. சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்	உள்ளகக் கணக்கய்வு அறிக்கை பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது
04	TRCSL இன் முதலீடுகள்	உள்ளகக் கணக்காய்வு அறிக்கை பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது
05	சம்பளம் மற்றும் கூலி கொடுப்பனவுகள்	உள்ளகக் கணக்காய்வு அறிக்கை பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது
06	உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் முற்பணங்கள்	உள்ளகக் கணக்காய்வு அறிக்கை பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது
07	TRCSL இன் தலைமையகத்தின் தீப்பாதுகாப்பு உத்திகள்	உள்ளகக் கணக்காய்வு அறிக்கை பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது
08	வருடாந்த பொருள் மெய்மையாய்வு – 31/12/2018	உள்ளகக் கணக்காய்வு அறிக்கை பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது
09	லொக் டவுன் காலங்களில் உள்ளக கட்டுப்பாடும் உள்ளக கணக்காய்வும்	உள்ளகக் கணக்காய்வு அறிக்கை பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது
10	கணக்காய்வு விசாரணை மற்றும் பதில்கள் தொடர்பாக தேசிய கணக்கு அலுவலகத்துடன் இணைந்து செயற்படல் - 40 கணக்காய்வு விசாரணைகள்	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது
11	முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்துடன் கூட்டிணைவு	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது
12	நானாவித வருமானம்	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது
13	வங்கி இணக்கக்கூற்று சான்றுறுதி	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது
14	1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தொ.தொ. சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரங்களை புதிய அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் வழங்கப்பட்ட புதுப்பித்தல்	உள்ளகக் கணக்காய்வு அறிக்கை சமர்ப்பித்தலுக்கு நடவடிக்கைகக்கள் எடுக்கப்பட்டு வருகின்றன.
15	நிலையான சொத்து பொருளிருப்பினை பராமரித்தல்	உள்ளகக் கணக்காய்வு அறிக்கை சமர்ப்பித்தலுக்கு நடவடிக்கைகக்கள் எடுக்கப்பட்டு வருகின்றன.
16	கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர்	உள்ளகக் கணக்காய்வு அறிக்கை சமர்ப்பித்தலுக்கு நடவடிக்கைகக்கள் எடுக்கப்பட்டு வருகின்றன.
17	கொழும்பு தாமரை கோபுரத்தின் உள்ளக கணக்காய்வு (பொறியியல் கணக்காய்வு தவிர)	உள்ளகக் கணக்காய்வு அறிக்கை சமர்ப்பித்தலுக்கு நடவடிக்கைகக்கள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தணிக்கை குழு புதுப்பிப்புகள்

2020 ஆம் ஆண்டில் நான்கு (04) கணக்காய்வு குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் கலநதுரையாடப்பட்டன.

1. **2020 பெப்வரி 07 ஆந்து திகதி கணக்காய்வுக் குழு கூட்டம் நடைபெற்றது:** அறிக்கைகள் / விடயங்கள் கலந்துரையாடப்பட்டன, தீர்மானங்கள் / நடவடிக்கைகள் பின்வருமாறு எடுக்கப்பட்டன:

விடயப் பகுதி	நடவடிக்கை / எடுக்கப்பட்ட தீர்மானம்
கொழும்பு தாமரை கோபுரத்தின் பொறியியல் கணக்காய்வு	• உள்ளக கணக்காய்வு / விசேட கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்தல் மற்றும் பொருத்தமான நடவடிக்கைகள் அடுத்த கணணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பித்தல் • உள்ளக கணக்காய்வுக் குழுவினால் தாமரைக் குள கோபுரம் தொடர்ாக உள்ளக கணக்காய்வொன்றை ஆரம்பித்தல் (பொயியியலாளர் மற்றும் தொழில்நுட்ப விடயங்கள் தவிர)
விசேட செயற் திட்டங்களின் உள்ளக கணக்காய்வு	விசேட செயற் திட்டங்களின் உள்ளக கணக்காய்வு செய்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் பொறியியல் நிபுணத்துவத்துடன் கூடிய உள்ளக கணக்காய்வாளரை ஆட்சேர்த்தல்.
கூட்டிணைந்த திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டம், பாதீடு மற்றும் பெறுகைத் திட்டம்	பின்தொடர்வதுடன் அனைத்து அறிக்கைகளையும் உரிய திகதிகளில் அல்லது அதற்கு முன்னதாக தயாரித்து தருமாறும் அறிவுறுத்தப்பட்டது.
வாகன கடன் சோதனை	தற்போதுள்ள சுற்றறிக்கைளில் உள்ள குறைபாடுகள் தொடர்பாக பணிப்பாளர் நாயகத்துடன் கலநதுரையாடியதன் பின்னர் வாகன கடன் சுற்றறிக்கையை திருத்தம் செய்தல்
TRCSL இன் முதலீட்டின் அறிக்கை	ரூபா 354 மில்லியன் திறைசேரி வைப்புக்ளில் முதலீடு தொடர்பாக கலந்துரையாடுதல்
2018/2019செஸ் கட்டணம் சேகரிப்பு	மிகை கட்டணங்கள் விடயங்கள் தொடர்பான சட்டமா அதிபரின் அபிப்பிராயத்திற்காக அனுப்பிவைத்தல்
கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடமிருந்து கிடைத்த கணக்காய்வு விசாரணைகள்	• தொலைதொடர்பு கோபுரங்கள் தொடர்பாக நாடு பூராகவும பௌதீக பரிசோதனை மேற்கொள்ளல். • சட்டமா அதிபருடன் வரி விதிப்பு விடயங்கள் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கை • முன்னைய ஆணைக்குழு தீர்மானத்தில் முரணான விடயங்களை மீண்டும் கருத்திற்கொண்டு தாமரைக் குளத்திற்குரிய காணி தொடர்பாக ஆணைக்குழு பத்திரத்தை சமர்ப்பித்தல்
சம்பளமும் வேதனங்களும்	சம்பள பதிவேட்டினை காலரீதியை பேணுதலும் அதனை பாதுகாப்பாக வைப்பதற்காக பொறிமுறையொன்றை பின்பற்றுதல்
இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் முதலீடு	முதலீட்டுக் கொள்கையை தயாரித்தல்
இலங்கையின் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின்தீ பாதுகாப்பு தந்திரோபாயம்	இரண்டு (2) வாரங்களுக்குள் தீயணைப்பு உபகரணங்களை மீளமைத்து திருத்தம் செய்வதற்கு உறுதிப்படுத்தியமை

2. **2020 யூன் 03 ஆந் திகதி கணக்காய்வு குழு கூட்டம்:** அறிக்கைகள்/விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுடன் தீர்மானங்கள் / நடவடிக்கைகள் பின்வருமாறு எடுக்கப்பட்டன

விடயப் பகுதி	நடவடிக்கை / எடுக்கப்பட்ட தீர்மானம்
கொழும்பு தாமரை கோபுரத்தின் பொறியியல் கணக்காய்வு	தாமரைக் குள செயற்திட்டம் தொடர்பாக தற்போதய உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை மீண்டும் கருததிற் கொள்ளல் (பொறியியல் மற்றம் மொழில்நுட்ப கணக்காய்வு தவிர).
விசேட செயற்திட்டங்களின் உள்ளக கணக்காய்வு	அனைத்து விசேட செயற்திட்டங்களின் உள்ளக கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொறியியல் விட நிபுணத்துவத்துடன் உள்ளக கணக்காய்வாளரை ஆட்சேர்ப்பதற்காக ஆட்சேர்ப்பு நிபந்தகைள் (TOR) தொடர்பான இறுதி வரைவினை பெற்றபின் மீண்டும் விளம்பரத்தை பிரசுரித்தல்.
ஆண்டறிக்கை செயல்நடவடிக்கைத் திட்டம்	2020 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2020 ஆகஸ்ட் மாதம் இறுதி அளவில் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தல்.
வாகன கடன் பரிசோதனை	வாகன கடன் சுற்றறிக்கை திருத்துதல.
TRCSL இன் முதலீட்டு அறிக்கை	ரூபா 354 மில்லியன் திறைசேரி வைப்புக்கள் தொடர்பான விபரங்களை பெற்றுக்கொள்ள வங்கிக்க கடிதமொன்றை அனுப்புதல்
செஸ் கட்டணம் சேகரிப்பு 2018/2019	குறித்த அனைத்து தேவைகள் உட்பட சரியாக தயாரிக்கப்பட்ட நடைமுறைக் கோவையுடன் ஆணைக்குழு பத்திரமொன்றை சமர்ப்பித்தல்
கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடமிருந்து கிடைத்த கணக்காய்வு விசாரணைகள்	தொலைதொடர்பு கோபுரங்கள் தொடர்பாக நாடு பூராகவும பௌதீக பரிசோதனை மேற்கொள்ளல்.
TRCSL இன் முதலீட்டு அறிக்கை	நிலையான வைப்புக்கள் மற்றும் பணச் சந்தையில் மிகை நிதியம் அரச வங்கி ஊடாக திறைசேரியில் முதலீடு செய்வதை சட்டரீதியாக உறுதிப்படுத்துதல்ரு
கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடமிருந்து கிடைத்த கணக்காய்வு விசாரணைகள் தாமரைக் குளம் கோபுரம் - கடன் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு	முகாமைத்துவுக் கட்டணங்கள மற்றும் காப்புறுதி தவணை தொடர்பாக சமவிகிதமான பணத்தொகை யொன்றை இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் அடுத்த கொடுப்பனவுடன் கழிக்கப்படுவதாக குறிப்பிட்டு எக்சீம் வங்கிக்கு கடிதமொன்றை அனுப்புதல் தாலைதொடர்பு கோபுரங்கள் தொடர்பாக நாடு பூராகவும பௌதீக பரிசோதனை மேற்கொள்ளல்.

3. **2020 செப்தம்பர் 07 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வுக் குழு கூட்டம்:** அறிக்கைகள் / விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுடன், தீர்மானங்கள் / செயற்பாடுகள் எடுக்கப்பட்டன:

விடயப் பகுதி	நடவடிக்கை / எடுக்கப்பட்ட தீர்மானம்
கொழும்பு தாமரை கோபுரத்தின் உள்ளக கணக்காய்வு (பொறியியல் கணக்காய்வு தவிர) மற்றும் விசேட செயற்திட்டங்கள்	• தாமரைக் குள செயற்திட்டம் தொடர்பாக தற்போதய உள்ளக கணக்காய்வு அறிக்கையை சமர்ப்பித்தல் (பொறியியல் மற்றம் மொழில்நுட்ப கணக்காய்வு தவிர). • கொழும்பு தாமரை கோபுரத்தின் உள்ளக கணக்காய்வினைப் பரீட்சிப்பதற்காக பணிப்பொறுப்பு அடிப்படையில் பரிசோதகர் ஒருவரை ஆட்சேர்த்தல்.
விசேட செயற்திட்டங்களின் உள்ளக கணக்காய்வு	அனைத்து விசேட செயற்திட்டங்களின் உள்ளக கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொறியியல் விட நிபுணத்துவத்துடன் உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை பணிப்பொறுப்பு அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல்.
வாகன கடன் பரிசோதனை	தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட வாகன கடன் சுற்றறிக்கையை அடுத்த கணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பித்தல்.
TRCSL இன் முதலீட்டு அறிக்கை	ரூபா 354 மில்லியன் திறைசேரி வைப்புக்கள் தொடர்பாக திறைசேரியுன் பின்தொடர் செயற்பாட்டினை மேற்கொள்ளல்
செஸ் கட்டணம் சேகரிப்பு 2018/2019	சட்டமா அதிபரிடமிருந்து கிடைத்த பதில் தொடர்பாக ஆணைக்குழுன் பத்திரத்தை சமர்ப்பிதல்.
கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடமிருந்து கிடைத்த கணக்காய்வு விசாரணைகள்	விரிவான அறிக்கையொன்றை தயாரித்தல் அங்கீகரிக்கப்பட்ட கோபுரங்கள், வழங்கப்பட்ட எண்ணியல் அனுமதிப்பதிரங்களின் எண்ணிக்கை மற்றும் அறவிடப்பட்ட கோபுர குத்தகை தொடர்பாக மீளமைப்பினை ஏற்படுத்துதல் மற்றும் எதிர்காலத்தில் கோபுரங்களை நிர்மாணிப்பதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் அலைவிசைகளை வழங்குதலைத் தவிர்ப்பதற்காக பொறிமுறையொன்றை திட்டமிடல் மற்றும் பதிவேடுகளுக்கு உட்படுத்தல்
TRCSL இன் முதலீட்டு அறிக்கை	கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்ட திருத்தங்களை உட்படுத்தியதன் பின்னர் உள்ளக கணக்காய்வு அறிக்கையொன்று சமர்ப்பித்தல்
2018.12.31 இல் உள்ளவாறு வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபையின் பரிந்துரைகளை செயற்படுத்தலும் செயன்முன்னேற்றம் மற்றும் அவதானிப்புக்களை பரீட்சித்தலும்	2018.12.31 இல் உள்ளவாறு வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபை மீளாய்வின் பின்னர் உள்ளக கணக்காய்வுக் குழுவிற்குச் சமர்ப்பித்தல்
வியாபார அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல்	மேற்படி உள்ளக கணக்காய்வு அறிக்கையின் உள்ளக கணக்காய்வு பரிந்துரைகளை செயற்படுத்தும் செயன்முன்னேற்றம் அல்லது அவ்வாறான உள்ளக கணக்காய்வு அவதானிப்புக்கள் மீது செயற்படுத்த வேண்டிய மாற்று பரிந்துரைகள் தொடர்பாக விரிவாக ஆணைக்குழு பத்திரமொன்றை சமர்ப்பித்தல்.

4. **2020 திசெம்பர் 22 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வுக் குழு கூட்டம்:** அறிக்கைகள் / விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுடன், தீர்மானங்கள் / செயற்பாடுகள் எடுக்கப்பட்டன.

விடயப் பகுதி	நடவடிக்கை / எடுக்கப்பட்ட தீர்மானம்
கொழும்பு தாமரை கோபுரத்தின் உள்ளக கணக்காய்வு (பொறியியல் கணக்காய்வு தவிர) மற்றும் விசேட செயற்திட்டங்கள்	கொழும்பு தாமரை கோபுர செயற்திட்டத்தின் உள்ளக கணக்காய்விற்காக பணிப்பொறுப்பு அடிப்படையில் சுயாதீன உள்ள கணக்காய்வாளர் ஒருவரை ஆட்சேர்த்தல்
விசேட செயற்திட்டங்களின் உள்ளக கணக்காய்வு	இலங்கை தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து விசேட செயற்திட்டங்களின் உள்ளக கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொறியியல் விட நிபுணத்துவத்துடன் உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை திரிவு செய்யும் நேர்முக பரீட்சை சபைக்காக சுயயாதீன பொறியயிலாளர் ஒருவரை நியமித்தல்
வாகன கடன் பரிசோதனை	தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட வாகன கடன் சுற்றறிக்கையை மீண்டும் சமர்ப்பித்தல்.
TRCSL இன் முதலீட்டு அறிக்கை	ரூபா 354 மில்லியன் திறைசேரி வைப்புக்கள் தொடர்பாக திறைசேரியின் முதலீட்டு இருப்பு தொடர்பான உறுதிப்படுத்தலை தெளிவுபடுதல்
செஸ் கட்டணம் சேகரிப்பு 2018/2019	1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு சட்டத்தின் 22 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய அனைத்து தேவைப்பாடுகளும் உள்ளடக்கப்பட்டு மிகை அறவீடு விதிக்காமை தொடர்பாக ஆணைக்குழு பத்திரமொன்றை ஒன்றிணைத்து அனுப்புதல்
கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடமிருந்து கிடைத்த கணக்காய்வு விசாரணைகள்	தொலைத்தொடர்பு கோபுரங்கள் தொடர்பாக நாடளாவிய ரீதியில் பரிசோதனையை தொடர்ச்சியாக மேற்கொள்ளல். அங்கீகரிக்கப்பட்ட கோபுரங்களின் எண்ணிக்கை வழங்கப்பட்ட அதிர்வெண் அனுமதிப்பதிரங்களின் எண்ணிக்கை மற்றும் அறவிடப்பட்டீரகினற கோபுரங்கள் குத்தகைக்கு இடையே ஒப்பீட்டை பூர்த்தி செய்தல்.
TRCSL இன் முதலீட்டு அறிக்கை	வரைவு முதலீட்டுக் கொள்கையை ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பித்தல்.
2018.12.31 இல் உள்ளவாறு வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபையின் பரிந்துரைகளை செயற்படுத்தலும் செயன்முன்னேற்றம் மற்றும் அவதானிப்புக்களை பரீட்சித்தலும்	2019.12.31 இல் உள்ளவாறு வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபை மீளாய்வின் பின்னர் உள்ளக கணக்காய்வுக் குழுவிற்குச் சமர்ப்பித்தல்.
வியாபார அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல்	மேற்படி உள்ளக கணக்காய்வு அவதானிப்புகளுக்காக செயற்படுத்த வேண்டிய மாற்று பரிந்துரைகள் தொடர்பாக விரிவாக ஆணைக்குழு பத்திரமொன்றை சமர்ப்பித்தல்
இடர்கடன் வழங்கலும் அறவீடு செய்தலும்	அளவீட்டு இலட்சிணையாக முறையாக ஸ் தாபிக்கபட்ட அரச நிறுவனமொன்றினால் பின்பற்றப்படுகின்ற சிறந்த நடைமுறையொன்றை இனங்கண்டு அவற்றை உள்ளடக்கியதன் பின்னர் இடர் கடன் சுற்றறிக்கையை வரைவினை அடுத்த கணக்காய்வுக் குழுவிற்குச் சமர்ப்பித்தல்

ஒழுங்குமுறைக் குழுவின் புதுப்பிப்புகள்

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு குறிப்பிட்ட ஒழுங்குமுறை சிக்கல்கள் எழும் போது கலந்துரையாடி தேவையான முடிவுகளை எடுப்பதற்கு "ஒழுங்குமுறை குழு" ஒன்றை நிறுவியுள்ளது. தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை நடவடிக்கைகளின் செயல்பாடு மற்றும் சீரான செயல்பாட்டில் உள்ள அபாயங்கள் மற்றும் ஒழுங்குமுறை சிக்கல்களைக் குறைக்கவும் தீர்க்கவும் இது உதவுகிறது.

